

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 JUN 1949
MADRAS

சக்தி

விரோதி-வைகாசி

விலை 8 அணா

88894

பொருள் அடக்கம்

மலர் 16 : இதழ் 2

ஆசிரியர் குறிப்பு	...	ஆசிரியர்	1
உதயம்	...	மஞ்சேரி. எஸ். ஈச்வரன்	3
ஆணும் பெண்ணும்	...	கென்னத் வாக்கர்	12
செகாவ்	...	மாக்ஸிம் கார்க்கி	14
யாமறிந்த கம்பன்	...	திருச்சிற்றம்பலக் கவிராயர்	21
அத்தையின் கதை	...	ப. ஸ்ரீனிவாசன்	25
மனித சுதந்தரம்	...	கண. முத்தையா	30
படங்கள்	...	... ...	33—40
பெண்கள் ராமாயணம்	...	முத்துலக்ஷ்மி அம்மாள்	41
குழந்தைக் கல்வி	...	லக்ஷ்மி அம்மாள்	43
குட்டிக் கதைகள்	...	அனதோல் பிரான்ஸ்	49
பெர்னார்ஷா கடிதங்கள்	...	என். ஸி. கௌல்டு	56
கடன்	...	எச். ஏ. பிரெண்ட்	58
மனமும் ஜடமும்	...	வி. சக்கரை செட்டியார்	67
புத்தக உலகம்	...	தொ. மு. சி., க. ப.	69

அட்டைப் படம்: பி. ரங்கனாதன், சென்னை

M211,N36,5
N49.16.2

விரோதி சக்தி வைகாசி

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிமிடெட்.,

கல்கத்தா.

★

இந்த ஸ்தாபனத்தில் { இன்ஷ்யூர் செய்யுங்கள்;
பிரதிநிதித்வம் வகியுங்கள்

மிகவும் முன்னேற்றமடைந்துள்ள

“லைப் ஆபீஸ்”

★

“முன்னேற்றத்தின் அறிகுறிகள்”

அமுலிலிருக்கும் அஷ்யூரன்ஸ்	... ரூ.	55,63,45,466
ஆயுள் நிதி	... ரூ.	10,63,86,218
மொத்த ஆஸ்திகள்	... ரூ.	11,64,90,020
1947-ல் செலுத்தப்பட்ட கிளெயிம்கள்	ரூ.	53,72,172
புதிய வியாபாரம்	... ரூ.	12,31,83,760

ஏஜன்ஸிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றன.

★

விபரங்களுக்கு :—

டிவிஷனல் மானேஜர் :

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ்
இன்ஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிமிடெட்,
“ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்”
107, அரமனைக்காரத் தெரு,
ஜி. டி. மதராஸ் 1.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 JUN 1949
MADRAS

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரீ, மைசூர்.

MSK II TM

உங்கள் எதிர்காலத்தைப்பற்றி

உங்களுக்கு 1949ல் என்ன நடக்கும்?

எதிர்காலத்தில் உங்களுக்கு என்ன நடக்கப்போகிறதென்றும், நீங்கள் என்ன காரியங்கள் செய்வீர்களென்றும் அறிய விரும்பினால் ஏதாவது உங்களுக்குப் பிரியமான புஷ்பத்தின் பெயரைக் கடுதாசியில் எழுதுங்கள். நீங்கள் எழுதும் தேதி, வேளை, விபரங்களையும் குறித்து உங்கள் சரியான விலாசத்தையும் உடனே எழுதியனுப்புங்கள்.

ஜோதிட சாஸ்திரப் பிரகாரம் நாம் கணித்து உங்கள் கார்டு எழுதப்பட்ட தேதியிலிருந்து 12 மாதங்கள் வரையில் உங்கள் அதிர்ஷ்டம் லாபநஷ்டங்கள் ஜீவிக்கும் வழி, எந்த வேலையில் உங்களுக்கு வெற்றிகிடைக்கும், உங்கள் உத்தியோகத்தில் உயர்வு, தாழ்வு முதலான மாறுபாடுகள். ஆரோக்கியம், வேறுதேசங்களுக்கு யாத்திரை, புண்ணிய தீர்த்த யாத்திரை, விவாகம், ஸ்திரீயினாலுண்டாகும் சௌக்கியம், சந்தானம், புதையல் முதலானவைகள் கிடைக்குமிடம், லாட்டரீ, எதிர்பாராத விதமாய் திரவியம் கிடைத்தல் இவைகளைப் பற்றி தெளிவாய் மாதப் பிரகாரம் எழுதி ரூ. 1—4—0 க்கு வி.பி. யில் அனுப்புவோம் (வி பி. சார்ஜ் வேறு) துஷ்ட கிரஹங்களுக்குச் செய்யவேண்டிய சாந்திமுதலானவைகளைக் குறிப்பிடுவோம். நாங்கள் விவரங்களுக்கு பொறுப்பாளிகள் நாங்கள் அனுப்பும் விவரங்கள் உங்களுக்குத் திருப்தியளிக்காவிடில் பணம் வாபஸ் செய்யப்படும். ஒருதடவை பரீட்சிக்கவும்.

பண்டிட் தேவதத்த சாஸ்திரி,

ராஜ் ஜோதிஷி. (S. K. I.)

கர்த்தார்பூர் (E. P.)

Pt. DEV DUTT SHASTRI Raj Jyotishi (S. K. I) Kartarpur (E. P.)

உங்கள் குழந்தைகளுக்கு
மிகவும் இன்றியமையா
தது, காந்தி சோப்.

காந்தி

டாய்லெட் சோப்.

- எவ்வளவு குளுமை!
- எத்தனை புதுமை!
- எவ்வளவு சுத்தம்!

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 JUN 1949
MADRAS

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்.

SHILPI SOM 37 TAMIL.

கேசரியின்

மூன்று பிரசித்த மருந்துகள்

★

லோத்ரா

கர்ப்பாசய நிவாரணி

மலடு, சங்காதோஷம், சீல்வாயு, தூக்கமின்மை, அஜீரணம், மலச் சிக்கல், இருமல், காசம், தலைவலி, மூ து கு வ லி, முதலியவற்றை குணப்படுத்தும்.

★

அம்ருதா

ரத்த சுத்தி டானிக்

ரத்த சோகை, அஜீரணம், மலச் சிக்கல், மந்தமான மூளை, பல வீனம், படபடப்பு;ஞாபகமின்மை, தெளிவற்ற கண் பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலிய வற்றை குணப்படுத்தும்.

★

அர்க்கா

சிறந்த ஜுர நிவாரணி

இன்புளுயன்ஸா, டைபாய்ட், மலேரியா, முதலான ஜுரங்கள் குணமாகும். ஈரல் குலைக்கட்டி களும் குணமாகும்.

விவரங்களுக்கு எழுதுங்கள்

கேசரீ குடீரம் லிட்,

ராயப்பேட்டை, மதருஸ் 14.

அமெரிக்கன் மாடல் ரிவால்வர்

உங்கள் வாழ்க்கை, ஆஸ்திகள்,மரியாதைமுதலியவற்றை திடீரென எதிர்க்கும் முரடர் களிடமிருந்தும். கொடிய விலங்குகளிடமிருந்தும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்

வீட்டிலும், வனபோஜனம் அல்லது பிரயாணத்திலும், உறுதியும் இலேசானதுமான இந்த ரிவால்வர் எப்பொழுதும் உங்கள் உற்ற துணை வன் என்பதை நிரூபிக்கும். தானகவே சுற்றிவரும் 6 ரவைகள் வைக்கக்கூடிய அறையுடன் கூடியது. அமெரிக்காவில் செய்யப்படும் உண்மைப் பிஸ்டலைப் போலவே தோற்றமளிக்கிறது. இதன் எடை 15 அவுன்ஸ்கள். நீளம் 9 அங்குலம். அதிபயங்கரமான சப்தத் துடன் நீளமாகக் கோடுபோல் ஒளி கக்கிக்கொண்டு வெடிக்கிறது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் அனுப்புங்கள். செல வில்லாத இம் மெய்க்காப்பாளன் இல்லாதிருக்காதீர்கள்.

விலை ரவைகளுடன்

நெ-111 ரூ. 5/- நெ-333ரூ. 7/8-
நெ-222 ரூ. 6/8 நெ-444 ரூ. 8/8
B-555 ஸ்பெஷல் வெள்ளி முலாம் விலை ரூ. 10—0—0

அலாதியாக 4 டஜன் ரவைகள்
விலை ரூ. 4—8—0

பிஸ்டல் பெட்டி பில்டுடன்
விலை ரூ. 5—0—0

உபயோகிக்கும் எண்ணை புட்டி 1-க்கு
விலை ரூ. 1—0—0

HINDUSTAN TRADERS

P. Box No. 286—KANPUR (U. P)

விரோதி

மலர் 16

சக்தி

வைகாசி

இதழ் 2

OFFICE OF THE REGISTRAR OF
15 JUN 1949
MADRAS

மெய்ப் பொருள் காண்பது அறிவு

○

ஆசிரியர் குறிப்பு

1947 ஆகஸ்ட் 15-க்குப் பின் வெள்ளையர்களின் நேரடி ஆட்சியென்னும் அடிமை நிலையிலிருந்து மன்னரின் அதிகாரத்துக்குட்பட்டு இயங்கும் ஒரு டொமினியனாக இந்தியா இயங்கி வருகிறது. சென்ற மாத இறுதியில் காமன்வெல்த் உறவு மகாநாட்டில், பண்டித நேரு கலந்து கொண்ட பின்னர், இந்த உறவு நிலை மாறிவிட்டது என்று அறிவிக்கப்பட்டது. அதாவது இனிமேல் இந்தியா மன்னரின் அதிகாரத்துக்கு உட்பட்ட டொமினியனாக விளங்காமல், சர்வ சுதந்திரமும் பெற்ற சுதந்திர நாடாக விளங்கும் என்பதேயாம். இந்தச் செய்தியைத் தலைவர்களும், பத்திரிகைகளும் வரவேற்றுப் பாராட்டினர். இந்தியா கூடிய விரைவிலேயே குடியரசாக மாறும் என்று கூறப்பட்ட போதிலும், இந்தியா காமன்வெல்த் உறவைவிட்டு விலகாதது, மீண்டும் இந்தியா பிரிட்டிஷாரின் செல்வாக்குக்கு உட்பட்ட நாடாகத்தான் விளங்க முடியும் என்ற நிலையை உண்டாக்குகிறது. ஏனெனில், பிரிட்டிஷ் காமன்வெல்த் என்பது வெள்ளைக் குடியேற்ற நாடுகளின் கூட்டமைப்பேயாகும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கும் காமன்வெல்த்துக்கும் மன்னரே தலைவர். ஆகவே காமன்வெல்த்தில் சேருவதும், மன்னரை ஒரு விதத்தில் தலைவராக ஏற்பதேயாகும்.

இது மூன்றாவது உலக யுத்தம் பயமுறுத்திக்கொண்டிருக்கும் காலம். சமீபத்தில் அமெரிக்காவின் தலைமையில் பிரிட்டன், நார்வே, பெல்ஜியம் முதலிய ஏழு நாடுகள் அட்லாண்டிக் ஒப்பந்தம் பண்ணிக் கொண்டதானது யுத்தத்துக்குக் கட்சி திரட்டும் முயற்சியேயாகும். அதன்பின் நடந்த இந்தக் காமன்வெல்த் உறவு மகாநாட்டின் மூலம் இந்தியா பாகிஸ்தான் முதலிய நாடுகளின் நேச உறவைப் பிரிட்டன் சம்பாதித்துக் கொள்வதானது, கீழ்த் திசையிலும் தம் கட்சிக்கு பலம் சேர்க்கும் முயற்சியேயாகும். உலக யுத்தம் ஏற்படுவதைத் தடுக்க விரும்பும் இந்தியா, இப்படி ஒரு சாராருடன் சேர்வது விரும்பத்தக்கதல்ல. மேலும் காமன்வெல்த் உறவின் மூலம் வெள்ளையருடன் நேச பாவமும், சம அந்தஸ்தும் பெறுகிறோம் என்று சொல்லப்பட்ட போதிலும், வெள்ளையர்களின் குடி நிலங்களான தென்னாப்பிரிக்கா,

மலேயா முதலிய நாடுகளில் இந்தியர்கள் நசுக்கப்படுகிறார்கள் என்பது மறுக்க முடியாத விஷயம். பண்டித நேரு தென்னாப்பிரிக்கப் பிரதமர் மலானுடன் இருந்து விருந்துண்ட போதிலும், தென்னாப்பிரிக்க இந்தியர்கள் வெள்ளையர்களின் ஹோட்டல்களில் பிரவேசிக்க முடியாத நிறத் திமிர் இன்றும் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. பண்டித நேரு விருந்துண்ட வைபவத்தைத் தென்னாப்பிரிக்கவெள்ளைப் பத்திரிகைகளே கண்டித்து எழுதின. மலேயாவில் வெள்ளை முதலாளிகளின் சூழ்ச்சியால் ஸ்ரீ கணபதி போன்ற இந்தியர்கள் கொல்லப்படுகிறார்கள். இப்படி இருக்கும்போது இந்தியரின் சம அந்தஸ்து எப்படிக் காப்பாற்றப்படும் என்று நமக்குத் தெரியவில்லை.

சமீபத்தில் மலேயா தொழிலாளர் தலைவர் ஸ்ரீ கணபதி தூக்கிலிடப் பட்ட செய்தி இந்தியாவுக்கே அவமானம் தருவதாகும். ஒரு இந்தியப் பிரஜையை, தஞ்சாவூர்க்காரரான ஒரு தமிழனை ஷிலாங்கூர் என்னும் ஒரு சிறிய நாட்டுச் சுல்தான் தூக்கேற்றுவதைத் தடுக்காமல் இந்தியா வாளாவிருந்துவிட்டது. இது விஷயத்தில் இந்தியா தலையிட்டு, தண்டனையைக் குறைத்திருக்கலாம். 1916-ம் வருஷம் நடந்த ஈஸ்டர் கலகத்தின் போது கைதியான டிவேலராவுக்கு பிரிட்டிஷ்சர்க்கார் தூக்குத் தண்டனை விதித்தது. அவர் ஒரு அமெரிக்கப் பிரஜை என்று கூறி அமெரிக்க சர்க்கார் குறுக்கிட்டதால் டிவேலராவின் தண்டனை தீவாந்தர தண்டனையாக மாறிற்று. ஷிலாங்கூர் சுல்தானுக்குப் பின்னிருந்து திரை மறைவில் வேலை செய்வது மலேயா ரப்பர் தோட்டத்து வெள்ளை முதலாளிகள் தான். வெள்ளையர்களின் துணை யிருக்கிறது என்ற தைரியத்தில்தான் ஷிலாங் கூர் சுல்தான், இந்தியா போன்ற மகத்தான தேசத்தையும் பொருட் படுத்தாமல், ஸ்ரீ கணபதியைக் கொன்றுவிட்டான். பிரிட்டிஷார் நம் முடன் நேச உறவு கொண்டாடி இந்தியாவை காமன்வெல்த்தில் சேர்க் கும் அதே வேளையில், இன்னொருபுறம் ஒரு இந்தியரின் உயிர் பலியாகிப் போனது வெள்ளையர்களின் பரம்பரைக் குணத்துக்கு அத்தாட்சியாகும். ஸ்ரீகணபதியின் தூக்குத்தண்டனையை ரத்துசெய்ய இந்தியாவின் மலேயா ஸ்தானிகர் ஸ்ரீ திவி முயன்றதாகக் கூறப்படுகிறது. எனினும் அதையும் மீறி, தூக்குத்தண்டனையை நிறைவேற்றிவிட்டான் ஷிலாங்கூர் சுல்தான். ஆகவே, இந்தியா இது விஷயத்தில் பலமான முயற்சி எதுவும் எடுக்க வில்லை என்றே ஆகிறது; இதனால், இந்தியாவுக்கு அன்னிய நாடுகளில் ஸ்தானிகர் காரியாலயங்கள் நியமிப்பதிலும் அர்த்தமில்லை. ஸ்ரீ கணபதி யின் தண்டனையைக் கண்டித்து உலகத் தொழிலாளர் சங்கங்களும், இந்தியத் தலைவர்களில் சிலரும் கண்டித்திருக்கிறார்கள். ஸ்ரீ கணபதிக்கு நேர்ந்த கதி, அவரைப் போன்ற இன்னொரு தொழிலாளர் தலைவரான ஸ்ரீ சாம்பசிவத்துக்கும் காத்திருக்கிறது. இந்திய சர்க்கார் கணபதி விஷயத்தில் அசிரத்தையாயிருந்தது போல, சாம்பசிவன் விஷயத்திலும் அசிரத்தை காட்டாமல், உடனே தலையிட்டு, இந்தியரின் மானத்தையும் பிரஜா உரிமையையும் காப்பாற்றுவார்கள் என நம்புகிறோம்.

வீட்டில் பசு ஒன்று கன்று போடுகிறது. அந்த நிகழ்ச்சியைப் பின்னணியாக வைத்து, புத்திர பாக்கியம் இல்லாமல் தவிக்கும் தம்பதிகளுடைய வேதனைகளையும், இன்பப் பரவசங்களையும் சித்திரிக்கிறது கதை. ‘பசுவுக்கும்கூட சந்தான பாக்கியம் இருக்கிறது’—மாமியாரின் இந்த வாசகம் அந்த இளம்உள்ளங்களை எப்படித் துன்புறுத்திவிட்டன!

உதயம்

○

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

‘சூரியன் எப்போதும் அஸ்தமிப்பதில்லை; எப்போதும் உதிப்பதும் இல்லை’ என்று ஹிந்து சமயப் பழம் பாடல் ஒன்று கூறுகிறது. உதயாஸ்தமனங்கள் வெறும் மனோ கற்பிதமே ஒழிய வேறில்லை. ஏனென்றால், சூரியன் பூமண்டலத்தில் இரண்டுவிதமான விளைவுகளுக்குக் காரணபூதனாய் இருக்கிறான். பூமண்டலத்தின் மேற் பரப்பில் அவன் பகல் செய்யும்போது, கீழ்ப் பரப்பில் இரவை உண்டாக்குகிறான். கீழ்ப் பரப்பில் பகல் செய்யும்போது மேற்பரப்பில் இரவை உண்டாக்குகிறான். ஆகவே சூரியன் அஸ்தமிப்பது கிடையாது. இந்த விஷயத்தை அறிந்துகொண்டவனுக்கு சூரியாஸ்தமனம் என்பது கிடையாது.

இந்தப் பாடலும் இது பகருகின்ற இந்த விஷயமும் தாமல் நகரில் வாழும் மக்களுக்கெல்லாம் தெரிந்திருக்குமா என்பது சந்தேகமே. அவர்களுக்குப் பகல், பகல் தான்; இரவு, இரவுதான். அவை அவர்களுக்கு வேலை செய்வதும், தூங்கி ஓய்வு கொள்ளுவதுமான இரண்டு நேரங்களே ஒழிய வேறில்லை.

ஜனார்த்தனன் அப்போது தூங்கிக்கொண்டிருந்தான். அவன் பகலில் தூங்கக் கூடியவன் அல்ல; ஆகவே அது இரவு நேரம் என்பது தெளிவு. வெளியே, மேல் வானத்தில் சிறுகச் சிறுக அஸ்தமித்துக்கொண்டிருந்தது நிலா. வானப் பரப்பில் தேங்கியிருந்த செந்நிறமான ஒளிப் படலமும் மறைந்து, வையம் இருளில் மூழ்கியது. ஜீவராசிகளின் புலனுணர்ச்சிகள் மேலும் அதிகத் தூக்கத்தில் ஆழ்ந்தது. தூங்கக்கூடிய ஜீவன் காணும் கனவுகள் எப்படி இருந்தபோதிலும், அது ஸ்மரணையற்று, குழைந்து துவண்டுபோய்த்தான் படுத்துக்கிடந்தது. அதன் சுவாசம் ஒன்றே இறுதி மரணத்திலிருந்து அதைக் காப்பதுபோல் இருந்தது. ஜீவன் உயிர் வாழ்வதற்குப் போராடிக்கொண்டிருப்பது ஒரு அதிசயம். அதைவிடப் பெரிய அதிசயம், பூவுலகில் ஜனிப்

பதற்காக ஒரு புதிய ஜீவன் போராடிக்கொண் டிருப்பது. ஜீவன் பிரத்தியக்ஷ உண்மை. ஏனென்றால் அது இடைமுறியாத தடங்கலற்ற நீரோட்டமாக இருக்கிறது.

இரவு நேரத்தில் கேட்கும் ஏதோ அரவமற்ற அரவங்களைத் தவிர—சந்தர்ப்பமாக வீசும் காற்றின் நெட்டுயிர்ப்பு, பல்லி குறி சொல்லுதல், ஜோடியைக் கூவி அழைக்கும் பூனையின் குரல், தறிகெட்டலையும் நாயின் குரைப்பு ஆகிய ஒலிகளைத் தவிர—சுற்றிச் சூழ ஒரே மௌனம் நிரம்பி யிருந்தது. இயற்கை என்றுமே பூரண ஓய்வு எடுத்தது கிடையாது. ஏதோ ஒரு சூக்ஷ்ம சக்தி இந்த மரத்தை அசைப்பதும், அந்தக் கல்லை நகர்த்துவதுமாக இருக்கிறது; சுவர்களுக்கும் காதுகள் முளைத்திருக்கின்றன.

ஜனார்த்தனன் படுக்கையில் புரண்டு படுத்தான். குறட்டை அவன் தொண்டைக் குழியில் நெரிந்து வெளிப் புறப்பட்டது. நழுவிச் சரியும் தலையணையை இழுத்துச் சரியாகப் போட்டுக் கொண்டது அவனுடைய கை. தான் செய்யும் காரியத்தை உணர்ந்திருந்தது அந்தக் கை. ஏதோ வாய்க்குள்ளேயே முணுமுணுத்து உதட்டைச் சப்புக் கொட்டினான். பிறகு போர்வையை இழுத்து உடம்பெல்லாம் போர்த்துக் கொண்டு பாரியையுடன் படுத்துறங்கும் அந்த அந்தரங்கமான சூழலில் சுக நித்திரையில் ஆழ்ந்து விட்டான்.

திடீரென்று அவனை எழுப்பினாள் சாரதா.

"கொஞ்சம் எழுந்திருங்களேன். இதோ தொழுவுக்கு வாருங்கள், எழுந்திருங்கள் எல்லோரும் போய் விட்டார்கள்" என்றாள் சாரதா.

ஜனார்த்தனன் உறக்கத்திலேயே எதையோ முனகினான். தலையணையில் மறுபுறமாகத் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

"எழுப்பு என்று நீங்கள்தான் சொன்னீர்கள்! இப்போது இப்படித் தன்னை மறந்து உறங்குகிறீர்களே! பிறகு என்னை குற்றம் சொல்லத்தான்."

மௌனம், அவளுடைய மெல்லொலியையும், பட படப்பையும் பெரிதாக்கிக் காட்டியது. முகத்தைத் தலையணையில் புதைத்துக் கொண்டு குப்புறப்படுத்த வாக்கில் மிகவும் சாவதானமாக, "என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான் ஜனார்த்தனன்.

"மாமியும் நாத்தியும் தொழுவுக்குப் போய்விட்டார்கள் என்று சொன்னேன். கொஞ்ச நேரம் தான் ஆகிறது. அவர்கள் போகும்போது உண்டான கதவின் 'கிரிச்' சப்தத்தைக் கேட்டதும் எழுந்திருந்துவிட்டேன். சீக்கிரம் எழுந்திருங்கள்; நாம் இப்போது போவதே மிகவும் தாமதமாக இருந்தாலும் இருக்கும்."

ஜனார்த்தனன் எழுந்து உட்கார்ந்தான்; கொட்டாவி விட்டான். இடுப்பில் வேஷ்டி அவிழ்ந்து சரிந்தது. அதை எடுத்து நன்றாக இறுக்கிக் கட்டினான். அப்படிக் கட்டிக் கொண்டிருக்கும் போதே தன் விரல்களிடையில் சிக்கிய பூணூலை விடுவித்துத் தோளின் மேல் வீசிப் போட்டுவிட்டு, மிகவும் எரிச்ச

லோடு முதுகு, மார்பு, வயிறு, குதி கால்களை எல்லாம் சொறிந்தான். கொசு உபத்திரவம் அவ்வளவு ஜாஸ்தி.

"கொசு வலையைக் கொண்டு வந்து கட்டு என்று தினம் தினமும் உனக்குச் சொல்லவேண்டும் போலிருக்கிறது. இப்படியே தினமும் படுத்தால், உடம்பில் ஒரு துளி ரத்தம் இராது" என்று எரிச்சலோடு சொன்னான் ஜனார்த்தனன்.

"கொசு வலையா? ஏதோ டஜன் கணக்கில் நம் வீட்டில் கொசு வலைகள் இருக்கிற மாதிரிதான். இருப்பது ஒரு வலை. அதையும் வண்ணானுக்குப் போட்டிருக்கிறது. வெளுத்து வந்த பிறகு அதைக் கட்டினாலும், கொசுக்கள் தாராளமாக உள்ளே நுழைந்துவிடும்... நீங்கள் உட்கார்ந்து இப்படிச் சொறிந்து கொண்டும், கொட்டாவி விட்டுக்கொண்டும், பேசிக்கொண்டும் இருந்தால்—"

"இருந்தால்—?"

"காரியம் எல்லாம் அங்கே முடிந்துவிடும்."

ஜனார்த்தனனுக்குச் சாந்தம் பிறந்தது. பிறகு தன் மனைவியுடன் பேசும் போது, அவனுடைய தொனியில் மன்னிப்புக் கேட்கும் தோரணை ஒலித்தது. பழையபடியும் கொட்டாவி வந்தது. அதை அடக்கிக் கொண்டான். என்ன காரியம் முடிந்துவிட்டிருக்கும் என்பது அவனுக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஏனென்றால் கடந்த நாலைந்து நாட்களாக வீட்டில் அதைப் பற்றித்தான் பேச்சு. அது எப்பொழுது, என்று நடக்கப் போகிறதோ என்று பேசிக்கொண்டிருந்தார்கள்—கோதாவரி கன்று போடப்போகிறது. வீட்டிலுள்ள நான்கு பசுக்களுக்கு முறையே கங்கா, நர்மதா, கோதாவரி, காவேரி என்று பெயர். புண்ணிய நதிகளின் பெயர்களைப் பசுக்களுக்கு வைத்திருந்தார்கள். பசுக்கள் எல்லாம் காங்கயம் ஜாதியைச் சேர்ந்தவை. கங்காவும், நர்மதாவும் 'பால் மரத்து'ப் போய்விட்டன. கங்கா தன்னுடைய இளங் கொடியைத் தானே ஒரு சமயம் சாப்பிட்டு விட்டது. அதிலிருந்து வீட்டு அம்மாளுக்குக் கங்காவின் மேல் படு கோபம். அதை விற்றுத் தொலைத்துவிடவேண்டும் என்பது அவளுடைய எண்ணம். அதை இன்னும் தன் வீட்டுத் தொழுவில் வைத்து அவள் வளர்த்து வருவதற்குக் காரணம், அவளுடைய கணவனின் பிடிவாதம்தான். கங்காவின்மேல் அவருக்கு ஒரு அலாதிப் பற்றுதல். வீட்டிலேயே அதுதான் வெகுகாளாக இருந்துவரும் பசு என்றும், வெகுகாலம் குடும்பத்துக்கு அது எவ்வளவு உதவியாக இருந்து வந்திருக்கிறது என்றும், அது எத்தனை அருமையான பேரன் பேத்திகளை எடுத்திருக்கிறது என்றும் அவர் சொல்லுவார். அம்மாளுக்குக் கோதாவரிதான் செல்லப் பிள்ளை. அதனுடைய புள்ளி விழுந்த விலாப் புறங்களும், மிருதுவான பட்டுப் போன்ற தாடையும், நீளக் காதுகளும், பிறைச் சந்திரனைப் போன்ற கொம்புகளும் நீல நிறமான கண்களும்—ஆகா! எப்பேர்ப்பட்ட பசு என்று வியந்து பேணுவாள் வீட்டு அம்மாள். மடி அதற்குச் சின்னஞ் சிறிதாக இருந்த போதிலும், பால்

தேனுக இருக்கும். இப்போது அது ஈனப் போகிறது; இது இரண்டாம் தடவை......

"எங்கே இருக்கிருய்?" என்று தன் மனைவியைக் கேட்டான் ஜனார்த்தனன்.

சாரதா முன்னுலேயே கத வோரம் போய்விட்டாள்.

"சீக்கிரம் வாருங்கள்" என்று படபடப்போடு சொன்னுள் சாரதா.

அவள் எங்கே இருக்கிருள் என்று தேடிக்கொண்டே இருட்டில் தடவித்தடவி நடந்துவந்தான். அப்போது அவள் கூந்தலை விரித்து முடிந்துகொண் டிருந்தாள். கூந்தலின் நுனி அவன் கையில் விழுந்தது. ஏதோ பல்லியோ, தேளோ மேலே விழுந்துவிட்டதுபோலப் பின்வாங்கினுன். இவனுடைய பயத்தைக் கண்டு அவள் மிருதுவாகச் சிரித்தாள். பிறகு இவன் கையைப் பிடித்தாள். அவளுடைய உள்ளங்கையின் குளுமையும் வெப்பமும் கலந்த ஸ்பரிசத்தால், அவனுக்கு அமைதியும் சுதாரிப்பும் கிட்டின. ஒரு நிமிஷம் தாமதித்தான். பிறகு, அவள் கையைப் பிடித்துப் பின்னுக்கு இழுக்க முயன்றுன். அவளோ, தன் மனப் பலவீனத்தை அடக்கிக் கொண்டு, அவனுடைய கையை நன்ருகக் கோத்து இறுக்கி வெளியே விறுவிறு என்று இழுத்து வந்து விட்டாள்.

இருவரும் பசுத் தொழுவை நோக்கி நடந்தனர். தொழுவில் கூரை வேய்ந்து சாய்ப்பு இறக்கப் பட்டிருந்தது. அதைச் சுற்றிலும் முள் கம்பி வேலி போடப்பட்டிருந்தது. கூரையின்மேல் இடைவெளி யில்லாமல் பூசணிக் கொடிகள் படர்ந்திருந்தன. இலைக் கூட்டம் கூரையை மறைத்து விட்டது. பக்கத்திலே ஒரு பலா மரம் கிளைகளை அகலப் பரப்பிக்கொண் டிருந்தது. காற்றில் ஆடும்போதெல்லாம் அது பழுத்த இலைகளை உதிர்த்துக்கொண் டிருந்தது. தொழுவில் எரிந்துகொண்டிருந்த அந்த மங்கலான விளக்கு வெளிச்சத்திலும் சற்றுத் தூரத்தள்ளி கீழே உட்கார்ந்துகொண் டிருக்கும் உருவங்களும், அவற்றின் நிழல்களும் தெளிவாகத் தெரிந்தன. அந்த இடத்தில்,சந்திரனைச் சுற்றிக் கிடக்கும் ஒளிவட்டம்போல மங்கலான வெளிச்சத்தைச் சிந்திய வண்ணம் ஆடி அசைந்துகொண் டிருந்தது அந்த விளக்கின் சுடர். உட்கார்ந்திருப்பவர்கள் ஜனார்த்தனனின் தாயாரும், சகோதரியும்தான்.

அம்மாள், "இன்னும் ஒன்றரை மணி நேரமாவது ஆகும்" என்று சொன்னுள்.

"அடேயப்பா! அவ்வளவு நேரம் என் ஆகிறது?" என்ருள் மகள்.

தொழுவுக்குள்ளிருந்து ஆழ்ந்த பெருமூச்சு விட்டதுபோல் சப்தம் கேட்டது. பிறகு அதைத் தொடர்ந்து ஹீனஸ்வரத்தில் கனைக்கும் சப்தமும் கேட்டது.

"பாவம், இந்த வாயில்லாச் ஜீவனுக்கு ஒரு மயிர்க்கால்கூட விடாமல் உடம்பெல்லாம் எமவேதனை!" என்று அனுதாபப் பட்டாள் அம்மாள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தொழுவை அடுத்து ஜனார்த்தன

னும் சாரதாவும் வந்துவிட்டார்கள். காலடி ஓசை கேட்டதும், தாயும் மகளும் தாங்கள் பேச்சை அரைகுறையிலேயே நிறுத்திவிட்டார்கள். ஜனார்த்தனன் அமைதியோடு அடி எடுத்து வைத்துக்கொண்டு வந்து, மரத் தொட்டிக்கு மேலாக உள்ளே எட்டிப் பார்த்தான். தொட்டியின் மறுபுறத்தில் உள்ள லாந்தர் விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. கோதாவரி ஒரு பக்கமாக ஒருக்களித்துப் படுத்துக் கொண்டிருந்தது. அதன் பெரிய வயிறு கனப்பதும், அசைந்து சரிவதுமாக இருந்தது. பசுவோ பெருமூச்சு விடுவதும், திக்குமுக்காடுவதும், உறுமுவதுமாக இருந்தது. அதன் உடம்பை எல்லாம் வளைத்து நெளித்துக் கொண்டு, வலிப்பு பிடித்துவிட்டவைபோலத் தோன்றிய தன் கால்களை அகலப் பரப்பியது பசு. ஜனார்த்தனன் பின்னும் அதிகக் கவனத்துடன், அந்த மங்கலான வெளிச்சத்தில் உள்ளே எட்டிப் பார்க்கும்போது நெற்றியில் வெள்ளை விழுந்துள்ள கன்றுக் குட்டியின் தலையையும் சின்னஞ்சிறு முன்னங்கால்களையும் கண்டான். திடீரென்று வெப்பமான சுவாசம் கிளம்பி அவனுடைய கழுத்தின்மேல் படுவதை அவன் உணர்ந்து கொண்டான். யார், எதற்காக அப்படி சுவாசிக்கிறார்கள் என்பது அவனுக்குத் தெரியாமல் இல்லை. பக்கத்தில் தன் தோளின்மேல் கைபோட்டுக் கொண்டிருக்கும் தன்னுடைய மனைவி, பிறகு அதி வேகமாக இரைக்க இரைக்க மூச்சு விடுவதைக் கவனித்துக் கொண்டான். திரும்பி அவளுடைய முகத்தைப் பார்த்தான். அவள் கண்களைச் சூழ்ந்திருந்த கருநிறக் கோடுகள் பின்னும் அதிகக் கருப்பாகக் காணப்பட்டன. சமீபகாலமாக அவள் முழுகாமல் இருப்பதால் அவனுடைய நம்பிக்கை பலப்பட்டுக் கொண்டுவந்தது. ஆயினும் நாளாரம்பத்தில் மேலும் மேலும் தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டிருக்கக் கூடாது என்பதை உணர்ந்தான். பிறகு, தனக்குத்தானே, 'தகப்பனாராக முயலுவதில் ஏதேனும் பயன் உண்டா?' என்று சொல்லிக்கொள்ளத் தொடங்கினான். இப்போது வயது முப்பத்தைந்து. தன் முயற்சிகளின் பெருமையைச்சுட்டிக்காட்டி நிற்கும் இந்தப்பத்துவருஷகாலமே மிகவும் நீண்டதொரு காலமாகும். சாந்தி முகூர்த்தம் நடந்தேறிய வருஷத்தின் இறுதியில் அவனுடைய தாயார் அவன் மனைவியை நெரித்த புருவங்களோடு நோக்க ஆரம்பித்தாள்; மறுவருஷத்தில் முகத்தைத் திருப்புவதும், மிகவும் இகழ்ச்சியாக நடந்து கொள்வதுமாக இருந்தாள். மூன்றும் வருஷ முடிவில் இந்த வசைகள் பெரும் கூக்குரலாக மாறின. நான்காம் வருஷத்தில் தாயாரின் வெறுப்பும் விவகாரமும் உச்சநிலையை அடைந்தன. தன் மகன் இதுவரையிலும் பாறையில் பயிர் விளைவித்தது போதும் என்றும் இனி வளமான பூமியைத் தேட வேண்டியது தான் என்றும் சொல்லத் தொடங்கி விட்டாள். ஆனால், அதீத நம்பிக்கைகள் கொண்ட அந்த மனிதர்—ஜனார்த்தனனின் தகப்பனார்—இங்கே வந்து குறுக்கிட்டார். அதன் பலனாக பழையபடியும் ஜாதகங்களைப் பரிசோதனை

செய்யத் தலைப்பட்டார்கள். ஆனால் ஜோதிஷ சாஸ்திரம் ஒவ்வொரு ஜோஸ்யரிடமும் வேறு வேறு அபிப்பிராயங்களைச் சிருஷ்டித்தது.

ஒருவர் ஏதோ வம்சப் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கமட்டும் நிச்சயம் ஒரு ஆண் பிள்ளை பிறக்கும் என்றும், அதற்கு மேல் எதிர்பார்க்க ஒன்றும் இல்லை என்றும் உறுதியோடு சொன்னார். மற்றொருவர் வந்து, பிருஹத் ஜாதகத்திலிருந்து ஒரு பாட்டை எடுத்துச் சொல்லி புருஷனுடைய ஜாதகத்தில் புத்திர பாக்கியத்துக்கு இடம் இல்லையென்றும், ஆனால் மனைவியின் ஜாதகத்தில் நிச்சயமான நம்பிக்கை கொள்ள இடம் இருக்கிறது என்றும் கூறினார். ஹோமம் வளர்த்துப் பிதுர்க்களுக்குத் தானம் செய்யவேண்டும் என்றும், ஒருமுறை ராமேஸ்வரம் யாத்திரை செய்யவேண்டும் என்றும் தெரிவித்தார் ஜோஸ்யர். ஆனால், இந்த ஜோஸ்யர்களின் வாய் மொழிகள் ஜனார்த்தனனின் உள்ளத்தைத் தொடக்கூட இல்லை. அப்படியிருக்க அவனுடைய பராமுகத்தை அவை எப்படித் தகர்க்க முடியும்; என்றும்போலவே அவன் இருந்து வந்தான். இந்த நிலையில் வருஷங்கள் நகர்ந்து கொண்டிருந்தன. கல்யாணம் ஆகுமட்டும் பரிசுத்தவானாக இருந்தான் ஜனார்த்தனன். கல்யாணமான பிறகு தன் பரிசுத்தத்தைத் தன் மனைவிக்கு வழங்கினான். நடைமுறைப் பழக்கத்தைப் போல பரிசுத்தத் தன்மை அவனைக் காலமெல்லாம் ஒட்டிக்கொண்டிருந்தது. இப்படிப்பட்ட பழக்கத்தைக் கண்டு சமூகம் சந்தோஷிக்கும். ஏனென்றால் அது புலனடக்கத்தைக் கௌரவிக்கக்கூடியது. இயற்கைப் பண்புகளை அங்கீகரிக்க விரும்பாமல், மிகவும் சாதாரணமான பண்புகளைக் கண்டு பரவசப்படும் சமூகம், உண்மையை நன்கு தெரிந்து கொண்ட நிலையிலேயே புலனடக்கத்தை கௌரவித்துக் கொண்டிருக்கிறது.

ஜனார்த்தனன் பழையபடியும் தன் மனைவியின் முகத்தை நோக்கினான். முகத்தில் கன்னப் பொறியோரம் சருமம் விறைப்பேறிப் போய் இருந்தது; கன்னங்கள் தொய்வுற்றிருந்தன. முப்பது வயதே நிறைந்த அவள் திடீரென்று நாற்பதாம் வயதைக்கூடத் தாண்டிவிட்டது போலத் தோற்றமளித்தாள். வெளுத்துப் போய் விகாரமாகக்கூடக் காணப்பட்டாள். பிரசவ வேதனைப் பட்டுக்கொண்டிருக்கும் பசுவைப் பார்த்த வண்ணம் நெடு மூச்சு வாங்கிக்கொண்டிருந்தாள். அடக்கி அமுக்கி வைத்திருந்த அவளுடைய உணர்ச்சிப் பொருமலைப் பார்த்தால் அது உடைந்து வெடித்துவிடுமோ என்று இருந்தது. ஜனார்த்தனனுக்கு மனைவியின்மீது அனேகமாக வெறுப்பே உண்டாகிவிட்டது. ஆனால் மறு கணம் தன் மட்டமான எண்ணத்தை நினைத்து மனம் வெட்கினான். மனைவியின் மீது இப்போது மட்டற்ற கருணை பிறந்துவிட்டது.

"பசுவுக்கும் கூட சந்தான பாக்கியம் இருக்கிறது."

தாயாரின் இந்த வார்த்தைகள் தெள்ளத் தெளிவாகக் கேட்டன. கத்தியால் குத்துண்டவன் போலத் துடித்தான் ஜனார்த்தனன்.

"புதிய
லக்ஸ் டாய்லட் சோப்
இதோ
வந்திருக்கிறது!"
LUX
TOILET SOAP
"கவர்ச்சிகரமான
புதிய
பரிமளம்!"
"புதிய
ரோஜாநிற காகிதத்தில்
சுற்றப்பட்டது!"
LTS. 193-50 TM.
☆ சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ☆

காவோ
சந்தன சோப்

சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது எல்லா வகையிலும் இங்கிலாந்தில் தயாராகும் சிறந்த வாசனை சோப்புகளுக்கு ஈடாக விளங்குகிறது. நாங்கள் இதுவரை ரசித்திருக்கும் சந்தன வாசனைக்குள் சிறந்தவைகளில் காவோ சோப்பின் இனிய சந்தன வாசனையும் ஒன்று.

"சோப் பெர்பியூமரி அண்ட் காஸ்மெடிக் ரெவியூ", லண்டன்

கங்கா ஒர்க்ஸ் :: அடையாறு மதராஸ்-20.

ஜம்மியின்

லிவர்க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளினால் ஏற்படும் பயத்தைப் போக்கடிக்கிறது.

மிகவும் முத்திப்போன சந்தர்ப்பங்கள் தவிர எல்லா ஈரல் குலைக்கட்டிகளுக்கும் ஜம்மியின் லிவர்க்யூர் கண்டிப்பான குணம் அளிக்கிறது என்பதை கடந்த பல ஆண்டுகளாக குணமாகி வரும் ஆயிரக்கணக்கான குழந்தைகளினால் நிரூபிக்கப்படுகிறது.

ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்
மைலாபூர், மதராஸ். (போன் நெ. 8139)
தெப்பகுளம் திருச்சினாப்பள்ளி, பெரிய தெரு கும்பகோணம், பெங்களூர், பம்பாய் 4, (போன் நெ. 41593) மற்றும்: லக்னோ, கல்கத்தா.

J-235. Tamil

சாரதா மிகவும் படபடப்போடு, "அதோ பாருங்கள். கன்று வெளியே வருகிறது; வெளியே வருகிறது" என்று உரத்த குரலில் சொன்னாள்.

தொழுவுக்குள்ளிருந்து ஹீனஸ்வரத்தில் கனைக்கும் சப்தம் கேட்டது.

ஜனார்த்தனன் சாரதாவின் கையைப் பிடித்து விறுவிறு என்று வீட்டுக்குள்ளே அழைத்துக் கொண்டுபோனான். போகும் போது அவர்களுக்குக் குறுக்காக ஒரு பெருச்சாளி ஓடி மறைந்தது விளக்கு வெளிச்சத்தில் தெரிந்தது.

தன் மனைவியிடம், "பார்த்து வா. இந்தக் காய்ந்து போன இலைச் சருகுகளுக்குக் கீழே பாம்பு கிடந்தாலும் கிடக்கும்" என்று கூறினான் ஜனார்த்தனன்.

பின்னால், உற்சாகத்துடன் தன் தாயாரும், தங்கையும் பேசிக் கொண்டிருப்பது அவனுக்குக் கேட்டது. உண்மையில் அவர்களை அலட்சியமாகப் புறக்கணித்து விட்டு அவன் திரும்பியதற்காக அவர்களுக்குக் கோபம்தான் வந்திருக்க வேண்டும். ஆனால், பெண்களின் சுபாவமே தனி. அவர்கள் துவேஷமோ, காதலோ கொள்ளும் போது பெருங் கூச்சல் கிளம்பி விடும்; மற்ற உணர்ச்சிகள் மோதும் போதோ அவர்கள் அதீதமான முறையில் சுபாவ நிலையில் இருந்து விடுகிறார்கள்.

கணவனும் மனைவியும் படுக்கையில் போய் அமர்ந்தனர். மௌனம் உடைபட்டது.

சுதி இழந்த குரலில், "ஆம். அவர்கள் சொல்லுவது சரி. உங்கள் அம்மா சொல்லுவது சரிதான்" என்றாள் சாரதா. ஏதோ தூரப் பிரதேசத்திலிருந்து வருவது போல ஒலித்தது அவளுடைய குரல்.

"என்ன சரி?" என்று கேட்டான் ஜனார்த்தனன்.

"அதுதான். நீங்கள் இரண்டாம் கல்யாணம் செய்து கொள்ள வேண்டியதுதான். உங்கள் புருஷத்துவத்தை என்னைப் போன்ற மலட்டுப் பிறவியிடம் பாழாக்க வேண்டாம்."

"கல்யாணம் என்பது நான் உயிரோடிருக்கும் வரையிலும் நடக்காத காரியம். கல்யாணம் செய்து கொள்ள விரும்பியிருந்தால் நான் இவ்வளவு காலத்தை கடத்த வேண்டியதில்லையே!"

முன் ஜென்மத்தில் நான் எத்தனையோ குழந்தைகளைக் கொன்றிருக்க வேண்டும். இல்லா விட்டால்..."

"ஏன், நான் கொன்றிருக்கக் கூடாது?"

"இல்லை இல்லை, நீங்கள் கொன்றிருக்க முடியாது—"

விம்மல் அவளுடைய வாசகத்தைத் தடுத்து நிறுத்தியது.

ஜனார்த்தனன் அவளைத் தன் கரங்களால் கட்டி, மார்போடு அணைத்துத் தழுவினான். அவள் கண்ணிலிருந்து உருண்ட ஒரு துளி ஜலம் அவனுடைய உள்ளங் கையில் விழுந்தது. ஏதோ ஓடுகிற மேகத்திலிருந்து உதிர்ந்த ஒரு

துளியைப் போலவும் தன் துணைவனின் உள்ளத்தில் அன்புத் திவலை சுரக்கும்படியாக, ஒரு பெண் தன் இதயத்தை நசுக்கிப் பிழிந்த ஒரு துளி ஜலத்தைப் போலவும் உதிர்ந்தது அந்தக் கண்ணீர்த் துளி. அந்தக் கண்ணீரில்தான் எத்தனை சொல்ல முடியாத வேதனை; சொல்ல முடியாத பேரின்பம்! அவளைத் தழுவியவாறே படுக்கையில் சாய்ந்தான். ஒரு நிமிஷம் இரண்டு இதயங்களிலும் மின் வெட்டியது. இருவரும் தன்னை மறந்தனர்.

எல்லா விதத் துவேஷங்களும் எல்லாவிதக் குரோதங்களும், அந்த இரவின் அந்தகாரத்தில் மறைந்து மடிந்தன. மற்ற நக்ஷத்திர ஒளியுடன் தன் ஒளியைக் கொட்ட வந்த புதியதொரு நக்ஷத்திரம் போல, காதல், பரிசுத்தமான காதல், பிறந்தது. இருவரும் ஊடினர்; முத்தினர்; ஆனால் முன்னைய ஊடலில் விரோதம் குடிகொண்டிருக்கும்; அந்த முத்தங்கள் யாவும் மலட்டுத்தனமானவை. இப்போதைய களியாட்டமோ முற்றிலும் வேறுபட்டது; அது, ஒரு குலக்கொடியை வாடிக் கருகி விடாமல் தளிர்க்கப்பண்ணுவதற்காக அன்பு ஊற்றைப் பெருக்கிய களியாட்டம்.

ஜனார்த்தனனுடைய பண்பாடு, நயத்தகு நாகரிகம், நாசுக்கு—எல்லாப் பண்புகளுக்கும் அன்றைய தினம் ஒரு மகத்தான சோதனை. இந்த மணவாழ்க்கையில், அவனுக்கு முதல் இரவாக அமைந்தது அந்த இரவுதான்; மாய வசியங்கள் நிறைந்து மனசைப் பிணிக்கும் முதல் இரவு அதுவே. இதுவரையிலும் ஜனார்த்தனனுடைய அனுபவம் தோல்வியாகவே இருந்து வந்தது; இந்தத் தோல்வியை அமர பூமியிலிருந்து கடவுளர் கவனித்துக் கொண்டிருந்தனர். ஆனால் தன் தோல்வியை அவன் மேலும் நீடிக்கவில்லை; தன் ஏமாற்றம், இயல்பான தன் உயர்ந்த அன்பான சுபாவத்தைக் கவிந்து விடவும் அவன் இடம் கொடுக்கவில்லை. ஏமாற்ற உணர்ச்சியை அலட்சியமாகத் தாங்கிக்கொண்டுதான் வந்தானே ஒழிய, அதற்குக் காரண கர்த்தா என்று தன் மனைவியை ஒருபோதும் அவன் குற்றம் சாட்டியதில்லை.

அன்றைய தினம் இரவில் அந்த மாய வசியங்கள் உடைப் பெடுத்துக்கொண்டு வந்து பேரலையாக அவன் மீது மோதின; சௌந்தர்யக் கடலில் அவனை ஆழ்த்தின; அமர பூமியிலிருந்து கடவுளர், அவனுடைய புருஷத்துவத்தையும், பிதா—தருமங்களையும் கவனித்துக்கொண்டிருந்தனர்.

ஜனார்த்தனன் மட்டற்ற மனப் பாசத்துடன் அவளைத் தழுவினான்.

ஒரே கனவு மயக்கத்தில் ஆழ்ந்திருந்தாள் சாரதா. பழைய வாழ்க்கை கழிந்து, புது வாழ்க்கை உதயமாகி இருக்கிறது என்ற ஒரே நினைவுதான் அவளுக்கு இருந்தது. மேலும், தன்னுடைய அந்த நிலை கனவோ மயக்கமோ அல்ல, ஆனால், உண்மையான அனுபவம், சொல்லிப் புரிய வைக்க முடியாத அனுபவம் என்பதையும் உணர்ந்து கொண்டாள். அப்பேர்ப்பட்ட பரவசம் அது.

அன்றுதான் பிறந்த புதிய பசுங் கன்றின் குரல் அவளுக்குக் கேட்

பதுபோல் தோன்றியது; பிறகு அந்தக் குரல் மனிதக் குரலைப் போல மாறி, மிகமிக அருகாமையில் ஒலிப்பது போலவும் இருந்தது... தன் முட்டாள்தனத்தைக் கண்டு—மனக் கற்பனையில் பிறந்த பச்சிளம் மேனியைப் படபடப் போடு தீண்ட முனைந்த தன் கரங்களைக் கண்டு—புன்னகை புரிந்தாள் சாரதா.

வெளியே, வானத்தில் இருள் மறைந்து நீலம் பூத்தது. சூரியோதயம் ஆகும் தருணம். புது நாள் பிறக்கப் போகிறது. புல்லுக்கும், பூவுக்கும், நீருக்கும், காற்றோடு கானங்களை மிதக்கவிடும் புள்ளொலிக்கும் புதுமை சேர்க்கும் புதுநாள் பிறக்கப் போகிறது.

வாசலில் முணுமுணுத்துக் கொண்டே மாமியார் கதவைத் திறக்கும் சப்தம் கேட்டது சாரதாவுக்கு. வேலைக்காரப் பெண்ணைப் பார்த்து கோபம் கோபமாகக் கடிந்து பேசிக்கொண்டிருந்தாள் மாமி. இந்தக் கோபமும், எரிச்சலும் தன்னை நோக்கித்தான் பாய்கின்றன என்று சாரதாவுக்குத் தெரியும். ஆனால், அவள் அதைப் பொருட்படுத்தவில்லை. மிகவும் அமைதியாக படுக்கையை விட்டு எழுந்தாள். தெய்வீகமாகத் தன் கணவனை நோக்கிப் புன்னகை செய்தாள். அவனும் பதிலுக்குப் புன்னகை புரிந்தான். அவளுடைய மேனி விகாரமும், அவளுடைய நடையில் காணப்பட்ட மிடுக்கும் அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. 'ஆகா! உதய சூரியன் நிகழ்த்தும் விந்தைகளும், அற்புதங்களும்தான் என்னே!' என்று அதிசயித்தான் ஜனார்த்தனன்.

ஆனால் சூரியன் எப்போதும் அஸ்தமிப்பதில்லை. ஹிந்து சமயப் பழம் பாடல் அப்படிக் கூறுகிறது. இந்த ஞானமும் நம்பிக்கையும் உள்ளவனுக்கு அது அஸ்தமிப்பதே கிடையாது.

✲

மிகப் பழைய செய்திப் பத்திரிகை

இங்கிலாந்தில் 1759-ம் வருஷம் டிசம்பர் மாதம் 17-ம் தேதியன்று "தி பப்ளிக் லெட்ஜர்" என்ற செய்திப் பத்திரிகை தொடங்கப் பட்டது. இதுதான் உலகத்திலேயே மிகப் பழைய செய்திப் பத்திரிகை. இந்தப் பத்திரிகையில் தாக்கரே, டாக்டர் ஜான்ஸன், ஆலிவர் கோல்ட்ஸ்மித் முதலியவர்களெல்லாம் எழுதியிருக்கிறார்கள். இதன் சொந்தக்காரரும் ஆசிரியருமாக இருந்தவர் ஹென்றி ஸன்லைவன் அலெக்ஸாண்டர் என்பவர். இவர் 79-ம் வயதில் காலமானார். இந்தப் பத்திரிகைக்கு லைசென்ஸ் கொடுத்தவர் மூத்த விட் என்பவர். வில்லியன் பாடன் என்பவர் பெயருக்கு லைசென்ஸ் கொடுக்கப் பட்டது. முதலில் வியாபாரச் செய்திகளைக் கொடுத்துவந்த இந்தப் பத்திரிகை பிறகு மற்றச் செய்திகளையும் கொடுத்து வரத் தொடங்கிற்று.

—சில்ட்ரென்ஸ் நியூஸ் பேப்பர்.

கென்னத் வாக்கர் சரீர சம்பந்தமான விஷயங்களைச் சொல்வதில் சமர்த்தர். அவரது கருத்துக்களே இவை. ஆரம்ப காலத்தில் எப்படி பிரஜாவிருத்தி நடைபெற்றது, இனப் பிரிவினை எப்படி ஏற்பட்டது என்ற விவரங்களை இதில் காண்கிறோம். இதுபோலவே, ஜூலியன் ஹக்ஸ்லி, ஹேவ்லக் எல்லிஸ் முதலிய அறிஞர்களின் கருத்துக்களும் சக்தியில் தொடர்ந்து திரட்டித் தரப்படும்.

ஆணும் பெண்ணும்

○

கென்னத் வாக்கர்

ஆண் பெண் இனப் பிரிவினைக்கும் பிரஜா விருத்திக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு என்பது உண்மைதான். என்றாலும் பால்ப் பிரிவினை யில்லாமலே பிரஜா விருத்தி செய்யவும் வழியுண்டு. ஆண் பெண் என்ற பாகுபாடு பரிணமித்து வருவதற்கு முன்பாகவே, ஜீவராசிகள் பிரஜா விருத்தி செய்து தான் வந்தன. ஜீவராசிகளின் ஆரம்பகால சரித்திரத்தைப் பார்த்தால் இந்த உண்மை புலனாகும். பாக்டீரியா போன்ற ஜீவராசி அணுக்கள், தம்மையே துண்டு துண்டாக்கி, பிரஜா விருத்தி பண்ணின. அதாவது இரண்டு அணுக்கள் சேர்ந்து மூன்றாவது அணு பிறப்பதற்குப் பதிலாக, ஒரு ஜீவ அணு தன்னைக் கூறுகூறாக்கி, பல அணுக்களாகப் பிரியும். ஆகவே, குழந்தையாகப் பிரிந்து வரும் ஜீவ அணு தனது தந்தை அணுவின் ஒரு பகுதிதான் என்று சொல்ல வேண்டும். அதுமட்டு மல்ல. குழந்தை அணுவுக்கு மூல அணுவான தந்தை அணு முழுவதும் குழந்தைகளாகப் பிரிந்து விடுகிறது. ஆகவே குழந்தை அணு பிரிந்தவுடன், தந்தை அணு செத்துப்போகவில்லை; சவமாவதில்லை. அதற்குப் பதிலாக, அதன் ஜீவன் அதன் குழந்தை அணுக்களிடம் தங்கி விடுகிறது. ஆகவே, ஆரம்ப காலப் பிரஜாவிருத்தியில் மரணம் கிடையாது; மாற்றம்தான் உண்டு. தனக்கென்றுள்ள தனித் தன்மையை மட்டும் அந்த மூல அணு இழந்து விடும்.

இந்தமாதிரி ஒன்று பற்பலவாகிப் பிரியும் தன்மை ஒரே ஜீவ அணுக் கொண்ட ராசிகளில் மட்டும் அடங்க வில்லை. இதே தன்மை பல ஜீவ அணுத் தாதுக்களைக் கொண்ட புழுக்கள், கடற்பாசிகள் இவற்றிடையும் உண்டு. சில சமயங்களில் மூல ராசியிலிருந்து ஒரு தனிப் பகுதியைப் பிரித்து விட்டால், அந்தத் துண்டுபடுத்தப் பட்ட ஜீவராசி தானாகவே தனக்கு ஒரு உருவமும் தன்மையும் பெற்று விடுகிறது. முருங்கை மாத்துக் கிளை ஒன்றை நட்டு மரமாக்குவது போல, ஜீவராசிகளில் சிலவற்றில்

இந்தத் தன்மை இருக்கிறது. இதனால், மூலராசிக்கும் மோசமில்லை; ஒரு புது ஜீவராசியும் பிறப்பெடுக்கிறது. என்றாலும், மூலராசி மடிந்து விடும். மூலராசியின் ஒரு பகுதிதான் அதன் பிறப்பாக விளங்கும் குழந்தை ராசியிடம் வாழ முடியும்.

இந்தமாதிரியான ஜீவ அணுவின் பிரஜா விருத்தி வாழ்வில் ஆண் பெண் பிரிவினைக்கோ, கலப்புக்கோ இடமில்லை. என்றாலும் கூட, இந்த ஏகஜீவ அணு ராசிகளிலும், இந்தப் பிரிவினை லேசாகத் தென்படுகிறது என்றே சொல்ல வேண்டும். ஏகஜீவ அணுராசியான அமீபாப் பூச்சி, தன்னைத்தானே கூறுபோட்டு பல ராசிகளை உண்டாக்க முடியும் என்றாலும், அது ஓரே யடியாக பிரிந்துபோய்க் கொண்டிருக்க முடியாது. பல பிரிவுகளாய்ப் பிரிந்து பிரிந்து வலுவற்றுத் தொய்ந்து போகும் பொழுது, அந்தப் பிரிவுபட்ட ஜீவ ராசிகளில் இரண்டுஒன்று சேர்ந்து, கலக்கின்றன. இந்தக் கலப்பினால் அணுத் தன்மைகள் கலப்பதோடு, வேறு சில அம்சங்களும் கலக்கின்றன. இந்தக் கலப்பினால் வலுப்பெற்ற அந்த ஜீவராசி—அதாவது இரண்டு ஒன்றான ஜீவராசி—மீண்டும் பழைய மாதிரியே பிரிய ஆரம்பிக்கின்றன. இந்தத் தன்மையினால், ஜீவராசிகள் தம்மைத்தாமே பற்பல பகுதியாக்கி பிரஜாவிருத்தி பண்ணியபோதிலும், கடைசியில் இரண்டு தனி ஜீவராசிகள் கலந்து தான் ஆகவேண்டும் என்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. ஆண்பெண் கலப்புக்கு மூலம் இந்தத் தன்மை தான் என்று கொள்ளலாம்.

இதைக் கொஞ்சம் விரிவாக ஆராய்ந்து பார்க்கலாம். இப்படி இரண்டு சுதந்திரமான ஜீவ தாதுக்கள் ஒன்று கலக்கும் தன்மை தான், பரிணாம விதிப்படி ஆண் பெண் கலப்பாக வளர்ந்து விட்டதா என்று கேட்கலாம். இதற்கு உண்டு இல்லை என்று உடனடியாய்த் துணிந்து பதில் கூற முடியாது என்றாலும், அணு ராசிகள் ஒன்றுடன் ஒன்று கலந்து பிரிவது போலவே, ஆண் பெண் அணுக்களும் கலந்து பிரஜாவிருத்தி பண்ணுகின்றன என்று கொள்ளலாம். ஆண்பெண் கலப்பினால் ஏற்படும் பிரஜாவிருத்தி என்பது இரண்டு தனிப்பட்ட ஜீவராசிகளின் அணுக் கலப்பு ஒன்றினால் தான் ஏற்படுகிறது. அமீபாப் பூச்சியைப்போல இந்த ஜீவ அணுக்கள் வெவ்வேறாகத்தான் இருக்கவேண்டுமென்பதில்லை. ஆனால், சரீரக் கலப்பின் மூலம் ஏற்படும் பிரஜா விருத்தியில் வெவ்வேறாகத்தான் இருக்கின்றன. இந்த வித்தியாசம் இது தான்: ஆண் அணு கருத்தரிப்பதில் கர்ம சிரத்தை கொள்கிறது; பெண் அணு தரித்த கருவைப் பரிபாலிக்கும் ஜீவ சத்துக்களைச் சேர்த்துக் கொடுக்கிறது.

பதிலா?

"மொட்டைக் கடுதாசிகளைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"அவை படுமோசமானவை. அவற்றை நான் படிப்பேன்; ஆனால் பதில் எழுத மாட்டேன்!"

—ஹெரால்ட்

சிறுகதை இலக்கியத்தின் சாம்ராட் ஆண்ட்டன் செகாவ். உலக இலக்கியத்துக்குப் புதுப் பாதை வகுத்தவன் கார்க்கி. இருவரும் உயிர்த் தோழர்கள். செகாவைப் பற்றி கார்க்கி எழுதி வைத்த இந்த "டைரிக் குறிப்பு"களில் எத்தனை அருமையான விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன! தன்னை பிறர் தாக்கியதைக்கூட எவ்வளவு பெருந்தன்மையுடன் எழுதி வெளிப்படுத்தி யிருக்கிறான்!

செகாவ்

○

மாக்சிம் கார்க்கி

கடந்த ஐந்து நாட்களாக என் உடல் நிலை சரியாக இல்லை. ஆனால் படுக்கையிலேயே படுத்திருப்பது என் பது வெறுப்பாக இருக்கிறது.

மழைத் துளிகள் பூமியின்மேல் விழுந்து புழுதியை ஈரமாக்குகின்றன. இக்கோ கோட்டை (Fort Iko) யில் அதிரும் பீரங்கிச் சத்தம் கேட் கிறது. கோட்டையை விரோதிகள் தாக்குகின்றனர். இரவிலோ காந்த விளக்கின் நீண்ட நாக்குகள் மேகக் கூட்டத்தைத் துழாவுகின்றன. அந் தக் காட்சி மனத்தைச் சஞ்சலப்படுத்து கிறது. ஏனென்றால், நாச தேவதை யின் பிறவியாகிய யுத்தம் மனித மனத்தை விட்டு அகலாதிருக்கச் செய்வது அதுதான்.

நான் செகாவைப் படித்துக்கொண் டிருந்தேன். அவர் பத்து வருஷங் களுக்கு முன் இறந்திராவிட்டால் இந்த யுத்தம் அவர் மனத்தைக் கெடுத்து மனித வர்க்கத்தின்மீது துவேஷ மனப்பான்மையை யுண்டுபண்ணி அவ ரைச் சாகடித்திருக்கும். அவருடைய இறுதிச் சடங்கு எனக்கு ஞாபகத் துக்கு வருகிறது.

மாஸ்கோவின் மக்கள் அருமை பெருமையுடன் நேசித்து வந்த எழுத்தாளரின் சவப்பெட்டியை ஒரு பெரிய காரில் வைத்துக்கொண்டு வந்தார்கள். அந்தக் கார் மீது பெரிய எழுத்துக்களில் அது போய்ச் சேர வேண்டிய இடத்தின் பெயர் எழுதி யிருந்தது. ஸ்டேஷனில் கூடியிருந்த திரளான ஜனக்கூட்டத்தின் ஒரு பகுதி செகாவின் பிரேதம் என்று எண்ணி மஞ்சூரியாவிலிருந்துகொண்டு வரப்பட்ட ஜெனரல் கெல்லரின் பிரேதத்துடன் சென்று விட்டது. அப்படித் தவருக எண்ணிப் போனவர் கள் ராணுவ மரியாதையுடன் அடக் கம் செய்யப்படும் பிரேதத்தைப் பார்த்து, "இது செகாவின் பிரே தமா? செகாவுக்கு ராணுவ மரியா தையா?" என்று ஆச்சரியமடைந் தனர். இந்தத் தவறை உணர்ந்ததும் சில தமாஷ் பேர்வழிகள் ஹாஸ்யமா கப் பேசி விளையாடிக்கொண் டிருந் தார்கள். செகாவின் பிரேதத்துடன் சென்றவர்கள் கிட்டத்தட்ட நூறு பேர்கள். குறிப்பாக இரண்டு வக்கீல் கள்தான் இப்போது என் ஞாபகத் துக்கு வருகிறார்கள். அவர்கள் இரு வரும் அழகான புது ஜோடுகள் தரித்

திருந்தார்கள். அழகான 'டை' கட்டியிருந்தார்கள். அவர்களைப் பார்த்தால் நிச்சயதார்த்தம் ஆன மாப்பிள்ளைகள் போலத் தோன்றினர். அவர்களுக்குப் பின்னால் நடந்து சென்றதால் அவர்கள் பேசியதைக் கேட்டறிய முடிந்தது. அவர்களில் ஒருவரான மாக்லாகோப், நாய்களின் திறமையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

மற்றவர்—அவர் எனக்கு அறிமுகம் ஆகாதவர்—தம்முடைய கிராமாந்திர வீட்டின் சௌகரியங்களைப் பற்றியும் சுற்று வட்டாரங்களின் அழகைப்பற்றியும் வானளாவப் புகழ்ந்துகொண்டிருந்தார். அழகாக உடுத்தியிருந்த ஒரு பெண்மணி தன் கையால் ஜரிகை வைத்துத் தைத்த குடை ஒன்றை லாகவமாக எடுத்துக் கொண்டு தன்னோடு கூட வந்த ஒரு கிழவனாரிடம் இறந்தவருடைய அருமை பெருமைகளைப் பற்றிச் சொல்லி, தான் சொல்லுவதை அவரை நம்பும்படி செய்ய முயன்று கொண்டிருந்தாள். "ஆஹா! அவர் அற்புதமான மனிதர்......புத்திக் கூர்மையுடையவர்......" என்றாள். அந்தக் கிழவர் அதை நம்பாதவர் போல இருமினார். அன்று வெயில் அதிகமாக இருந்தது. அந்தப் பிரேத ஊர்வலத்திற்கு முன்னால் கொழுத்த வெள்ளைக் குதிரையின் மீது ஒரு போலீஸ் ஜவான் சவாரி செய்துகொண்டு போனான். அதைப் பார்க்க குரூரமாகவும், கீழ்த்தரமாகவும் தோன்றியது. அவ்வளவு பெரிய கூர்த்த மதி படைத்த கலைஞனுக்குச் சற்றும் பொருத்தமில்லாமல் தோன்றியது அந்தக் காட்சி.

* * *

ஏ. எஸ். சுவோரினுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் செகாவ் பின்வருமாறு எழுதினார்:

"மனிதன் உயிர் வாழ்வதற்காக செய்யும் போராட்டங்கள் அவனுடைய வாழ்வில்உள்ள இன்பத்தைத் துடைத்து எறிந்துவிட்டு அவனை துயரத்தில் ஆழ்த்துகிறது. இதைக் காட்டிலும் கலா ரசனை இல்லாத, களைப்பூட்டும் விஷயம் வேறு ஒன்றும் இல்லை."

மேற் சொன்ன வாசகம் ருஷ்ய மனப்போக்கைத் தெள்ளத் தெளிவாக காட்டுகிறது. ஆனால் இது ஏ. பி. செகாவுக்கு உரித்தான மனப் போக்கு என்று நான் நினைக்கவில்லை. ருஷ்யாவில் எல்லாப் பொருள்களும் அபரிமிதமாகக் கிடைக்கின்றன. ஆனால் வேலை செய்வதில் யாருக்கும் சந்தோஷம் கிடையாது. ருஷ்யர்கள் மனித சக்தியைப் போற்றுகிறார்கள். ஆனால் அதை நம்ப மட்டும் மாட்டார்கள். உதாரணமாக, ஜாக் லாண்டனைப்* போன்ற ஒரு சுறுசுறுப்பான மனிதன் ருஷ்யாவில் இருக்கவே முடியாது. அவருடைய புத்தகங்கள் ருஷ்யாவில் ஜனரஞ்சகமாக இருந்த போதிலும் அவை ருஷ்ய மக்களை செயல்புரியத் தூண்டுவதாக எனக்குத் தெரியவில்லை. அவை அவர்களுடைய கற்பனைசக்தியைத் தூண்டிவிடுகின்றன.

ஆனால் செகாவை இந்தக் கோணத்தில் வைத்துப் பார்க்கும் பொழுது அவர் ருஷ்யரே அல்ல. "வாழ்க்கைக்காக நடத்தும் போராட்டங்கள்" அவருடைய இளம் பிராயத்திலேயே தொடங்கி விட்டன. மன உளைச்சல், அன்றாட வாழ்க்கையின் அவதிகள் துண்டு ரொட்டிக்காக—அதுவும் அவருடைய குடும்பத்தின் அனைவருக்கும் தேவையான ரொட்டிக்காக—அவர் பட்டபாடு, தொல்லைகள் இவைதான் காரணம்.

இன்பக்கலப்பற்ற அந்தத் தொல்லைகளிலேயே அவருடைய இளம்சக்தி விரயமாகி விட்டது. இத்தனையும்

---

* ஜாக் லாண்டன் (1876—1916) பெயர் பெற்ற அமெரிக்க நாவலாசிரியர். இவருடைய கதைகள். சக்தியில் வெளிவரும். —ஆசிரியர் சக்தி

போக அவர் தம்முடைய ஹாஸ்ய ரசனையை எப்படி மிச்சம் பிடித்து வைத்திருந்தார் என்பதைப் பார்த்துத் தான் நாம் ஆச்சரியப் படவேண்டும். திருப்தியாக உண்ணுவது நிம்மதியாக வாழுவதுமாக இருக்கும் வர்ண ஜால மற்ற வெளிறிப்போன அபிலாஷை கள்தான் வாழ்க்கையாகப் பட்டது அவருக்கு. வாழ்க்கையில் மகோன்னதமான நாடகங்களும், சோக நாடகங்களும் அன்றாட வாழ்க்கை விவகாரத்தில் அவரைப் பொறுத்த மட்டில் மறைந்து மங்கிக் கிடந்தன. தம்மைச் சுற்றி, தம்மை நம்பி உயிர் வாழ்ந்து வந்த ஜீவன்களைப் போஷிக்கும் பொறுப்பிலிருந்து விடுபட்ட பிறகு தான் அந்த நாடகங்களின் ஜீவரசத்தைத் தீக்ஷண்யப் பார்வையோடு அவரால் பார்க்க முடிந்தது.

தொழில்தான் பண்பாட்டின் அஸ்திவாரம் என்கிற முக்கியத்துவத்தை செகாவைப்போல நன்றாக உணர்ந்தவரை நான் கண்டதில்லை. இந்த உணர்ச்சி அவருடைய அன்றாட வாழ்க்கையில் நிகழும் சில்லறை விஷயங்களிலும், அவருடைய பழக்க வழக்கங்களிலும் அவருக்குப் பிடித்த பொருள்களைத் தேர்ந்தெடுப்பதிலும் பிரதிபலித்தது. மனிதனுடைய சிருஷ்டிகளில் காட்டும் ஆர்வத்திலும் அந்த உணர்ச்சி பிரதிபலிக்கிறது.

பூஞ்சோலைகள் வளர்ப்பதிலும் உலகத்தை அழகு பெறச் செய்வதிலும் அவர் ஆர்வம் காட்டினர். உழைப்பில் கவிதா ரசனையைக் கண்டார். அவருடைய தோட்டத்தில் வளர்ந்த பழமரங்களையும் தோட்டத்திற்கு அழகைத் தரும் பூச் செடிகளையும் அவர் கர்ம சிரத்தையோடு கவனித்து வந்தார். ஆட்காவில் உள்ள அவருடைய வீட்டை அழகுபெற அமைக்க அவர் வைத்திருந்த திட்டங்களைப் பற்றிச் சொல்லும்பொழுது "ஒவ்வொரு மனிதனும் தனக்குச் சொந்தமான சிறிதளவு பூமியில் தன்னல் இயன்றமட்டும் வேலை செய்தால் உலகம் எவ்வளவு அழகாக காட்சியளிக்கும்!" என்பார்.

நான் 'வாஸ்கா பஸ்லாவ்' (Vasska Basslaev) என்ற நாடகம் ஒன்றை எழுதத் தொடங்கி யிருந்தேன். ஒரு நாள் அந்த நாடகப் பாத்திரமாகிய வாஸ்காவின் புகழ்ச்சியான தனிமொழியைப் படித்துக் காட்டினேன்.

ஆற்றலில், பலத்தில் பின்னும்
அணுவளவேனும் பெற்றால்
மாற்றுவேன் பனியை நீராய்
வன்மைசேர் வெப்ப மூச்சால்;
ஏற்றுவொண் அலைகள்வீசும்
இடம்படு கடல்கள் சூழ்ந்த
போற்றிசெய் புவனம் யாவும்
பொழுதெலாம் உழுதுவந்தே,
ஆண்டுகள் தோறும் இந்த
அவனியை, சிங்கமென்னத்
தாண்டுவேன்; நடப்பேன்; தெய்வத்
தலங்களைச் சமைத்துப்பார்ப்பேன்
காண்தகு காட்சி யாக
கவின்மலர் வனங்கள் ஆக்கி
மாண்புறுமணப் பெண் என்னும்
வையத்தைத் தழுவி நிற்பேன்.
மாணிக்க மணியைப் போலும்
வையத்தைக் கொண்டு சென்று
பாணிக்கை கொட்டி ஆர்த்து,
பருமணிக் குலங்கள் நாண
ஆணிப்பொன் ஒளியைக் கொட்டும்
அருணனார் கண்முன் காட்டி
காணிக்கையாக அஃதை
கடவுள்பால் கொண்டு செல்வேன்
'இறைவனே! கொணர்ந்தேன் இந்த
எழில்சிந்தும் மணியை, எந்தன்
திறையினை, செப்பலாற்றாத்
திறமையின் விளைவை, கண்ணால்
குறைவர நோக்கும்' என்று
கும்பிட்டுக் கூறினும்
தருகிலேன் அவர்பால் எந்தன்
தரணியாம் மாதராளை.

செகாவுக்கு இந்தத் தனிமொழி நிரம்பப் பிடித்திருந்தது. அவர் இருமிக் கொண்டே அங்கிருந்த டாக்டர் எ.

பட்டினியிலிருந்து நம்மை டீ எப்படிக் காப்பாற்றுகிறது?

அயல்நாட்டு நாணயச் செலாவணி நம் நாட்டுக்கு இன்று மிகவும் அவசியமாக இருக்கையில், நாம் ஏற்றுமதி செய்யும் 40 கோடி பவுண்டு தேயிலை, அவசியமான உணவுப் பொருள்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய ஏராளமான தொகையை அளிக்கிறது. டீ நம் நாட்டு கலாசாரத் தூதர் மட்டுமல்ல, பட்டினியைத் தடுக்க உத்திரவாதமும் அளிக்கிறது. ஏற்றுமதித் தொழிலில் இரண்டாவதாக நிற்கும் டீத்தொழில் நாட்டின் பொருளாதாரத் துறையில் பிரதான ஸ்தானம் வகிக்கிறது.

டீயைப்பற்றிய சில உண்மை விவரங்கள்

- ஏழு லக்ஷம் ஏக்ரா நிலத்தில் வருஷமொன்றுக்கு 54 கோடி பவுண்டு டீ உற்பத்தி செய்கிறோம்.
- இத்தொழிலில் 10 லக்ஷம் ஆண்களும் பெண்களும் ஈடுபட்டிருக்கிறார்கள்.
- உள் நாட்டில் அருந்தும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 3 அணா வரியும், ஏற்றுமதி செய்யப்படும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 4 அணா வரியும் சர்க்காருக்குக் கிடைக்கிறது. நாட்டு கஜானாவுக்கு வருஷமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 13 கோடி வரும்படி கிடைக்கிறது.
- மேலும் டீ கம்பெனிகள் செலுத்தும் வருமான வரி மூலமாக சர்க்காருக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.

டீ

ஒரு மகத்தான இந்தியக் கைத்தொழில்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

லிப்டன்ஸ்

என்றல்

முதல்தரமானவை

LTX-151-TM

எச். அலெக்சினிடத்திலும் என்னிடத்திலும் சொன்னார்: "அது உண்மையில் மிக நன்ருக இருக்கிறது! அது முக்காலும் உண்மை. மேலும் மனுஷத்துவம் அப்படியே இருக்கிறது! இதில் தான் தத்துவத்தின் ஜீவ நாடியே பொதிந்து கிடக்கிறது. மனிதன் உலகத்தில் வாழ வகை செய்து கொண்டான். ஆகவே அந்த உலகத்தை வாழச் சௌகரியமான இடமாகவும் செய்துகொள்ள வேண்டும்."

அதை ஆமோதிப்பதுபோல் விட்டுக் கொடுக்காத பாவத்தோடு தலையையும் ஆட்டினார். பிறகு "அவன் செய்தே தீருவான்!" என்றார்.

வாஸ்காவினுடைய தற்புகழ்ச்சியான பேச்சை மீண்டும் ஒரு முறை படிக்கச் சொன்னார். நான் அப்படியே படித்தேன். அவரும் கூர்ந்து கவனித்துக் கேட்டார். முடிவில் 'கடைசி இரண்டு வரிகளும் தேவையில்லை. அவை பொறுப்பற்ற தனமாக இருக்கிறது. அதற்கு அவசியமே ஏற்படவில்லையே......" என்றார்.

* * *

அவர் தம்முடைய சொந்த இலக்கிய சிருஷ்டிகளைப் பற்றி அதிகமே பேசுவதில்லை. பேசினாலும் அரை மனதோடுதான் பேசுவார். அவர் டால்ஸ்டாயைப் பற்றிப் பேசும் பொழுது எப்படி தூய்மை நிறைந்த உள்ளத்தோடும் பக்தி சிரத்தையோடும் பேசுவாரோ அப்படித் தம் இலக்கியத்தைப் பற்றிப் பேசுவார் என்று சொல்லலாம். எப்பொழுதாவது அவர் குஷியான மனப்போக்கோடு இருக்கும் பொழுது சிரித்துக்கொண்டே ஏதாவது தமக்குத் தோன்றியுள்ள புதுக் கருத்தைச் சொல்லுவார்—அது அநேகமாக ஹாஸ்ய ரசனை நிரம்பியதாகத்தான் இருக்கும்.

"பள்ளிக்கூட வாத்தியாரம்மாவைப் பற்றி எழுதப்போகிறேன். தெரியுமா உங்களுக்கு? அவள் நாஸ்திகத்தில் நம்பிக்கையுடையவள்; டார்வினை தெய்வமாகப் போற்றுகிறவள். ஜனங்களுடைய மூட நம்பிக்கையையும் காரண காரியமற்ற விருப்பு வெறுப்புகளையும் களைந்தெறிய வேண்டும் என்ற நம்பிக்கை கொண்டவள். ஆனால், எவ்வளவுதான் மூட நம்பிக்கையை எதிர்த்துப் போராடினாலும் ஒரு விஷயத்தில் தோல்விதான். அவள், கறுப்புப் பூனையின் எலும்பு ஒன்றை வைத்துக்கொண்டால் காதல் விவகாரத்தில் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், அர்த்த ராத்திரியில் எலும்பை எடுப்பதற்காக கறுப்புப் பூனையை வேகவைப்பதி னின்றும் அந்தத் தீவிரவாதம் அவளைத் தடுக்க முடியாது" என்று சொன்னார்.

அவருடைய நாடகங்களைத் தமாஷானவை என்று சொல்லுவார். அவர் எழுதிய நாடகங்கள் தமாஷானவை என்று திட்டமாக அவர் நம்பினார் என்றேநான்நினைக்கிறேன். அநேகமாக இதற்குக் காரணம் சாவா மொக்கோசாப் (Savva Mokozoff) தான். அவர் அடிக்கடி, "செகாவின் நாடகங்களை மங்கள இசை நாடகங்களாக நடிக்கலாம்" என்று சொல்லுவார்.

ஆனால் பொதுவாக அவருடைய இலக்கிய சிருஷ்டிகளில் கண்ணுங் கருத்துமாக இருந்தார். அவருடைய இந்தப் போக்குத்தான் ஆரம்ப எழுத்தாளர்களின் உள்ளத்தைத் தொட்டது. யாவரும் வியக்கத்தக்க பொறுமையோடு பி. லாசாரெவ்ஸ்கி, என். ஒலிஜ்ஜி முதலிய பலருடைய கையெழுத்துப் பிரதிகளைப் படித்துப் பார்ப்பார்.

'நமக்கு இன்னும் அதிகமாக எழுத்தாளர்கள் தேவை' என்று சொல்லுவார். இலக்கியம் நம் நாட்டில் ஒரு புதுமையாக இருக்கிறது—சில விசேஷ புத்தி படைத்தவர்களுக்குக் கூடத்தான். நார்வேயில் இருநூறு பேருக்கு இரண்டு எழுத்தாளர்கள் வீத

மும், இருபத்தாறு ஆண்களுக்கு இரண்டு எழுத்தாளர் வீதமும் இருக்கிறார்கள். ஆனால் ருஷ்யாவில் பத்து லட்சம் பேருக்கு ஒரு எழுத்தாளன் இருக்கிறான் என்று சொல்லுவார்.

* * *

அவரைப் பீடித்திருந்த நோய் அவரை அவர் உம்மணாமூஞ்சி ஆக்கிவிட்டது. அதனால் அவர் மனித வர்க்கத்தைக்கூட வெறுக்கத் தொடங்கி விட்டார். அந்த மாதிரி நாட்களில் அவர் தம்முடைய தீர்மானங்களில் தாறுமாறாக இருப்பார்; மற்றவர்களுடன் பேசாமல் மௌனமாக இருப்பார். ஒரு நாள் ஒரு படுக்கையில் படுத்துக்கொண் டிருந்தார்; இருமிக் கொண் டிருந்தார். வாயில் தெர்மா மீட்டரை வைத்து விளையாடிக் கொண்டே சொன்னார்:

"நாம் சாகவேண்டும் என்று வாழ்வதில் அவ்வளவு குஷி இல்லை. ஆனால் நாம் நம்முடைய குறித்த கால வரையறைக்கு முன்னமேயே இறந்து விடப் போகிறோம் என்று தெரிந்து கொண்டே வாழ்வது சர்வ முட்டாள் தனம்..." என்றார்.

மற்றொரு சமயம் ஒரு திறந்த ஜன்னலில் உட்கார்ந்துகொண்டு கடலின் அடிவானத்துக்கு அப்பால் பார்த்துக்கொண்டே கோபமாக ஏதோ முனகினார். திடுதிப்பென்று "நாம் நல்ல சீதோஷ்ண ஸ்திதிகளில் வாழ்வது பற்றியோ, நல்ல அறுவடையைப் பற்றியோ, வெற்றிகரமான காதல் விவகாரத்தைப்பற்றியோ பெரிய பணக்காரராகிவிட வேண்டுமென்பது பற்றியோ அல்லது போலீஸ் இலாகாவின் தலைமை அதிகாரி பதவி கிடைப்பது பற்றியோ இன்பக் கனவு காண்பதிலேயே நாம் பழக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் மேலும் மேலும் அறிவு வளர்ந்து புத்திசாலிகளாக வாழவேண்டும் என்ற நம்பிக்கையில் வாழும் மக்களை நான் பார்த்ததே இல்லை. இனி வரும் புதிய ஜார் மன்னர் காலத்தில் இதில் மாறுதல் அடைந்து விஷயங்கள் தெளிவடையும். இன்னும் இருநூறு வருஷங்கள் கழித்து மேலும் நன்மையுண்டாகும் என்று நான் நினைக்கிறேன். ஆனால் ஒருவராவது நாளைக்கே விஷயங்களைத் தெளிவாக்க வேண்டும் என்று நினைப்பது கிடையாதே! எல்லாமாகச் சேர்ந்து வாழ்க்கை ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் குழப்ப நிலையை அடைந்து கொண்டே போகிறது. தானாகவே தன்னிச்சையாகவே நகர்ந்து செல்லுகிறது. அதே சமயத்தில் மக்கள் நாளும் பொழுதும் முட்டாள்களாக வளர்கிறார்கள்; மேலும் பெரும்பாலானவர் வாழ்க்கையின் வெளிவிளிம்பில் காலத்தைக் கடத்துவதோடு நின்று விடுகிறார்கள்" என்று மனம் வெதும்பக் கூறினார்.

சில நிமிஷங்கள் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். பிறகு தம் புருவங்களைச் சுருக்கி நெளித்துவிட்டு மேலும் கூறினார்:

"மாதாக் கோயில் ஊர்வலத்தின் போது நிற்கிற ஊனமான பிச்சைக்காரனைப் போல்தான்" என்றார்.

அவர் ஒரு வைத்தியர்—வைத்தியருக்கு வியாதி வந்தால் சாதாரண மனிதனைக் காட்டிலும் அதிகமாக கஷ்டப்படுவார். ஏனெனில் சாதாரண நோயாளி வியாதியை உணரமட்டும் தான் செய்வான். ஆனால் வைத்தியரோ அதை உணர்வதோடு மட்டுமல்லாமல் அவருடைய உடலில் பல பாகத்தின் உறுப்புகளின் நுண்ணணுக்கள்மெல்ல மெல்ல அழிக்கப் படுகின்றன என்பதும் அவருக்குத் தெரியும். இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் விஷய ஞானம் சாவின் நெருக்கத்தை எவ்வளவு அண்மையில் கொண்டு வருகிறது என்று ஊகிக்கலாம்.

* * *

அவர் சிரிக்கும்பொழுது அவருடைய கண்கள் ஒளிவீசும், இனிமை

யாக இருக்கும், துயரத்தைத் துடைக்கும்—பெண்களின் கண்களைப்போல குளுமையாக இருக்கும். அவருடைய சிரிப்பு, ஓசையில்லாமல் மிகமிக மெதுவாக மௌனம் பூண்டு இருக்கும். அந்த மாதிரியான தனிப் பாணியில் பிறர் சிரிப்பது அபூர்வம். அவர் அந்தச் சிரிப்பில் ஆனந்தமடைகிறார், பரவசமடைந்து களிப்படைகிறார் என்பது வெளிப்படை. அம்மாதிரியான ஆத்மார்த்தமான சிரிப்பு சிரிப்பவரை நான் பார்த்ததே இல்லை. குரூரமான குட்டிக் கதைகளைக் கண்டு அவர் புன்முறுவல் கூடச் செய்ய மாட்டார்.

அவருக்கே உரித்தான அந்த ஆனந்தச் சிரிப்பு சிரித்துக் கொண்டே ஒரு நாள் என்னிடம் சொன்னார்:

"டால்ஸ்டாய் உங்களைப் பற்றிக் கொண்டிருக்கும் கருத்துக்களில் அடிக்கடி மாறுபாடு காணப்படுவதற்குக் காரணம் தெரிமா? அவர் பொருமைக்காரர். சூலர்ஜிட்ஸ்கி (Sulerjitzki) டால்ஸ்டாயை விரும்புவதைக் காட்டிலும் உங்களை அதிகம் விரும்புகிறார் என்று அவர் நினைக்கிறார். ஆம் அது உண்மைதான். டால்ஸ்டாய் தங்களைப் பற்றி இப்படிச் சொன்னார்:

'நான் கார்க்கியை உள்ளன்போடு நடத்த முடியாது—ஏன் அப்படி என்பது எனக்கே தெரியவில்லை—ஆனால் என்னால் முடியவே முடியாது. சூலர் அவருடன் வசிக்கிறார் என்பதே எனக்கு வெறுப்பாக இருக்கிறது.

'சூலர் இப்படிச் செய்யக்கூடாது. கார்க்கி கருணையற்ற மனிதர். அவர் தன்னிஷ்டத்துக்கு மாறாக ஒரு மாணவனைப் பட்டம் வாங்கச் சொன்னால் அவன் எப்படி மற்றவர்களைக் கண்டால் எரிந்து விழுவானே அதுமாதிரிதான் கார்க்கியும். அவர் ஒரு உளவாளி. இந்த இடத்திற்கு வந்து அவர் தன்னந்தனியாக அன்னியரைப் போல இருக்கிறார். தம்மைச்சுற்றி நிகழ்கிற காரியங்களை யெல்லாம் கூர்ந்து கவனிக்கிறார். ஒவ்வொருவரையும் உன்னிப்பாகப் பார்த்துத் தம்முடைய சொந்தக் கடவுளிடம் முறையிடுகிறார், அவருடைய கடவுள் பூதாகாரமான ஒரு சிருஷ்டி; கிரேக்க புராணங்களில் வருகிற அமானுஷ்ய உருவம் போன்றது. அல்லது குடியானப் பெண்கள் சொல்லும் கதைகளில் பேய், பிசாசைப் போன்றது' என்று டால்ஸ்டாய் கூறியதைக் கூறி நிறுத்தினார் செகாவ்.

செகாவ் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வரும்வரையில் சிரித்தார். சிரித்துக் கொண்டே கண்களைத் துடைத்துக்கொண்டு மேலும் கூறத் தொடங்கினார்.

"நான் அதற்கு 'கார்க்கி தங்கமான மனிதர்' என்று சொன்னேன். ஆனால் அவர் விட்டுக் கொடுக்கவில்லை. "இல்லை, இல்லை, அவரைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அவர் மூக்கைப் பாருங்கள், வாத்துமாதிரி-சந்தோஷமில்லாத, கருணையற்ற மனிதர்கள் மூக்குத்தான் அப்படி இருக்கும். பெண்கள்கூட அவரை நேசிப்பதில்லை. பெண்கள் நாயைப்போல நல்ல மனிதனை மோப்பம் பிடித்து அறிந்து கொள்ளுவார்கள். சூலர்—அது வேறு விஷயம்—அவரிடம் பிறரை, பட்டும் படாமலும் நேசிக்கும் திறமை இருக்கிறது. அந்தத் துறையில் அவர் மேதா விலாசம் பொருந்தியவர்தான்—இந்த இடத்தில் கொஞ்சம் நிறுத்தினார். பிறகு மேலே தொடர்ந்தார். "ஆம். அந்தக் கிழவனார் (டால்ஸ்டாய்) பொருமைக்காரர் தான், என்ன அதிசயமான மனிதர் ஐயா அவர்!"

* * *

அவர் டால்ஸ்டாயைப் பற்றிப் பேசும் போதெல்லாம் எளிதில் கண்டுபிடிக்க முடியாத ஒரு அபூர்வ வாஞ்சையோடு கண்களில் புன்முறுவல் தவழ மிருதுவான குரலில் ஏதோ

ஒரு வனதேவதையைப் பற்றிப் பேசுவதைப் போலவும் சூட்சமமான பொருளைப்பற்றிப் பேசுவதைப் போலவும் குளுமையான சொற்களைப் போட்டுத்தான் பேசுவார். 'டால்ஸ்டாய்க்குத் துணையாக வேறு ஒருவரும் இல்லையே! அவருடைய நுண்ணிய கருத்துக் குவியல்களை எழுதிவைக்கப் பக்கத்தில் யாரும் இல்லையே!' என்று செகாவ் அடிக்கடி முறையிடுவார்.

சூலர்ஜிட்ஸ்கியிடம் "நீதான் இந்த காரியத்தைச் செய்ய வேண்டும்" என்று செகாவ் சொன்னாராம். "டால்ஸ்டாய் உன்னிடம் பிரியமாக இருக்கிறார். உன்னிடம் அன்பு கனியப் பேசுகிறார். உன்னிடம் நிறைய விஷயங்களைச் சொல்லுகிறார்....." என்று அவரிடம் கூறினாராம்.

சூலரைப் பற்றி செகாவ் என்னிடம் ஒரு முறை சொன்னார்: "அவர் சமர்த்தான குழந்தை....." செகாவ் சொன்னது முழுக்க முழுக்க உண்மை.

* * *

ஒருநாள் டால்ஸ்டாய் செகாவின் கதை ஒன்றைப் பற்றிப் பரவசத்தோடு பேசிக்கொண்டிருந்தார். துஷங்கா என்கிற கதையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்ததாக என் ஞாபகம். "அது ஒரு அழகான பின்னல் வேலை மாதிரி. அதுவும் கற்பு நிறைந்த இளம் பெண் ஒருத்தி பின்னிய ஜரிகைப் பின்னல் மாதிரி. அப்பின்னல்பின்னுகிறவர்கள் பழங்காலத்தில் இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையையும் அவர்களுடைய எழிற் கனவுகளையும் அந்தப் பின்னல் தினுசுகளிலே இழைத்து அழகாக அக்காலத்தில் பின்னியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பிடித்தமான தினுசுகளில் அவர்களுடைய கனவுகளைப் பதித்து வைத்தார்கள். அவர்களுடைய வாழ்வற்ற தூய்மையான காதற் கனவுகளை அந்தப் பின்னல்களில் ஏற்றினார்கள்" என்றார்.

டால்ஸ்டாய் பரவசத்தில் ஆழ்ந்து பேசினார். அவருடைய கண்களில் நீர் ததும்பியது. அன்றுதான் செகாவ் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். அன்று அவர் நாணத்தோடு தலையைக் குனிந்துகொண்டுசர்வ ஜாக்கிரதையாக அவருடைய கண்ணாடியைத் துடைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவர் நீண்ட நேரம் மௌனமாக இருந்துவிட்டு பிறகு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். நாணம் தழுதழுக்கும் லேசான குரலில், "அதில் நிறைய அச்சுப் பிழைகள் இருக்கின்றன..."

* * *

செகாவைப் பற்றி நிறைய எழுதலாம். ஆனால் அது மிக லாகவமாக, நுணுக்கமாகச் செய்ய வேண்டிய விஷயம். ஆனால் அந்தத் திறமை என்னிடம் இல்லையே. அவர் சைபீரியப் புல்வெளி என்று எழுதியிருக்கும் கதை ஒரு அபூர்வ சூழ்நிலையில் மேலோட்டமாகவும் ஆழ்ந்த துக்கத்தோடும் ருஷ்யப் பாங்கில் எழுதியிருக்கிறார். அதே பாங்கில்தான் அவரைப் பற்றியும் எழுதவேண்டும். அவரவர் படித்து அனுபவிக்க ஏற்ற ஒரு கதை. அத்தகைய மனிதனைப் பற்றிச் சிந்திப்பது நன்மையைச் செய்கிறது. ஒருவருடைய வாழ்க்கைக்கு உரம் தந்து வாழ்க்கையை அர்த்த புஷ்டியுள்ளதாக்குகிறது.

மனிதனிடத்தில் குற்றம் குறைகள் இருந்த போதிலும் அவன்தான் உலகத்தின் அச்சாக விளங்குகிறான். நாம் எல்லோரும் நம்முடைய சகோதர மனிதர்களின் அன்புக்காக ஏங்கித் தவிக்கிறோம். ஒருவன் பட்டினி கிடக்கும்பொழுது பாதி வெந்ததும் வேகாததுமான ரொட்டித் துண்டு கூட அமுதாகப்படுகிறது.

சென்ற மாத இறுதியில் காரைக்குடி கம்பன் திருநாள் விழாவில் நடந்த கவியரங்கில், அரங்கேற்றப்பட்ட பாடல், இது.

யாமறிந்த கம்பன்

○

திருச்சிற்றம்பலக் கவிராயர்

1

நமஸ்காரம்.
காரைக்குடி நகரின்
கண்ணியரே. கம்பனது
பேருரைகள் கூறவந்த
பெரியோரே. உங்களுக்கு
சீர்க்கம்பன் அடி பரவும்
சிற்றம்பலம் வணக்கம்.

2

அத்தத் திருநாளில்
அரங்கேற்றி, தமிழ்மொழியின்
நித்தியத்தைப் பட்டயமாய்
நீட்டி விட்ட கம்பனை நீர்
சித்திரித்துக் காட்டுமென்று
செப்பிவிட்டார் செயலாளர்.
சிறியேனோ—
எழுத்தாணி மழுத்தாங்கி
எதுகை மோனைகளை
விழுத்தாட்டி வாகைகொளும்
வெற்றிக் கவியல்ல.
ஆதலினால்—
கம்பத் திருநாடா,
கண்பார்க்க வேண்டுமையா.
வம்பு தும்பு பண்ணாமல்
வந்தருள வேண்டுமையா.
கும்பிட்டேன். அடியேனின்
குறை தீர்க்க வாருமையா.
தம்பி துயர் துடைக்க
தட்சணமே வாருமையா.

சத்தியமாய்ச் சொல்லுகிறேன்
சாகணேசன் மீதாணை.
இத்தருணம் இங்கு வந்து
எந்தன் கலி தீர்க்க
சித்தம் இரங்கி யருள்
செய்யுமையா—என்றிட்டேன்.
என்றவுடன்,
கல்விக் கடல் கடந்த
கம்பன், தமிழ்ச் சொல்லின்
செல்வக் கவிராசன்
சிங்கேறு போலவந்தான்.

3

வந்தவுடன்—
ராமாயணக் கதையை
ரஞ்சகமாய்ப் பாடிவைத்த
கோமானும் நீர்தாமோ?
கூறுமையா! என்றிடவும்,
ஆமையா நாமேதான்
ஆணை எமக்கிட்டு
பூமிக்கு அழைத்ததுமேன்?
புகலுமையா என்றிட்டான்
சீமான் கவிச் செல்வன்.

4

கூப்பிட்ட காரியத்தைக்
கூறித் தெரியணுமோ?

ஆப்பசைத்த கவியாகி
அகப்பட்டுக் கொண்டவெனைக்
காப்பாற்றும். சந்தேகம்
களைந்து அறிவூட்டும்.
பூப்போட்டு உம்மடியைப்
பூசிப்பேன் என்றுரைத்தேன்.
நல்லதுவோய், உம்மனத்தின்
நலிவதனை எம்மிடத்தில்
சொல்லுமென்றான் கவிராசன்.

5

கவிராசா. சொல்லுவதைச்
செவி சாய்த்துக் கேளாயா.
இங்கு சிலர்—
மாவட்டம் பல கூட்டி
மாநாட்டுப் பந்தரிட்டு
பாவட்டா மேல் தூக்கிப்
பறக்கவிட்டு, கையதனில்
தீவட்டி ஏந்தியுமை
தீய்த்துவிட வேணுமென்று
கூவித் திரிகின்றார்.
நீரோ—
ஆரியனும் ராமனுக்கு
அடிவருடி யானீராம்
வீரியனும் ராவணனை
விழத்தட்டி விட்டீராம்.
சாதி வருணா சிரமச்
சதி தனக்கு ஆளாகி
ஆதித் தமிழ்க் குடிக்கு
அநியாயம் செய்தீராம்.
தாய் மொழிக்குக் கேடுபல
தானிழைத்தீர் என்று சொல்லி
வாய் கிழியப் பேசியுமை
வைகின்றார். மேலும் நீர்
ஆஸ்திகம் பேசினிராம்
ஆரியர்கள் கூறிய பொய்ச்
சாஸ்திரத்தைக் கதைத்தீராம்.
சங்கத் தமிழ்க் கவிஞர்
மோஸ்தரிலே பாடாமல்
முழுமோசம் செய்தீராம்.
வாஸ்தவமா, இதுவெல்லாம்?
வழக்குரையும், அன்னவர்தம்
வாதுக்குப் பதிலுரையும்
என்றிட்டேன்.

6

வாஸ்தவம்தான்.
ஆஸ்திகம் பேசியது
அடியேனா? என்னைப்போல்
நாஸ்திகம் பேசிய வோர்
நாவலனைக் கண்டதுண்டோ?
கேளப்பா—
வானின்றிழிந்து வந்த
மாபூத வைப் பெங்கும்
ஊனைப்போல், உயிரைப்போல்
உளனென்று உளமார
நானாகச் சொன்னேனா?

வேதமும் வேதியரும்
விரிஞ்சனும் தெரியாத
ஆதியஞ் சோதியினை
அறிந்தவன் நான் என்றேனா?

அன்றென்னில் அன்றென்னும்
ஆமென்னில் ஆமென்னும்
இன்றென்னில் இன்றென்னும்
இரண்டு கெட்ட தத்துவத்தை
நன்றென்று நம்புவதே
நமக்குப் பிழைப்பென்று
என்றேனும் சொல்லியுமை
ஏமாற்றிப் போட்டேனா?

இன்னும் கேள்:
சாதி சமய மென்றாய்,
சதி யென்றாய். ஆரியரின்
சூதென்றாய். என் கருத்தைச்
சொல்லுகிறேன். வீடணன்போல்
நீதியால் வந்த தொரு
நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்ததொரு
சிறுநெறியை யானறியேன்.
எந்தனுக்கோ,
பாசேந்தி பல பேரைப்
பகைத்தாலும், வில்லேந்தும்

அரசருருக் கொண்டாலும்
அற நெறியை மறவாமல்
நீதி வழி நின்றக்கால்
நிச்சயமாய் அவனுமொரு
வேதியன்தான். யானுரைத்த
வேதப் பொருள் இதுதான்.

கதையைப் பொருத்தவரைக்
கற்பனைதான்; என் கருத்தை
விதையூன்றக் கிடைத்த வொரு
விளைநிலம்தான். அறியாமல்
அதைப்பார்த்து சூழ்ச்சியென்றும்
ஆரியரின் மாயையென்றும்
குதியாட்டம் போடுவதில்
குணமில்லை என்றிட்டான்
அதிமேதைக் கவிக் கம்பன்.

7

அடியேனும்,
கம்பத் திருநாடா
ரொம்ப சரி. நின் வார்த்தை.
பன்னு தமிழ்க் கவிதைப்
பாவலனே! என்னுளத்தில்
இன்னுமொரு சந்தேகம்
இருப்பதனைத் தெளிவாக்கும்.
ஏதோ நீர்,
பாடி வைத்த காவியத்தில்
பச்சோந்தி போன்று பலர்
ஊடு சென்று போலிகளை
உருவேற்றி ஞரொன்றும்,
தேடியதை மாற்றுரைத்து
தேர்ந்து பல பாட்டை
எடுவிட்டு, ஓட விட்டு
இதுதான் கம்பனென்று
பாடுகின்றார். நின் கருத்தைப்
பகருவாய் என்றுரைத்தேன்.

8

சிற்றம் பலத்தானே!
செப்புவதைக் கேள் மகனே!
செம்பொன் பணி யூடே
செம்பைப் புகுத்துவதும்,
அம்புலியின் மேனிதனில்
அழுக்கேறிச் சேருவதும்,
நம்பன் மணி மிடற்றில்
நஞ்சிறங்கிப் போனதுவும்,
கம்பன் கவியூடே
கள்ளம் புகுந்ததுவும்
வம்பு நிறை உலகத்து
வள முறைதான்.
என்றாலும்,
சாவிப் பதரினத்தை
சண்டு சருகதனைத்
தூவிப் பிரித் தெடுக்கத்
துணிவு மட்டும் போதாது.
இடைச் செருகல் என்றாலும்
இடம் பார்த்து, பொருள் பார்த்து
துடைச்செடுக்கத் தனிப்புலமை
தோய்ந்திருக்க வேணுமையா.
பாவிமக்கள் செய்வினையால்
பரவி விட்ட நஞ்சதனை
ஆவி விட்டுப் போகாமல்
அறுத்தாற்ற வேணுமையா
என்றுரைத்தான்.

9

நன்று, நன்று.
இன்றைக்கு—
உந்தன் கவிதைக்கு
உரையென்று சொல்லியிங்கு
கந்தர கூள மெனக்
கதை கட்டித் திரிகின்றார்.
மந்தியதன் வசப்பட்ட
மலர் மாலை போலாக்கித்
தெந்தினங்கள் போட்டாடித்
திரிகின்றார் வேறு சிலர்.
கம்பன் மேதையினைக்
கண்டுவிட்டோம் என்றுசொலி
அம்பதிஞயிரத்து
அனர்த்தங்கள் கற்பித்து
செம்பாகத் தீங்கவியைச்
சிதைக்கின்றார். புல்லுருவி
வம்பரிவர் சூதினுக்கு
வழியுண்டோ என மொழிந்தேன்.

10

கேளப்பா—
முடுகு யமகமென்று
முடிச்சுவிடும் ஜாலவித்தை
கடுகளவும் என்னிடத்தில்
கண்டுகொள்ள ஏலாது.
விடுபட்ட சரம் போலே
விரைந்தோடும் என்கவியில்
முடுகுக்கு இடமேது ?

சுவையறிய நாக்கதனில்
சுரணை யிருப்பது போல்
கவிதை அறிவதற்கும்
கலையுணர்ச்சி தான் வேண்டும்.
அதுவற்று—
பவிசாகப் பொய்ப்புலமைப்
பகட்டும் குரலுக்கு
செவி சாய்த்து, செந்தமிழைச்
சீரழிய வைக்காதீர்.

11

கவிராயா!
ஒன்றுமட்டும் முடிவாக
உரைக்கிறேன். மாமேருக்
குன்றெரிந்து வந்தாலும்,
கொடுஞ்சதிகள் செய்தாலும்,
மன்றேறி எனைப்பற்றி
வசைமாரி பெய்தாலும்,
கொன்றொழித்து எந்தனுக்கு
குழிதோண்ட ஏலாது!

கொள்ளி வாய்ப் பேய்போலே
கும்பலிட்டு, என்மீது
அள்ளி நெருப்பெடுத்து
அறைந்தாலும், இடை சேர்ந்த
கள்ளக் கவிதையென
கண்ட கண்ட பாட்டையெலாம்
கிள்ளி யெறிந்தாலும்,
கீழ்த்தரமாய் என் கவியை
எள்ளி நகையாடி
எதிர்த்தாலும், இறப்பறியாத்
துள்ளுகின்ற என் கவியைத்
தூக்கேற்ற ஏலாது!

சாகுந் தமிழ் மொழிக்கு
சஞ்சீவி யென்ன வொரு
மாகாவியம் செய்து
மண்ணில் நிலை பெற்றேன்.
தமிழுக்குக் கதி மோட்சம்
தந்தேன். அம் மொழியை
அமிழ்தமெனச் சொல்லுதற்கும்
அடிவாணம் போட்டமைத்தேன்;
ஆதலினால்,
எமைப் பார்த்து யாரானும்
ஏதேதோ சொன்னக்கால்
குமையாதீர். எம் கவிதை
குன்றின்மேல் இட்டதொரு
குல விளக்கு! வஞ்சகரால்
என்றும் அணைத்திடற்கு
ஏலாத பரஞ்சோதி!
நின்று இனி பேசுதற்கு
நேரமில்லை. ஆதலினால்
சென்று வருவனெனச்
செப்பி மறைந்து விட்டான்
செல்வக் கவிச்சிங்கம்—எங்கள்
கல்விக் கடல் வங்கம்!

12

காரைக்குடி நகரின்
கண்ணியரே, கம்பனது
பேருரைகள் கூறவந்த
பெரியோரே, அடியேனும்
சீர்க்கம்பன் அடிபாவி
சென்று வருகின்றேன்.

✲

தத்துவ விவகாரம்!

சிந்திப்போன பாலைப்பற்றிக் கவலைகொள்ளாமல், 'அந்தப் பாலில் ஐந்தில் நாலு பங்கு வெறும் தண்ணீர்தானே!' என்று தன்னைத் தானே தேற்றிக் கொள்பனே தத்துவ வாதி. —சிகாகோ ஹெரால்ட்

அவள் இரண்டு ஜீவன்களின் வாழ்க்கையையே பாழாக்க முனைந்தாள். ஏதாவது காரண காரியம் கருதியா செய்தாள்? செய்ய வேண்டுமென்று தோன்றிற்று. ஏன் தோன்றிற்று? கதையைப் படியுங்கள்.

அத்தையின் கதை

○

ப. ஸ்ரீனிவாசன்

"சாமி, அவள் வந்தாளா?" என்று அத்தைக் கிழவி ஈனஸ்வரத்தில் கேட்டாள்.

"இல்லை!" என்று அசிரத்தையாக மருமகன் சாமிநாதன் பதிலளித்தான்.

"வரச் சொல்லி எழுதினாயா?"

"இல்லை!"

"ஏன்? எழுதச் சொன்னேனே!"

"எழுதப் பிடிக்க வில்லை."

"நான் இன்னும் சில நாள்தான் இருப்பேன். அதற்குள் கமலாவையும் குழந்தை விஜயாவையும் நான் பார்க்க வேண்டாமா?"

"வேண்டாம்! அவளை என்ன பார்வை?"

"இல்லை! அவசியம் பார்க்கணும். பார்த்தால்தான் என் நெஞ்சு வேகும்" என்று சொல்லிக் கொண்டு வியாதிப் படுக்கையிலிருந்து அத்தை எழுந்திருக்க முயன்றாள்.

சமையல்காரி சுப்பி ஓடி வந்து அத்தையை மறுபடியும் படுக்க வைத்தாள். "அவள் இவ்வளவு சொல்லுகிற போது நீ போய் கமலாவைக் கூட்டி வந்தால் என்ன அப்பா?" என்று சாமிநாதனிடம் சுப்பி கேட்டாள்.

"சின்ன அம்மாளைப் பார்த்து எத்தனை வருஷம் ஆச்சு! கூட்டி வாருங்கோ எசமான்!" என்று வேலைக்காரன் ஆறுமுகம் சொன்னான். வேலைக்காரி செல்லம்மாவின் கண்களில் நீர் துளிர்த்தது.

"அத்தை, அவளை நான் அன்றைக்கே மறந்தாச்சு. நீ ஏன் உடம்பை அலட்டிக்கிறாய்?..... இந்தா மருந்தைச் சாப்பிடு. டாக்டரும் இப்போ வந்து விடுவார்" என்று சாமிநாதன் சொன்னான்.

"எனக்கு எதற்கு அப்பா மருந்தும் மாயமும்! சாகப் போகிற கிழத்துக்கு! பணத்தை இப்படி விரயமாக்குவாளா?" என்று சொல்லி அத்தை அலுத்துக் கொண்டாள்.

"பணத்தைப் பற்றி ஏன் கவலைப் படுகிறாய்? இந்தக் குடும்பமே நீ வளர்த்த பயிர் தானே, அத்தை! ஆயுசு பூராவும் நீ உழைச்சதற்கு இதுகூட செய்யாவிட்டால் எனக்கு மனச்சாக்ஷி ஏற்

படுமா?......இந்தா, மருந்தைச் சாப்பிடு.''

"பைத்தியக்காரப் பிள்ளே! அதிருக்கட்டும், அவளை நீ அழைச்சு வருவாயா? சொல்லு!''

"ஏழு வருஷமாய் விலக்கி வைத்த பிறகு மறுபடியும் எப்படிக் கூப்பிடுவது? அந்தக் கழுதை.....''

"சே! கமலாவை இனிமேல் தூஷிக்காதே. சாயங்கால ரயிலில் நீ போய் அவளேயும், குழந்தை விஜயாவையும் அழைச்சுவா. அவர்கள் வந்த பிறகே நான் கஞ்சியோ மருந்தோ சாப்பிடுவேன்'' என்று அத்தை உறுதியாகச் சொன்னுள்.

சாமிநாதன் தரையைப் பார்த்த வண்ணம் சிறிது நேரம் மௌனமாக இருந்தான்.

"சரி அத்தை! உன் இஷ்டம் போல் செய்கிறேன்.......ஆனுல் அவளே எந்த முகத்தோடு கூப்பிடுவது? மாமனுர்தான் அனுப்புவாரா?''

"நான் ரொம்பவும் கெஞ்சிக் கேட்டேன் என்று சொல்லு! அனுப்புவார்கள். அவளுக்கும் இங்கு வர ஆசையாயிருக்காதா!''

அன்று மாலே ஆறு மணி ரயிலுக்கே சாமிநாதன் புறப்பட்டான். அவனுடைய மாமனுரின் ஊர் முப்பது மைல் தூரத்தில் இருந்தது.

* * *

கலியாணம் ஆன பின் கமலாவும் சாமிநாதனும் மூன்று வருஷங்கள்தான் ஒன்ருய் வாழ்ந்தார்கள். இரண்டாம் வருஷக் கடைசியில் அவளுக்கு விஜயா பிறந்தாள். குழந்தைக்கு ஒரு வயசு நிறைவதற்குள் பிரிவு!

கமலாவை விலக்கி வைப்பதற்கு முன் சாமிநாதன் அனுபவித்த மனவேதனே கொஞ்ச நஞ்சமன்று. நகமும் சதையுமாக இருந்த அவர்கள் பிரிவது என்ருல்! ஆனுல் தள்ளி வைக்காமல் தீராது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. அந்த வழியைத்தான் அத்தை பாகீரதியும் பலமாக ஆதரித்தாள்.

இடுப்பில் குழந்தையுடன் கண்ணீரும் கம்பலேயுமாய் கமலா வெளியேறிய சோகக் காட்சி சாமிநாதனின் உள்ளத்தில் ஆணி அறைந்து பதிந்திருந்தது. இருள் கவிந்த முகத்துடன் மாமனுர் சங்கர ஐயர் தம் பெண்ணேக் கூட்டிச்சென்றது அவனது ஞாபகத்தில் இருந்தது. மகள் விதவையாகி விட்டதாகவே எண்ணி சங்கர ஐயர் வருந்தினுர்.

பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலும் ஏராளமான செல்வம் இருந்தும், கமலா ஒரு அனுதையாகி விட்டதை நினேத்து தந்தை சங்கர ஐயரும் தாய் காமாக்ஷியும் உருகினுர்கள். தம்பதிகளே மீண்டும் சேர்த்து வைக்க அவர்கள் எவ்வளவோ முயன்றும் முடியவில்லே.

கமலா வாழாவெட்டியாக இருந்த போதிலும் அத்தை பாகீரதி அவளுக்கும் குழந்தைக்கும் அடிக்கடி துணிமணிகளும் பணமும் அனுப்பி வந்தாள். இவற்றை சங்கர ஐயர் நிராகரித்திருப்பார். ஆனுல் உறவு ஒரேயடியாக முறிந்து விட வேண்டாம் என அனுமதித்து வந்தார்.

சாமிநாதன் படும் வேதனேயைக் கண்டு அத்தையின் மனம் மாறுவ

துண்டு. அவனுக்கு வேறு கலியாணம் செய்து வைப்பதாகக் கூட சில சமயங்களில் அவள் சொல்வாள். ஆனால் அந்த யோசனைக்கு சாமிநாதன் செவிசாய்த்ததே கிடையாது.

ஏழு வருஷங்கள்! இளமையின் ஏழு வருஷங்கள்! ஏக்கத்தால் உடம்பு எலும்பாக உருகி கமலா பிறந்தகத்தில் காலத்தை ஓட்டி வந்தாள். குழந்தை தன்னிடம் இருந்து வந்தது அவளுக்கு ஓரளவு ஆறுதல் அளித்தது. என்றாவது ஒருநாள் தன் மீதுள்ள பழி நீங்கும் என்ற நம்பிக்கையும் அவளுடைய ஆயுள் நீடிப்பதற்கு ஒரு காரணமாய் இருந்தது.

* * *

மாமனார் வீட்டுக்குச் சாமிநாதன் போய்ச் சேர்ந்த பொழுது இரவு மணி ஒன்பது. அவன் வந்திருப்பதை முதலில் பார்த்தது கமலாதான்.

பெற்றோர்களிடம் அவள் தகவலறிவித்து விட்டு, மாடிக்கு ஓடி, அங்கே உறங்கிக் கொண்டிருந்த விஜயாவை இறுகக் கட்டிக் கொண்டாள்.

"வாங்கோ மாப்பிள்ளை! சௌக்கியமா? உள்ளே வாங்கோ!" என்று சாமிநாதனை சங்கர ஐயர் வரவேற்றார்.

வாசல் திரணையிலேயே அவன் உட்கார்ந்தான். வியாபாரியைப் போல வந்த காரியத்தை மாத்திரம் சொல்லி சாமிநாதன் நிறுத்திக் கொண்டான். இரவு மூன்றுமணி ரயிலுக்கே திரும்ப வேண்டும் என்றும் அவன் சொன்னான்.

கமலாவிடமும் காமாக்ஷியிடமும் விஷயத்தைத் தெரிவித்து "என்ன செய்வது?" என்று சங்கர ஐயர் கேட்டார்.

கமலாவுக்கு ஒரே சஞ்சலமாய் இருந்தது. "அத்தையை என்ன பார்வை? நான் போகவில்லை அப்பா" என்று கடைசியில் அவள் சொன்னாள்.

அவள் போவது தான் நல்லது என்று சங்கர ஐயருக்குத் தோன்றியது. அத்தைக்குப் பின் கமலாவுக்கு விடிவு காலம் ஏற்படலாம் என அவர் சொன்னார். பலவித சமாதானங்களைச் சொல்லி அவர் கமலாவைச் சம்மதிக்க வைத்தார்.

ரயிலில் கமலாவிடம் சாமிநாதன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. துயரம் தேங்கிய முகத்துடன் அவன் கமலாவை அடிக்கடி பார்த்தான். ஆனால் உதடு துடித்த போதிலும் அவனால் பேச முடியவில்லை. கமலாவும் கண்ணீரால் பேசிய வண்ணம் நேரத்தைக் கழித்தாள்.

சிறுமி விஜயாவை அவன் அன்போடு மடியில் விட்டுக் கொண்டான். பைத்தியக்காரனைப் போல் குழந்தையை வழிநெடுகக் கொஞ்சிக் கொண்டே வந்தான்.

"வந்து விட்டீர்களா அப்பா! வா அம்மா கமலம்! குழந்தை விஜயா வா! பாவாடை எல்லாம் கட்டிக்கொண்டு பெரியபெண்ணாய் விட்டாளே!...எல்லாரும் உள்ளே போய் காப்பி சாப்பிடுங்கோ! பிறகு எல்லாம் பேசிக்கலாம்."

பல வருஷங்களுக்குப் பின் தன் வீட்டுக்குள் கமலா மீண்டும் பிர

வேசித்தாள். அத்தையின் புதிய "அன்பை" அவளால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

குளித்து சாப்பிட்டுவிட்டு சாமிநாதன் அத்தை அருகே வந்து உட்கார்ந்தான். ரயில் அலுப்பினுல் விஜயா ஊஞ்சலில் தூங்கிவிட்டாள்.

அருகிலிருந்த வேலைக்காரி செல்லம்மாவை வாசலுக்குப் போகுமாறு அத்தை கை காட்டினுள். பிறகு சாமிநாதனை நோக்கி கமலாவைக் கூப்பிடச் சொன்னுள்.

கமலாவையும் சாமிநாதனையும் தன் பக்கத்தில் உட்காரச் சொல்லிவிட்டு அத்தை ஆரம்பித்தாள்: "நான் சொல்வதை கவனமாய் கேளுங்கள். என்னுல் இரைந்து பேச முடியவில்லை... கடைசிவரை, கோபதாபமில்லாமல் கேளுங்கள்" என்றுள் அவள்.

"சரி சொல்லு! கோபம் எதற்கு வருகிறது?" என்றுன் சாமிநாதன்.

ஈனஸ்வரத்தில் அத்தை பேசலானுள்: "சாமி, நான் பிறந்தது முதல் இந்தக் குடும்பத்திற்காகப் பாடுபட்டேன். நீ அதைப் பற்றி அடிக்கடி சொல்லியிருக்கிருய். உன் அப்பா வைத்தியநாதனும் அப்படித்தான் சொல்வான்.

"அவன் என்ன பாவம் செய்தானே! இருக்கிற காலம் எல்லாம் கஷ்டப்பட்டு அல்பாயுசில் போய் விட்டான்!" இதைச் சொல்லிவிட்டு அத்தை விசித்தாள்.

"உன் அப்பாவுக்கு நான்தான் பெண் பார்த்து கல்யாணம் செய்து வைத்தேன். கல்யாணி நம் வீட்டுக்கு வந்தபோது எவ்வளவு சந்தோஷம் அடைந்தேன். அவளை ஒரு வேலைகூட செய்யவிடமாட்டேன். உட்கார்த்தி வைத்து சிஷ்ருஷை செய்தேன். பட்டுப் பட்டாய் புடவை வாங்கிக் கொடுத்தேன். வைரமும் வைடூரியமுமாய் நகைகளைச் சொரிந்தேன்.

"இப்படி ஐந்து வருஷகாலமாக நடந்தது. அப்புறம் அவள் மீது என்னையும் அறியாமல் வெறுப்பு ஏற்பட்டது."

சாமிநாதன்: "வெறுப்பா!"

"ஆமாம். அவளை எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. எவ்வளவோ படுத்தியெரித்தேன். அவள் சாகமாட்டாளா என்று கூட நினைத்தேன். பகவானையும் அதற்காகப் பிரார்த்தித்தேன்...என் பிரார்த்தனை நிறைவேறியது. உன்னைப் பெற்றுப்போட்டுவிட்டு அவள் செத்தாள்......சாகாதிருந்தால் அவளையும் தள்ளிவைத்து வாட்டியிருப்பேன்."

கமலாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "அட சண்டாளி!" என்று சாமிநாதன் மனத்திற்குள் சொல்லிக்கொண்டான். அன்பே உருவானவள் என்று அவன் கருதி வந்த அத்தை இப்போது கொடிய பிசாசாக அவனுக்குத் தோன்றினுள்.

"சாமி, உன்னைப் பிறந்த நாள் முதல் நான் தான் அப்பா, வளர்த்தேன். தாய்கூட உன்னிடம் அவ்வளவு அன்பு காட்டியிருக்க மாட்டாள். உன்னைப் படிக்க வைத்தேன்; ஆளாக்கிவிட்டேன்.

"உன் அப்பா இடையில் போய் விட்டதால் சொத்துக்களையும் நானே கவனிக்க வேண்டிய

காயிற்று. சிக்கனமாகக் குடும்பத்தை நடத்தி, கண்டிப்பாக கண்காணித்து உன் சொத்துக்களை இரண்டு மடங்காகப் பெருக்கினேன்.

"நம்மைப் போல் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவளும், குணவதியும், அழகியுமான கமலாவை உனக்கு வயது வந்ததும் கல்யாணம் செய்துவைத்தேன்."

கமலா சட்டென்று தலை நிமிர்ந்து அத்தையைப் பார்த்தாள். சாமிநாதனுக்குக் கண் கலங்கியது.

"கமலாவையும் முதல் மூன்று வருஷத்திற்கு தாங்கு தாங்கென்று தாங்கினேன். அப்போது நான் எவ்வளவு பிரியமாய் இருந்தேன் என்பதை அவள் மறந்திருக்க மாட்டாள்.

"பிறகு அவள் மீதும் எனக்கு அகாரணமாய் வெறுப்பு ஏற்பட்டது. குழந்தை பெற்ற பிறகும் அவள் சாகாமல் இருந்தாள். அதனால் தள்ளிவைக்க ஏற்பாடு செய்தேன். வெறுமனே சொன்னால் நீ சம்மதிக்க மாட்டாய் என்பதால், அவள் நடத்தையே மோசம் என்று கதை கட்டி விட்டேன். பாவம், கமலா, ஏழு வருஷம்..."

"அடி சண்டாளி! எல்லாம் அபாண்டமா! கொடும்பாவி! உன் உடம்பில் கொஞ்சமாவது உயிர் இருக்கிறதே, நான் கொல்வதற்கு!" என்று கத்திக் கொண்டு அத்தையின் கட்டிலை நோக்கி சாமிநாதன் பாய்ந்தான்.

அவனைக் கமலா தடுத்தாள். "வேண்டாம், ஒன்றும் செய்யாதீர்கள். விதி அல்லவா பிரித்து வைத்தது!" என்று தழுதழுத்த குரலில் அவள் சொன்னாள்.

"சாமி.......நீ கோபப்படுவதில் தப்பு இல்லை...ஆனால் நான் செய்தது கொடுமை என அப்போது நான் உணரவில்லை......பதினாலு வயதில் விதவையான எனக்கு அது விளங்கவில்லை!" என்று அத்தை திக்கித் திக்கிச் சொன்னாள்.

சாமிநாதன் இரண்டு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டான்.

அத்தை பஞ்சடைந்த கண்களைக் கமலா பக்கம் திருப்பி, "அம்மா... நாக்கை வரட்டுகிறது...கொஞ்சம் ஜலம்..." என்று சொல்லி விக்கினாள்.

✻

அல்லி தர்பார்

பாரகுவே நாட்டிலுள்ள பத்து லக்ஷம் பேர் ஜனத்தொகையில் எட்டு லக்ஷம் பேர் பெண்களாம்.

—கான்ஸ்ட்டலேஷன், பாரிஸ்

எப்போது சாத்தியம்?

ஒரு நல்ல நாவல் எழுதுவதற்கு முன்பு பன்னிரண்டு மோசமான நாவல்களை எழுதியிருக்க வேண்டியது அவசியம்.

—ஸொமர்ஸட் மாகம்.

உலகத்தில் யுத்த பயம் ஏற்படும் போதெல்லாம் மனித சுதந்திரம் வாக்களிக்கப்படுகிறது. எச். ஜி. வெல்ஸின் 'மனித உரிமைகள்,' அட்லாண்டிக் சாசனம், தேர்தல் அறிக்கைகள் எல்லாம் இதையே பறை சாற்றுகின்றன. என்றும் மனித சுதந்திரத்தை நிர்ணயப்படுத்துவது எப்படி?

மனித சுதந்திரம்

○

கண. முத்தையா

"மனிதன் பிறக்கும்போது சுதந்திரத்துடன் பிறக்கிறுன். ஆனல் எங்கு பார்த்தாலும் கட்டுண்டு கிடக்கிறுன்" என்று கூறுகிறுன் பேரறிஞன் ரூஸ்ஸோ. பிறக்கும்போது பூரண உரிமைகளுடன் பிறக்கும் மனிதன் வாழ்க்கையில் பலவிதத்திலும் தளைப்பட்டுக் கிடக்கக் காரணம் என்ன? அவனுடைய சுதந்திரம் எப்படிப் பறிபோகிறது? இந்தக் கேள்விகளுக்கு நமக்கு இரண்டு விடைகள் கிடைக்கின்றன. ஒன்று மனிதன் தானகவே, தனது உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே, தனது சுதந்திரத்தின் ஒரு பகுதியைக் குறைத்துக் கொள்கிறுன். மற்றென்று பிறர் அவனுடைய சுதந்திரத்தை நேர் முகமாகவோ அன்றி மறை முகமாகவோ பறித்துக் கொள்கிறுர்கள். முதலாவது-தனி மனிதன் தன் உரிமைகளைத் தானே விட்டுக்கொடுப்பது, நியாயமானது; அவசியமானதுங்கூட. இரண்டாவது—பிறர் அவனுடைய சுதந்திரத்தைப் பறிப்பது அக்கிரமம். அதிலும் மறைமுகமாக அவனுடைய உரிமைகளைப் பிடுங்கிக்கொள்வது மன்னிக்க முடியாத குற்றம். இந்த இரண்டு நிலைமைகளையும் தனித்தனியே கவனிப்போம்.

எண்ண சுதந்திரம், பேச்சு சுதந்திரம், செயல் சுதந்திரம் மூன்றும் மனிதனுடைய பிறப்புரிமை என்று கருதப்படுகின்றன. இந்த உரிமைகளை ஒரு மனிதன் பூரணமாக அனுபவிக்க முடியுமா? சமுதாயத்தில் ஒரு அங்கமாக வாழ விரும்பினல், மனிதன் இவைகளை இஷ்டம் போல் அனுபவிக்கமுடியாது; அனுபவிக்கவும் கூடாது. அவன் தனது பிறப்புரிமையான சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, சமுதாயத்தில் ஒரு அங்கமாக உயிர் வாழும் உரிமையைப் பெறுவதற்காக, தனது சுதந்திரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எப்படியென்று பார்போம். எதைப் பற்றியும் ஒரு அபிப்பிராயம் கொள்ளும் சுதந்திரம் மனிதனுக்கு உண்டு. அதற்காக மற்ற ஒருவனைக் காரணமின்றி "அயோக்கியன்" என்று கருதலாமா? இதை வெளிப்

டையாகச் சொல்லாதவரை, அது மற்றவனைப் பாதிக்கப் போவதில்லை தான். ஆனால் ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பற்றி, பிறர் தவருகக் கருதக் கூடாது என்று தான் நினைக்கிருன். அப்படி நினைக்கிற மனிதன் மற்றவர்களையும் தவருகக் கருதக் கூடாதல்லவா? ஆகவே பிறர் தன்னைத் தவருகக் கருதக் கூடா தென்பதற்காக, மற்றவர்களைத் தவருகக் கருதும் 'அபிப்பிராய சுதந்திர'த்தை அவன் குறைத்துக் கொள்ள நேர்கிறது. இதைப் போலவே தனக்குப் பாதகம் விளைவிக்கக் கூடியவற்றைப் பிறர் சொல்லக் கூடா தென்பதற்காகவும், தனக்குத் தீங்கு உண்டாக்கக் கூடியவற்றைப் பிறர் செய்யக் கூடா தென்பதற்காகவும், தான் பிறருக்குப் பாதகம் ஏற்படும்படி பேசாமலும், மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதைச் செய்யாமலும் தனது "பேச்சு சுதந்திரத்"தையும், "செயல் சுதந்திரத்"தையும் குறைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதாவது மனிதன், சமுதாயத்தின் மற்ற மனிதர்களுடன் கலந்து வாழ்வதற்காகத் தனது சுதந்திரத்தைத் தானே கட்டுப் படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ஒரு மனிதனுடைய சுதந்திரத்தைப் பிறர் பறித்துக்கொள்வதை, அவனுடைய உரிமைகளில் மற்றவர்கள் தலையிடுவதை, இன்றைய நாகரிக உலகம் பலமாகக் கண்டிக்கிறது. ஒரு தனி மனிதனையோ, ஒரு நாட்டையோ அடிமைப் படுத்துவது மிக்க அநாகரிகமான செயலாகக் கருதப்படுகிறது. ஜன நாயகத்தின் பெயரால், தனி மனிதனின் எண்ண சுதந்திரம், பேச்சு சுதந்திரம், செயல் சுதந்திரம் யாவும் உறுதியளிக்கப் படுகின்றன. இந்த நிலையில் ஒரு மனிதனுடைய சுதந்திரத்தை நேர் முகமாகப் பறிக்க முடியாதுதான். ஆனால், கோடிக் கணக்கான மக்களின் சுதந்திரம்—உயிர்வாழும் உரிமை—மறை முகமாகப் பறிக்கப்படுவதை இன்றைய நாகரிக உலகம் சரி யென்று கருதி அனுமதிக்கிறது. ஒரு தனி மனிதனின் உரிமையின் பெயரால், ஆயிரக் கணக்கானவர்களின் உரிமை பறிக்கப்படுகிறது.

தெருவிலே ஒரு வாலிபன் தனது கைத் தடியை வீசிக்கொண்டே போகிருனென்று வைத்துக் கொள்வோம். அவனுடைய தடியை, அவன் இஷ்டம்போல் உபயோகிக்க, அவனுக்கு உரிமையுண்டு. ஆனால், பலர் நடமாடும் ரோட்டில், மற்றவர்களின் போக்குவரத்துக்கு தடையாக, தடியை வீசக் கூடாதென்றும், அவன் வீசுகிற தடி மற்றவன் மண்டையில் பட்டுக் காயத்தை உண்டாக்கக் கூடாதென்றும் தடுக்கப் படுகிறது. ஆனால் ஒரு மில் முதலாளி, திடீரென ஒருநாள் தனது மில்லை நிறுத்தி விடுவதின் மூலம், ஆயிரக் கணக்கான தொழிலாளிகளை வேலையற்றவர்களாகச் செய்வதையோ, அல்லது நூற்றுக் கணக்கான கைத்தறிகள் வேலை செய்து கொண்டிருக்கும் பிரதேசத்தில், ஒரு புதிய மில்லை ஏற்படுத்துவதன் மூலம், பல குடும்பங்களைப் பட்டினிபோடுவதையோ தடை செய்வதில்லை. தனி மனிதனுக்குச் "சொத்து வைத்துக் கொள்ளவும், அதை நிர்

வகிக்கவும் உள்ள சுதந்திரத்'' தின்—தனி மனித சொத்துரிமையின்—பெயரால், இவை அனுமதிக்கப்படுகின்றன. 'அந்தத் தொழிலாளர்களுடையவும், நெசவாளர்களுடையவும் உரிமைகள் எதையும் நாங்கள் பறிக்கவில்லையே. அவர்கள் எந்த வேலையையும் செய்யும் சுதந்திரம் அவர்களுக் குண்டல்லவா?' என்றும் கேட்கப்படுகிறது. இந்தக் கேள்வி எப்படி இருக்கிறதென்றால், தெருவிலே தடியைச் சுழற்றிக் கொண்டு போகும் வாலிபன், "என் தடியைத்தானே நான் சுழற்றிக் கொண்டு போகிறேன்; உங்கள் உரிமை எதிலும் தலையிடவில்லையே? நீங்கள் வேறு தெருக்களில் நடக்கும் உரிமை உங்களுக்கு உண்டல்லவா?'' என்று கேட்பதைப் போலத்தானிருக்கிறது. ஒரு தடியை உபயோகிக்கும்போது மற்றவனுக்குப் பாதகம் ஏற்படக் கூடாது என்று கூறுகிற நாகரிகம், ஒரு பெரிய இயந்திரத்தை ஆயிரக் கணக்கான மக்களின் உயிர் வாழும் உரிமைக்குப் பாதகமாக உபயோகிப்பதை அனுமதிப்பது விந்தையல்லவா? அப்படி அனுமதிப்பதின் மூலம் ஆயிரக் கணக்கான மக்கள், அவர்கள் விரும்பினாலும் கூட வேலை செய்ய முடியாமல், உயிர்வாழ வசதி யில்லாமலும் போய்விடுகிறது. ஆகவே அந்த ஆயிரக் கணக்கான மக்களின் நியாயமான உரிமைகள் நேர்முகமாக வல்ல—மறைமுகமாகப் பறிக்கப்படுகின்றன.

இனி பேச்சுச் சுதந்திரத்தைப் பார்ப்போம். ஒரு மனிதன் சிறந்த சிந்தனையாளனாகவும், தெளிவான கருத்துக்களையுடையவனாகவும் இருக்கிறானென்றுவைத்துக்கொள்வோம். அவன் தனது கருத்துக்களை பொது மக்களிடையே பரப்ப ஆசைப்படுவது இயற்கை. அப்படி அவன் பரப்புவதற்குச் சட்ட பூர்வமான தடை யெதுவும் கிடையாது. அவனுடைய பேச்சுச் சுதந்திரத்தில்—எழுத்து சுதந்திரத்தில் யாரும் தலையிடமாட்டார்கள். ஆனால் அவனுடைய கருத்துக்களைப் பரப்புவதற்குரிய சாதனங்களான ரேடியோ, பத்திரிகை, பொதுமேடை முதலியவற்றை உபயோகித்துக் கொள்ள, அவனுக்கு வசதி கிடைக்காவிடில், அவனுடைய சிறந்த கருத்துக்கள் மக்கி மடிய வேண்டியதுதானே. இவ்விதம் ஒருவனுடைய அறிவுச் செல்வத்தை மடியச் செய்வது, அவனுடைய எண்ண சுதந்திரம், பேச்சு சுதந்திரம் இவற்றை மறைமுகமாகப் பறிப்பதாகாதா?

ஜனநாயகத்தின் பெயரால் எண்ண சுதந்திரம், பேச்சு சுதந்திரம், செயல் சுதந்திரம் யாவும் ஒவ்வொரு மனிதனுக்கும் உறுதியளிக்கப் பெற்றிருந்தும், மனிதனுடைய உரிமைகள் மறைமுகமாகப் பறிக்கப்படுவதற்குக் காரணமா யிருப்பது நமது பொருளாதார அமைப்பு முறைதான். சுதந்திரங்கள் யாவற்றிற்கும் அடிப்படையானது, பொருளாதார சுதந்திரந்தான். பொருளாதார சுதந்திரத்தை ஒவ்வொரு மனிதனுக்கும் உத்தரவாதம் செய்துவிட்டால், அவனுடைய மற்ற சுதந்திரங்களை யாராலும் நேர்முகமாகவோ, அன்றி மறைமுகமாகவோ பறிக்க முடியாது.

✲

படம்: என். ராமகிருஷ்ணன், மாயவரம்

"...காற்றடைத்த பையடா"



படம்: பிரிட்டிஷ் எம்பசி, கெய்ரோ

எட்டும் குறிக்கோளும்



படம்: எஸ். சிதம்பரம், திருவனந்தபுரம்

எட்டாத லட்சியமும்



பண்டித நேரு காமன்வெல்த் மகாநாட்டுக்காக, 19-4-49 அன்று லண்டன் செல்லும்போது சர்தார் படேல், ராஜாஜி முதலியோர் வழியனுப்புகின்றனர்



இந்தியாவின் உதவி நாடி, சமீபத்தில் நம் நாட்டுக்கு வந்த
பர்மா பிரதமர் தக்கின் நூவும், பண்டித நேருவும்



படம்: ஆர். கிருஷ்ணன், கும்பகோணம்

பேசும் பொற் சித்திரமே!

படம் : நேஷனல் நியூஸ் போட்டோ

ஆடிவரும் தேனே !

சென்னைப் பிரதமர்
குமாரசாமி ராஜா

இங்கே உள்ள பாடல் பெண்களிடையே வழங்கிவருகிறது. இப்பாடல் அவர்களாலேயே இயற்றப்பட்டதாகக்கூட இருக்கலாம். தாலாட்டு ஒப்பாரி போன்ற நாட்டுப் பாடல் வகைகளில் இதுவும் ஒன்று. இந்தப் பாடலில் ராமாயணக் கதையையும், அழகிய பதப் பிரயோகங்களையும், கம்ப ராமாயணத்தின் வரி ஒன்றையும் பார்க்கிறோம்.

பெண்கள் ராமாயணம்

○

முத்துலக்ஷ்மி அம்மாள்

கைதலங்கள் கண்ட நெல்விக்
கலைக் கோட்டு மாமுனிவர்
செய்த தவ வேள்வியினால்—ராமர்
சிறக்கப் பிறந்த வராம்.
குவலயத்தோர் கொண்டாட
குடும்பிப் பிராயத்தில்
தவமுனிவர் சொற்கேட்டு—ராமர்
தாடகையை எய்தாராம்.
கல்லாம் அகலிகைக்கு
கவுசமுனி சாபம் இட
எல்லார் வினைதீர்த்து—ராமர்
எல்லை அரசாண்டாராம்.
பாம்புக்கண் பட்டுடுத்தி—சீதை
பந்தடிக்கும் வேளையிலே
மாயமாய் வில் வளைத்து—ராமர்
மாலையிட்டுக் கொண்டாராம்.
மாலையிட்டுக் கை பிடிச்சு—சீதை
மாணிக்கத் தேர் ஏற,
ஆரூட, தேர் அசைய,
ஆனைவந்து தேர் இழுக்க
ஊரார் வடம் பிடிக்க—சீதை
உத்தமியாள் தேரில் வர,
நாட்டார் வடம் பிடிக்க—சீதை
நாயகியாள் தேரில் வர
தேரின்மேல் பந்தடித்தாள்—சீதை
தெய்வகுல வம்சமுமாம்.
தாயார் சொல் கேட்டு—ராமர்
தாம்முடி சூடாமே
சிற்றன்னை சொல் கேட்டு—ராமர்
சென்றாராம் கானகத்தே
சீதையுடன் கானகத்தே
சென்றார் பெருமாளாம்.
அந்த வனந்தனிலே—ராமர்
அமர்ந்திருக்கும் வேளையிலே
மாயமான் துள்ளி
வனத்தில் விளையாட,
புள்ளிமான் வேணுமின்னு-சீதை
புடிச்சு வரச் சொன்னாளாம்.
மாயமான் முன் ஓட—ராமர்
மானுக்குப் பின் ஓட
கொப்படர்ந்த சோலையிலே
குயில் கூவும் மண்டபத்தில்
செப்படர்ந்த சீதையரை—ராமர்
தேடித்திரிந்தாராம்.
தேடித் திரிந்தாராம்—ராமர்
சீதையரைக் காணவில்லை
ஓடி நடந்தாராம்—ராமர்
உள்ளங் கால் கொப்பளிக்க
வீசிநடந்தாராம்—ராமர்
விரலெல்லாம் பொக்களிக்க
பட்டணங்கள் தேடி
பைங்கிளியைக் காணவில்லை.
தேசமெல்லாம் தேடி—சீதை
தேன் மொழியைக் காணவில்லை.
தான் தேடிக் காணாமல்—தன்
தம்பியரைத் தேடவிட்டார்
இளைய பெருமாளும்
எங்கெங்கோ தேடிவந்தார்.
எங்கெங்கும் தேடி—ராமர்
ஏங்கி முகம் வாடி

பார்க்கத் திரிஞ்சாராம்—ராமர்
பவளவாய் நாவுலர.
வக்காவே, கொக்கே—வனத்தில்
மேஞ்சடையும் பட்சிகளே!
அன்னமே, தாராவே—சீதை
அம்மன் வரக்கண்டிகளா?
மாடப் புறவே—சீதையரை
மயில் போலக் கண்டிகளா?
அருகினமே சிறுசெடியே—சீதை
அம்மன் வரக் கண்டிகளா?
வண்ணக் கழுகு (ஒ)ன்று
வழி மறித்துச் சேதி சொல்ல,
ஆகாயத் தேர் ஏறி—சீதை
அருக மணிப் பட்டு டுத்தி
துயில்உரிஞ்சிவிட்டெறிஞ்சி-சீதை
அசோக வனம் சென்றுளாம்
அந்த வனம் தனிலே—ராமர்
அணி யிழையைத் தேடுதற்கு
சுக்ரீவன் தன்னையுமே—ராமர்
தோழமையாய்க் கொண்டாராம்.
ஆழி கொடுத்து—ராமர்
அனுமாரைத் தூதனுப்பி
கணையாழி கைக்கொடுத்து—ராமர்
கண்டு வரச் சொன்னாராம்.
வாழும் இலங்கை நகர்
வழிபார்த்து நின்றாராம்
ஏழு கடல் தாண்டி—அனுமார்
இலங்கை நகர் தீமூட்டி
திரும்பி அனுமார் உரைக்க—ராமர்
சீதை செயல் கேட்டாராம்
வாலி* படை கூட்டி—ராமர்
வாங்காக் கடல் அடைச்சு
† ஆலி படை கூட்டி—ராமர்
அங்கே அணைப் போட்டு
கடலை வழியாக்கி—ராமர்
கல்த்தூணை வில் வளைத்து.
ராவைப் பகல் ஆக்கி—ராமர்
ராவணனை எய்ய வந்தார்
குன்றுபோல் வந்து நின்ற
கொடியதொரு ராவணனை
இன்று போய்
நாளைவா‡
வானரங்கள் என்று
மகசேனை தன் உடனே
தானி லங்கை தான் அடக்க-ராமர்
தண்டு எடுத்து வந்தாராம்
யாரப்பா ராவணா?
இறங்கப்பா மேடைவிட்டு
பாரப்பா ராவணா—ராமர்
படை கூட்டி வாரதைப் பார்
இலங்கா புரியப்பா!
இந்திரனே உன் சீமை
குரங்கால் அழிந்தது பார்
கோமானே உன் சீமை!
பச்சைப்பனை வகிர்ந்து—ராமர்
பார வில்லில் நாண் ஏற்றி
பத்துமுடி ராவணனை—ராமர்
இத்துவிழ எய்தாராம்.
பத்துத் தலை கொய்து—ராமர்
பாற் கடலில் விட்டெறிந்து
பத்துமணி முடியும்
பத்திரண்டு தோள்களையும்
தத்திவிழ எய்த
தடம் பெரிய சேவகனும்
எட்டி இலங்கை சுட்டு
இலங்கை நகர் தான் அழித்து
திட்டமுடன் சானகியை—ராமர்
சிறை மீட்டி வந்தாராம்
பர்ணக சாலைவிட்டு—ராமர்
பைங் கொடியை மீட்டிவந்தார்
பூண்டமணித்தேரும்
பொன் இலங்கை மாநகரும்
மீண்டும் அவர் தம்பிக்கு
விபீசணர்க்குப் பட்டம் கட்டி
அய்யோத்தி நாட்டை
ஆண்ட பெருமாளோ!

*வாலி படை—குரங்குப் படை †ஆலி—பூதாகாரமான உற்சவப் பொம்மை. ஆலி படை என்றால் பூதாகாரமான படை என்று பொருள். ஆலி என்பது திருநெல்வேலிச் சீமைவழக்கு ‡"இன்று போய் போர்க்கு நாளைவா"
—கம்பராமாயணம்

வரப் போகும் சமுதாயத்தின் இளங்குருத்துக்கள் குழந்தைகள். அந்தக் குழந்தைகளை எப்படி வளர்ப்பது, அவர்கள் மனத்தை எப்படிப் பண்படுத்துவது என்பன பற்றியெல்லாம் புது வழியில் கல்வி முறை வகுத்தவர் மாண்டிசோரி அம்மையார். அதைப் பற்றிய சில கருத்துக்கள் இவை.

சுதந்திர இந்தியாவில் குழந்தைக் கல்வி

ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள்

'வாழ்வுக்கலை' என்பது குறித்து அமெரிக்கக் கலாசாலை ஒன்றில் நடைபெற்ற கல்வியாளர்களின் மகாநாட்டிலே பேர்பெற்ற கலாசிரியர் வில்லியம் ஆர். வெப் என்பவரைப் பேசுமாறு அழைத்திருந்தார்கள். இவருக்கு முன் பேசிய கல்விமான் ஒருவர், அனுபவக் கல்வியின் அவசியம் குறித்துப் பேசினார். முடிவில் அவர் சொன்னார். 'வாழ்வாவது கலையாவது? இன்று நமக்கு வேண்டியதெல்லாம் வயிறு நிறைக்கும் வாழ்வுக் கல்விதான். உதாரணமாக என் மகனுக்குத் தெரிய வேண்டுமென்று நான் விரும்புவது பசுவிடமிருந்து பாலைக் கறப்பது தான்.'

இப்படி இந்தக் கல்விமான் பேசி முடித்ததும், 'அது நல்ல விருப்பம் தான்' என்று சொல்லிக் கொண்டே எழுந்தார் அடுத்த பேச்சாளரான வில்லியம் வெப். 'மிகவும் நல்ல விருப்பம். என் மகனுக்கும் பால் கறக்க, பால் பருகத் தெரிய வேண்டியதுதான்; ஆனால் கன்றுக்குட்டி போட்டி போட்டு வெல்லமுடியாத துறைகளிலும் சில காரியங்களை என் மகன் செய்யத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பது என்னுடைய விருப்பம்' என்று தொடங்கிய வண்ணம் 'வாழ்வுக் கலை' என்று தாம் எடுத்துக்கொண்ட விஷயத்துக்குள் பிரவேசித்தார். இந்தக் கல்விமானின் மனநிலையை நன்குணர்ந்து கொண்டால், 'குழந்தைகளின் பிரதிநிதி' என்றும், 'குழந்தையுலகின் கொலம்பஸ்' என்றும் உலகப்பிரசித்து பெற்றிருக்கும் மாண்டிஸோரி அம்மையாரின் சொற்பொழிவுகள் மூலமாகவும் நூல்கள் மூலமாகவும் இவரது மன உலகிலேயே பிரவேசித்து, இவர் கண்ட குழந்தையுலகின் இரகசியங்களை உள்ளபடி உணர்ந்துகொள்ளலாம்.

இந்த 1948-ல் இந்த அம்மையாருக்கு வயது 78. ஆனால் இவரை 78 வயதுக் கிழவியென்று சொல்வது அவதூறு. 78 ஆண்டுக் குழந்தையாகவே குழந்தைகளுக்கிடையே சஞ்சரிக்கிறார் என்று சொல்வதுதான் சரி. குழந்தைகளும் குழந்தைப் பிரியர்களும் இவரது பிறந்த தினத்தையும் கிருஷ்ண ஜெயந்தி காந்தி ஜெயந்தி

கள் போல் கொண்டாட வேண்டும். இவரைக் கௌரவிப்பதற்காக அல்ல, 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்ற தமிழ்ப் பழமொழியின் உட்பொருளை உள்ளபடி உணர்ந்து குழந்தைகளையும் குழந்தைக் கல்வியையும் கொண்டாடத்தான். குழந்தைகளை வாழ்வுக் கலையில் வளரவிடத்தான். இந்த ஆண்டிலே இப்படி நாடெங்கும் கொண்டாடாவிட்டாலும், நம்மில் சிலராவது அங்கும் இங்கும் ஒருவாறு கொண்டாட்டம் நடத்தினார்கள். அச்சமயம் அம்மையாரும் விழாச் செய்தியொன்று அனுப்பிவைத்தார். சுருக்கமான செய்திதான், மிகவும் சுருக்கமன்று. இந்தச் செய்தியிலும் அம்மையார் காணும் 'குழந்தை' நமக்கும் ஒருவாறு புலனாகக் கூடும்.

கோடைக்கானலிலிருந்து சென்னை அடையாற்றுக்கு அனுப்பிய செய்தி அது. நீண்டகாலமாகத் தாம் கண்டு வரும் 'குழந்தையின் விசுவ ரூப'த்தைக் குறித்தே இந்தச் செய்தியிலும் இவர் பிரஸ்தாபிக்கிறார். மானுடப் பெருவாழ்வு என்ற பெரிய சம்பத்தைக் குறித்து அரசியல்வாதிகளும் பொருளாதாரக் கலைஞரும் சமயவாதிகளும் சீர்திருத்தவாதிகளும் புரட்சிக்காரர்களும் பெரிய பெரிய கனவுகள் கண்டு வருகிறார்களல்லவா? அந்தக் கனவுகளை நனவாக்கக்கூடிய சூட்சும சக்திகளை முதன் முதல் தமக்கு உணர்த்திய குருநாதன் குழந்தையேதான்!—என்பதை இந்த அம்மையார் இந்த 78-வது ஜன்மதினத்திலும் முதல் உறுதிப் படுத்துகிறார்.

விஞ்ஞானக் கண்கொண்டு பார்த்தால் இன்றைய உலகம் ஓர் அதிசய உலகம்தான். அணுக்குண்டின் அற்புத சக்தியைத்தான் பாருங்கள். அழிக்க மட்டுமா? எத்தனையோ ஆக்க வேலைகளுக்கும் பயன்படும் என்கிறார்கள். 'பொல்லாத உலகம் இது!' என்று அதிசயிப்பார்கள், புத்தரும் கிறிஸ்து நாதரும், ஸாக்ரடிஸ் கன்பூசியஸ் மார்க்கஸ் ஔரீலியஸ் முதலான மகான்களும் இன்றைய உலகத்தை வந்து காண்பார்களேயானால், பொல்லாத உலகம்தான், நுண்ணறிவாளர்களோடு கூடிய பெரிய உலகம்தான்—ஆனால் நல்ல உலகமா இது? 'பிள்ளை நல்ல பிள்ளைதான், மிளகாய்ப் பழம் போலே!' என்று சில தாய்மார்கள் சொல்லுகிறார்களே, அந்த ரீதியில்தான் இந்த உலகத்தையும் நல்லுலகம் என்று சொல்லக் கூடும்.

'உலக சமாதானத்திற்கு ஏதாவது நம்பிக்கை இருக்கிறதா?' என்று ஒரு விஞ்ஞானி பெருமூச்சு விட்டாராம், ருஷ்யாவையும் அமெரிக்காவையும் குறித்துப் பேசிய பின்பு. 'அந்த நம்பிக்கை மறுலோகத்தில்தான் இருக்கிறது!' என்று குதூகலமாய்க் கூறினாராம் பாதிரியார், மேக மண்டலத்திற்கு அப்பால் தமக்கு மட்டும் தெரிந்த பரமண்டலத்தைச் சுட்டிக் காட்டிய வண்ணம். அணுக்குண்டுகளாலும், வேறு விஞ்ஞான சக்திகளாலும், அரசியல் பித்தலாட்டங்களாலும், இந்த மண்ணுலகம் மண்ணாய் அணுவாய்ச் சிதறிப் போய்விட்டாலும், கிறிஸ்துவை நம்பும் ஆன்மாக்கள் ருஷ்ய அமெரிக்க பீதிகள் இல்லாமல் பரலோகராஜ்யத்தில்பந்தோ

பஸ்தாய் இருக்க முடியும்!—என்பதுதான் அந்தப் பாதிரியாரின் நம்பிக்கை. 'இத்தகைய பொல்லாத உலகத்தையும் நல்லுலகமாக்கக் கூடிய ஒரு சக்தி இருக்கிறது, மகத்தான சக்தி, அதுதான் குழந்தை, அதுதான் மனிதனின் தந்தை!' என்று பொருள்படும் தமது நம்பிக்கையை, இந்த உலகின் இருள் நீங்க, இந்த ஆண்டுப் பிறந்த தினச் செய்தியின் முக்கிய அம்சமாக வெளியிட்டிருக்கிறார் மாண்டிஸோரி அம்மையார்.

இன்றைய உலகில் 'ஒரே உலகம், ஒரே அரசு, ஒரே நம்பிக்கை' என்றெல்லாம் சில லட்சிய வாதிகள் பேசி வந்த போதிலும், சமதர்மவாதிகள் ஒரே சமதர்மம் எங்கும் வியாபிக்கப் போவதாய்க் கனவு கண்டபோதிலும், ஒற்றுமையைக் காட்டிலும் வேற்றுமையும், ஒருமையுணர்வைக் காட்டிலும் பன்மையுணர்வுந்தான் மலிந்திருக்கின்றன. இந்நிலையிலும் ஐக்கிய நல்லுலகம் ஏற்படுவதற்கு வழி காட்டுவது குழந்தைதான், அதன் கள்ளங் கபடற்ற புன்சிரிப்புத்தான்—என்பதை டாக்டர் மான்டிஸோரி நமக்கு நினைப்பூட்டுகிறார்.

என்னைக் கலிதீர்த்தே—உலகில்
ஏற்றம் புரியவந்தாய்

என்று ஒவ்வொரு தாயும் போற்றுகிற குழந்தையே உலகக் கலியும் தீர்த்து உலகத்திற்கெல்லாம் முன்னேற்றம் காட்டவும் வந்திருக்கிறது என்பது மாண்டிஸோரி அம்மையின் நம்பிக்கை மட்டுமல்ல, நீண்ட அகன்ற ஆழ்ந்த அனுபவமும் கூட.

ஆனால் உலகப் பிரசினைகள் எவ்வளவு சிக்கலாகியிருக்கின்றன! ஒரு நாட்டின் பிரசினைகள் மற்ற நாடுகளின் பிரசினைகளுடன் எப்படிப் பிணைந்து கிடக்கின்றன! ஒரு நாட்டுக்குள்ளேயே வகுப்புப் பிணக்குகள், இனப் பூசல்களும் கூட. அரசியல், பொருளாதாரம், சமூகம், கல்வி முதலான வாழ்க்கைத் துறைகளில் எல்லாம் கொந்தளிப்பும் குமுறல்களும். இத்தனை தொல்லைகளுக்கும் மருந்து குழந்தையிடம் தான் இருக்கிறதாம். மானிட விதிக்கும் மதிக்கும் திறவுகோல் குழந்தையிடம் அகப்பட்டுக் கொண்டதாம். ஆகவே மானுடப் பணியின் முக்கிய அம்சம் குழந்தைப் பணி என்கிறார் மாண்டிஸோரி அம்மையார். சரியான குழந்தைக் கல்வியால் அழிவுச் சக்திகளைத் தடுத்து மனித வாழ்விலுள்ள சமாதானக் காதலைத் தூண்டி வளர்த்து மானுடம் வெற்றிபெறுமாறு செய்யலாம் என்கிறார். சுருங்கச் சொன்னால், இப்படி மானுடம் வாழ்வதை, வாழ்வு வாழ்வாவதைக் குழந்தைக் கல்வியின் முக்கிய நோக்கமாகக் கொள்ளவேண்டும் என்பர் மாண்டிஸோரி அம்மையார். இத்தனை கருத்துக்களையும் சுருக்கமாக இந்த அம்மையாரின் இந்த ஆண்டு விழாச் செய்தியிலேயே காணலாம்.

இனி நம் நாட்டில் இன்று புதுக் கல்விமுறை என்று சொல்லப் பெறும் ஆதாரக் கல்வி முறையின் நோக்கத்தையும் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம். சுமார் 10, 11 ஆண்டுகளுக்கு முன்பே காந்தியடிகள் ஏழுலட்சம் கிராமங்கள் அடங்கிய ஏழை இந்தியாவின் முன்னேற்றத்திற்கும், அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்கும் வகுத்துக் காட்டிய கல்வி

முறை இது. இம்முறையில் பொருள் உற்பத்தி செய்யும் உடல் உழைப்பு முக்கிய அம்சமாகும். இந்த உழைப்புக் கல்வியால் பண்புகளையும் குணச் சிறப்புக்களையும் வளர்த்துக் கொள்ளலாம். இத்தகைய உழைப்பு உள்ளத்திலுள்ள அன்பு காரணமாக உதிக்க வேண்டும். குழந்தை உத்ஸாகமாய்க் கஷ்டமான வேலைகளையும் செய்து விடுவதைப் பார்க்கிறோம். இத்தகைய மன நிலையை வளர்க்கும் ரீதியில் கல்வி முறை அமைந்து விட்டால் உடலும் உள்ளமும் ஒருமித்து வளரும். ஆகவே இத்தகைய பயனுள்ள ஜீவாதார உற்பத்தித் தொழிலை முக்கிய அங்கமாய்க் கொண்டிருக்கிறது ஆதாரக் கல்வி. இந்த முறைக்கும் மாண்டிஸோரி முறைக்கும் பொதுவான அம்சங்கள் உண்டு. ஒருமித்த வளர்ச்சியும், உத்ஸாகமாய்த் தொழில் செய்வதும் இரண்டு முறைகளிலுமுள்ள பொது அம்சங்கள். போட்டியின்மையும் ஒரு பொது அம்சம். ஆனால் மாண்டிஸோரி முறையின் பிரதான அங்கம், பயனும் குறிப்பிட்ட நோக்கமும் கொண்ட ஜீவாதார உற்பத்தித் தொழில் அன்று; வாழ்க்கையே தான்; கூட்டுறவு மனப்பான்மையுடன் வாழ்க்கையை வாழ்வது தான், வாழத் தெரிந்து ஒழுகுவதுதான். தொழிற் பயிற்சியும் வாழ்க்கைக் கலைக்கு ஒரு சாதனம் தான். ஜீவாதாரமான சாதனமாகவும் கருதப்படலாம். எனினும் கல்வியின் பிரதான அங்கம் கைத் தொழில் மட்டும் அன்று, வாழ்க்கையை வாழும் முழுத் தொழில் தான்.

இத்தகைய அடிப்படை—வேற்றுமை இருந்தபோதிலும், மாண்டிஸோரி கல்விமுறையை இந்தியா பயன்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்; நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்து எந்த எந்த அம்சங்களில் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அந்த அந்த அம்சங்களில் பயன் படுத்திக் கொள்ளலாம். ஓர் உதாரணம்: ஆரோக்கிய விதிகளை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பரீட்சையில் எழுதித்தள்ளித் தேர்ச்சி பெறுகிறவன் இன்றைய நடைமுறைக் கல்வியில் ஆரோக்கியம் இல்லாதவனாகவே இருக்கலாம். ஆரோக்கிய விதிகளை அனுஷ்டித்து உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே உறுதி செய்து வாழத் தெரிந்து கொண்ட மாணாக்கன் ஆரோக்கிய சாஸ்திரப் பரீட்சையில் தவறிப் போகலாம். இது தற்காலக் கல்வி மாட்சி! இந்த விபரீத நிலைகூடாதென்று 'ஆதாரக் கல்வி' யாளரும் ஒப்புக்கொள்கிறார்கள். இந்த விபரீதத்திற்குச் சிறந்த மருந்து மாண்டிஸோரியின் கல்வி முறையில் காணக் கிடக்கிறது. நீண்டகால அனுபவத்திலே கைகண்ட மருந்து இது எனலாம்.

இப்படி பல அம்சங்களிலும் மாண்டிஸோரியின் குழந்தைக் கல்விமுறை சிறந்த நற்பயன் அளிக்கக்கூடும். அடிப்படை அம்சங்களை வைத்துக்கொண்டு வேறு அம்சங்களை நமது தேசப் பழக்க வழக்கங்களுக்கு இசைந்த ரீதியில் மாற்றி அமைத்துக் கொள்ளலாம். எப்படியும் சுதந்திர இந்தியாவில் புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்குக் குழந்தைக் கல்வி தக்க நிலையில் வகுக்கப்பட வேண்டும். 'வாழ்க்கைக்கு ஆதாரமான உழைப்பை முக்கிய அங்கமாகக் கொண்டுதான் குழந்தைக் கல்வியும்

வகுக்கப் 'பெறவேண்டும்' என்ற கொள்கையுள்ள ஆதாரக்கல்வியாளரும் வேலையை நன்றாகச் செய்வதுதான் வாழ்க்கையை நிறைவு பெறச்செய்யும் என்று சொல்ல முடியாது.

இந்தச் சந்தர்ப்பத்திலே புத்தர் பெருமானைக் குறித்த கதையொன்றை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளலாம். இப்பெரியார் மகத நாட்டில் ஒரு கிராமத்திற்குப் போய்ச் சேர்ந்தார். விதைக்கும் காலம். காசி பாரத்வாஜன் என்ற பிராம்மணச் செல்வனின் 500 ஏர்களும் பூட்டப் பெற்று நிலத்தைப் பண்படுத்தி உழுதுகொண்டிருக்கின்றன. காலைவேளை. புத்தரின் முகம் காலைக் கதிரொளிபோல் பிரகாசித்தது. பிச்சாபாத்திரமும் கையுமாக வந்தார், தூய காவியுடை தரித்தவராய் வேறு பிச்சைக்காரர்களும் வந்து காத்திருந்தார்கள் வயலுக்கருகே. புத்த பகவான் கொஞ்சம் ஒதுக்கமாகவே நின்றார், மற்றவர்களுக் கெல்லாம் பிச்சை கிடைத்த பின் தாமும் பெற்றுப் பசி தீர்த்துக் கொள்ளலாமென்று. இவரைப் பார்த்ததும் பிராம்மணன் 'துறவியே! நீர் பிச்சைக்கு வந்ததேனோ? நான் உழுகிறேன், விதைக்கிறேன், ஜீவதாரமான இந்த உற்பத்தித் தொழிலைச் செய்து பிழைக்கிறேன். நீரும் அப்படியே செய்ய வேண்டும்' என்று சொன்னான்.

இந்தகாலத்திலும் உடல் உறுதி வாய்ந்த பிச்சைக்காரர்களைப் பார்த்து நாம் சொல்வது போலத் தான் காசி பாரத்வாஜனும் புத்தரை நோக்கிச் சொன்னான். அதற்கு அவர், 'ஓ பிராம்மணா! நானும் உழுது விதைத்துத்தான் உண்ணுகிறேன்!' என்று பதில் சொன்னார்.

பிராம்மணன் சிரித்துக் கொண்டே 'நீரும் குடியானவர் தானா? அப்படியானால் இங்கே இப்படி வந்து நிற்பானேன்? நீர் உழுவதை ஒருவரும் பார்த்ததில்லையே! உம்முடைய கலப்பை எங்கே? வயல் எங்கே?' என்று கேட்டான்.

'கேள் பிராம்மணா! கவனமாய்க் கேள்' என்ற பீடிகையுடன் புத்தர் பேசினார்: 'என் வயல் தர்மமே தான். அதிலும் களைபிடிக்கிறது—பாசபந்தம் என்ற களை. அந்தக் களையைப் பறித்து எறிகிறேன். நம்பிக்கை என்ற விதையை விதைக்கிறேன். தவத்தால் மேகங்களை எழுப்பித் தியாகமாகிய மழையைப் பெய்விக்கிறேன். என் கலப்பைக்குப் பெயர் ஞானம். விடாமுயற்சியால் அது கொண்டு உழுதொழில் புரிகிறேன். என் அறுவடை எது தெரியுமா? நிர்வாணம் என்ற அமுதம் தான். இத்தகைய அறுவடை செய்யும் குடியானவனுக்குக் குறைவும் உண்டோ?'

காசி பாரத்வாஜன் என்ற பிராம்மணன் புத்தர் காலில் விழுந்தான். 'நன்று நன்று குருநாதரே! எவ்வளவு உண்மையான வார்த்தை! நான் உம்மைச் சரணமாக அடைகிறேன்.'

விவசாயம் மட்டும் தொழில் அல்ல; ஞான விவசாயமும் தொழில்தான்—என்பது இக்கதையின் உட்பொருள்.

இரும்பைக் காய்ச்சி
உருக்கிடு வீரே!

என்று தொடங்கும் பாரதி பாட்டும்,

பாட்டும் செய்யுளும்
கோத்திடு வீரே!

என்று கவிதையையும் ஒரு தொழிலாகக் காட்டுகிற தல்லவா? மனத் தொழிலும் தொழில்தான். இந்த உண்மையை நன்குணர்ந்து வற்புறுத்துகிறது மாண்டிஸோரி அம்மையாரின் கல்விமுறை.

இத்தகைய ஞான விவசாயமும் தொழில்தான் என்பதை உணர்ந்து கொண்டு, மாண்டிஸோரிக் கல்வி முறையைப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். வாழ்க்கையைச் சரியாக வாழ்வதற்கு கைத் தொழில் மனத்தொழில் என்ற இரட்டைத் தொழிலும் வேண்டும். மேலும் தொழில் என்பது பயனுள்ள, குறித்த நோக்கமுள்ள தொழில்மட்டுமன்று. 'குழந்தையின் இயக்கங்களெல்லாம் தொழில்தானே? இடைவிடாமல் அங்குமிங்கும் ஓடியாடும் குழந்தைத் தொழிலையும் கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாத அங்கமாகக் கொள்கிறது மாண்டிஸோரிக் கல்விமுறை.

உண்மையில் மாண்டிஸோரி காண்பது ஒரு கல்விமுறை மட்டுமன்று, ஒரு புதிய உலகமேதான். குழந்தை யுலகத்தைக் கண்டுபிடித்த இந்தக் கொலம்பஸுக்கு இவ்வுலகத்தைக் காட்டிக் கொடுத்ததும் குழந்தையேதான்! அதிசயமாய்த் தோன்றுகிறதா? அதிசயத்தினும் அதிசயம் அல்லவா உண்மை என்பது?

✲

கணவனும் மனைவியும்

ஜான் பாரிமூர் என்ற பிரபல ஆங்கில சினிமா நடிகர் சொந்தமாக ஒரு படகு வைத்துக் கொண்டிருந்தார். அந்தப் படகைப் பார்த்து ஒரு மதுப் புட்டியை எறிந்து, புட்டியை உடைத்து விடும்படி அவர் தம் மனைவியிடம் கூறினர். மனைவி மதுப் பாட்டிலைக் கையில் எடுத்து, படகைப் பார்த்து வீசி எறிய முயன்ருள். ஆனல் பாட்டில் கனமாக இருந்ததால், தன்னல் அவ்வளவு வலுவாக எறிய முடியாது என்று சொன்னுள் மனைவி. உடனே ஜான் பாரிமூர் 'என்மீது எறிவதாக நினைத்துக் கொண்டு எறியேன்' என்ருர். பிறகு அவள் பாட்டிலை வீசி எறிந்தாள். பாட்டில் பட்டு படகு ஏறக்குறைய நாசமான நிலைக்கு வந்துவிட்டதாம். இந்த சம்பவத்தை நடிகரே குஷியாகச் சொல்லுகிருர்.

—வெப். பி. காரியன்.

ஒரு சீனப் பழமொழி

ஒரு மணி நேரத்திற்குச் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்று விரும்பினல் மதுபானம் பண்ணு. மூன்று நாட்களுக்குச் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்று விரும்பினல், கல்யாணம் பண்ணு. எட்டு நாட்களுக்குச் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்று விரும்பினல் உன்னுடைய பன்றியைக் கொன்று, பன்றி மாமிசத்தைச் சாப்பிடு. எப்பொழுதும் சந்தோஷமாக இருக்க விரும்பினல் தோட்டக்காரனுகிவிடு.

—வோலட்டா ரிவ்யூ.

அனதோல் பிரான்ஸ் (1844-1924) என்பவன் நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இலக்கிய கர்த்தா. கிண்டலாக எழுதுவதில் மகாசமர்த்தன். புராதன கிரேக்க இலக்கியங்களில் நன்கு பயிற்சியுள்ளவன். இவனுடைய நாவல்களும், கதைகளும் உலகமெங்கும் புகழப்படுகின்றன. இவன் எழுதிய "பேங்வின் தீவு" என்ற அற்புதமான நவீனத்திலிருந்து பொறுக்கி உருக்கொடுத்தவையே இக்குட்டிக் கதைகள். இந்தக் கதைகள் யாவும் குத்தலும் நையாண்டியும், தாக்குதலும் தான். ஆசிரியனுடைய சொந்த அபிப்பிராயம் இதில் பிரதிபலிக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை.

குட்டிக்கதைகள்

அனதோல் பிரான்ஸ்

அனாதை ரக்ஷகி

ஆபத்தில் கை கொடுத்து உதவும் தேவதையாகிய ஆர்பெரோஸியா*வைப் பற்றி மானோயரிடம் பீயர் மில் கூறுகிறார்:

"நிக்கலஸ் காபெர்த் என்பவன் ஒரு வைர வியாபாரி. அவனுடைய மனைவியின் பெயர் ஸெஸிலி. அவள் தன் வாலிபப் பிராயம் முழுவதும் கற்பரசியாகவே இருந்து காலம் கழித்தாள். ஆனால், கடைசியில், வியோல் என்ற ஒரு பதினெட்டு வயதுப் பையன்மேல் மட்டற்ற காதல் கொண்டு விட்டாள். அந்தப் பையன் ஒரு பிரபு வீட்டு வேலைக்காரன். அவனை ஒருவாறாக மயக்கித் தன் வீட்டுக்கு வரவழைத்து விட்டாள் ஸெஸிலி. தினம்தோறும் அவன் ரகசியமாக இங்கே வருவதும் போவதுமாக இருந்தான்.

ஒரு நாள் வீட்டுக்குள் ஸெஸிலியும், வியோலும் ஒரே படுக்கையில் அமர்ந்திருக்கும் சமயம். அப்போது திடீரென்று வியாபாரி வந்து விட்டான். உள்ளே, "என்

* ஆர்பெரோஸியா—"பெங்வின் தீவு" நவீனத்தில் வரும் ஒரு விபசாரி. அவள் கடவுள் அருள் பெற்று பூலோகத்திற்கு வந்து அவதரித்த சந்நியாசினியாக நடித்து ஜனங்களின் மதிப்பைப் பெற்றவள். அவள் இறந்த பிறகு அவளைக் கோவில் கட்டிக் கும்பிட்டார்கள். அவளுடைய கருணாகடாக்ஷத்தினால் ஜனங்கள் தங்கள் நோய் நொடிகளைத் தவிர்த்துக் கொள்ளத் தொடங்கினார்கள். அநேக நூற்றாண்டுகளுக்குப் பிறகு "ஆர்பெரோஸியா அம்ம"னின் "கருணை"யைக் காட்டும் செய்தி ஒன்றை ஒரு பெரியவர் மற்றொரு பெரியவருக்குக் கூறுவது போல, கிண்டலாக எழுதப்பட்ட உபகதை இது.

அன்பே! என் ஆருயிரே!'' என்று கொஞ்சும் தன் மனைவியின் குரல் கேட்டது. உடனே கோபமிகுதியால், "கதவைத் திறடி. கதவைத் திறக்கிறாயா, இல்லையா? கதவைத் திறக்காவிட்டால், மூக்கையும் காதையும் அறுத்து விடுவேன்'' என்று கத்தினான் வியாபாரி. ஸெஸிலிக்கு எப்படி இனித் தப்புவது என்றாகிவிட்டது. வேலைக்காரப் பையனோ கிடுகிடுவென்று நடுங்கிக் கொண்டிருந்தான். அப்போது, ஸெஸிலி ஆர்பெரோஸியா அம்மனை நோக்கிப் பிரார்த்தனை செய்யவே, திடீரென்று பையன் பெண்ணாக மாறிவிட்டான். உடனே "என்ன பயித்தியம் போலக் கத்துகிறீர்கள்? என்ன குறும்பு! என்ன விளையாட்டு?'' என்று சொல்லிக் கொண்டே பையனுடைய உடைகளைக் களைந்து பெண்ணின் உடைகளை அவனுக்குத் தரித்தாள் ஸெஸிலி. பிறகு பெண்ணாக மாறிய பையனைப் பார்த்து "அம்மா சாதரைன்! போய்க் கதவைத் திறந்துவிடம்மா'' என்றாள்.

கதவு திறக்கப்பட்டது. உள்ளே வந்த வியாபாரி ஆச்சரிய மிகுதியால் இந்த இளம் பெண்ணைப் பார்த்து ஸ்தம்பித்துப் போய் நின்றான். அவனைப் பார்த்து ஸெஸிலி "இது என் தங்கை மகள் பதினைந்து வருஷகாலமாக ஒரு சச்சரவினால், அவர்கள் குடும்பத்துக்கும் நம் குடும்பத்துக்கும் தொடர்பு இல்லாமல் போய்விட்டது. இப்போது எனக்கு வயிற்று வலியாக இருந்ததால் உதவிக்கு இவளை வரவழைத்தேன்'' என்றாள்.

வியாபாரி அந்தப் பெண்ணைக் கட்டித் தழுவினான். அவளைத் தனியே அழைத்துக் கொண்டு போய் அவளோடு அந்தரங்கமாக இருக்க வேண்டும் என்ற ஆசையினால், "சமையல் கட்டுக்கு வாடியம்மா. உனக்கு பலகாரங்கள் எடுத்துத் தருகிறேன்'' என்று சொல்லி அவளை உள்ளே அழைத்துச் சென்றான் வியாபாரி.

உள்ளே அவளைத் தழுவி முத்தமிட்டான். தடவிக் கொடுத்தான். ஆர்பெரோஸியா அம்மன் குறுக்கிட்டிராவிட்டால் விவகாரம் முற்றியிருக்கும். சமையல் கட்டுக்குப் போகும்படி ஸெஸிலி அம்மாளுக்கு மறைமுகமாக ஞானோபதேசம் செய்தருளினாள், ஆர்பெரோஸியா அம்மன். அங்கே போய்ப் பார்த்தாள், இருவரும் சரசமாடிக் கொண்டிருந்தார்கள். ஆபத்துக்காலத்தில் அம்மன் காட்டும் கருணைதான் என்னே!

"சீ அயோக்யத்தனமான மனுஷா!'' என்று சீறினாள் ஸெஸிலி. கணவன் அவளிடம் மன்னிப்புக்காகக் கெஞ்சினான்; அப்படிக் கெஞ்சும் படியாகத் திட்டினாள் ஸெஸிலி.

மறுநாள் வியோஸின் பெண் உருவம் மாறிவிட்டது; பழையபடியும் அவன் ஆண் உருவம் பெற்றான்...

ஆகவே கெட்டுப்போன உலகத்தை முன்போலவே ஆர்பெரோஸியா அம்மன் கைகொடுத்து காப்பாற்றித் திருத்துவாள் என்று தாம் நம்புவதாகக் கூறினார் பீயர் மில்.

ஞானஸ்நானம்

புரோபஸ் என்பவர் ரோம் நகரத்தில் பாதிரியாக இருந்தவர். நாற்பது வருஷகாலமாக அவர் எண்

ணற்ற மக்களுக்கு ஞானஸ்நானம் செய்து அவர்களைக் கிறிஸ்தவர்களாக மாற்றிக் கொண்டிருந்தார். ஞானஸ்நானம் கொடுப்பதற்கு ஒயின் வேண்டும் அல்லவா? அதற்காக பார்ஜாஸ் என்பவனுடைய சாராயக் கடையில் ஒவ்வொரு சனிக்கிழமையும் போய் ஒயின் வாங்கிக்கொண்டு வருவார். அந்த ஒயினைக் கொண்டு அந்த வாரம் முழுவதும் ஞானஸ்நானம் செய்வார்.

நீடித்த காலத் திருப்பணிக்குப் பிறகு காலமானார் புரோபஸ் பாதிரியார். சுவர்க்கத்துக்குப் போனார். ஆனால் அங்கே உள்ள பிற சுவர்க்க வாசிகளுக்குக் கிட்டிய சந்தோஷமும் சாந்தியும் இவருக்குக் கிட்டவில்லை. அவர்களுடைய முகத்தைச் சுற்றிலும் தெய்விக ஒளி வீசியதைப் போல இவர் முகத்தைச் சுற்றிலும் வீசவில்லை. 'நம்முடைய சேவையில் என்ன குறை நடந்துவிட்டதோ, இப்படி உயர்ந்த நிலை பெறாமல், மனவேதனைப்படுகிறோம்?' என்று எண்ணித் தவித்தார் புரோபஸ். அவர் ஞானஸ்நானம் செய்வித்தவர்களில் ஒருவராவது சுவர்க்கத்தில் இல்லை; சாராயக் கடைக்காரனையும் அங்கு காணவில்லை. எல்லோரும் நரகத்தில் இருப்பதாகத் தகவல் வந்தது!

ஒரு நாள் புரோபஸை ஒரு தேவதூதன் சந்தித்தான். அவனிடம் புரோபஸ், "நான் நாற்பது வருஷ காலம் கடவுளுக்குச் சேவை செய்தேன். எத்தனையோ பேரைக் கிறிஸ்தவர்களாக்கினேன். அதனால் சுவர்க்கத்துக்கும் வந்தேன். ஆனால் சுவர்க்கத்துக்கு வந்தும் மற்றவர்களைப்போல நான் மனச் சந்தோஷமோ மனச்சாந்தியோ பெறாமல் தவிக்க நேர்ந்ததின் காரணம் என்ன?" என்று கேட்டார்.

தேவதூதன் விஷயத்தை விளக்கினான்:

"ஐயா! நீர் நாற்பது வருஷ காலம் மக்களைக் கிறிஸ்தவர்களாக்கி, கடவுளுக்கு சேவை செய்தது உண்மைதான். ஆனால் மக்களுக்கு ஞானஸ்நானம் செய்யும் போது நீர் அசல் திராக்ஷை ஒயினைக் கொண்டு செய்திருக்க வேண்டும். நீர் பார்ஜாஸ் என்ற சாராயக் கடைக்காரனிடம் வாங்கியது அசல் ஒயின் அல்ல. அவன் ஏதோ மூலிகை வேர்களைக் கொண்டும் மாப் பட்டைகளைக் கொண்டும் தைலம் இறக்கி, அதை அசல் ஒயின் என்று சொல்லி விற்று வந்தான். அந்த ஒயினை அசல் ஒயினாக நினைத்து வாங்கி ஞானஸ்நானம் செய்ததால், உம் ஞானஸ்நானம் பலிக்கவில்லை. அப்படிப் போலி ஞானஸ்நானம் பெற்றவர்கள் கிறிஸ்தவர்களாக மாறமுடியுமா? அதனால்தான் உம் கையில் ஞானஸ்நானம் பெற்றவர்களெல்லோரும் முக்தி பெற அருகதையின்றி நரகத்துக்குப் போய்விட்டார்கள்; நீர் இங்கே கஷ்டப்படுகிறீர்.

அசல் திராக்ஷை ஒயின்தான் ஏசுநாதரின் ரத்தமாக மனித சரீரத்தில் மாறுமே ஒழிய, போலி ஒயின் அல்ல."

பகைவர்கள் யார்?

முன்னொரு காலத்தில் கிராதியன் என்ற தத்துவஞானி பெங்வின் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் ஒரு கிராமத்தில் போய் அவர் தங்கினார். அவர் தங்கிய குடிசையில் ஒரு

M211,N36,5
N49.16.2
88897

பெண் உட்கார்ந்து தன் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஒரு சிறுவன் பெரிய நாய் ஒன்றுடன் விளையாடிக் கொண்டிருந்தான். வயதான குருடன் ஒருவன் சூரிய வெளிச்சத்தில் உட்கார்ந்து ஆனந்தமாகக் குளிர் காய்ந்துகொண்டிருந்தான்.

வீட்டுக்காரன் தத்துவ ஞானிக்கு சாப்பாடு போட்டான். அதைச் சாப்பிட்டு உட்கார்ந்து கொண்டிருக்கும் பொது, தெரு வழியே செல்லும் இடைப்பையன் ஒருவன் ஏதோ ஒரு பாட்டை புல்லாங் குழலில் ஊதிக்கொண்டே போனான். பாட்டு மிக இனிமையாக இருந்தது. உடனே தத்துவ ஞானி, வீட்டுக்காரனைப் பார்த்து,

"உங்களுடைய நாடே நாடு! எங்கு பார்த்தாலும் ஒரே ஆனந்தம்! மக்களிடையே ஒரே ஒற்றுமை! இப்படிப்பட்ட உயர்ந்த நாடு ஒன்று இருக்கமுடியுமா? அந்தப் பையன் வாசித்துக் கொண்டு போன பாட்டு என்னபாட்டு?" என்று கேட்டார்.

வீட்டுக்காரன்: அது போர்க் கீதம். பார்ப்பாயிஸ் நாட்டினர் மீது போர் தொடுக்கப் போகிறோம். அதற்காக இசைக்கப்பட்ட போர்க்கீதம் அது. எங்கள் நாட்டில் ஒவ்வொரு குழந்தையும் பேசக் கற்றுக் கொள்ளுவதற்கு முன்பே இந்தப் பாட்டைப் பாடக் கற்றுக் கொள்கிறது. நாங்கள் பெங்வின் நாட்டின் உயர்ந்த பிரஜைகள்.

தத்துவஞானி: அப்படியானால் பார்ப்பாயிஸ் நாட்டை நீங்கள் வெறுக்கிறீர்களா?

வீட்டு: சந்தேகமில்லாமல்!

தத்துவ: காரணம்?

வீட்டு: காரணமா? பார்ப்பாயிஸ் எங்கள் பெங்வின் நாட்டுக்கு அண்டை நாடு அல்லவா?

தத்துவ: ஆமாம்.

வீட்டு: அண்டை நாட்டுக்காரர்களாக இருப்பதால்தான் அவர்கள் எங்களுக்குப் பகைவர்களாக இருக்கிறார்கள்.

தத்துவ: பகைமைக்கு அது ஒரு காரணம் ஆகமுடியுமா?

வீட்டு: இது என்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்? அண்டை நாட்டுக்காரர்கள் அண்டை வீட்டுக்காரர்கள் என்றால் பகைவர்கள் என்றுதானே அர்த்தம்? உங்களுக்கு தேசபக்தி என்றால் என்னவென்று தெரியாது போலிருக்கிறதே! பெங்வின் நாட்டுக்கு ஜே! பார்ப்பாயிஸ் நாடு அடியோடு ஒழிக!

சரித்திராசிரியன்

பெங்வின் தீவின் சரித்திரத்தை எழுத நான் ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தேன். அந்த விஷயமாகக் கலந்து ஆலோசிக்க ஒரு பிரசித்திபெற்ற சரித்திராசிரியர் வீட்டுக்குப் போய், "ஐயா, நான் சரித்திரம் எழுதப் போகிறேன். உங்களைப்போன்ற அனுபவஸ்தர்களுடைய ஆலோசனைகள் மிகவும் தேவை" என்று பணிவாகக் கூறினேன்.

சரித்திராசிரியர் சொன்னார்:

"ரொம்ப நல்லது! ஆனால் எதற்கு இப்படிச் சொந்தமாகச் சரித்திரம் எழுதவேண்டும் என்று தொல்லைகளை இழுத்துப் போட்டுக் கொள்ளுகிறீர்? பிரசித்தி பெற்ற சரித்திர நூலைக் காப்பி

யடித்துவிடும். எல்லோரும் அதைத்தான் செய்கிறார்கள். அது தான் சௌகரியம். உமக்கென்று சொந்தமாகப் புதிய கருத்துக்கள் இருந்து நீர் அதை வெளியிட்டு விட்டீரென்றால், வாசகர்கள் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துப்போய் விடுவார்கள். இப்படி ஆச்சரியப் பட வைப்பதை வாசகர்கள் விரும்பு வதில்லை. தனக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கும் முட்டாள் தனமான அபத்தங்களைத் தான் சரித்திரப் புத்தகங்களில் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அவர்களுக் குப் புதிதாக நீர் எதையும் சொல்லப் போனால், அவர்களுக்கு அது அவமானமாக இருக்கும்; அவர்களுக்குக் கோபமும் வரும். தங்களுடைய நம்பிக்கைகளைக் கேவலப் படுத்திவிட்டதாகக் குற்றம் சாட்டி உங்களைத் தூஷிப்பார்கள்.

"சரித்திரக்காரர்கள் எப்போதும் காப்பியடிப்பவர்கள் தான். நீர் அவர்களைப் பின்பற்றும். சொந்தமாக சரித்திரம் எழுத முற்படுகிறவன் மக்களுடைய இகழ்ச்சிக்கும் அவநம்பிக்கைக்கும் ஆளாக வேண்டும்.

"மற்றொரு விஷயம்: சமூகம் எந்த உயர்ந்த பண்புகளின் அஸ்திவாரத்தில் கட்டப் பெற்றிருக்கிறதோ அவற்றை வாயார, மனமாரப் புகழ மறந்துவிடாதீர். அதாவது பண ஆசை, சாந்த குணங்கள், பிரபுக்கள், போலீஸ் இவற்றைப் பற்றி மதிப்பாக எழுதும்."

இந்த ஆலோசனையைக் கேட்டுக் கொண்டு அவரிடம் விடைபெற்றுக் கொண்டேன் நான்.

அடக்கமும் வெற்றியும்

பிரசித்தி பெற்ற ஜெர்மானியப் பழம்பாடல் ஒன்று கூறுகிறது:

ஒரு சதுக்கத்தின் பக்கத்தில் சுவர் ஓரமாக ஒரு தபால் பெட்டி இருந்தது. சுவரெல்லாம் பசுங் கொடிகள் படர்ந்திருந்தன. தபால் பெட்டியும் குவளை மலரைப்போல நீல நிறத்தில் வாய் திறந்து புன்னகை செய்துகொண்டே அடக்கத்தின் சொரூபமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

பகலெல்லாம் அந்தத் தபால் பெட்டியின் பக்கம் சிறு கடைக்காரர்கள், பெரிய விவசாயிகள், நகரப் பிரஜைகள், வரிவசூல் உத்தியோகஸ்தர்கள், போலீஸ்காரர்கள் இப்படி எல்லோரும் வருவார்கள். வியாபாரக் கடிதங்களையும், 'சமன்'களையும், வரிசெலுத்தும் தவணைகளைக் குறிப்பிட்டு அனுப்பும் நோட்டீஸ்களையும், உத்தியோகக் கடிதங்களையும் அந்தத் தபால் பெட்டியில் சேர்ப்பார்கள். அப்போது தபால் பெட்டி புன்னகை செய்து கொண்டு அடக்கத்தின் சொரூபமாகக் காட்சியளித்தது.

பாட்டாளி மக்கள், பண்ணைச் சேவகர்கள், பணிப் பெண்கள், தாதிகள், கணக்கப்பிள்ளைகள், குமாஸ்தாக்கள், குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு வரும் ஸ்திரீகள் ஆகிய எல்லோரும் சந்தோஷத்துடனே கவலையுடனே வருவார்கள். வந்து, கல்யாணம், இழவு ஜன்மதினங்கள் முதலிய செய்திகளைத் தெரிவிக்கும் கடிதங்களைத் தபால் பெட்டியில் சேர்ப்பார்கள். கணவனுக்கு, மனைவிக்கு, மகனுக்கு, தாயாருக்கு-இப்படிப் பல

ருக்கும் எழுதப்பட்ட கடிதங்கள் அதில் கிடக்கும். அப்போதும் தபால் பெட்டி புன்னகை செய்து கொண்டு அடக்கத்தின் சொரூப மாகக் காட்சியளித்தது.

அந்திமயங்கும் வேளையில் வாலி பர்களும், யௌவனப் பெண்களும் அந்தரங்கமாக வந்து, அதிரகசிய மாக தங்கள் காதல் கடிதங்களைத் தபால் பெட்டியில் போடுவார்கள். அக்கடிதங்களில் கண்ணீர்த் துளி கள் பட்டு மை கலைந்திருக்கும்; எழுத்து மங்கியிருக்கும். முத்த மிட வேண்டிய இடத்தைக் காட்ட சிறு வட்டம் போடப்பட்டிருக்கும். கடிதங்களெல்லாம் நீள நீளமாக இருக்கும். அப்போது தபால் பெட்டி புன்னகை செய்துகொண்டு அடக்கத்தின் சொரூபமாகக் காட்சி யளித்தது.

பெரிய பெரிய வியாபாரிகள் அதிகாலையில் வந்து, ரிஜிஸ்டர் கடிதங்களையும், செக்குகளும், ரூபாய் நோட்டுகளும் வைத்த கவர்களையும் போடுவார்கள். தபால் பெட்டி புன்னகை செய்து கொண்டு அடக்கத்தின் சொரூப மாகக் காட்சியளித்தது.

ஆனால், ஒரு நாள் காஸ்பர் என் பவன் வந்தான். அவனைத் தபால் பெட்டி இதற்குமுன் பார்த்ததே கிடையாது. அதுதான் முதல் தடவை. அவன் வந்து பெட்டி யில் ஒரு கடிதத்தைப் போட்டான். கடிதம் சாதாரணமாக, தொப்பியை மடிப்பதுபோல மடிக்கப்பட்டிருந் தது. அந்தக் கடிதத்தைப் பற்றிய பிற விபரங்கள் தெரியவில்லை. அவன் கடிதத்தைப் போட்டது தான் தாமதம், தபால் பெட்டி அப்படியே மூர்ச்சையாகி விழுந்து விட்டது; தன் இருப்பிடத்தை விட்டு நகரவும் ஆரம்பித்துவிட் டது. வீதி, வயல், காடு, மலை, பள்ளத்தாக்கு இப்படி கண்ட கண்ட இடங்களுக்கெல்லாம் ஓடியது. சில சந்தர்ப்பங்களில் அதை நாட்டுப் புறப் போலீஸ்காரர்கள் நன்கு பயிர் முளைத்த வயல்களின் நடுவிலே பார்த்திருக்கிறார்கள். அவர்கள் பார்க்கும் போதெல்லாம் தபால் பெட்டியை காஸ்பர் கையால் கட்டி அணைத்துக் கொண்டிருந்தான்; தபால் பெட்டி அவனுடைய உதடு களில் முத்தமிட்டுக் கொண்டிருந் தது*

விரிந்த ஆராய்ச்சி

பெங்வின் தீவின் பூர்விக ஓவியங் களைப் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ளுவதற்காக, ஓவிய நிபுணராகிய தபீரிடம் போயிருந் தேன். அவர் கண்ணாடி போட்டுக் கொண்டிருந்தாலும் கண் பார்வை மிகமிகக் கொஞ்சம். பிரான்ஸ் தேசத்தில் சங்கீத விமர்சகர்கள் செவிடாகவும், ஓவிய விமர்சகர்கள் குருடாகவும் இருப்பது சகஜம். கண் பார்வை இழந்துவிட்டாலும்,

*'தனக்குரியவன் வந்ததும் அந்தரங்கக் காதல் வெளிப்பட்டு, வெறி கொண்டு விடும்; அதுவரையிலும் மௌனமாக இருக்கும்' என்ற கருத்தைக் கூறுகிறது கதை. முத்தொள்ளாயிரக் கவிதை ஒன்றில், குடத்து விளக்கைப் போல வெளிப் படாதிருக்கும் பெண்களின் காதல், அரசனைக் கண்டதும் செக்கர் வானத் தீயாக ஊரும் உலகமும் காணும்படி வெளிப்பட்டு விடுவதாகக் கூறப்பட்டிருப் பது இங்கே குறிப்பிடத் தகுந்தது.

(மொ—பெ.)

புத்திக்கூர்மையைக் காட்டும் தம் கூரிய மூக்கின் உதவியால் அவர் சித்திரங்களைப் பார்த்து நன்கு ஆராய்ச்சி செய்து வருகிறார்.

அவருடைய பெரிய விசாலமான அறையில் நாலு பக்கமும் விண்ணை அளாவும்படி காகிதங்களும், அட்டைகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எப்போது அவை சரிந்து விழுமோ என்று எனக்குப்பயம். விழுந்தால் மனிதன் தப்புவது என்பது பகற்கனவுதான்.

அவரிடத்தில் "பெங்வின் தீவின் சித்திரங்களைப் பற்றிய ஆதி வரலாற்றைத் தெரிந்து கொண்டு போக வந்திருக்கிறேன்" என்று பணிவாகக் கூறினேன்.

"அது சம்பந்தமாக நான் ஆராய்ச்சி செய்து வைத்துள்ள குறிப்புகளையும், நறுக்குகளையும் உங்கள் இஷ்டம் போல் எடுத்துப் பார்த்துக் கொள்ளுங்கள். அதோ அந்த ஏணியை எடுத்துப் போட்டு மேலேறிப்போய் மேலே இருக்கும் பெட்டியைத் திறந்து பாருங்கள். உங்களுக்கு வேண்டியது அந்தப் பெட்டியில் தான் இருக்கிறது" என்று கூறினார் தபீர்.

நான் அவ்வண்ணமே செய்தேன். மேலே இருக்கும் பெட்டியின் மூடியைத் திறந்ததுதான், உள்ளேயிருந்து பற்பல வர்ணங்கள் கொண்ட எண்ணற்ற அட்டைத் துண்டுகள் அருவியாகக் கொட்டத் தொடங்கிவிட்டன. கையால் அணைத்து அவை விழுவதைத் தடுக்க முயன்றேன். முடியவில்லை. திடீரென்று பக்கத்திலிருந்த பெட்டிகளும் எப்படியோ திறந்து கொண்டன. மடமடவென்று அட்டைத் துண்டுகள் சரிந்து விழுந்தன. கீழே ஏராளமாகக் குவிந்து கொஞ்சம் கொஞ்சமாக குவியல் மலையாக வளரத் தொடங்கியது. இருக்க இருக்க வேகமாகவும், குரூர சப்தத்துடனும் விழத் தொடங்கியது. இந்தப் பயங்கரக் காட்சியைத் தம் மூக்கினல் எறிட்டுப் பார்த்தார் தபீர். விஷயத்தை எப்படியோ தெரிந்து கொண்டார். அவ்வளவுதான். பீதியினால் அவர் முகம் வெளுத்து விட்டது. "எத்தனை கலைப் பொக்கிஷங்கள்!" என்று கத்தினார்

அட்டை அருவியின் மோதலால் நெளிந்து கொடுக்கும் என் ஏணியின் வழியாக அவரை ஏற்றி மேலே கொண்டுவர முயன்றேன். அந்தோ! அதற்கும் காலம் கடந்து விட்டது.

அட்டைகள் குவிந்தன; குவிந்தன; இடைவிடாமல் குவிந்து கொண்டே இருந்தன. பாவம், தம் கையால் அருவியை நிறுத்த முயன்றார் தபீர். முடியவில்லை. அட்டைக் குவியல் அவரை மூடத் தொடங்கியது. கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகி கடைசியில் ஆளையே மறைத்துவிட்டது. என் கண்ணுக்குக் கடைசியில் அவருடைய உச்சந்தலை மட்டும்தான் தெரிந்தது. பிறகு, அதையும் ஆராய்ச்சிக் குறிப்புகள் மூடிவிட்டன. மேலும் அந்த மலை வளர்ந்துகொண்டே இருந்தது. இனிமேல் அங்கிருந்தால் என் உயிருக்கும் ஆபத்து என்று தோன்றியது. உடனே மேலே இருந்த ஜன்னலின் வழியாகக் கம்பி நீட்டிவிட்டேன்.

*

'அக்ஷரலட்சம் பொன் பெறும்' என்று சிலர் எழுத்துக்களைப் பாராட்டுவது நமது மரபு. பெர்னர்ட் ஷா உண்மையிலேயே தமது வார்த்தைகளைக் கணக்கிட்டு, பணம் பெற்று வந்தவர். அவர் தம் கையெழுத்துக்குக்கூட, பணம் பெறுவார். ஆகவே அவருடைய கடிதங்களுக்கும் மவுசு அதிகம். அந்தக் கடிதங்கள் ஒரு எழுத்தாளருக்கு எவ்வளவு நல்ல சம்பத்தைத் தந்தன!

பெர்னர்ட் ஷாவின் கடிதங்கள்

○

என். ஸி. கௌல்டு

சில வருஷங்களுக்கு முன்னால் காலஞ்சென்ற ஹென்றி ஸால்ட் என்ற எழுத்தாளர் என்னை வரவழைத்திருந்தார். அவர் பெர்னர்ட் ஷாவுக்கு பிரியமான நண்பர். அவர் வசித்துவந்த வீட்டின் பெயர் 'ஷா லாட்ஜ்!' அந்த வீட்டுக்கு இந்தப் பெயர் வந்த காரணத்தை அவர் ஒளிவு மறைவின்றி என்னிடம் சொன்னர்.

ஷாவிடமிருந்து ஸால்ட்டுக்கு ஒரு சமயம் ஒரு கடிதம் வந்ததாம். அதில் பெர்னாட் ஷா, ஸால்ட் ஒரு குடிசையில் குடியிருப்பதாக அறிந்ததாகவும் எழுதியிருந்தார். மேலும், "தங்களிடமிருக்கும் என்னுடைய கடிதங்களை யாருக்காவது விற்று, அதன் மூலம் ஒரு வீடு வாங்கி வாழலாமே!" என்று எழுதியிருந்தாரம்.

ஸால்ட்டிடம் சுமார் மூன்று டஜன் ஷாவின் கடிதங்கள் இருந்தன. எனவே அவர் ஷாவுக்கு கடிதம் எழுதினர். தாம் ஒரு படுமோசமான குடிசையில் வாழ்வதாகக் கேள்விப் பட்டது மிகையென்றும், எனினும் ஷாவின் கடிதங்களை விற்றுப் பணமாக்கலாம் என்ற யோசனை தமக்கு இருந்ததென்றும், ஷாவே அதற்கு தன்னிச்சையாய் அனுமதி கொடுத்து விட்டதால், அப்படியே செய்யலாமென்றும், அதற்கு ஷா எந்த விதமான யோசனை சொன்னலும் ஏற்றுக்கொள்ளத்தயாரென்றும் எழுதினர்.

உடன் அதற்கு ஷா விடமிருந்து பதிலும் வந்தது. அமெரிக்காவிலிருந்து ஷாவின் அசல் கைப்பிரதிகள் எதுவாயினும் வாங்குவதென்று ஒருவர் வந்து லண்டனில் தங்கியிருப்பதாகவும், அவரோடு தமக்கு தொடர்பு இருப்பதாகவும் எழுதியிருந்தார். மேலும், ஸால்ட்டிடம் அவர் வரக்கூடுமென்றும் தெரிவித்திருந்தார். அதன்படியே அந்த அமெரிக்க ஏஜெண்ட் ஸால்ட்டிடம் மறுநாள் வந்து சேர்ந்தார். ஏஜெண்டுக்கும் ஸால்ட்டுக்கும் பேச்சு வார்த்தை

உருளைக்கிழங்கின் தோலைப்போக்கி இரண்டாக துண்டித்து உட்பாகத்தை குடைந்தெடுக்கவும், நசுக்கிய பட்டாணிக்கடலை, அரிந்த வெங்காயம், மிளகாய், எலுமிச்சஞ்சாறு, ருசிக்குத் தேவையான உப்பு இவைகளை கலக்கவும். குடைந்த உருளைக் கிழங்கு பாதிகளில் கலவையை திணிக்கவும். இருபாதிகளையும் ஈர்க்குச்சிகளில் தொடுத்து ஒன்றாகப் பொருத்தவும். சூடான டால்டாவில் உருளைக்கிழங்கை பொரித்து தனியாக வைத்துக்கொள்ளவும். வெங்காயம், தக்காளிப்பழம், மசாலா இவைகளை சமையல் பாத்திரத்தில் போட்டு வதக்கவும். பிறகு பொரித்த உருளைக்கிழங்கை போடவும். நீராவி போகாமலிருக்க கோதுமை மாவினால் மூடியை பாத்திரத்துடன் ஒட்டவைத்து ½ மணிநேரம் நல்ல சூட்டில் பக்குவம் செய்யவும், பிறகு ½ மணிநேரம் சிறு சூட்டில் வைத்திருக்கவும். சூடாக பரிமாறவும்.

உங்கள் தினசரி சாப்பாட்டை டால்டா எப்படி
அதிக சத்துடையதாகச் செய்கிறது?

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே — அல்லது
என்று வேண்டுமானாலும் — எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 97-50 TM

பியூரிடி பார்லி எட்டு மடங்கு அதிக வேலை புரியும்

பியூரிடி பார்லியில், அரிசிபார்லியின் நற்குணம் பூராவும் சத்து மிகுந்த வகையில் அடங்கியுள்ளது. ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி, எட்டு ஸ்பூன் அரிசி பார்லிக்கு சமமானது. தவிர அது எப்பொழுது வாங்கினாலும் புத்தம் புதிய நிலையில் இருக்கும். ஏனெனில் அது சுகாதார முறைப்படி ஸீலிடப்பட்ட டின்களில் கிடைக்கின்றது. இருபதே நிமிஷங்களில் ருசிமிகுந்த கஞ்சி தயாரிக்கலாம். சீக்கிரமாக பார்லி வாட்டர் தயாரிப்பதற்கு, இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு பியூரிடி பார்லியை சிறிது ஜலத்துடன் மாவாக கரைத்து, இரு டம்ளர் ஜலத்துடன் ஐந்து நிமிஷம் கொதிக்கவைக்க வேண்டியதுதான். ருசிக்கு ஏற்றபடி உப்பு, சர்க்கரை அல்லது எலுமிச்சை ரஸம் சேர்த்துக்கொள்ளலாம்.

பியூரிடி பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

தென்னிந்தியாவிற்கு ஏஜெண்டுகள் :

பாரி அண்ட் கோ., லிமிடெட், தபால் பெட்டி நம்பர் 12 சென்னை

சக்தி ★ மாதப் பத்திரிகை

தனிப் பிரதி 'தபால்'	0 8	ஒரு வருஷம்	6 0
ஆறு மாதம்	3 8	2 வருஷம்	11 0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப் பிரதி	0 9	ஆறு மாதம்	4 0
ஒரு வருஷம்	7 0	2 வருஷம்	13 0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப் பிரதி	0 10	ஒரு வருஷம்	8 0
ஆறு மாதம்	4 8	2 வருஷம்	15 0

சக்தி காரியாலயம்
சென்னை 14.

என்ற விலாசத்திற்குச் சந்தாத்தொகை அனுப்பவேண்டும்

கள் நடந்து நிறைவேறி, ஷாவின் கடிதங்கள் கை மாறின. ஸால்ட் தாம் எதிர் பார்த்த தொகைக்கு மேலாகவே தமக்கு கிடைப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்.

மறுநாள் எச். ஜி. வெல்ஸிடமிருந்து ஸால்ட்டுக்கு, தாம் அந்த ஏஜெண்டை ஒரு கிளப்பில் சந்தித்ததாகவும், ஸால்ட்டிடமிருந்து ஷாவின் கடிதங்களைப் பெற்ற விஷயத்தைப் பெருமிதமாய் எடுத்துச் சொன்னார் எனவும் கடிதம் வந்தது.

ஷாவின் கடிதங்களை விற்று வந்த பணத்தைக் கொண்டுதான் ஷா லாட்ஜ்ஜை அவர் விலைக்கு வாங்கியதாகவும், மேலும், அதே காரணத்துக்காக அவருக்கு ராயல்டித் தொகை மாதிரி வேறுபணமும் வந்துகொண்டிருந்தது.

இந்த விஷயம் எனக்கு வேறு சில விஷயங்களை ஞாபகமூட்டியது. எனது தந்தை ஸர். எப். ஸி. கௌல்டுக்கும், ஷாவுக்கும் பரோ கவுன்ஸில் தேர்தலின் போது நடந்த கடிதப் போக்குவரத்து ஞாபகம் வந்தது. அந்தச் சமயம் ஷா நீளமாகவும், காரசாரமாகவும் கடிதம் எழுதியிருந்தார். ஒவ்வொரு கடிதமும் ஷாவின் புத்தக முன்னுரைகளைப்போல் நீண்டிருக்கும். ஒரு கடிதத்தில் ஷா தாம் பேசும் ஒரு கூட்டத்தில் என் தந்தையைத் தலைமை வகிக்க வேண்டியிருந்தார். அபிப்பிராய பேதம் காரணமாக, என் தந்தை ஒப்புக்கொள்ள வில்லை. எனினும் இருவருக்கும் கடிதப் போக்குவரத்து நடந்து, என் தந்தை தலைமை வகிக்க ஒப்புக்கொண்டார்.

ஆனால், ஷாவிடமிருந்தோ இந்த ஆமோதிப்புக்கு ஒரு குத்தலான கடிதம் வந்தது. அதில் என் தந்தை எப்படித் தமது அபிப்பிராயங்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, ஷாவின் கூட்டத்தில் பேசப்போகிறார் என்று கேட்டிருந்தார்.

இந்தக் கடிதம் என் தந்தைக்கு ஆத்திர மூட்டியது. அதன் காரணமாக ஷாவின் கடிதங்கள் கிழிபட்டு குப்பைக் கூடையைச் சேர்ந்தன.

என் தந்தை மட்டும் அந்தக் கடிதங்களைகிழித்தெறியாமலிருந்தால், இன்று நான் வசிக்கும் வீட்டுக்கு வாடகை கொடுக்க வேண்டியிராது. அதன் பெயர் "ஸெயின்ட் பெர்னார்ட்" என்று மாறியிருக்கக் கூடுமல்லவா?

✲

வாத்தியாரம்மாளின் வெறுப்பு

தற்போதுள்ள கல்வி முறையை வெறுத்து ஒரு வாத்தியாரம்மாள் தன் பதவியை ராஜினாமா செய்துவிட்டாள். ராஜினாமா கடிதத்தில் பின் வருமாறு அவள் குறிப்பிட்டிருந்தாள்:

"இப்போது நம் பள்ளிக்கூடங்களிலெல்லாம் வாத்தியார்கள் தலைமை வாத்தியார்களுக்குப் பயப்படுகிறார்கள்; தலைமை வாத்தியார்கள் பள்ளிக்கூட சூப்பிரண்டெண்டெண்டுக்குப் பயப்படுகிறார்கள்; சூப்பிரண்டெண்டெண்டு பள்ளிக்கூட நிர்வாகக் கமிட்டிக்குப் பயப்படுகிறார்; நிர்வாகக் கமிட்டியினர் பெற்றோர்களுக்குப் பயப்படுகின்றார்கள்; பெற்றோர்கள் குழந்தைகளுக்குப் பயப்படுகிறார்கள்; குழந்தைகள் யாருக்கும் பயப்படுவதில்லை."

—பீட்டர் ரோனர்.

உலகச் சம்பிரதாயத்துக்கோ அலர் தூற்றலுக்கோ பயந்தோ் துங்காமல் அவர்கள் காதலித்தனர். காதல் என்பதை ஈருடலும் ஒருயிரும் ஆதல் என்று சர்வசாதாரணமாகச் சொல்வார்கள். ஆனால் காதலி நோயாய்க் கிடக்கும் போது அவன் உள்ளத்திலிருந்து அனுதாபம் மட்டும்தானா பிறந்தது. அவள் உடலிலும் புகுந்த அந்த சக்தி? அது அந்த அனுபவஸ்தரான டாக்டருக்கும் கூடப் புரியவில்லை! அந்தச் சக்திதான் என்ன?

கூடன்

○

எச். ஏ. பிரேண்ட்

ஹீதர் பீல்டில் வசித்து வந்த எனது தாத்தாவைக் காணச் செல்லும் போது, குற்றமுள்ள நெஞ்சு குறு குறுக்கத்தான் செய்தது. ஏனெனில் கடந்த இருபது வருஷ காலமாக அவரை நான் பார்க்கவேயில்லை. அதற்குக் காரணம் இது வென்று எதையும் சொல்ல முடியாது. எனது சோம்பேறித்தனம்தான் முக்கிய காரணம். அத்துடன் யுத்தமும் தொடங்கிவிட்டது. எனினும் எங்களுக்குள் கடிதப் போக்குவரத்து உண்டு; இப்போதும் அவர் டாக்டர் தொழில் நடத்திவருகிறார் என்று எனக்குத் தெரியத்தான் செய்யும்; மேலும், தம்மைவிட வயது குறைந்த ஒரு இளைஞரைத் தமது துணையாளாக அமர்த்தியிருக்கிறார் என்றும், அந்த நபர் மீதுதான் தொழிலின் பாரம் இப்போது தங்கி யிருக்கிறதென்றும் நான் அறிவேன். அந்தக் கிழவன் அப்போதும் நன்றாகத் தானிருந்தார். அப்போது அவர் கறுப்பு உடையணிந்து, கறுப்பு டை கட்டியிருந்தார். ஒரு சவ அடக்கத்துக்குச் சென்றுவிட்டு, அப்போதுதான் திரும்பியதாகச் சொன்னார்.

அவருடைய கூட்டாளி எங்களோடு விருந்தில் கலந்து கொண்டார்; ஆனால், இடையிலேயே எழுந்தும் போய்விட்டார். காபியும், பிராந்தியும் சாப்பிட்டவுடன், என் தாத்தா என்னைப் பார்த்து, "ஜார்ஜ் டி. பிஞ்சிங் என்ற எழுத்தாளரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாயா?" என்று கேட்டார். சொல்லப் போனால், எனக்கு அந்த எழுத்தாளரைத் தெரியுமென்றுதான் சொல்லவேண்டும். மேலும் அவரைப் போன்ற ஒரு எழுத்தாளரை யாரும் அவ்வளவு கவனமாய் மனசில் நிறுத்திக் கொள்ள முடியாதுதான். பிஞ்சிங் போன்ற எழுத்தாளர்களெல்லாம் தமது சகாக்களின் பகையையும், கசப்பையும் விரைவில் சம்பாதித்துக் கொள்வார்கள். அவருடைய இலக்கியசேவையும் அற்பாயுள் சேவைதான். அரை டஜன் புத்தகங்களும் ஒரு டஜன் சிறு கதைகளுமே அவருடைய மொத்த சிருஷ்டிகளாகும். எனினும் ஒவ்வொன்றும் அவரது மேதா விலாசத்தைத் தெரிவிப்பதாகவும், கலை நுணுக்கக் கட்டுமானத்தில் சிறந்ததாகவுமே இருக்கும். இதையெல்

லாம் நான் என் தாத்தாவிடம் சொல்லி, எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பாகவே அவர் தமது எழுத்து வேலைகளை நிறுத்திக் கொண்டதையும் சொன்னேன்.

“ஆமாம். அவர் எழுதுவதை நிறுத்தி இருபத்தைந்து வருஷமாவது இருக்கும். நேற்றுவரை அவர் ஒரு எழுத்தாளராகக் கூட இருந்தாரென்று எனக்குத் தெரியாது. நேற்றுத்தான் அவருடைய எழுத்துக்கள் வெளிவந்த பத்திரிகைப் பிரதிகளைக் கண்டேன்” என்றார் தாத்தா.

“அப்படியானால், அவரை உங்களுக்கு நேரிலேயே தெரியுமா?”

“பிஞ்சிங் எனது ஆத்ம நண்பர்” என்றார் தாத்தா. “அது கூட உண்மையில்லை. அவருடைய மனைவிதான் எனக்கு அதிகப் பிரியமானவள். அவளை மனைவியென்று சொன்னாலும், அவள் அவர் மனைவியல்ல. அவர்கள் இருவருக்கும் கல்யாணமே ஆகவில்லை. இன்று காலைதான் அவர்கள் இருவரும் ஒன்றாகப் புதை யுண்டார்கள்.”

“என்? ஏதாவது விபத்து நேர்ந்ததா?”

“இல்லை. நல்ல மரணம் தான். ஆனால், ஏககாலத்தில் உயிர் பிரிந்தது.”

‘அப்படியா?—அதிசய மாயிருக்கிறதே!’

“ஆமாம். எனினும், அவள் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே இறந்து விட்டாள் என்றுதான் நான் இன்றும் கருதுகிறேன்” என்று சொல்லி விட்டு அவர் கதையைத் தொடங்கினார்.

அவர்கள் இந்தக் கிராமத்துக்கு வந்து இன்றுவரை சுமாராக இருபது ஆண்டுகளாகி விட்டன. அப்போது நானும் இளையவன்; சுறுசுறுப்பானவன். ஆகவே அவர்களை சரியாகக் கவனிக்க வாய்ப்பு இல்லை. மேலும் அவர்கள் என்னிடம் எப்போதாவதுதான் வருவார்கள். அவர்கள் ரோலக்கில் குடியிருந்தார்கள். அதன் பிறகு அவர்கள் ஜார்ஜியன் இல்லத்தை விலைக்கு வாங்கினார்கள். அந்த வீடு ராட்டன் ரோட்டுப் பக்கம் இருந்தது. எனது வாழ்க்கையிலேயே அவர்களைப்போல என் உள்ளத்தைக் கவர்ந்த வேறு ஆத்மாக்களைக் கண்டதில்லை.

அவர்களைப் பற்றி நான் கொஞ்சம் விரிவாகச் சொன்னால்தான், அவர்கள் என் மனசை அப்படிக் கவ்வினார்கள் என்ற விஷயத்தை நீ ஓரளவு கிரகிக்க முடியும். உன்னைப் போல் நான் ஒரு எழுத்தாளனாயிருந்தால் கூட, என்னால் அதைப் பரிபூரணமாக விவரிக்க முடியாது. ஏனெனில் அதை விளக்குவதற்கு வார்த்தைகள் சக்தியற்றவை. அவர்களுடைய தனிக் கவர்ச்சித் தன்மை அவர்களுடைய புறவாழ்க்கையில் அமையவில்லை. அவள் மெதுவும் மினுக்கும் கொண்ட அழகிதான். உடம்பில் ஜீவன் உண்டு. அதை நன்றாக நாம் உணர முடியும்.

அவள் இங்கு வரும்போது அவளுக்கு முப்பது வயசு இருக்கும். அவருக்கு நாற்பத்தைந்து வயசு இருக்கும். சுத்தமான வாழ்க்கை, வாழ்பவர். அவருடைய தலை செம்மை படர்ந்திருக்கும். நான் சந்தித்தவரை, அவர்களைப்போன்ற

அறிவு தீக்ஷண்யம் பெற்றவரைக் கண்டதில்லை. அவர்களோடு பேசிக் கொண்டிருப்பது ஒரு ஆனந்தம்; ஆத்மசாந்தி.

ஆனால் அவர்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை என்பது எனக்கு ஆச்சரியம் தரும் விஷயம். எனினும் அது விஷயம் எனக்குத் தெரியாது. அவருக்கு வேறொரு மனைவி இருந்தாள். இருந்திருப்பாள் என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டதுண்டு. எனினும் நான் அதை அவரிடம் கேட்டதில்லை. இத்தனை வருஷ அத்தியந்தச் சிநேகத்திலும் அவரை நான் கேட்டதில்லை, கேட்க விரும்பியது மில்லை.

எனது தாத்தா மீண்டும் ஒரு கிளாஸ் பிராந்தியைக் குடித்துவிட்டுப் பேச ஆரம்பித்தார்:

"எங்களுக்கு — முக்கியமாக — டாக்டர்களுக்கு பல விஷயங்கள் புரிபடாமலே போகின்றன. இந்தக் கதையை உன்னிடம் ஏன் சொல்ல வேண்டும் என்று எனக்குத் தெரியாது. அந்த ஜீவன்களை உனக்கு என்னால் புரியவைக்க முடியாது; எனினும் அவர்கள்தான் இந்தக் கதை. நடந்ததையெல்லாம் நாலைந்து வார்த்தைகளில் சொல்ல என்னால் இயலாது; சொன்னாலும் நீ நம்பமாட்டாய் எனினும் அது பற்றியும் எனக்கு நம்பிக்கையில்லை. அந்தத் தம்பதிகள் இருவரும் எப்படி ஒன்றி வாழ்ந்தார்கள், அவர்கள் இருவருக்கும் உள்ள அந்த அதீத இணக்கமென்ன என்பதை நீ ஓரளவு ஊகித்துக்கொள்ள வேண்டியதுதான்."

பிறகு அவர் எனக்கு இவ்விஷயத்தைக் கேட்பதில் சிரத்தை இருக்கிறதா என்பதைக் கேட்டுத் தெரிந்துகொண்டு மீண்டும் தமது எண்ணங்களைச் சேகரிக்கலானார்.

"முதலிலேயே சொன்னேன். இதை விளக்க எனக்கு சரியான வார்த்தைகள் தேவை. ஆனால் வார்த்தைகளோ விஷயத்தை முழுதும் உருவாக்காது; அர்த்தங்கள் மாறும்; தரம் குறையும். நான் ஒன்றைச் சொன்னால், நீ ஒன்றைக் கருதுவாய். காதலையே எடுத்துக் கொள்ளேன் — ஒரு மனிதன் ஒரு பெண்ணிடம் கொள்ளும் காதல்! காதல் என்றால் உனக்கு எப்படிப் படுகிறது?"

அவர் எனது விடைக்காகக் காத்திருக்கவில்லை.

"காதல் என்பது காரியாம்சமான வார்த்தைதான். அந்தத் தம்பதிகள் இருவரும் ஒருவருக்கொருவர் அன்பு சொரிந்ததையும் அந்த அன்பு நாளுக்கு நாள் வளர்ந்து இறுகியதையும் கண்டதும், அவர்கள் இருவருக்கு முள்ள காதலுணர்ச்சிதான் எனக்குப் புலப்பட்டது. அந்தக் காதல் ஆழமும் அமைதியும் கொண்டது. அந்தக் காதல் அரவணைப்புகளிலோ, அமிர்த வசனத்திலோ வெளிப்படவில்லை. காதலே அவர்கள் சொத்தாயிற்று. ஒரு மலரின் நறுமணத்தை உணர்வது போல, அந்தக் காதலை உன்னால் உணர முடியும். அவர்கள் சாதாரண ஜோடிதான். எனினும் அவர்களுக்குள் இருந்த அந்தப் பிணைப்பு அத்தனை இறுக்கம் கொண்டது. அது அவர்களை ஒரு ஒளி மண்டலம் போல வளைத்து நின்றது. எந்த விதச் சிரமுமின்றி அவர்களது ஒன்றிய காதலை உன்னால் உணர முடியும். அவர்களை தெய்வ ஒளியில் முழ்

குளித்து எடுக்கும் அந்தத் திருப்தி நிறைந்த அமைதியான காதலை நீ நிச்சயம் உணர்ந்து கொள்ள முடியும்.

அவர்கள்கலியாணமானதம்பதிகளெனப் பாசாங்கும் செய்யவில்லை. நான்தான் ஒருதடவை சின்னத்தனமாய் ரோபெக் ரிஜிஸ்டரைப் புரட்டிப் பார்த்து விட்டேன். அவர்கள் இரண்டு அறைகள் எடுத்திருந்தார்கள். ஒன்று பிஞ்சிங் குக்கும், மற்றது மிஸ்—யாரோ ஒரு அம்மாளுக்கும்—அந்தப் பெயர் இப்போது எனக்கு மறந்து போய் விட்டது. அதன்பின் ஜார்ஜ்ஜியன் இல்லத்தை விலைக்கு வாங்கியபின் இருவரும் ஒன்ருய் உலகமறியத் தான் வாழ்ந்தார்கள்.

எனினும் கிராமத்தார்கள்—அவர்கள் எப்படி இருப்பார்கள் என்றுதான் உனக்குத் தெரியுமே-அவச் சொல்லுக்குத் தப்பியிருந்தார்கள். சிலபேர் அவர்களைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாக அவதூறு கிளப்பினர்கள். ஆனல் அவர்கள் இருவர் மட்டும் இதையெல்லாம் பொருட் படுத்தாமல், அன்பு செலுத்தி வந்தார்கள். ஆனல் அவர்கள் முறைப்படி கலியாண மாகாதவர்கள் என்ற வசைமொழி தானகவே மறைந்து வெகுகாலமாகிவிட்டது.

அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் தம்மை இந்தக் கிராம வாழ்க்கைக்கு ஏற்றவாறு சுதாரித்துக் கொண்டார்கள். அவர்களிடம் ஏராளமான பணம் இருந்தது. கார் இருந்தது. வேட்டைக்குச் செல்வார்கள்; சவாரி பண்ணுவார்கள்; மீன் பிடிப்பார்கள். அவள் சவாரி பண்ணுவதே ஒரு தனி அழகு. அவர்களுக்கு தோட்டம் போடுவதில் அலாதிப் பிரியம். தங்கள் வீட்டைச் சுற்றியுள்ள இடத்தில் அவர்கள் பயிராக்கியிருந்த தோட்டம் ஒரு கண்காட்சியாக இலங்கியது. அவர்களுக்கு கிராம வாழ்க்கையில் ஒரு தனி ஈடுபாடு. தனக்குஒரு குழந்தைகூடப் பிறந்ததில்லை என்று அவள் என்னிடம் சொல்லி யிருந்தாள்; எனினும் குழந்தைகளிடம் அவளுக்கு அபார மோகம். அவர் சொக்கட்டான் விளையாடுவார். வாரத்துக்கு இரண்டு மூன்று தடவை என்னையும் விளையாடக் கூப்பிடுவார். அவர்களுடைய ஆனந்த ஜோதியில் நான் மூங்கி முக்குளித்தேன்-முக்குளித்தேன் என்பதுதான் பொருத்தமான வார்த்தை.

அவர்கள் இங்கு வாழ வாழ எங்கள் சிநேகமும் வளரலாயிற்று. எப்போதாவது, எங்காவது அவர்கள் முகாம் கிளம்பி விடுவார்கள்; சமயங்களில் திரும்பி வர வெகு நாட்கள்கூட ஆகும். அவர்கள் எங்கு செல்லுகிருர்கள் என்று எனக்குத் தெரியாது. அதுமாதிரி விஷயங்களை, தம்மைப் பொறுத்த விஷயங்களைப் பற்றி அவர்கள் பேசுவதே இல்லை. மேலும் நான் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதைப்பற்றி அக்கரை கொள்ளவில்லை.

ஸ்டெல்லாவும் நானும் இப்போது சிறந்த அத்யந்த நண்பர்களாகி விட்டோம். டாக்டர் என்ற முறையில் அவளிடம் தொழில் முறையில் போவதுண்டு. அவளுக்கு உடம்புக்கு ஒன்றும் மோசமில்லை. எனினும் அவளுக்குச் சமயங்களில் சூதகநோய்

கண்டு கஷ்டப்படுவாள்—அந்தச் சமயங்களிலும் அவள் நிலைமை ஒன்றும் கவலைக்கிடமாவதில்லை.

அவள் உடம்பில் குளிர்ஜுரம் ஏற்பட்டு, அது நிமோனியாவாக உருவெடுத்தது. குணமான பின்னும் மீண்டும் அது அவளை வாட்டியது. அவள் உடம்பில் பல புதிர் நிறைந்த சிக்கல்கள்—அதை உனக்குச் சொல்ல வேண்டியதில்லை—கடைசியில் நிமோனியாதான் தலை தூக்கி நின்றது. என்னால் இயன்றதெல்லாம் செய்து பார்த்து விட்டேன். இதற்குமேல் எதுவுமே செய்ய முடியாது என்ற நிலைமை. நாங்கள் இருவரும் ஒரு சாதாரண மனிதரிட மிருந்துதான் இதைக் கற்றுக் கொண்டோம். அவர் என்ன பண்ணினர் என்பதைப் பற்றி எனக்குத் தெளிவாய் இன்னும் தெரியாது.

நாங்கள் இருவர் என்று சொன்னேன்? ஆம் அதற்குள் இன்னொரு வைத்திய நிபுணரையும் சேர்த்துக்கொண்டேன். என்னை விட வயதில் இளையவரான ஒரு ஆசாமி என் தொழிலில் வல்லவராயிருப்பது எனக்கே ஆச்சரியம் தந்தது. இளைஞராயினும், தொழில் தெரிந்தவர் அவர். எனினும் அவரும் நோயின் மூலாதாரத்தைச் சரியாகக் கண்டு பிடிக்கவில்லை.

எனக்கு ஒரே பயமாகிவிட்டது. ஆதலின் பிஞ்சிங்கிடம் அவரது மனைவியின் அபாயகரமான நிலைமையைத் தெளிவுபடுத்த சந்தர்ப்பம் தேடி, சொன்னேன். பல நாட்களாக அவர் வெறுமனே சுற்றிச் சுற்றி வந்து நர்சுகளுக்குத் தொந்தரவு கொடுத்தாரேயன்றி எதையும் கவனிக்கவில்லை. எனினும் நான் வரப்போகும் ஆபத்தை முன் கூட்டியே சொல்லி, அவரது அதிர்ச்சியைச் சமனப்படுத்த விரும்பினேன். ஆனால், ஸ்டெல்லா இறந்து போவாள் என்ற செய்தியைச் சொன்னபோது, அவர் சிரிக்கத்தான் செய்தார்.

"இல்லவே இல்லை. வயோதிக நண்பரே! அதைப்பற்றிக் கவலை வேண்டாம். ஸ்டெல்லா சாகமாட்டாள். இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது. எனினும் நான் பயப்படவில்லை. அவள் சாக மாட்டாள்!" என்றார் பிஞ்சிங்.

கஷ்ட சிரமமான சிசுருஷைகள் பண்ணியும் ஸ்டெல்லாவின் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வந்தது. தர்ஷடன் என்ற அந்த நிபுணர் அவளை அடிக்கடி வந்து பார்த்தார். இரண்டாவது தடவையாக அவர் வரும்போது ஸ்டெல்லா பிரக்ஞையற்றுக் கிடந்தாள்.

"இன்றிரவு எப்படியும் அவள் இறந்து போவாள். அவளது கணவரிடம் முன்கூட்டியே ஒரு வார்த்தை சொல்லிவிடுவது நல்லதல்லவா? பின்னால் அதிர்ந்து விடக் கூடாதல்லவா?" என்றார்.

பிறகு அவர் பிஞ்சிங்கிடம் நிலைமையை எடுத்துச் சொல்லும்போது நானும் கூடவிருந்தேன். அப்போதும் பிஞ்சிங் "இல்லேவே இல்லை. உங்கள் பேச்சுத்தான் பெரிதாயிருக்கிறது. ஸ்டெல்லா சாக முடியாது" என்றார். அவருடைய உறுதியை நாங்கள் எந்த விதத்தாலும் குலைக்கமுடியவில்லை.

பிரிந்துபோகும்போது தர்ஷ்டன் என்னிடம் ஸ்டெல்லா காலை வரையிலும் பிழைத்துக் கிடந்தால் தமக்கு போன் பண்ணுமாறும், தாம் பதினேரு மணிக்கு மேல் வருவதாகவும் சொல்லச் சொன்னார்.

ஸ்டெல்லா சாகவில்லை. மறுநாள் நானும் தர்ஷ்டனுமாக அவள் அறையில் நுழைந்தோம். பிஞ்சிங்கும் எங்களுடன் வந்தார். அவர் முகம் வெளுத்துப்போயிருந்தது; எனினும் முகத்தில் நம்பிக்கை குலையவில்லை. ஆனால் ஸ்டெல்லாவைப் பார்த்தாலோ, அவள் இன்னும் சில நிமிஷ நேரத்தில் காலமாகிவிடுவாள் என்று தோன்றிற்று.

இந்த விஷயங்களெல்லாம் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நடந்தவை. ஆனால், ஏதோ சில தினங்களுக்கு முன் நடந்தமாதிரி இன்றும் என் கண்ணுக்குள் நிறைந்து நிற்கின்றன. இப்போதும் என் மனக் கண்ணின் முன் ஸ்டெல்லாவின் அறையை, நோயின் மந்தாரம் சூழ்ந்திருந்த அந்த அறையைக் கற்பித்துக் காண முடியும். வெளிறிய சூரிய ஒளி, ஜன்னலில் கட்டப்பட்ட கொசு வலைத் திரைகளால் வடிகட்டப்பெற்று விழுகின்றது. தர்ஷ்டனின் சோர்வும், பிஞ்சிங்கின் தன்னம்பிக்கையும் தெரிகின்றன- ஸ்டெல்லா மயங்கி வெளிறிப் போய் கிடக்கிருள்; அவள் உடல் படுக்கையில் ஒருச்சாய்த்துக் கிடக்கிறது. நாடித்துடிப்பு அநேகமாக நின்றுவிட்டது. அவள் கண்கள் திறந்த வாக்கில் வெறித்து நோக்கின.

நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே முடிவு நெருங்கியது. மூச்சின் கொரகொரப்பு நின்றது. கண்கள் மங்கிய ஒளி சிதறின. அசைவற்ற தன்மை அவளிடம் குடிகொண்டது.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த தர்ஷ்டன் பிஞ்சிங்கிடம் திரும்பி, விஷயத்தைச் சொன்னார்.

"இல்லை" என்று பிஞ்சிங் அமைதியாகச் சொன்னார்: "நான் முயன்று பார்க்கிறேன்."

தர்ஷ்டன் தமது புருவங்களை உயர்த்தியவாறே, "அன்பரே! இனி உம்மால் எதுவும் செய்ய முடியாது" என்றார். ஆனால் பிஞ்சிங் அதைக் காதில் வாங்காமல் அவரைக் கடந்து சென்றார்.

"நான் எதுவும் செய்யப்போவதில்லை; ஆனால், ஸ்டெல்லா சாகக் கூடாது!" என்றார்.

உண்மையில் நடந்தது இது தான். பிஞ்சிங் ஸ்டெல்லாவின் படுக்கைமேல் குனிந்து நின்று ஸ்டெல்லாவின் இரு கரங்களையும் தம் கரத்தோடு இறுகச் சேர்த்து அவளையே வெறிக்க வெறிக்கப் பார்த்தார். அங்கேயே அசைவற்ற கற்சிலையைப்போல இருந்தார். அவருடைய நிலையைக் கண்டு, நாங்கள் அவரைத் தாஜா செய்து வெளியில் கொண்டுபோயிருப்போம். ஆனால், பிஞ்சிங்கின் அசைவற்ற தன்மை எங்களை அதைச் செய்யவிடாமல் தடுத்தது. பிஞ்சிங் எதுவும் பேசவில்லை. ஆனால், ஸ்டெல்லாவின் கரங்களை மெல்ல மெல்ல இறுகப்பற்றினார். நாங்கள் நின்ற இடத்திலிருந்து அவருடைய முகபாவத்தைச் சரி

வரக் கவனிக்கக்கூடவில்லை. தர்ஷ்டனும் நானும், இந்த அமானுஷ்யக் காட்சியை, அந்த ஆத்மா தனக்கு வரப்போகும் முடிவை எதிர்த்துப் போராடும் காட்சியை அசைவற்றுப் பார்த்துக் கொண்டிருந்தோம். அவரது அசைவற்ற தன்மையின் மூலமாகவே, பிஞ்சிங் பிரமாதமான அதிமானுஷ்யமான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் என்று தெரிந்தோம். எதுவும் அசையவில்லை. அந்த அறை முழுதுமே அசைவற்ற நிலையில், கண்காணாத போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக ஒரு பிரமை தட்டியது.

திடீரென்று பிஞ்சிங் லேசாக அசைய, நடுங்க ஆரம்பித்தார். நடுக்கம் வரவர அதிகமாயிற்று; எனினும் இருந்த நிலையை விட்டு அசையவில்லை. ஏதோ வயது மீறிப் போனதுபோன்ற அசைவு. பிறகு அவர் அசைந்தார். அதன் பின் காற்றிலகப்பட்ட பாய்மரக் கப்பலைபோல அசைந்தார்.

திடீரென்று அந்த ஆட்டம் நின்று, உடம்பு நெகிழ்வுற்றது.

எனது தோள்பட்டையில் தர்ஷ்டன் நீண்ட பெருமூச்செறியும் வெப்பம் பாய்ந்தது. நானும் தான் அதைப் பார்த்தேன். ஸ்டெல்லாவின் வெளிறிய கன்னங்களில் செம்மை லேசாகத் துலங்க ஆரம்பித்தது. நீலம்பாரித்து வந்த மேனியே சிவப்பேற ஆரம்பித்தது. கண்களுக்கு மீண்டும் ஒளி எங்கிருந்தோ வந்து குடியேற ஆரம்பித்தது. நான் அசைவற்று நம்பிக்கையற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அவள் உதடுகள் நடுங்குவதும் தெரிந்தது.

பிறகு தர்ஷ்டன் தமது காரில் ஏறிச் செல்லும்போது என்னிடம், "இதை என்னால் நம்ப முடியாது. இது ஏதோ வசிய மந்திர வேலை தான்—மின்னல் வெட்டினாற் போல் அவள் மினுங்கினாலும், அவள் சீக்கிரம் மறைந்து விடுவாள்."

ஆனால் ஸ்டெல்லா மறைந்து விடவில்லை. ஒரு வார காலத்துக்குள் அவள் வழக்கம்போலாகி விட்டாள். ஆனால், பிஞ்சிங் மட்டும் களிப்புடன் இருக்கவில்லை. அவளை பிழைத்தெழச் செய்ய, தான் செய்த காரியத்தை அவர் எதுவுமே பிரஸ்தாபிக்கவில்லை. அவர்கள் வழக்கம் போலவே வாழ்ந்து வந்தார்கள் கடந்த பதினைந்து வருஷ காலமாய்! இந்தக் காலத்தில்தான் அவர்கள்மீது எனக்கிருந்த வாத்சல்யம் அளவுகடந்து வளர்ந்தது. நான் தலைகால் தெரியாமல் ஸ்டெல்லாவைக் காதலிக்க ஆரம்பித்தேன். அறுபதாண்டுச் சமயம் இது ஒரு அபாயகாமான குணம்! எப்போதாவது அவள் என்னை முத்தமிட்டுவிட்டால், வீட்டுக்கு வந்து அதை யெண்ணிப் பெருமிதமடைவேன் — ஆச்சரியமாயிருக்கிறதா உனக்கு! ஒருவன் எப்படி உள்ளத்திலும் கிழடு தட்டிப் போகிறான் தெரியுமா?

என் தாத்தா மீண்டும் காபிக்குச் சொல்லியனுப்பி விட்டு, பிராந்தியைக் குடித்தார். எனக்கும் பாட்டிலைத் தள்ளினார்; நான் மறுதளிக்கவும், அவர் தலையை ஆட்டிக்கொண்டே, "பரிதாபம்—பரிதாபம். உலகிலேயே சிறந்த பொருள் பிராந்திதான்—எனக்கு வயது எண்பதாச்சே. இப்பவும்

உங்கள் திர்ஷ்டத்தில் எழுதி இருப்பதென்ன?

நீங்கள் ஒரு வருஷத்திற்குள் நடக்கும் சுபா சுபங்களை அறிந்து கொள்ள வேண்டுமெனில், இன்றே ஒரு கார்டில் உங்களுடைய விலாசம், ஒரு புஷ்பத்தின் பெயர் எழுதியனுப்புங்கள். நாங்கள் ஜோதிட சாஸ்திர கணிதப்படி தங்களுக்கு உண்டாகும் லாப நஷ்டங்கள், எந்த வியாபாரத்தால் லாபம் கிடைக்கும், எங்ஙனம் பொருள் சேரும், உத்தியோகம் எப்போது கிடைக்கும், வேலை ஆட்களுடைய அபிவிருத்தி, தம்பதிகளுடைய சௌக்யம், ஆரோக்யம், வியாதி, தூரபிரயாணங்கள், வியாஜ்ஜியம் அல்லது பரீக்ஷைகளில் தேர்ச்சி, கல்யாணம், பூமி அல்லது ஆஸ்தியினால் சுகம், புதிய நட்பு உங்கள் கார்டு சேர்ந்த உடனே மாதவாரி பலனும் வருட பலனும் ரூ. 1—4—0-க்கு தபாலில் V. P. யில் அனுப்புகிறோம். தபால் செலவு வேறு; துரதிர்ஷ்டத்தை அதிர்ஷ்டமாக்கிக் கொள்ளவும் வழியுண்டு; எழுதி அனுப்புகிறோம்; இதனால் வரப்போகும் கஷ்டங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். ஒரு முறை பரீக்ஷித்தாலே தெரியும். உங்கள் ஜாதக பலன்களின் திண்மையைத் தப்பென்று ருஜு செய்தால் கட்டிய பணம் வாபஸ் செய்யப்படும்.

SATNARAIN JOTISH ASHRAM (S. M.)
HOSHIARPUR

பட்டுத் துணி-கெஜம் ரூ. 1-0-0

நீங்கள் எந்த இடத்திலாயினும் பட்டுத்துணியை கெஜம் 1-க்கு ரூ. 1-0-0 வீதம் வாங்க முடியுமா? நாங்கள் கடை விலையைவிட மிக மலிவான விலைக்கு சப்ளை செய்ய ஒப்புக்கொள்வோம். துணி மிகச் சிறப்பாயிருக்கும். சகல உபயோகத்திற்கும் உகந்தது. வெள்ளை அமெரிக்கன் ஸில்க் பாரசூட் முழுத் துண்டுகள் 12 (காலீஸ் ஜாயிண்ட் இன்றி ஸில்க் ஸேல் உடன்) முழு பாரசூட்டும் ரூ. 12 வீதம் கிடைக்கும். பாக்கிங் இலவசம். தபாற் செலவு ரூ. 1-11-0 தனி. மூன்று முழு பாரசூட்டுகளின் (அதாவது) 36 (காலீஸ்) பீஸ்களின் குறைக்கப்பட்ட விலை ரூ. 33, தபாற் செலவு ரூ. 3-15-0. முன்பெல்லாம் இதன் விலை ரொம்பவும் அதிகம். ஆனால் தற்போது ஸ்டாக்குகளைத் தீர்ப்பதற்காக மொத்த விலைப்படியே கொடுக்கத் தீர்மானித்துள்ளோம். தபாற் செலவு உள்பட மூன்று பாரசூட்டுகள் உங்கள் வீட்டில் வந்து சேர ரூ. 36-15-0 மட்டுமே செலவழிக்கிறீர்கள். குறைந்த அளவே ஸ்டாக் இருப்பதால் இன்றே ஆர்டர் செய்து பயனடையுங்கள். தாமதித்தால் ஸ்டாக் தீர்ந்து ஏமாற்றமடைய நேரிடும். அமெரிக்காவிலிருந்து இனி சப்ளை எதிர்பார்க்கப்படவில்லை.

AMERICAN TRADING COMPANY, Regd.,
Famous Dealers of Silk Cloth, (S. M.) JULLUNDUR CITY.

5000000

புத்தகங்கள்

இதுவரை வேறு மொழிகளில்
விற்றிருக்கின்றன

முல்க்ராஜ் ஆனந்த்

எழுதிய

கூலி

(நாவல்)

தமிழாக்கியவர் :

ஆர். ராமநாதன்

✲

அழகிய அச்சு
480 பக்கங்கள்

ரூ. 5

தபால் செலவு தனி

புதுமைப் பதிப்பகம் லிமிட்டெட்

காரைக்குடி

ஆஸ்த்மாவை

குணப்படுத்துவது

ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரை ஈரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஆஸ்த்மா, ச்வாஸாசய
நோய்களுக்கு டாக்டர்கள்
விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹாரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

எனக்கு அதுவேண்டாம் என்று சொன்னதில்லை'' என்று சொன்ஞர்.

பிறகு மேலும் கதையைத் தொடர்ந்தார்:

இல்லை. உள்ளத்தில் எவனுமே கிழடுதட்டுவதில்லை. உடம்புதான் நாளடைவில் கிழடுதட்டிப் போகிறது. சிலபேருக்கு சீக்கிரமாய்த் தட்டுகிறது; சிலருக்கு மெதுவாக நடக்கிறது. நோய், களைப்பு, ஓய்ச்சலின்மை முதலியன சீக்கிரம் கிழடாக்கும். நூற்றுக்கு தொண்ணூற்றென்பது இப்படித்தான்—ஒன்றிரண்டுதான் மெதுவாகக் கிழடுதட்டும்.

சரி. இப்போது இந்தக்கதையை விட்டுவிட்டு உனக்கு ஒரு தர்க்க பேதமற்ற சரீர தத்துவத்தை விளக்கியாக வேண்டும். நான் ஒரு டாக்டர் என்ற முறையில், நீ நான் சொல்வதை நிச்சயமாய் நம்பலாம். ஸ்டெல்லா இறந்த—அதாவது அநேகமாக இறந்து போன- நிலைமை யடைந்த நிமிஷம் முதற்கொண்டு, பிஞ்சிங் ஆச்சரியப் படத்தக்க விதமாக, விறுவிறு என்று பயங்கரமாகக் கிழடுதட்ட ஆரம்பித்தார். ஸ்டெல்லா புத்துயிர் பெற்று எழுந்து ஒரு மாத காலத்துக்குள்ளாக அவர் ஐம்பது வயது மனிதனிலிருந்து அறுபத்தைந்து வயது மனிதன்—அதற்கும் மேலான வயதுசென்ற கிழவனுக மாறிவிட்டார். அவருடைய தலை மயிர் ஒரே ராத்திரியில் மாயமந்திரம்போல நரை தட்டவில்லை; ஆனுல், பதினைந்து வருஷ சரீரமாறுதல்கள் அவர் உடம்பில் ஒரே மாதத்தில் நடந்தேறின. அவருடைய சருமத்தின் சுரப்பு தொங்கு சதைகள், துருத்தி நிற்கும் மூட்டெலும்புகள், புடைத்து நிற்கும் ரத்த நாம்புகள் எல்லாம் இதைத்தான் அம்பலப்படுத்தின. அவரைப் பரிசோதித்துப் பார்த்ததில் அவரது உள் அவயவங்களும் அதே மாறுதலை அடைந்துவிட்டன. இந்த மாதிரி அசுரத்தனமான மாறுதலுக்குரிய காரணத்தை நான் தெரிந்துகொண்டதாகச் சொல்லவில்லை. ஆனுல், அதுதான் உண்மை. அவர் ஸ்டெல்லாவுக்கு பதினைந்து வயதுதான் மூத்தவர்; இப்போதோ சரீரத்தை வைத்துப் பார்த்தால், இருவருக்கும் முப்பது வயது வித்தியாசம் இருப்பது நன்ருகத் தெரிந்துவிடும்.

பிஞ்சிங்கும், ஸ்டெல்லாவும் இந்த மாறுதலைத்தான் செய்தனர். எனினும் அவர்களுடைய அத்தியந்த வாழ்க்கையை இந்த மாறுதல் எந்த விதத்திலும் குலைக்கவில்லை. ஸ்டெல்லாவின் அன்பும் ஆறுதலும் அளவு கடந்திருந்தன. ஒரு மாதத்துக்குப் பின் பிஞ்சிங்கின் ஒரே மாறுதல் சமனப்பட்டுச் சென்றது. ஆனுல் காலம் செல்லச் செல்ல வயோதிகப் பருவத்தினுல் ஏற்படும் ஏலாத் தன்மைகளும், பலவீனமும் பிஞ்சிங்கிடம் குடிகொள்ளவே, நான் அடிக்கடி அவரைப் பார்த்து வந்தேன். சென்ற சில வருஷங்களாக அவருடைய இருதயமும் பலவீனப் பட்டுப் போய் விட்டது. ஆகவே அவர்கள் ஹீதர் பீல்டை விட்டு, வெளிச் சென்று ஊர் சுற்றுவதை நிறுத்தச் சொன்னேன்.

சென்ற திங்கட்கிழமை—இல்லை செவ்வாய்க் கிழமை—நான் அவர்

கள் வீட்டுக்கு விருந்தாடச் சென்றிருந்தேன். அப்போது பிஞ்சிங் இருந்த நிலை எனக்கு திருப்திகரமாயில்லை. முகம் சிவந்து அமைதியற்று இருந்தார்; மூச்சும் ஊசலாடி வந்தது. நான் அவரைப் படுக்கைக்குப் போகச் சொன்னேன். நான் திரும்பும் போது, காலைக்குள் தெளிவு எதுவும் தோன்றா விட்டால் எனக்கு போன் பண்ணுமாறு, ஸ்டெல்லாவிடம் சொல்லி விட்டு வந்தேன்.

ஸ்டெல்லா ஏழு மணிக்கு போன் பண்ணினாள். நான் சில நிமிஷ நேரத்தில் அவர்கள் வீட்டை அடைந்தேன். வெளிறிப் போன முகத்தோடு ஸ்டெல்லா வாசலருகில் நின்றாள். "அவர் நிலைமை மிகவும் மோசமா யிருக்கிறது. எனக்கு பயமாயிருக்கிறது'' என்றாள் அவள்.

என்னோடு அவள் அறைக்குள் வந்தாள். நான் அவரைப் பரிசோதனை பண்ண முனையும்போது, அவள் பின்னால் நின்று கொண்டிருந்தாள். பார்த்த பார்வையிலேயே, நிலைமை அத்து மீறி விட்டது என்று உணர முடிந்தது. நான் அவருடைய படுக்கையை நெருங்கு முன்பே அவரது கண்ணொளி மங்கி விட்டது; தலை பக்கவாட்டில் சரிந்தது.

"எனது அன்பான...'' என்று ஆரம்பித்து அவளிடம் காரியம் மீறிவிட்டது என்று சொல்வதற்கு முன்பாகவே, எனக்குப் பின்னால் ஒரு பெரும் பெருமூச்சும், துணியின் சரசரப்பும், விழும் சப்தமும் கேட்டது. திரும்பினேன். அவளும் பக்கவாட்டில் தரையில் சாய்ந்து, இறந்து கிடந்தாள்.

"முன் சொன்னேனே—அந்த இரு மரணமும் ஏககாலத்தில் நடந்தன'' என்றார் தாத்தா. "நான் அவருக்குத்தான் மரணபத்திரம் கொடுக்க முடியும்; அவளுக்கு முடியாது. நான் பிரேத பரிசோதனையே நடத்தவில்லை. எனக்கு அது புரியவில்லை. அந்தத் திடீர் மரணத்துக்குக் காரணமே இல்லை. ஒரு கணம் அவள் வாழ்ந்து கொண்டிருந்தாள்; மறு கணம் வாழ்வை முடித்துக் கொண்டாள். அதிசயத்திலும் அதிசயந்தான்.''

என் தாத்தா அதிகப்படியான பிராந்தி மயக்கத்தால் தூங்கி விழுந்தார்; அவரை மேற்கொண்டும் கேள்வி கேட்க விரும்பவில்லை.

மீண்டும் அவர் கண்களைத் திறந்தார்.

"இன்று இருவரும் இறந்துவிட்டார்கள். எங்களுக்கு வைத்தியத் தொழிலுக்காகப் பணம் தரப்பட்ட போதிலும், வாழ்க்கையை உள்ளபடி உணர முடியவில்லை. அந்தச் சூட்சுமம் என்ன? ஏதாவது சத்தா, அல்லது சக்தியா? ஒவ்வொரு தாயும் தன் குழந்தைக்கு உயிர் கொடுக்கிறாள்; எவனாவது முட்டாள் அதை அடித்துக் கொன்று விடுகிறான். காதலைப் பற்றி நமக்கு அதிகம் தெரியாது. உண்மையான காதல் எதெவற்றைச் சாதிக்கக் கூடும் என்பதும் நமக்குத் தெரியாது. அவர் அவள் கரங்களைத் தான் தொட்டார். அவர் தம் உயிரையே அவளுக்குக் கடன் கொடுத்தாரா? அவருடைய உயிர் பிரியும் போது, அந்தக் கடன் அடைபடாமல் போயிற்றா?'' என்று கேட்டு கதையை முடித்தார் தாத்தா.

மனம் சூக்குமமானது; ஜடம் ஸ்தூலப் பொருள். இந்த இரண்டுக்கு முள்ள தொடர்பை, தொடர்பின்மையை விளக்குவதே தத்துவ சாஸ்திரம். தத்துவ மாறுபாடுகளும் இதில்தான் உண்டாகின்றன. கிறிஸ்தவமும், நீயோ பிளேட்டோனிஸமும் இதை எப்படி வியாக்கியானம் செய்தன?

மனமும் ஜடமும்

○

வி. சக்கரை செட்டியார்

கடவுளுடைய பரமஞானம் புத்தியின் மூலமாக வருவதில்லை. புத்திக்கு மூலமாயிருக்கிற மனிதனுடைய மேலான ஆத்மாவில் அது வெளிப்படுத்தப்பட் டிருக்கிறது. இக்காலத்திலும் புத்தியின் வேலை தத்துவக் கொள்கையின்றிலே குறைந்திருக்கிறது. புத்தியைக் கடந்த ஒரு சக்தி எல்லாவற்றிலு மிருக்கிறது. அஃதே எல்லா உண்மையான ஞானத்தின் அடிப்படையாகவும் ஊற்றுகவு மிருக்கிறது. பெர்க்ஸன் (Bergson) என்னும் பிரெஞ்சு சாஸ்திரி தம்முடைய பிரசித்திபெற்ற நூல்களில் இதை விளக்கியிருக்கின்றார். புத்தி யென்பது விவகாரிக விஷயங்களிலேதான் பயன்படக் கூடியது. அது மேலான தத்துவ சமய ஞானத்திற்குப் பயன்படாது. இம்மாதிரியாகவே பெரிய இரகசிய தெய்வ ஞானிகளை கடவுள் அனுபவத்தில் அறிந்துள்ளார்கள். அறிவின் செயலாக, தர்க்கவாயிலாக, கடவுளைத் தங்கள் அனுபவத்தில், உள்ள மனத்தில் அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை. மனிதன் தன்னைத்தான் மறந்து பரவசமா யிருக்கையில் தெய்வம் வருமே ஒழிய ஜாக்கிர அவஸ்தையில் வருவது கிடையாது. இக்கொள்கையிலே கிறிஸ்துவ சித்தாந்தத்திற்கும் நியோ—பிளேட்டானிஸத்திற்கும் வித்தியாசமுண்டு. சரித்திர வாயிலாக ஈஸ்வரன் தம்மைக் கிறிஸ்துவின் வாழ்க்கையிலும் வாக்கிலும் வெளிப்படுத்தி யுள்ளான். பின்னது மனிதன் எல்லாச் சம்பத்தையும் விட்டு தன்னிலே மூழ்கும் பொழுது உலக தாரகத்தை, ஆதாரத்தை, காண்கிருன். இதுவே இன்றைக்கும் பெரிய தத்துவப் பிரமாண பேதமாகக் காணப்படுகிறது.

இன்னொரு வித்தியாசம் இக்காலத்தில் பிறந்தது. அதாவது ஆத்மா அல்லது மனத்திற்கும் உடலுக்கும் உள்ள வித்தியாசம். முற்காலத்தில் பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் இந்த வித்தியாசத்தை அவ்வளவாக வற்புறுத்தினரல்லர். கடவுள் சத் அறிவு.

அதில் ஜடமில்லை. ஆனால் நம்முடைய அறிவும் மனமும் ஜடப்பொருளினால் மூடப்பட்டிருக்கின்றன. பின்னர் நியோ—பிளேட்டோனிஸர்கள் ஆத்மா இந்த ஜட உடம்பில் சிறைக்கூடத்தில் அடைபட்டிருக்கிறதுபோல சிறைவாசஞ் செய்கிறது. இந்த ஆத்மாவை இச்கூட்டிலிருந்து விடுவிப்பதே அதன் விமோசனம் என்றார்கள். இந்தக் கொள்கை அதிகமாகத் தத்துவத்திலே புகுந்தது. மனமொன்று; ஜடமொன்று. இந்த இரு பதார்த்தங்களின் கூட்டுறவு யாதென்று இன்னும் மேனாட்டுப் பண்டிதர்கள் காணவில்லை. இவ்விரண்டும் முற்றிலும் வெவ்வேறென்றால் இவ்விரண்டும் எவ்வண்ணம் கூடுகின்றன? ஒரு மனிதனுடைய உயிர்—உடல் சம்பந்தத்தில் இது தற்கால (Modern) தத்துவ சரித்திரத்தில் அடிப்படையான பிரச்னையாக இருக்கிறது. மனத்திற்கும் உடலுக்கும் நடுவிலே உள்ள கடலைக்கடக்க முடியாது தவிக்கிறார்கள். மனம் எப்படி ஜடத்தை அறிந்து கொள்ளலாகும்? இவ்விரண்டும் தனிப்பட்ட பொருள்களென்றால் இவ்விரண்டு பொருள்களுக்கும் தொடர்பு எவ்விதம் உண்டாகிறது. என்ற கேள்வியே இக்காலத்திலும் பரவியிருக்கிறது.

அக்காலத்திய பண்டிதர்கள் மனம், ஜடம் (Mind and Matter) என்ற துவைதத்தை ஆரம்பித்து அதை முன்னேற்றி விட்டனர். தத்துவ ஆராய்ச்சியிலே, இது ஒரு படியாக கிறிஸ்தவ மதச் சம்பிரதாயத்திலும் புகுதலாயிற்று. 1. உள் இந்திரியங்களில் மேலானது தன்னறிவு. (Self-Consciousness) ஜடமல்ல. அது உடலுக்கும் உடலிலுள்ள அவயவங்களுக்கும் வேறானது. இது அழிந்து படாதது. இது கடவுளுடைய சொரூபத்தையுடையது. எனவே கடவுளும் ஜடமல்லாத பொருள் (Immaterial Being) 2. பிளேட்டோவைச் சார்ந்தவர்கள் இருவுலகங்களுண்டென்றனர். ஒன்று உண்மைகளிருக்கும் ஜடமல்லாத வுலகம்; மற்றொன்று இவ்வுலகம். இவ்வுலகத்தில் உண்மைத் தத்துவங்கள் கீழான தத்துவங்களுடனே போராடிக் கொண்டிருக்கின்றன. அவ்வண்ணமாகவே மனிதனுக்குள் மேலான அறிவு சாரதிபோல இரதத்திலிருந்து குதிரைகளாகிய கீழ் தத்துவங்களை ஓட்டுகிறது. இக்கீழான தத்துவங்கள் ஜடவகையானவை அவைகள் தான் எல்லாத் தீங்குக்கும் காரண பூதங்களாயிருக்கின்றன. ஜடமே தீமைக்குக் காரணமென்ற கொள்கை வெகுகாலமாக வழங்கி வருகிறது. இந்த உடம்பே எல்லா பாவத்திற்கும் ஆதாரமாயிருக்கிறது. இந்தக் கோட்பாடும் கிறிஸ்தவ சமயத்தில் புகுதலாயிற்று. ஆயினும் அதை மேற்கொள்ளவில்லை.

அணுகுண்டு!

அணுசக்தியை உபயோகிக்கும் விதத்தைப் பார்த்தால் நரகத்தின் பாதை அருமையான ஆராய்ச்சிகளால் பாவப்படுகிறது என்றுதான் சொல்லவேண்டும்.

—எஸ். ஈ. போஸ்ட்

புத்தக உலகம்

கம்ப ராமாயணம் காமரசந்தானா?
[ஆசிரியர்: தெரியவில்லை. கிடைக்குமிடம்: தமிழ் இந்தியா ஆபீஸ், 36. வெங்கடாசல முதலித் தெரு, பார்க் டவுண் சென்னை. விலை ரூ. 1-8-0]

இந்நூல் அண்ணாத்துரையின் கம்பரசம் என்ற நூலுக்கு மறுப்பு என்று கூறப்படுகிறது. இதை எழுதியவர் தம்மை ஏன் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை என்று தெரியவில்லை. புத்தகத்தைப் பார்க்கும்போது ஸ்ரீமான் அண்ணாத்துரை கம்பனைத் தாக்கும் போது எந்த உத்வேகத்தோடு தாக்குகிறாரோ, அதே உத்வேகத்தோடு தாக்குகிறார், நூலாசிரியர். இதனால் இந்நூலில் சிற்சில இடங்களில் அண்ணாத்துரையைப் போலவே வாத முறைதவறி, வசை புராணப் பாதையில் பொருள் திரும்புகிறது. மற்றப்படி நூலாசிரியர் குறிப்பிடும் சில விளக்கங்களும், அர்த்தங்களும் எடுத்துக் கொண்ட கருமத்துக்குப் பலனளிக்கின்றன.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

கம்ப ராமாயணத்தில் காமரசமே இருப்பதாகச் சொல்லட்டும். ஆனால், அந்தக் காமரசத்தை மட்டும் தனியே பிழிந்தெடுத்து, ரசாபாசமான முறையில் வெளிச்சமிட்டுக் காட்டி அதையே மூலதனமாகக் கொண்டு பிழைப்பு நடத்துவது அறிவீனம். இந்த அறிவீனத்துக்குப்பதிலளிக்கும் முறையில், ஒரு மறுப்பு நூல் எழுதுவதும் வேண்டாத வேலை. காமரசமும் மற்ற ரசங்களைப்போல், இலக்கியத்தில் இடம் பெறுவது சகஜம். 'மதுகை மாந்தர்' என்ற தொடருக்கு அயோத்தி மாந்தர்கள் 'கள்ளைக் கையில் தாங்கியவர்கள்' என்று விபரீத அர்த்தம் கொள்ளும் ஸ்ரீமான் அண்ணாத்துரை, "......யவனர் நன்கலம் தந்த தண் கமழ் தேறல் பொன் செய் புனைகலத் தேந்தி, நாளும் ஒண்தொடி மகளிர் மடுப்ப, மகிழ் சிறந்து, ஆங்கினி தொழுகு மதி ஓங்குவாள் மாற!..." (புறநானூறு 56)—அதாவது, யவனர்கள் நல்ல சாடியில் கொண்டு வந்த குளிர்ந்த நறுமணம் படைத்த கள்ளை, தங்கப் பாத்திரத்திலேந்தி வளையலணிந்த மகளிர் ஊட்ட உண்டு மகிழ்ச்சி பெறும், 'வெற்றியாளனாக' விளங்கும் நமது புறநானூற்றுமன்னர் பிரானையும் அறிந்திருக்கக்கூடும். இலக்கியம் அந்தந்தக் காலத்துப் பழக்க முறைகளைப் பிரதிபலிக்கத்தான் செய்யும்; அதில் காமமும் பங்குபெறத்தான் செய்யும். மனித சமுதாயத்துக்கே அடிப்படையான இந்த உணர்ச்சியை இலக்கியத்தில் மட்டும் ஒதுக்கிவிட முடியாது. காமரசத்தை ஒழித்துவிட வேண்டும் என்றால், தமிழிலுள்ள பல பண்டை இலக்கியங்களையே மறந்துவிட வேண்டும். தமிழுக்குப் பெருமை தரும் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான ஜீவகசிந்தாமணியிலும், திருக்குறளிலும்கூட, காமரசம்பொங்கி வழியத்தான் செய்கிறது. ஆகவே அரசியல் அரங்கத்தில் செல்வாக்குப் பெறுவதற்காக, ஸ்ரீ அண்ணாத்துரை கம்பனைத் தாக்குவதை ஒருகருவியாகப் பயன்படுத்தும் அரசியல் தந்திரத்தை அம்பலப்படுத்தி, இலக்கியத்தை ரசிக்கும் முறையைக் கற்றுத்தர வழி கோலவேண்டுமே ஒழிய, கம்பரசம் என்ற நூலுக்கு மறுப்பு எழுதுவதன் மூலம் மக்களை வசப்படுத்திவிட முடியாது. மறுப்புக்கு மறுப்பும், அதற்கொரு குறிப்பும் எழுதுவது முடிவற்ற வாதமாகவே செல்லும்.

பித்தர் சொன்னவும்
பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும்
பன்னப் பெறுபவோ?

என்று பாடிவைத்த கம்ப நாடனின் சொல்லைத்தான் கம்பரசம் என்ற நூலுக்கும் பதிலாகச் சொல்லலாம். வேறு என்ன இருக்கிறது?

இல்லறச் சுடர்: [ஆசிரியர்: யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். கிடைக்குமிடம்: மதரூஸ் ரிப்பன் பிரசுரம், புதுக்கோட்டை. விலை தெரியவில்லை.]

இல்லறத்தைப்பற்றி திருவள்ளுவர் தமது குறளில் அருமையாகப் பல கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார். அதனைப் பின்பற்றி நூலாசிரியரும் சில குறளடிகள் மூலம் இல்லறத்தை விளக்கப் பாடுபட்டிருக்கிறார். இவர் வள்ளுவரை விஞ்சுவதாகப் பாடியிருந்தால் சரிதான். ஆனால், வள்ளுவரிடம் கெஞ்சுவதாகக்கூட இந்நூல் இல்லை. வள்ளுவரின் கூற்றுக்குப்பின் கேலிக் கூத்துப்போல, இந்நூலை எழுதியிருப்பதே அசம்பாவிதம். இந்நூலிலுள்ள குறளடிகளும் சர்வ சாதாரணமானவை; இவற்றிற்கு ஆசிரியர் விளக்கமும் வேறு தந்திருக்கிறார். விளக்கமும் நீரோட்டமான வசனத்தில் இல்லாமல் அகவற்பாவைவெட்டி முறித்துப் போட்டமாதிரி துள்ளு நடை பயில்கிறது.

குறளடிக்கு ஒரு உதாரணம்:
புண்ணுற்று மோகப் புணர்வுற்று
நொந்தழியும்
கண்ணற்ற காமக் கடா.
விளக்கத்துக்கு ஒரு உதாரணம்:
'நெறியற்ற காம வெறியால் ஆண்மை அழியும், ஆற்றல் மெலியும், வீரியம் சிதையும், வெட்டை மீறும், வாழ்வு பாழாம்' இத்தியாதி...

சர்வ சாதாரணமான நூல்.

அந்தமான் கைதி: [ஆசிரியர்: கு. சா. கிருஷ்ணமூர்த்தி, கிடைக்குமிடம்: தமிழகம், புதுக்கோட்டை. விலை ரூ. 2-0-0]

தமிழில் நாடக இலக்கியம் குறைவு. நாடக இலக்கியம் வேண்டும் என்ற ஆசைபற்றி எழுந்த முயற்சியாகவே இந்நூலைக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்நாடகம் மேடையிலும் நடிக்கப் பெற்றிருக்கிறது. மேடைக் கலையின் பக்க மேளத்தோடு இந்நாடகம் ஒரு வேளை சோபித்திருக்கலாம்; ஆனால் படிக்கும்போது நமது உணர்ச்சியைத் திருப்திசெய்யவில்லை. நாடகம் என்பது யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதுதான். ஆனால், யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும்போது, நாடகமும் யதார்த்த நிலையைவிட்டுப் பெயர்ந்து நாடகந்தானே என்ற உணர்ச்சியை உண்டாக்கக் கூடாது. இந்நாடகம் அந்த அம்சத்தில் மிகவும் குறைபட்டு, பொய்க்குதிரை யாட்டம் போடுகிறது. ஹாஸ்யங்களும் வலிந்து ஈடுகட்டும் பழைய பத்தாம் பசலிச் சரக்குகள். கதையின் கருத்தும் பலர் கையாண்டு கைவிட்டுப் போன பொருந்தாமண விஷயம். தமிழில் நாடகங்கள் வர வேண்டியதுதான்; நல்ல நாடகங்களையே நாம் எதிர் பார்க்கிறோம்.

அகத்தியர்: [ஆசிரியர்: ந. சி. கந்தையா பிள்ளை, விலை அணா எட்டு]

44 பக்கங்கள் கொண்ட இச்சிறு நூலில், நூலாசிரியர் அகத்தியர் வரலாற்றை ஓரளவு ஆராய முயன்றிருக்கிறார். ஓ. வி. கங்கூலி போன்ற அறிஞர்களின் கருத்துரைகளையும் எடுத்துக்காட்டுகிறார். பின்னர், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் (கம்போடியா, சையாம் முதலிய இடங்களிலுள்ள) சிலாரூபங்கள், இந்தோசீனாவில் உள்ள பட்டயம் முதலிய சான்றுகளையும் தந்து, அகத்தியர் எங்கெல்லாம் பரவியிருக்கிறார் என்பதையும் விளக்குகிறார். முடிவாக, அகத்தியரைப் பற்றிய கதைகள் யாவும் பொய்யானவை என்றும் அகத்தியர் சமஸ்கிருதம் அறியாத தமிழரே என்

றும் தமது கருத்தைக் கூறிப் புத்தகத்தை முடித்திருக்கிறார். எனினும் அவர் தாம் எடுத்துக்கொண்ட கருமத்தை பரிபூரணமாக முடிக்கவில்லை என்றே கொள்ளவேண்டும்; அந்தக் கருமத்தை இந்தச் சின்னஞ் சிறு நூலில் எதிர் பார்ப்பது முடியாது. அதற்குப் பெரியதாக விரிவான ஆராய்ச்சிதான் நடத்தவேண்டும். அப்போதுதான் பரிபூரணத் தெளிவு ஏற்பட முடியும். எனினும், இந்நூல் அகத்தியரைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புபவருக்கு ஓரளவு பயன் படும்; மேற்கோள்கள் காட்டி விஷயத்தை விளக்க முயன்றிருப்பது நன்று.

மறைந்த நாகரிகங்கள்: [ஆசிரியர்: ந. சி. கந்தையா பிள்ளை. விலை ரூ. 1-4-0.]

124 பக்கங்கள் கொண்ட இந்நூலில் பண்டை மனித சமுதாய நாகரிகங்களான எல்லாம், சுமேரியா, எகிப்து, பாபிலோன், சிந்துவெளி நாகரிகங்களை ஆசிரியர் தெளிவான முறையில் எளிய நடையில் எழுதிச் சென்றிருக்கிறார். அந்தந்த நாகரிக காலத்தில் மக்களது வாழ்க்கை நிலை எவ்வாறு இருந்தது, அவர்கள் ஆடையணிகள், ஆபரணங்கள் முதலியன எவை, அவர்களது இலக்கிய சிருஷ்டி எவ்வாறிருந்தது என்பன போன்ற விவரங்களைச் சுருங்கிய முறையில் எழுதிச் செல்லுகிறார். இறுதியில் சிந்து வெளி நாகரிகம் திராவிட நாகரிகமே என்று ஒரு சில ஆதாரங்களுடன் கூறுகிறார். நூலில் ஆங்காங்கே நிறையச் சித்திரங்களும் கொடுக்கப்பட் டிருக்கின்றன. இந்நூல் பண்டை நாகரிகங்களைப் பற்றி ஓரளவு தெரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் பயன்படக் கூடும்.

மேற்கண்ட ஸ்ரீ ந. சி. கந்தையா பிள்ளை நூல்கள் அனைத்தும் கிடைக்குமிடம்: **ஆசிரியர் நூற் பதிப்புக் கழகம், பவளக்காரத் தெரு, சென்னை-1.**

ஆதி மனிதன்: [ஆசிரியர்: ந. சி. கந்தையா பிள்ளை, விலை அணு எட்டு]

சரித்திர காலத்துக்கு முற்பட்ட மனிதனிலிருந்து தற்கால மனிதன் வரை ஆசிரியர் மனித குலத்தின் வளர்ச்சியை எளிய நடையில் சுருக்கமாக எழுதியிருக்கிறார். பண்டை மனித குலத்தின் மிச்சம் மிஞ்சாடிகளான எலும்பு மண்டையோடு முதலிய (Fossils) சாதனங்கள் மூலம்தான் மனிதகுலத்தின் பரிணும சரித்திரத்தை, ஆராய்ச்சியாளர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். ஆதி மனிதன் எப்படி வாழ்ந்தான், அவனுடைய உயிர் வாழும் போராட்டம் - அதாவது வாழ்க்கை எப்படி அமைந்திருந்தது, ஆண்களும் பெண்களும் எம்மாதிரியாகப் பழகினார்கள், அவன் எப்படி எழுதினான், அபிப்பிராயங்களைப் பரிமாறிக்கொண்டான் என்பனபற்றி எல்லாம் 44 பக்கங்களில் எழுதி யிருக்கிறார். இந்நூல் சிறுவர்களுக்குப் பாடப்புத்தகமாக வைப்பதற்கு ஏற்றது. ஆங்காங்கே படங்கள் சேர்க்கப்பட் டிருப்பதும் நன்று. எனினும், அந்தந்தக் காலத்து மனிதன் பேசுவதைப்போல் எழுதி யிருப்பது சரியல்ல. அதைவிட சரித்திரம் எழுதுவதுபோலவே எழுதியிருந்தால் நன்று யிருந்திருக்கும்.

திருக்குறள் விளக்க உரை: [ஆசிரியர்: ந. சி. கந்தையா பிள்ளை.]

மொத்தம் ஐந்து பாகங்கள்:

முதற் பாகம்	விலை அணு	2	6
இரண்டாம் பாகம்	,,	3	0
மூன்றும் பாகம்	,,	3	6
நான்காம் பாகம்	,,	4	0
ஐந்தாம் பாகம்	,,	5	0

இந்த ஐந்து பாகங்களிலும் முறையே 50, 60, 70, 80, 90, 100 என்று ஒவ்வொரு பகுதியிலும் குறளடிகளுக்குச் சுருங்கிய முறையில் கொண்டுகூட்டு, அரும்பதவுரை,

விளக்க உரை முதலியவற்றுடன் ஆசிரியர் எழுதியிருக்கிறார். ஒவ்வொரு தொகுதியும் ஒவ்வொரு வகுப்புக்காக இயற்றப்பட்டதென்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அருஞ்சொல் அகர வரிசை ஒன்றும் நூலின் இறுதியில் தரப்பட்டிருக்கிறது. பள்ளி மாணவர் களுக்குப் பயன்படக்கூடும். அச்சும் அமைப்பும் நன்று. விஷயத் தெளி வும் நன்றே.

திருவள்ளுவர் : [ஆசிரியர்: ந. சி. கந்தையா பிள்ளை, விலை அணா 0-8-0]

இந்நூல் திருவள்ளுவரின் வரலாற்றை அகச்சான்று புறச்சான்றுக ளுடன் ஆராயும் முயற்சியாகப் படுகிறது. திருவள்ளுவரைப் பற்றிய கர்ணபரம்பரைச் செய்திகளை ஆசிரியர் குறிப்பிட்டிருந்த போதிலும், அதிலுள்ள இயற்கைக்கு மாறான தன்மைகளை ஒப்புக்கொள்ளாமல் சரித்திராசிரியக் கண்ணோட்டத்தோடு பார்த்திருக்கிறார். ஆசிரியர் திருவள்ளுவர் காலத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது கி. பி. முதலாம் நூற்றாண்டு என்று குறிப்பிடுகிறார். ஆனால், இதைப்பற்றி அபிப்பிராயபேதங்கள் அநேகம் இருக்கின்றன. சிலர் ஆறாம் நூற்றாண்டு எனக் கூறுகின்றாரென ஆசிரியரே குறிப்பிட்ட போதிலும், அதற்குத் திருப்தி தரும் முறையில், ஆசிரியரின் பதில் அழுத்தமுடையதாயில்லை. 48 பக்கங்களில் திருவள்ளுவரைப் பற்றிய சகல சான்றுகளையும் தருவது கடினமெனினும் ஆசிரியர் முயன்றிருக்கிறார். அச்சும் அமைப்பும் நன்று.

—தொ. மு. சி.

தமிழச்சி : [ஆசிரியர்: வாணிதாசன், விலை அணா எட்டு. கிடைக்குமிடம்: செந்தமிழ்ப் பதிப்பகம், கீழ ராஜவீதி புதுக்கோட்டை.]

பெரிய இயக்கங்களும், போராட்டங்களும் சாதிக்கத் திணறும் சமூகப் பொருளாதாரச் சீர்திருத்தங்களை ஒரு தமிழ்ப் பெண் (தமிழச்சி) நம்ப முடியாத வகையில் செய்து முடிக்கிறாள். இதைப் பாட்டாகப் பாடியிருக்கிறார் ஆசிரியர். "கொட்டாவி விட்டதெலாம் கூறு தமிழ்ப் பாட்டாச்சே!" என்னும் வேளூர்க் கவிராயரின் இலக்கணத்துக்கு இந்நூல் இலக்கியமாக விளங்குகிறது.

கண்ணீர்க் கோட்டை : [எழுதியவர்: தில்லைவில்லாளன். இதுவும் மேற்கண்ட பதிப்பகத்தில் கிடைக்கும். விலை: அணா ஆறு]

விதவைகளின் கண்ணீராலான ஒரு கோட்டையில் பெண்கள் அரசு செலுத்துகின்றனர். அல்லி அரசாங்கம்தான் நடக்கிறது. அங்கே ஆண்களைப் பெண்கள் அல்லல் படுத்துகிறார்கள். ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்திக் கொடுமை செய்ததால் ஆண்களைப் பழிவாங்கும் நோக்கத்தோடு பெண்கள் ஆண்களைக் கேவலமாக நடத்துகின்றனர். இது தான் புத்தகத்தின் கதாசாரம்.

கதைப் போக்கு கீழ்த்தரமானது. முடிவில் இம்மாதிரி ஒரு விதவை கனவு காண்கிறாள் என்று முடித்து நிலைமையைச் சமாளித்துக் கொள்ள முயலுகிறார் ஆசிரியர். தாறுமாறாக எழுதிவிட்டு கனவு என்று முடித்து விடுவதுதான் தற்கால கதை எழுதும் பாணிபோலும்!

இந்தப் புத்தகத்தின் நோக்கம் சீர்திருத்தமா, கிண்டலா, நகைச்சுவையா என்று இறுதிவரைப் புதிராகவே இருக்கிறது. புரியவில்லை.

பதிப்புரையில் 'சிறந்த கற்பனை' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் இப்புத்தகம் ஒரு சிதைந்த கற்பனையாகத்தான் இருக்கிறது.

—க. ப.

Edited, Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.
Associate Editor: G. Alagiriswami.

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

○

நாங்கள் சப்ளை செய்வது :

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான் வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

○

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

சக்தி வெளியீடுகள்

செல்வம் — க. சந்தானம்

பொருளாதாரத்தைப் பற்றிய நூல். பாமரரும் புரிந்து கொள்ளக்கூடியவாறு எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கிறது. தமிழ்வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்ற புத்தகம். 1 8 0

லெனின் பிறந்தார் — ஆர். ராமநாதன்

ருஷ்யாவின் தந்தை லெனின் வரலாறுதான் இந்த நூல். இந்த நூலைப் படிப்பதால் ருஷ்யப் புரட்சி சரித்திரத்தையும் கூடவே படிப்பது போல இருக்கும். 3 8 0

உலோகங்களும் நாமும் — மு. அருணசலம்

உலோகமும் நாமும், உலோக உலகம், உலோகத்தாது, உலோகங்கள் கிடைக்கும் விதம், இரும்பு, மற்ற முக்கிய உலோகங்கள், உலோகத் தொழில் பற்றிய அரிய விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. ரூ. 5 0 0

உணவுப் பஞ்சம் — மு. அருணசலம்

உணவுப் பஞ்சம் ஏன் ஏற்பட்டது? உணவுப் பஞ்சத்தைத் தடுப்பது எப்படி? உணவுப் பஞ்சமே இனி வாராதபடி எப்படிச் செய்வது என்பது பற்றிய புத்தகம். ரூ. 1 8 0

ஐந்தாவது சுதந்திரம் — ஸ்ரீமதி லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி

இதில் பதினான்கு கட்டுரைகள் இருக்கின்றன. சமூகத்தில் ஊறிக்கிடக்கும் ஊழல்களைப் பாரபட்சமின்றிக் கண்டிக்கும் கட்டுரைகள், நம்மவரோடு உலகத்தவரை ஒப்பிட்டு நோக்கும் கட்டுரைகள், நாட்டின் முற்போக்கு பற்றிய கட்டுரைகள், தெரியாத விஷயத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும் கட்டுரைகள் இதில் அடக்கம். நமது அருமை தேசபக்தர் காலஞ் சென்ற சத்தியமூர்த்தியின் மகள் தான் இதன் ஆசிரியர் ஸ்ரீமதி லக்ஷ்மி. ரூ. 1 8 0

சக்தி காரியாலயம் - சென்னை 14

சக்தி வெளியீடுகள்

இனி நாம் செய்ய வேண்டுவது யாது? — டால்ஸ்டாய்

உழைப்பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்னும் அரிய சித்தாந்தம். ரூ. 3 0 0

அபேதவாதம் — ராஜாஜி

பொது உடமைத் தத்துவத்தை இந்திய முறையில் ராஜாஜி விளக்கி இருக்கிறார். ரூ. 1 0 0

அறிஞர் மார்க்ஸ் — ஆர். ராமனுதன்

உலகத்தை உய்விக்கத்தோன்றிய மகான் மார்க்ஸின் கொள்கையும் வரலாறும் ரூ. 1 8 0

ஏசுநாதர் போதனை — ஜே. ஸி. குமரப்பா

ஏசுபெருமான் இந்த உலகத்தில் அவதரித்ததின் தத்துவம் யாது? அவருடைய போதனையால் மக்கள் அடையக்கூடிய பயன்களையும் விளக்குகிறது இந்நூல். மகாத்மாவின் அருமையான முன்னுரையும் இருக்கிறது. ரூ. 1 8 0

ரத்தக் களரி — நேதாஜி

இந்திய தேசிய ராணுவத்தினருக்கு அவ்வப்பொழுது பேசிய பிரசங்கங்களின் தொகுப்பு, உக்ரமிக்க பேச்சுக்கள் சக்தி மோஹன் மொழி பெயர்த்தது. ரூ. 1 8 0

சூரிய நமஸ்காரம் — டி. வி. திருவேதி

சூரிய நமஸ்கார முறைகள், மந்திரங்கள், நியமங்கள் இவைகளால் ஏற்படும் நன்மைகள் அடங்கியிருக்கின்றன. ரூ. 1 0 0

பாரதியார் சரித்திரம் — செல்லம்மா பாரதி

மகாகவி பாரதியாரைப் பற்றி அவருடைய மனைவி சொல்லும் வரலாறு. ரூ. 2 0 0

சக்தி காரியாலயம் - சென்னை 14

உங்களுடைய ஆரோக்கியத்திற்கு உதவியாக உள்ள நல்ல பழக்கங்களை விருத்தி செய்யுங்கள். பற்களையும் ஈறையும் நன்கு காப்பாற்ற முயற்சிப்பது நல்ல பழக்கம். இதற்கு ஓர் நல்ல பற்பசை தேடிக்கொள்வது அவசியம். **நீம் டூத் பேஸ்ட்** ஓர் உயர்ந்த பற்பசை. வேம்பின் சத்தும், மற்றும் உயர்ந்த மூலிகைகளும் கொண்டு தயாரிக்கப்பட்டது.



CALCUTTA CHEMICAL
CALCUTTA

○ குழந்தைகள் முன்னேற்றத்திற்காக உலகத்திலேயே பெரு முயற்சி எடுத்துக் கொண்டவர் ஸ்ரீமதி மாண்டிசோரி.

○ இந்த வருடத்தில் சமாதானத்திற்கான நோபல் பரிசை மாண்டிசோரி அம்மையாருக்குத்தான் கொடுக்கும்படி உலகப் பேரறிஞர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

ஸ்ரீமதி மாண்டிசோரி

எழுதிய

குழந்தைமை ரகசியம்

★

விரைவில் வெளியாகும். ஸ்ரீ சி. ந. வைதீஸ்வரன் தமிழாக்கியது. ஸ்ரீ வைதீஸ்வரன் ஸ்ரீமதி மாண்டிசோரி கூட நெடுநாள் பழகி அனுபவம் பெற்றவர்.

★

இது சக்தி வெளியீடு

உங்களுடைய நாவல்

•

பெண் மனம்

•

ஸ்ரீமதி 'லக்ஷ்மி' எழுதிய இந்த அருமையான நாவலைப் பற்றி நாங்களா சொல்ல வேண்டும்? ஆனந்த விகடனில் இந்த நாவல் தொடர்பாக வெளிவந்தபோது தமிழறிந்த வீடுகளிலே இதைப்பற்றித்தான் பேசினார்கள். நீங்களும் படித்துத்தான் பாருங்களேன். சுமார் 300 பக்கங்கள் உள்ள இந்தப் புத்தகத்திற்கு நீங்கள் கொடுக்க வேண்டியது மிகவும் குறைவான விலைதான்.

★

விலை ரூ. இரண்டேகால்

தபால் செலவு தனி

★

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை - **14.**



அழகும் மணமும் பொருந்திய
புஷ்பம் "ரோஜா"
சுவையும் மணமும் பொருந்திய
பாக்குத்தூள் "அசோகா"

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி

'அசோகா பாக்டரி' :: கோயமுத்தூர்

77

சக்தி

விரோதி - ஆனி

விலை 8 அணா

பொருள் அடக்கம்

மலர் 16 : இதழ் 3

ஆசிரியர் குறிப்பு	...	ஆசிரியர்	1
வாழ்வின் அழைப்பு	...	நட் ஹாம்சன்	3
எடிபஸ்	...	சி. சு. வைத்தீஸ்வரன்	8
சித்தப்பா	...	மதுகர் கேர்	13
உற்பத்தி உயர....	...	வி. கே. சி. நடராஜன்	21
இரண்டு வீரர்கள்	...	டிங் லிங்	27
படங்கள்	...	... ...	37—40
மராத்தி இலக்கியம்	...	கா. ஸ்ரீ. ஸ்ரீ.	41
குட்டிக் கதைகள்	...	கு. அழகிரிசாமி	47
லண்டனில் மகாத்மா	...	எஸ். வின்ஸ்டன்	53
உன்னைத் தெரியுமா?	...	'சபா'	57
அமெரிக்கப் பெண்கள்	...	ஸ்ரீமதி ராஜம்மாள் தேவதாஸ்	59
தமிழ்ச் சுடர் மணிகள்	...	ரகுநாதன்	68
டி. டி. டி.	...	கு. ராஜாராம்	70
புத்தக உலகம்	...	தொ. மு. சி., க. ப.	75

அட்டைப் படம்: ஆர். கிருஷ்ணன், கும்பகோணம்

விரோதி சக்தி ஆனி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 JUL 1949
MADR

உங்கள் குழந்தைகளுக்கு
மிகவும் இன்றியமையா
தது, காந்தி சோப்.

காந்தி

டாய்லட் சோப்.

- எவ்வளவு குளுமை!
- எத்தனை புதுமை!
- எவ்வளவு சுத்தம்!

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்.

SHILPI

SOM 37 TAMIL

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

வாட்டரும், கஞ்சியும் இவ்விதம் சுலபமாகத் தயாரிக்கலாம்

பார்லி வாட்டர்: பியூரிடி பார்லி இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு எடுத்துக்கொண்டு சிறிது ஜலம் சேர்த்துக் கலந்து ஒரு பைன்ட் ஜலம் விட்டு ஐந்து நிமிஷம் கொதிக்கவிடவும். பிறகு ருசிக்குத் தக்கபடி உப்பு சர்க்கரை அல்லது எலுமிச்சம்பழ ரஸம் சேர்க்கவும்.

கஞ்சி: இதை வழக்கம்போலத் தயாரிக்கவும். ஆனால் தயாரிக்க இருபது நிமிஷ நேரம் தான் ஆகும். ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி எட்டு ஸ்பூன் சாதாரண பார்லி அரிசிக்குச் சமம் என்பது ஞாபகமிருக்கட்டும்.

பியூரிடி பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

APBX-6 TAM

தென்னிந்தியாவிற்கு ஏஜென்டுகள்:

பாரி அண்ட் கோ., லிமிடெட், தபால் பெட்டி நம்பர் 12 சென்னை

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

O

நாங்கள் சப்ளை செய்வது :

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

O

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மானேஜர்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 16 JUL 1949 MADRAS

கேசரியின்
மூன்று பிரசித்த மருந்துகள்

★

லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

மலடு, சங்காதோஷம், கீல்வாயு, தூக்கமின்மை, அஜீரணம், மலச்சிக்கல், இருமல், காசம், தலைவலி, மூதுகுவலி, முதலியவற்றை குணப்படுத்தும்.

★

அம்ருதா

ரத்த சுத்தி டானிக்

ரத்த சோகை, அஜீரணம், மலச்சிக்கல், மந்தமான மூளை, பலவீனம், படபடப்பு, ஞாபகமின்மை, தெளிவற்ற கண் பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலியவற்றை குணப்படுத்தும்.

★

அர்க்கா

சிறந்த ஜுர நிவாரணி

இன்புளுயன்ஸா, டைபாய்ட், மலேரியா, முதலான ஜுரங்கள் குணமாகும். ஈரல் குலைக்கட்டிகளும் குணமாகும்.

விவரங்களுக்கு எழுதுங்கள்

கேசரி குடீரம் லிட்,
ராயப்பேட்டை, மதராஸ் 14.

○ குழந்தைகள் முன்னேற்றத்திற்காக உலகத்திலேயே பெரு முயற்சி எடுத்துக் கொண்டவர் ஸ்ரீமதி மாண்டிசோரி.

○ இந்த வருடத்தில் சமாதானத்திற்கான நோபல் பரிசை மாண்டிசோரி அம்மையாருக்குத்தான் கொடுக்கும்படி உலகப் பேரறிஞர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

ஸ்ரீமதி மாண்டிசோரி

எழுதிய

குழந்தைமை ரகசியம்

★

விரைவில் வெளியாகும். ஸ்ரீ சி. ந. வைதீஸ்வரன் தமிழாக்கியது. ஸ்ரீ வைதீஸ்வரன் ஸ்ரீமதி மாண்டிசோரி கூட நெடுநாள் பழகி அனுபவம் பெற்றவர்.

★

இது சக்தி வெளியீடு

விரோதி
மலர் 16

சக்தி

ஆனி
இதழ் 3

மெய்ப் பொருள் காண்பது அறிவு

○

ஆசிரியர் குறிப்பு

சமீபத்தில் நமது சென்னை மாகாண நிதி மந்திரி ஸ்ரீ கோபால் ரெட்டி பத்திரிகைகளின் விளம்பர வருமானத்தின் மீது 10 சத விகித வரி விதிக்கும் உத்தேசத்துடன் ஒரு மசோதா சமர்ப்பித்திருக்கிறார். இதற்கு சகல பத்திரிகைகளும் மறுப்புக் கூறிக் கண்டித் திருக்கின்றன. எனினும் நமது நிதி மந்திரி தமது கொள்கையில் விடாப்பிடியாய் இருக்கிறார். பத்திரிகைக் காரர்கள் விளம்பரம் மூலம் மூட்டை மூட்டையாய் பணம் திரட்டி விட்டார்கள் என்பது அவரது எண்ணம்போலும். இந்த நிலைமையில் உண்மையை விளக்குவது பத்திரிகையாளர்களின் கடமை. பத்திரிகைகளில் வரும் விளம்பர வருமானத்தால் யாரும் கோட்டை கட்டவில்லை. இன்று பத்திரிகை விற்கும் விலையைப் பார்க்கும்போது, அதற்குரிய காகிதச் செலவு, அச்சுக் கூலி, நிர்வாகச் செலவு, சம்பளம் முதலியனவற்றை வைத்துக் கணித்துப் பார்த்தால், அடக்க விலைக்குக்கூடக் கட்டுபடியாவதில்லை. ஆதலால், விளம்பரங்கள் மூலம் வரும் வருமானம் பத்திரிகையை நஷ்டமடையாமல் இருக்கத்தான் உதவுகிறது. யுத்த காலத்தில் பத்திரிகைக் காரர்கள் நஷ்டத்தைக் கனவிலும் காணவில்லை என்பதும் வாஸ்தவம். ஆனால், பணப் புழக்கம் குறைந்து, பத்திரிகை விற்பனையும் குறைந்து, அதே வேளையில் உற்பத்திச் செலவு குறையாத இன்றைய நிலையில் பத்திரிகைகள் லாபம் கருதி நடக்கவில்லை. பத்திரிகைகள் ஜன சமுதாயத்தின் குரல். ஆனால், ஸ்ரீ கோபால் ரெட்டியின் மசோதா சட்டமானால், பத்திரிகை வளர்ச்சி குன்றும்; அதாவது ஜன சமுதாயத்தின் குரல் ஒடுக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இதுபோலவே நமது நிதி மந்திரி பஸ் போக்குவரத்து, சினிமா, ஹோட்டல் முதலியன மீதும் வரி விதிக்கத் திட்டமிட் டிருக்கிறார். பஸ் போக்குவரத்து மீது வரி விதிப்பு அதிகமானால், பஸ் கட்டணங்கள் கூடும். அதுபோலவே ஹோட்டல் வியாபாரத்தில் 50 சத விகிதம் விற்பனை வரி விதிக்கப்பட்டால் அந்த வரி அங்கு உணவுண்ண வரும் பொதுமக்களிடம் தான் வசூலிக்கப் பெறும். சினிமாத் தொழி

லும் அவ்வளவு லாபகரமான தொழில் என்று சொல்ல முடியாது. ஓரிருவர் பணம் பார்த்திருக்கலாம். ஆனால் பெரும்பாலார் பணம் திரட்டிவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. ஆகவே அதன்மீது வரிவிதிப்பதும் தக்கதல்ல. இவை போக, உணவுப் பண்டங்கள் சிலவற்றின் மீதும் வரி விதிக்கத் திட்டம் சமர்ப்பித் திருக்கிறார்,

இதெல்லாம் யாரைப் பாதிக்கும்? பொது மக்களது பொழுது போக்கு, அவரது அன்றாட உண்டி, அன்றாடப் பிரயாணச் செலவு முதலிய எல்லாவற்றையும்தான் இது பாதிக்கப் போகிறது. நேரடியாயினும் மறைமுகமாயினும் இந்த வரிகளெல்லாம் மக்கள்மேல் விதிக்கும் வரிகளேயாகும். ஏற்கெனவே அகவிலைக் கிராக்கியும் பண முடையும் மக்களைக் கிட்டி கட்டி வாங்கும் இந்த வேளையில், இம்மாதிரியாக வரி விதிப்பது மக்களுடைய கசப்பைச் சம்பாதித்துக் கொள்வதற்கு ஏதுவாகும்.

சர்க்காருக்குப் பணம் வேண்டுமென்றால் கள்ளமார்க்கெட் நடத்திக் கொள்ளை லாபம் அடித்த பணக்காரர்களுக்கு வரி போடட்டும். மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு, மக்களின் தலைமீது வரிச் சுமையை ஏற்ற வேண்டாம். பிறகு மக்கள் சர்க்கார் என்று சொல்லிக்கொள்வதிலும் அர்த்தமில்லை. மக்களின் பிரதிநிதியாக விளங்கும் நிதி மந்திரியை பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொள்ள வேண்டுகிறோம்; அபிப்பிராயங்களைப் புறக்கணிப்பது எதேச்சாதிகார புத்தியாகும். ஆகவே இந்த மசோதாக்களைக் கைவிடுவதே புத்திசாலித் தனமான காரியம். வீணாக, மக்களின் கசப்பைச் சம்பாதித்து, காங்கிரஸின் கௌரவத்துக்கு பங்கம் நேராமலிருக்கச் செய்வது இன்றைய சர்க்காரின் கடன் என்று கூற விரும்புகிறோம்.

இக் கதாசிரியர் நார்வேக்காரர். 'பசி' என்று ஒரு நூல் எழுதிப் புகழ் பெற்றவர். 'மண்ணின் வளர்ச்சி' என்ற இவரது நூல்தான் மிகவும் பிரசித்தி பெற்றது. அதற்குத்தான் நோபல் பரிசும் கிடைத்தது. இந்தக் கதையில் வரும் கதாபாத்திரத்தின் தன்மையை உங்களால் உணர முடிகிறதா? அவள் உணர்ச்சி அவளுக்குத்தான் தெரியும்!

வாழ்வின் அழைப்பு

நட் ஹாம்சன்

கோபன் ஹேகன் துறைமுகத்துக்குப் பக்கமாக வெஸ்டர் வோல்ட் என்று ஒரு தெரு உண்டு. அது புதிய தெருவென்றாலும், குடியிருப்பு இல்லாத தெரு. எனினும் சிற்சில வீடுகளும் உண்டு; சில வாயு விளக்குகளும் அங்குமிங்கும் உண்டு. எனினும் மனித சஞ்சாரத்தைக் காணமுடியாது. வேனிற் காலத்தில்கூட, மக்கள் கூட்டத்தின் கலகலப்பை அங்கு காணமுடியாது.

சரி. நேற்று மாலை அந்தத் தெருவில் ஒரு அதிசயத்தைக் கண்டேன்.

நான் தெருவின் நடை பாதையில் மேலும் கீழும் நடந்துகொண்டிருந்தபோது, எனக்கு எதிர்ப்புறமிருந்து ஒரு பெண் என்னை நோக்கி வந்துகொண்டிருப்பதைக் கவனித்தேன். அவளைத் தவிர வேறு யாரும் என் கண்ணில் படவும் இல்லை.

வாயு விளக்குகள் எரிந்துகொண்டிருந்தபோதிலும் இருள் கலையவில்லை; அதாவது, அந்தப் பெண்ணின் முகத்தை நன்றாகப் பார்க்குமளவுக்கு வெளிச்சமில்லை. இராக்காலங்களில் ஊர் சுற்றும் பெண்களில் ஒருத்தியாக இருப்பாள் என்று நினைத்து, நான் அவளைக் கடந்து நடந்தேன்.

தெரு முனையை நெருங்கியதும் மீண்டும் திரும்பி நடக்க முனைந்தேன். அந்தப் பெண்ணும் திரும்பி என்னை நோக்கி வந்தாள். அவள் யாருக்காகவேனும் காத்துக்கொண்டிருக்கலாம் எனக் கருதினேன்; எனினும் இந்த வேளையில் அவள் யாருக்காகக் காத்திருக்கக்கூடும் என்ற எண்ணம் மனசில் முளைவிட்டது. மீண்டும் நான் அவளைக் கடந்து நடந்தேன்.

மூன்றாவது தடவையாக அவளை நான் சந்தித்த பொழுது, தொப்பியை எடுத்து வணங்கி நானாக அவளிடம்பேசத்தொடங்கினேன்.

“வணக்கம்! யாருக்காகவாவது தாங்கள் காத்திருக்கிறீர்களா?”

அவள் நடுங்கிப் போய்விட்டாள். இல்லை—வந்து—ஆமாம். அவள் யாருக்காகவோ காத்துத்தான் நின்றாள்.

ஆனால் அவள் எதிர்பார்க்கும் நபர் வரும் வரை எனது துணையை அவள் நிராகரித்தாளா?

இல்லை—அவள் நிராகரிக்க வில்லை; அதற்காக எனக்கு வந்தனம் செலுத்தினாள். அதாவது, அவள் யாருக்காகவும் காத்து நிற்க வில்லையாம். அங்கே கொஞ்சம் காற்றுவாங்க வந்தாளாம். ஆனால், அங்கேயோ காற்றின் அசைவைக் கூடக் காணோம்.

நாங்கள் இருவரும் ஒருவர் பக்கம் ஒருவராக உலாவினோம். அர்த்தமற்ற பேச்சாக, பற்பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டோம். நான் அவளுக்குக் கை கொடுத்தேன்.

"வந்தனம், வேண்டாம்" என்று அவள் கூறிவிட்டு, தலையை அசைத்தாள்.

அந்தமாதிரி உலாத்தி வந்ததில், அதிசயம் ஒன்றும இல்லை. அவளை நான் இருட்டில் சரியாகப் பார்க்க முடியவில்லை. அவளுடைய முகத்தைப் பார்ப்பதற்காக ஒரு தீக்குச்சியைக் கிழித்தேன். கைக் கடிகாரத்தில் மணி பார்க்கும் சாக்கில் அவள் முகத்தையும் கண்டு கொண்டேன்.

"ஒன்பதரையா?" என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன்.

அவள் உறைந்து போவது போல் நடுங்கினாள். இதுதான் சமயம் என்று நான் ஆரம்பித்தேன்.

"உனக்கு குளிருகிறதா? எங்கேயாவது சென்று சூடாய் எதாவது சாப்பிடலாமா? திவோலிக்காவது, நேஷனல் ஹோட்டலுக்காவது போகலாமா?" என்று ஆரம்பித்தேன்.

"ஆனால், நான் இப்போது எங்கேயும் போகமுடியாதே" என்றாள்—அவள்.

அப்போதுதான் அவள் ஒரு கறுப்பு நில அங்கி அணிந்திருப்பதைக் கண்டேன்.

நான் அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதோடு, எனது தவறுக்காக இருளையும் கடிந்து கொண்டேன். அவள் எனது மன்னிப்புக் குரலை ஏற்றுக்கொண்ட பாவனையிலிருந்து, அவள் இப்படி ஊர் சுற்றும் இரவுப் பெண்ணரசி யல்ல என உணர்ந்து கொண்டேன்.

"எனது கையைப் பிடித்துக் கொள்ளக் கூடாதா? உனக்கு அது கொஞ்சம் ஆறுதலளிக்கும்" என்றேன்.

அவள் என் கையைப் பற்றிக் கொண்டாள்.

நாங்கள் மீண்டும் மேலும் கீழும் நடந்தோம். சிறிது நேரம் கழித்து அவள் மீண்டும் மணி பார்க்கச் சொன்னாள்.

"பத்து" என்றேன். "சரி. நீ எங்கு வசிக்கிறாய்?"

"காம்லேவில்."

நான் அவளை நிறுத்தினேன்.

"சரி. நான் உன்னை வீட்டு வரையில் கொண்டுவந்து விடட்டுமா?" என்றேன்.

"வேண்டாம்......சரி. நீங்கள் பிரெட்கேடில்தானே வசிக்கிறீர்கள்?" என்றாள்.

"உனக்கு எப்படித் தெரியும்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டேன், நான்.

ஒரு கணம் மௌனம். மீண்டும் நாங்கள் நடந்தோம். அவள் தனது

உடை காற்றில் பறக்குமளவுக்கு விரைந்து நடந்தாள்.

"நாம் விரைந்துதான் நடந்தோம்" என்றாள் அவள்.

அவள் வீட்டு வாசலுக்குச் சென்றதும் என்னைப் பார்த்து அவளை வீட்டு வரையிலும் கொண்டுவந்து விட்டதற்காக நன்றி தெரிவிக்கத் திரும்பினாள். அதற்குள் நான் கதவைத் திறந்தேன். அவள் மெதுவாக உள்ளே சென்றாள். நானும் அவளைப் பின் தொடர்ந்து உள்ளே சென்றேன். உள்ளே சென்றதும் அவள் கையை இறுகப் பிடித்தாள். நாங்கள் எதுவும் பேசிக்கொள்ளவில்லை.

நாங்கள் இரண்டு படிக்கட்டுகள் ஏறிச் சென்றோம். மூன்றாவது மாடிக்கு வந்து சேர்ந்தோம். அவள் தனது அறையின் கதவைத் திறந்தாள். இரண்டாவது கதவைத் திறந்ததும் என்னைக் கைப்பிடித்து உள்ளே அழைத்துச் சென்றாள். அது முன்கட்டுக் கூடமாக இருக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். சுவரில் கடிகாரம் ஓசைப்படுத்துவதைக் கூட நான் கேட்க முடிந்தது. ஒரு கணம் சென்றதும், அவள் என் மீது பாய்ந்து என்னை அணைத்து, என் உதட்டின்மீது முத்தமாரி சொரிந்தாள்—ஆ ம ா ம். வாயில் தான்.

"உட்காருங்களேன். இதோ, சோபா. நான் விளக்கை ஏற்று கிறேன்" என்றாள்.

அவள் விளக்கை ஏற்றினாள்.

நான் என்னையே வியப்புடன் பார்த்துக் கொண்டேன். நான் இருந்த இடம் அலங்காரம் செய்யப் பெற்ற பெரிய அறை. பல கதவுகள். ஒவ்வொரு கதவும் ஒவ்வொரு அறைக்கு வழி காட்டின. ஆனால், அவளை எந்தமாதிரிப் பெண்ணென்று என்னால் தீர்மானிக்க முடியவில்லை.

"அழகான அறை. நீ இங்குதான் குடியிருக்கிறாயா?" என்றேன்.

"ஆம்—இதுதான் எனது வீடு" என்றாள் அவள்.

"இதுதானா? உனது பெற்றோர்களும் இங்குதானிருக்கிறார்களா?"

அவள் சிரித்தாள். "இல்லை, நான் வயதானவள். இதோ பாருங்கள்." அவள் தன் முகத்திரையை விலக்கினாள்.

"ஆமாம். நான் என்ன சொன்னேன்?" என்று கூறிக்கொண்டே என்னை மீண்டும் இறுக அணைத்தாள். என்னால் தடுக்க முடியவில்லை.

அவளுக்கு இருபத்தி இரண்டு, இருபத்தி மூன்று வயது இருக்கலாம். அவள் வலது கை விரலிலிருந்த மோதிரம் அவளுக்குக் கலியாணமாகிவிட்டது என்பதைக் காட்டிக் கொடுத்தது. அழகா? அப்படியும் சொல்வதற்கில்லை. அவளுக்கு புருவங்களே இல்லாதது போலிருந்தது. எனினும் அவள் உடம்பில் புளகம் பொங்கியது; அவள் வாய் உண்மையிலேயே அழகாய்த்தானிருந்தது.

அவள் யார்? அவள் கணவன் எங்கே? என்றெல்லாம் கேட்க வேண்டும் என்று நினைத்தேன். அவளுக்கு கணவன் ஒருவனிருந்தால்,—அப்படியானால், நான் யார் வீட்டில் இருக்கிறேன் என்று நினைத்

தேன். ஆனால் அவளோ மீண்டும் மீண்டும் அணைத்து முத்தமிட்டாள். நேரம் கிடைத்தபோது அவளிடம் எனது கேள்விகளைக் கேட்டு விட்டேன்.

"என் பெயர் எலன்" என்றாள். பிறகு "தாகசாந்திக்கு ஏதாவது வேண்டுமா? நீங்கள் அந்தப் படுக்கை யறையுள் சென்று இருங்கள். நான் வரவழைக்கிறேன்" என்றாள்.

நான் படுக்கை யறைக்குள் சென்றேன். முன்கட்டு அறையிலுள்ள வெளிச்சம் அங்கும் சிறிதும் விழுந்தது. அங்கு இரண்டு படுக்கைகள் இருந்தன. எலன் மணியடித்து ஒயினுக்கு உத்தர விட்டாள். வேலைக்காரி ஒயினைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு வெளியில் செல்லும் சப்தம் கேட்டது. சிறிது நேரம் கழித்து எலன் உள்ளே வந்தாள். கதவருகேயே நின்று விட்டாள். அவள் கண்டத்திலிருந்து மெல்லிய குரல் எழுந்தது; அதே சமயம் என்னிடம் வந்து சேர்ந்தாள்.

இதெல்லாம் நேற்று மாலையில் நடந்தவை.

அதற்குப்பின் என்ன நடந்தது? பொறுங்கள்! அதெல்லாம் ரொம்ப இருக்கிறது விஷயம்!

நான் எழுந்திருக்கும்போது பொழுது நன்றாக விடிந்து விட்டது. ஜன்னல் திரைகளின் ஊடாக, சூரிய ஒளி அறைக்குள் விழுந்தது. எலனும் எழுந்திருந்தாள்; என்னைப் பார்த்துச் சிரித்தாள்—அவள் கைகள் வெளுத்திருந்தன; பட்டுப்போல் இருந்தன. மார்பகம் விம்மி யிருந்தது. நான் அவளிடம் ரகசியமாய் ஏதோ சொன்னேன்; ஆனால், அவளோ தன் வாயால் என் வாயை அடைத்துவிட்டாள். சூரிய ஒளி மேலும் மேலும் வளர்ந்தது.

இரண்டு மணி நேரம் கழித்து நான் படுக்கையை விட்டுக்கீழிறங்கினேன். அவளும் எழுந்து உடை உடுத்திக்கொண்டு, செருப்பையும் மாட்டிக் கொண்டாள். அதன் பின் நடந்ததெல்லாம் ஒரு கனவைப்போன்ற அநுபவம்தான். எலன் ஏதோ காரியார்த்தமாக பக்கத்து அறைக்குள் சென்றாள். அவள் அந்த அறைக் கதவைத் திறந்ததும், நான் அந்த அறையைப் பார்த்தேன். அந்த அறையிலிருந்து குளிர் காற்று என் முகத்தில் வீசியடித்தது. அங்கு அறையின் மத்தியில் ஒரு மேஜை மேல் ஒரு பிணம் நீட்டி நிமிர்ந்து கிடந்தது! ஒரு பிணம் சவப்பெட்டியில் வெள்ளாடை உடுத்து, சாம்பல் நிறத் தாடியுடன் இருந்தது. அது ஒரு ஆண் பிணம் தான். எலும்பாகிப்போன அதனுடைய முழங் கால்கள் துணிக்கு மேலாகத் துருத்தி நின்றன. சவக்களை முகத்தில் அழுந்தி யிருந்தது. அந்த வெளிச்சத்தில் நான் அதைப் பரிபூரணமாகப் பார்க்க முடிந்தது. உடனேயே நான் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் திரும்பினேன்.

எலன் திரும்பி வந்தபோது நான் உடை உடுத்து புறப்படத் தயாராயிருந்தேன். அவளுடைய அணைப்புகளுக்கு விட்டுக் கொடுப்பது எனக்குக் கஷ்டமாயிருந்தது. அவள் வேறு சில ஆடைகளும் அணிந்துகொண்

டாள்; என்னை தெருவாசல் வரை வந்து வழியனுப்ப முயன்ருள். நான் பதில் ஒன்றும் பேசாமல் அவள் இஷ்டப்படியே விட்டுவிட்டேன். வாசலுக்கு வந்ததும் அவள் யாரும் பாராத வகையில் சுவரோடு ஒன்றி நின்ருள்.

"சரி. சென்று வாருங்கள்" என்று மெதுவாகச் சொன்னுள்.

"நாளைவரையிலுமா?" என்று வேண்டுமென்றே கேட்டேன்.

"இல்லை. நாளை யில்லை" என்ருள்.

"ஏன்?"

"அதிகப்படியாய் கேட்காதீர்கள். நாளை நான் ஒரு சவச்சடங்குக்குச் செல்லவேண்டும். என் நெருங்கிய பந்து ஒருவர் இறந்து போய்விட்டார். தெரிகிறதா?"

"அப்படியானுல், நாளைமின்று-"

"ஆம். நாளைமின்றுதான். இங்கேயே வாருங்கள்" என்ருள்.

நான் அங்கிருந்து கிளம்பினேன்.

அவள் யார்? அந்தப் பிணம் யாருடையது? அது இருந்த நிலை! அப்பா! நாளைமின்று அவள் என்னை எதிர்பார்ப்பாள்.

அவளை மீண்டும் நான் சந்திக்க வேண்டுமா?

நான் நேராக பெர்னியா ஹோட்டலுக்குச் சென்றேன். அங்கு சென்று டெலிபோன் டைரக்டரியை வாங்கிப் புரட்டினேன். காம்லேயில் குடியிருக்கும் நம்பர்களைப் புரட்டினேன். அங்கு அந்தப் பெயரைக் கண்டேன். காலைப் பத்திரிகைகள் வெளியாகும் வரை காத்திருந்தேன். வந்தவுடன் அதில் மரணப் பகுதியைத் திருப்பிப் பார்த்தேன். நான் நினைத்தது போலவே அங்கு அவளுடைய செய்தி இருந்தது. கொட்டை கொட்டை எழுத்துக்களில் அந்தச் செய்தி காணப்பட்டது.

"53 வயதான என் கணவர் நீண்ட நாள் நோய்க்குப் பின் இன்று இறந்துவிட்டார்."

அந்தச் செய்தியில், நேற்றைக்கு முந்திய நாள் தேதி காணப்பட்டது.

நான் வெகு நேரம் யோசனையிலேயே ஆழ்ந்திருந்தேன்.

மனிதன் மணக்கிருன். அவனுடைய மனைவியோ அவனைவிட முப்பது வயது இளையவள். இந்த நிலையில் அவனுக்கு ஒரு கொடிய நோய் வேறு பற்றுகிறது. ஒரு நல்ல நாளில் அவன் இறந்துவிடுகிருன்!

அதன்பின்—அந்த இளம் விதவை ஆசுவாசமாகப் பெருமூச்சு விடுகிருள்!

ஒத்துப்போக முடியாது!

"இந்தியாவுக்குச் செல்கிறீர்களா? இந்திய சீதோஷ்ணம் உங்கள் மனைவியோடு ஒத்துப்போக முடியுமா?" என்று கேட்டார் ஒருவர்.

"என் மனைவியோடா? நிச்சயமாய் முடியாது!" என்று பதிலளித்தார் கணவர்.

—நியூகாஸில் ஜர்னல்

தந்தையைக் கொன்று, தாயையும் பெண்டாண்ட ராஜகுமாரன்தான் எடீபஸ்! ஆனால், அந்த ராஜ குமாரன் கதை மனோதத்துவ ஆராய்ச்சிக்கு எவ்வளவு உபயோகப்படுகிறது!

எடிபஸ்

○

சி. ந. வைத்தீஸ்வரன்

குடும்ப வாழ்க்கையிலே எத்தனை சண்டைகள்! மாமியார் மருமகள் சண்டை; மாமனார் மருமகன் சண்டை; அண்ணியார் நாத்தனார் சண்டை; கணவன் மனைவி சண்டை. எல்லாக் குடும்பங்களிலும் இச் சண்டைகள் எப்பொழுதும் இல்லா விட்டாலும் பெரும்பாலோர் குடும் பங்களில் இவை சாதாரணமாக நடைபெற்றே வருகின்றன. இச் சண்டைகளுக்குக் காரணம் என்ன வென்று கேட்கப்போனால் வெளிப் படையாகப் பெரும்பாலும் ஒன் றுமே இருக்காது. இத்தகைய சண்டைகள் இக்காலத்திய ரகம் என்று எண்ணுவதற்கில்லை. இது தொன்று தொட்டே வந்து கொண்டிருக்கிறது. வெளிப்படை யான காரணம் இல்லை என்றால் அந்தரங்கக் காரணம் இருக்கவேண் டும். இதைக் கண்டறிய மனோ தத்துவத்தை அறிந்த உள இயல் நிபுணரைக் கேட்கவேண்டும். அவர் களைக் கேட்டால் என்ன சொல் கிறார்கள்? எடிபஸ் கதை சொல் கிறார்கள். என்ன அந்தக் கதை? பண்டைக்காலக் கிரேக்கர் புராணக் கதைகளில் ஒன்று அது.

இதோ அந்தக் கதை.

முன்னொரு காலத்தில் லாயஸ் என்ற அரசன் ஜொகாஸ்டா என்ற வளை மணந்து கொண்டு தீபிஸ் நாட்டை ஆண்டுவந்தான். இவ னுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்த நற் சேதியை உணர்ந்து ஜோதி டரை வரவழைத்துப் பலாபலன் களை அறிவிக்கச் சொன்னான். ஜோதிடர், "அரசே இக் குழந் தையை வளரவிட்டால் உமக்கும் உம் அரியாசனத்துக்கும் பேரா பத்து என்றிருக்கிறது" என்ற னர். இதைக் கேட்ட மன்னன் திடுக்கிட்டான். ஓர் இடையனை உடனே அழைப்பித்தான். குழந் தையை அவனிடம் ஒப்புவித்து ரகசியமாகக் கொன்றுவிட ஆக்ஞை யிட்டான். இடையன் ஆக்ஞைப் படி குழந்தையை ஒரு காட்டுக் குள் கொண்டு சென்றான். குழந் தையின் களங்கமிலா முகத்தைக் கண்டு இரங்கினான். கொல்ல மனம் வராது குழந்தையின் கால்களில் ஒரு கயிற்றைக் கட்டி அருகில் இருந்த மாக் கிளையில் கட்டித் தொங்கவிட்டு விட்டு ஊர் திரும்பி னான்.

அந்தக் காட்டு வழியாகச் சென்ற ஒரு குடியானவன் குழந்தையின் அழு குரல் கேட்டு மரத்தண்டை வந்தான். இந்தக் கோரக் காட்சியைக் கண்டு மன மிளகி உடனே குழந்தையின் கட்ட விழ்த்து ஓடோடிச் சென்று தன் எஜமானனிடம் குழந்தையைக் கொடுத்தான். எஜமானன் தன் அருமை மனைவியிடம் குழந்தையைத் தர அவளும் "மலடி வயிற்று மகன் போல"ப் பெற்று வளர்த்தாள். குழந்தையின் பாதம் கட்டின் வலியால் வீங்கிக் கிடந்த காரணத்தால் இவனுக்கு எடிபஸ் என்ற பேரும் சூட்டினர். அவர்கள் மொழியில் எடிபஸ் என்றால் வீங்கின பாதம் என்ற பொருள் தந்தது. எடிபஸும் வளர் திங்களென வளர்ந்து வந்தான்.

பல ஆண்டுகள் பறந்தன. ஒரு நாள் லாயஸ் ஓர் ரதத்தில் ஏறிக் கொண்டு தன் சாரதியை ஓட்டச் சொன்னான். ரதம் ஒரு பாதையில் வேகமாக வந்து கொண்டிருந்தது. ஓர் குறுகலான இடத்திலே ரதம் வரவர எதிரே ஓர் இளைஞன் தன் ரதத்தையும் வேகமாக நடத்திக் கொண்டுவந்தான். லாயஸின் சாரதி இளைஞனை அரசனுக்கு வழிவிட அதட்டினான். இளைஞன் இந்த மிரட்டலுக்கு அஞ்சாது வழிவிட மறுக்கவே சாரதி கீழிறங்கி இளைஞனுடைய குதிரையை தன் வாளால் வெட்டி வீழ்த்தினான். இதைச் சகிக்கமுடியாத இளைஞன் உடனே எதிரே நின்ற சாரதியையும் அரசனையும் ஒரு நொடியில் தரையில் வீழ்த்திப் பழிக்குப்பழி வாங்கினான். இருவரையும் கொன்ற இளைஞன் யார்? ஆம் அவனே தான், தன்னை அறியாது தந்தையைக் கொன்ற எடிபஸ்.

இந்தப் படு கொலை நடந்த சில தினங்களில் தீபிஸ் நாட்டின் பாதையில் ஒரு கொடிய பூதம் தோன்றி உயர்ந்த பாறைமேல் உட்கார்ந்தது. இப் பூதத்தின் உடல் சிம்மவடிவம், மார்பும் தலையும் பெண் வடிவம். வழிப்போக்கர்களை எல்லாம் இப் பூதம் மடக்கிக்கொண்டு ஓர் புதிர் போட்டது. யாரார் இப் புதிருக்கு சரியான விடை அளிக்கின்றார்களோ அவர்கள் வந்த வழியில் தொடர்ந்து செல்லமுடியும். மற்றவர்களை அங்கே கொன்று வீழ்த்தியது. இப் புதிரை விடுவித்தவர் ஒருவருமில்லை. பாதையில் பிணக் குவியல் மலைபோல் தினமும் குவிந்து கொண்டே வந்தது.

எடிபஸுக்கு இந்தச் சேதி எப்படியோ எட்டிற்று. பரபரப்புடன் தீபிஸிக்கு வந்தான். இந்தப் பூதத்தின் முன் தோன்றினான். "ஏ கொலைகார பூதமே! (ஃபிங்ஸே!) (ஃபிங்ஸ் என்றால் கொலையாளி) எங்கே உன் புதிர் என்ன சொல்" என்று கம்பீரக் குரலில் கேட்டான். அதற்கு அந்த ஃபிங்ஸ் "காலையில் நாலு காலிலும் உச்சி வேளையில் இரண்டு காலிலும் மாலையில் மூன்று காலிலும் நடக்கும் பிராணி எது? சொல்" என்று அதட்டிக் கேட்டது. "அது மனிதன்" என்று எடிபஸ் உடனே பதிலளித்தான். மேலும் அவன் "குழந்தைமையில் கைகால்களால் தவழ்ந்து நடந்து, முதிர்காலப் பருவத்தில் நேராக நிமிர்ந்து நடந்து, முதுமையில் கோலூன்றி நடப்பவன் மனிதனே" என்றும் விளக்கிக்கூறினான்.

இந்த விடையைக் கேட்ட அந்த ஃபிங்ஸ் "ஒஹோ இவன் நம்மையே விழுங்கிவிடுவான், என அஞ்சி உயர்ந்த பாறையிலிருந்து வீழ்ந்து உயிர் துறந்தது. தீபிஸ் நாட்டார் அனைவரும் இவன் வல்லமையைப் புகழ்ந்து கொண்டாடினர். கடைசியில் ராணியை இவனுக்கு மணம் செய்து வைத்தனர். எடிபஸனும் தன்னை அறியாமல் தன் தாய்க்கே கணவனானான். அன்று முதல் தன் தாயுடன் இல்லறம் நடத்தி ராஜ பரிபாலனமும் பண்ணி வந்தான்.

சில ஆண்டுகளில் பஞ்சமும் நோயும் தீபிஸ் நாட்டைப் பிடித்து வாட்டியது. மக்கள் மடிந்தனர். அறிஞர் காரணம் தேடினர். எடிபஸின் இரு பழிகளும் வெளியாயின. இதை அறிந்த தாய் தற்கொலை செய்து கொண்டாள். எடிபஸ் தன் கண்களைத் தானே தோண்டி எறிந்துவிட்டுப் பித்தனைப்போல் ஊரூராக அலைந்து திரிந்தான். எல்லோரும் எடிபஸை வெறுத்து விலகினர். ஆனால் அவனுடைய மகள் மட்டும் அவன் சாகும் வரையும் அவனுடன் துணை சென்றாள்.

முதலில் கூறிய சண்டைக்காரர்கள் அனைவரும் தங்கள் குழந்தைப் பருவத்தில் தாய் தந்தையரைக் காமுற்றவர்களாக இருக்க வேண்டும் என்று உள இயலார் சமாதானம் கூறவருகின்றனர். இதைக் கேட்டவுடனே தம் செவிகளை உடனே பொத்திக்கொண்டு "சிவ சிவ!" என்ன அநியாயம்! பஞ்சமாபாதகங்களில் ஒன்றைச்செய்தவன் மகன் ஒருவன் கதையைத் திருவிளையாடல் புராணத்தில் கேட்டதுண்டு; அவன் ஓர் அற்பப் பிறவி என்று வெறுத்ததுண்டு. ஆனால் இந்த உள இயல் மேதை மனம் கூசாமல் எல்லோருக்கும் அல்லவோ இந்தப் பழியைச் சுமத்திவிடுகிறார். இதை யார் நம்புவார்கள் என்று வாதாட முன் வருபவர் பலர்.

குழந்தைப் பருவத்தில் அதாவது மூன்று ஆண்டுகளுக்கு முன் குழந்தை மனதில் உதிக்கின்ற காம உணர்ச்சியை முதிர்காளைப் பருவத்தில் உதிக்கும் காம உணர்ச்சி என எண்ணிவிடக் கூடாது. குழந்தைப் பருவத்தில் பெண்குழந்தை தன் தாயிடம் சில சமயங்களில் ஓரளவு வெறுப்புக் கொள்கிற தென்றும் அந்த வெறுப்புக்குக் காரணம் தன் தந்தையின் மேல் தான் கொள்ளும் காமத்தில்தாயும் போட்டியிடுகிறாள் என்றும் எடுத்துக்கூறப் படுகிறது. இப்படியே ஆண் குழந்தையும் தாயின் மேல்காமுறுகிறதாம். அக் காமத்தைப் பங்குபோட வருகின்ற தந்தையை வெறுக்கிறானாம். கொன்று விடவும் துணிகிறானாம். இந்த இருவரிடம் தோன்றும் குழந்தைமைக் காமத்தை மேனாட்டு உள இயலார் "எடிபஸ்" என்றே அழைக்கின்றனர். எடிபஸின் பேர் இந்த சுபாவத்துக்கே நிலைத்து விட்டது.

இதுவரை கூறப்பட்டது உண்மையென நம்புவதற்கே இல்லையே; அவ்வாறு குழந்தைப் பருவத்தில் நாம் நம் பெற்றோர் மேல் காமுற்றோம் என்று யாரால் நம்ப முடியும் என்றெல்லாம் சந்தேகம் தோன்றுவது சகஜமே. குழந்தைப் பருவத்தில் மூன்றாண்டு வரை நடக்கின்ற இன்ப துன்பங்கள், ஆசா பாசங்கள், அச்

சங்கள் விபத்துக்கள் ஒன்றுமே மனதில் ஞாபகம் இருப்பதில்லை. ஆனால் சில அரிய முயற்சிகளால் உள நூல் ஆசிரியர்கள் அந்த மறைந்த சம்பவங்களை நமக்கு ஞாபகப்படுத்த உதவி புரிகின்றனர். இத்தகை ஆராய்ச்சியை முதல் முதல் விளக்குவித்தவர் ஃப்ராய்டு என்பவர். தற்காலத்தில் இவருடைய கொள்கைகளில் வேறுபட்ட கொள்கைகள் பரந்திருந்த போதிலும் மனோதத்துவ அடிப்படையில் இவருடைய ஆராய்ச்சிக்கு இன்றுள்ளவர் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

"மனமெனும் தோணிபற்றி
மதியெனும் கோலையூன்றிச்
சினமெனும் சரக்கை யேற்றிச்
செறிகடல் ஓடும்பொது
மதனெனும் பாறைதாக்கி மறியும்
போதறிய வொண்ணு(து)
உனையுனும் உணர்வை நல்காய்
ஒற்றியூர் உடையகோவே

என்று வெகு அருமையாகச் சிவனடியார்மனதை உருவகப் படுத்தியிருக்கிறார். மனதை ஓர் தோணிக்கு ஒப்பிட்டிருக்கிறார். தண்ணீருக்கு மேல் தோன்றுவது ஒரு சிறு பகுதியே. தண்ணீருக்குள் மூழ்கியிருப்பது பெரும் பகுதி. தண்ணீர் மட்டத்தில் இருக்கும் பகுதி மிதக்கும் பகுதிக்கும் மூழ்கின பகுதிக்கும் மத்தியில் இருக்கிறது. மேனாட்டின் உள இயலார் மனதை ஓர் பனிக்கட்டிப் பாறைக்கு (ice berg) ஒப்பிட்டிருக்கின்றனர். இந்தப் பனிக்கட்டிப் பாறையின் பத்தில் ஒரு பங்கு தான் மிதந்து கொண்டிருக்கும். பாக்கி எல்லாம் தண்ணீருக்குள் மூழ்கிக்கிடக்கும். மேலே தோன்றுவதைக் கொண்டு, 'ஓ! இவ்வளவு சிறிய பனிப் பாறை தானே' என்று எவனும் அதை அணுகான். இதைப் போலவே மனமும் மேல் மனம் (Conscious) அடிமனம் (un-conscious) நடுமனம்(Sub-conscious) எனமூன்று பகுதிகளை உடையது. நம்முடைய ஞாபகத்துக்கு வரக்கூடியதெல்லாம் மேல் மனதில் பதிந்தவைகளே. குழந்தைப் பருவத்தில தோன்றிய கருத்துக்கள் ஆசாபாசங்கள் வெறிகள் எல்லாம் அடி மனதில் புதைந்து கிடக்கின்றன. அப்படியே சமூகம் வெறுக்கின்ற பற்பல பாப எண்ணங்களும் அடி மனதில் புதைந்து கிடக்கின்றன. இந்த இருமன நிலைகளையும் கூட்டிவைப்பது நடு மனம். குழந்தைகள் பூச்சி புழுக்களைக்கொல்வதை நாம் பார்த்திருக்கிறோம். இது இயற்கை உணர்ச்சிகளில் ஒன்று. மனிதன் காட்டுமிராண்டியாய்த் திரிந்த போதிருந்துபாரம்பரையாகவந்த உணர்ச்சிகளில் ஒன்று. அந்தப் பண்டைக் காலத்துக்கு வேண்டுமானால் கொல்லும் உணர்ச்சி தற்காப்புக்கு உதவி புரிந்திருக்கலாம். நாகரிக உலகில் சமூகம் இதை வெறுக்கும்; கண்டிக்கும்; அடக்கும்; ஒடுக்கும். ஆதலால் இந்தக் கொலையுணர்ச்சி தலை தூக்காமல் அடிமனதில் புதைந்து கிடக்கும். இது தலை காட்டாமல் தடுப்பதற்கு காவலாளி போல் மனதின் ஒரு பகுதி காத்துக் கொண்டிருக்கும். ஆனால் ஏமாந்த சமயம் பார்த்து இந்த கொலையுணர்ச்சி மாறு வேஷத்தில் வெளியேறித் தன் செயலைக் காட்டிவிடும். இந்தப் போலி உருவத்தில் நடமாடும்பேர்வழிபழைய கள்ளன்

என்று மேல் மனதால் கண்டு பிடிக்க முடிவதில்லை. ஆழ்ந்த மனச் சோதனையால் கண்டு பிடிக்கலாம். அவ்வாறு கண்டு பிடித்தவுடன் கொலையனும் களவாணியும் உரு மாறி இருந்த இடம் தெரியாது மாயமாய் மாய்கின்றனர். ரண சிகிச்சையில் கைதேர்ந்த வைத்தியரும் கொலை களவு துப்பறியும் நாவலில் உயிர் விடுகின்ற அறிவாளியும், வெடி மருந்து வியாபாரியும் தங்கள் ஆழ்ந்த அடிமனதில் கொலைகாரர்கள் என்று உள நூலார் எடுத்துக் கூறுகின்றனர். நேர்முகமாக இவர்கள் கொலை புரிய முடியாது. அதற்காகச் சேவை என்ற பெயரில் மாறு வேஷத்துடன் கொலையாளி குணம் தன் ஆசையைத் தீர்த்துக் கொள்கிறது.

இதைப் போலவே எடிபஸ் காமமுடையவர்கள் தங்கள் அதிகாரிகளிடத்தில் பணிய மறுப்பார்கள். அவர்கள் படுந் துயருக்கு இரங்க மாட்டார்கள். இத்தகையபேர்வழி கீழ்ப்படிந்து வேலை செய்யத் தகாதவன். சில சமயங்களில் இவர்கள் தங்களையே தண்டித்துக் கொள்ள விரும்புவார்கள். தங்கள் எஜமானுக்குப் பாடுபட வேண்டுமென்று மனமார முயன்றும் அறியாமல் எஜமானனையே கடன்காரனுக்குவதில் அஞ்சாது பங்கெடுத்துக்கொள்வார்கள். இத்தனைக்கும் காரணம் எடிபஸ் என்கின்றனர்.

✲

கையெழுத்து !

சரித்திரப் பிரசித்திபெற்ற பலருடைய கையெழுத்தும் தலையெழுத்து மாதிரி இருந்திருக்கிறது. அதைப் படிப்பதற்கு பிரமன் வந்தால் கூட முடிவதில்லை. ஷேக்ஸ்பியரின் கையெழுத்து அப்படித்தான். அதில் பல வார்த்தைகளைப் புரிய முடியாமலே போயிற்று. நாத்தேனியல் ஹாத்தார்னின் சில கதைகள் வெளிவராமல் போனதற்குக் காரணம் அதை யாராலும் படிக்க முடியாமல் போனதுதான். ஜேம்ஸ் ஜாய்ஸின் கையெழுத்தும் கோழி கிண்டிய மாதிரிதான். அவருடைய பிரசித்தி பெற்ற நூலாகிய 'உலிஸஸ்' ஒரு தடவை தபாலில் சென்றபோது, தணிக்கை உத்தியோகஸ்தர்கள் அந்த எழுத்தை ஏதோ ரகசிய பாஷை எனச் சந்தேகித்தனர். பிறகு பல நிபுணர்கள் அது எந்த பரிபாஷையையும் சேர்ந்த தல்ல என்று சொன்ன பிறகுதான், நூலின் மூலப் பிரதியைப் பட்டுவடா செய்தனர். நெப்போலியனின் கையெழுத்தும் இவ்விதமாக இருந்ததால்தான், அவனுடைய பல கையெழுத்துக்களை ஏதோ சண்டைக்குத் திட்டமிடும் பூகோளப் படம் எனக் கருதிவிட்டனர்! இதனால் உங்கள் கையெழுத்து மோசமாயிருந்தால் நீங்கள் அதிமேதாவிகள் என்று கருதிவிடவும் இடமிருக்கிறதல்லவா?

நியாயம் !

ஏற்கெனவே சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயங்களைத்தான் பிரசுரிக்கலாம் என்றால், அதிகாரம்தான் உண்மைக்கு உரை கல்லாகி விடும்.

—டாக்டர் ஜான்ஸன்

டீ வருமானத்தைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட நகரங்கள்.

டீ-வருஷமொன்றுக்கு 54 கோடி பவுண்டு-சர்க்கார் கஜானாவுக்கு வருஷமொன்றுக்கு ரூ. 13 கோடி யளிக்கிறது. உங்கள் டீ அளிக்கும் வருமானத்தைக்கொண்டு அநேக நிர்மாண திட்டங்களுக்குப் பண உதவி செய்யலாம். உதாரணமாக தாமோதர் பள்ளத்தாக்கு திட்டத்தை 10 வருஷங்களில் பூர்த்தி செய்ய ரூ. 55 கோடி செலவாகுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதே பத்து வருஷங்களில் டீயிலிருந்து மட்டும் சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானம் அத்திட்டத்திற்கான செலவைப் போல இரண்டத்தனைக்கு மேலாகும். ஆகவே டீ உங்களகத்தில் சுகமும் சந்தோஷமுமளிக்கும் பானம் மட்டுமல்ல, தேசத்தின் ஐசுவரியத்தை விருத்திசெய்யும் ஓர் சாதனமுமாகும்.

டீயைப்பற்றிய சில உண்மை விவரங்கள்.

- 1945–47ம் வருஷங்களில் மொத்த டீ ஏற்றுமதி ரூ. 120 கோடி பெறுமானமுள்ள அயல்நாட்டு நாணயச் செலாவணி யளித்திருக்கிறது.
- இத்தொழிலில் 10 லக்ஷம் ஆண்களும்பெண்களும் ஈடுபட்டிருக்கின்றனர்.
- உள்நாட்டில் அருந்தும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 3 அணா வரியும் ஏற்றுமதி செய்யப்படும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 4 அணா வரியும் சர்க்காருக்கு கிடைக்கிறது. நாட்டு கஜானாவுக்கு வருஷமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 13 கோடி வரும்படி கிடைக்கிறது.
- மேலும் டீ கம்பெனிகள் செலுத்தும் வருமான வரி மூலமாக சர்க்காருக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.

டீ

ஒரு மகத்தான இந்திய கைத்தொழில்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.



லிப்டன்ஸ்

என்றால்

ருசிக்கரமான டீ

LTX-152 TM.

இருவரும் நண்பர்கள்தான்; ஒருவர் ஹிந்து; மற்றவர் முஸ்லிம். ஆனால், வகுப்புவாத வெறி ஒருவர் உயிரைக் குடித்துவிட்டது. மற்றவர் மீது பழியும் சுமந்தது. ஆனால், உண்மையான சகோதரத்துவம் அந்த 'நாஜிர்ஜீ'யிடம்தான் அமைந்திருந்தது என்பது யாருக்குத் தெரியும்?

*சித்தப்பா

○

மதுகர்கேர்

நாஹிர்கான் எங்கள் அடுத்த வீட்டுக்காரர். முன்சீப் கோர்ட்டில் இருபத்தைந்து வருடங்கள் உழைத்து அவர் பெற்ற உயர்ந்த பதவி 'அமீனு' வேலைதான். தன்னை 'நாஜிர்' என்று சொல்லிக் கொண்டார். இதற்காக, பழகிய மக்கள் பரிகசித்தனர். புதியவர்கள் 'நாஜிர் சாஹிப்' என்று அவரை அழைத்தனர். நாங்கள் 'நாஜிர்ஜீ' என்று அழைப்போம். சிரித்துக் கொண்டே எங்களுக்கு மிட்டாய் வாங்கித் தருவார். "இப்படியெல்லாம் கண்டபடி பணத்தைச் செலவு செய்யலாமா?" என்று யாராவது கேட்டுவிட்டால், "அல்லா கொடுக்கிறான். ஹலாலான (நன்மையான) காரியத்தில் செலவிடுகிறேன். நினைத்தபடி செலவு செய்ய முன்சீப் கோர்ட் நாஜிர் பணத்துக்கு எங்கே போவான்?" என்பார்.

குழந்தைப்பருவமுதல் அவரை நான் பார்க்கிறேன்; எனக்கு இப்போது வயது இருபது ஆகிவிட்டது. தோற்றத்தில் எத்தனையோ மாறுதல்களை அடைந்துவிட்டேன். முதன் முதலில் நான் பார்த்ததுபோலவே நாஜிர்ஜீ இன்றுமிருக்கிறார்! உயரத்திலும் வாட்ட சாட்டத்திலும் அரையங்குலமும் குறையவோ கூடவோ இல்லை! கறுப்புக்கோடு போட்ட வெள்ளைப் பைஜாமா, நீண்டு தொங்கும் வெள்ளைச் சட்டை, உடலுக்குப் பிடித்தமான பழுப்பு நிறக் கோட்டு இவை அவரது வழக்கமான உடை. உத்தியோக சம்பந்தமாக வெளியூர் போகும்போது காக்கிக் கோட்டும் நிஜாரும் தரித்திருப்பார். நாற்பத்தைந்து வயதையடைந்தும் அவரின் கட்டுத்தளராத உடலையும் கறுத்தடர்ந்த கேசத்தையும் பார்ப்பவர் பொறாமைப் படுவார்கள். தினம் காலையில் கறுப்புச் சாயத்தை வைத்துக் கொண்டு நரை மயிருடன் அவர் போராடுவதை நானல்லவா அறிவேன்!

"இந்த உடலுறுதி மாமிசம் தின்பதன் மகத்துவம். அது இல்லாவிட்டால் உன்னைப்போல வற்றி வதங்கித்தான் கிடக்கவேண்டும்" என்று என்னைக் கேலி செய்வார். ஆரம்ப காலத்தில் இது எனக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. சில நாட்களில் பிடிப்பை நழுவ விடாமல் திருப்பிக் கூறத் துணிவுண்டாகிவிட்டது. "அப்படியானால் அதை எனக்கும் கொடுப்பது தானே? வாயுபசாரத்திற்கு மட்டும் நீங்கள் என் சித்தப்பாவா?" என்று கேட்பேன் கிண்டலாக.

இதற்குத் தக்க பதிலை அவர் தயாராக வைத்திருந்தார். "மாமிசம் கொடுப்பதுமட்டுமா! 'கலிமா'வைச்

---

*ஹிந்தி மூலத்திலிருந்து தமிழாக்கியவர்: ஜ. அ. அஜீஸ்கான்

சொல்லிக்கொடுத்து உன்னை முஸ்லிம் கூட ஆக்கிக்கொள்வேன். ஆனல் உன் அப்பா என்னை இந்தத் தெருவில் நுழையு முன்பே கொன்று குவித்து விடுவாரே'' என்று கூறுவார்.

யாருக்கும் நாஜிர்ஜீ பயப்பட்டதை நான் பார்த்ததில்லை. என் அப்பா விடம் மிக மரியாதையாக நடந்துகொள் வார். 'அண்ண' என்றுதான் அவரை அழைப்பார். முரட்டுத்தனம், பிடிவா தம் நாஜிர்ஜீயின் ஜன்மகுணங்கள். இத ஞல் பலர் அவரிடம் பகைகொண்டிருந் தனர். விரோதியின் செயலுக்கு வட்டி யும் முதலுமாக அவர் திருப்பத் தவறி யதே கிடையாது.

நான்கணவை ஒரு நாள் மாலை எங்கோ தெருவில் போட்டுவிட்டார். அவர் தேடியும் கிடைக்கவில்லை. மூன்று நண்பர்களுடன் நானும் தேடி னேன். அது கிடைத்துவிட்டால் மேலும் முக்கால் ரூபாய் போட்டு ஒரு ரூபாய்க்கு மிட்டாய் வாங்கித் தருவ தாக நாஜிர்ஜீ சொன்னர். மிட்டாய்க்கு ஆசைப்பட்ட நண்பன் அடுத்த வீட்டி லிருந்து விளக்கை வாங்கிவந்தான். நாங்கள் மும்முரமாகத் தேடிக்கொண் டிருந்தோம். தெருக்கோடியில் வசிக் கும் பணக்காரக் கிழவர் அப்போது அங்கே வந்தார். அவர் யாரிடமும் வேடிக்கையாகப் பேசும் சுபாவம் படைத்தவர். வட்டிக்கு வட்டிபோட்டுக் கடன்காரனை மொட்டையடிக்கும் வமி சத்திலே வந்தவர். முன்னேர்களின் அடிச்சுவட்டை அணுவும் பிசகாமல் இன்றும் பின்பற்றிவருகிருர்.

"என்ன தாஹிர்! விளக்கையும் இந்தப் பையன்களையும் வைத்துக் கொண்டு உன் சமாதிக்காக நல்ல இடத்தை இப்போதே பொறுக்கி எடுக் கிருய் போலிருக்கிறதே'' என்று கிண்டலாகச் சிரித்துக் கொண்டே கேட்டார் கிழவர்.

நாஜிர்ஜீயின் கண்கள் சிவந்து உதடு கள் துடித்தன. விறைப்பாக நிமிர்ந்து நின்று "நீ, உன் அப்பன், பாட்டன் முப்பாட்டன் முதலியவர்கள் என் னிடமும் என் அப்பன் பாட்டன் முப் பாட்டனிடமும் கடனை வாங்கிக் கொண்டு துரோகம் செய்து பூமியிலே புதைத்து வைத்திருக்கும் எங்கள் சொத் தைத் தேடுகிறேன்'' என்று கடுகடுத் துச் சொன்னர்.

பாவம்! கிழவர் வாயடைத்துப் போனர். மேலும் அங்கே நிற்க முடி யாமல் அவமானத்துடன் புறப்பட் டார் அவர் "அடே! ஏன்போகிருய்? அது எங்கே யிருக்கிற தென்று சொல்லு. உனக்கும் ஒரு பங்கு கொடுக் கிறேன்'' என்ருர் நாஜிர்ஜீ மறுபடியும் கிண்டல் கலந்த வெறுப்புடன்.

விழுந்துவிட்ட நான்கண கிடைக் காததால் நாஜிர்ஜீக்கு பன்னிரண்டண மிச்சம். இதற்காக எப்படி அவரை குறை கூற முடியும்? கால் ரூபாயைக் கண்டுபிடித்திருந்தால் அது மற்ருெரு முக்கால் ரூபாயைக் கண்டுபிடித்திருக் கும்! மிட்டாய் நினைவில் வெறும் வாயைச் சப்பிக்கொண்டு திரும்பி ேைம்.

அப்பா, நாஜிர்ஜீயை 'தம்பி தாஹிர்' என்றுதான் கூப்பிடுவார். எப்போ தாவது 'நாஜிர்' என்று கூப்பிட்டுவிட் டால், 'நான் நாஜிர் அல்ல, உங்கள் தம்பி தாஹிர்தான்' என்று வணக்க மாகச் சிரித்துக்கொண்டே சொல்லு வார். 'இயற்கைப் பெயரிலிருக்கும் இன்பம் உத்தியோகப் பெயரிலேது?' என்றுகூடக் கேட்டிருக்கிருர்.

பணக்காரரென்ருல் நாஜிர்ஜீக்கு எட்டிக்காய்தான். அவர்களைத் தொலைத்து விடவேண்டும் என்று திட்டுவார். பணக்காரன் வீட்டை 'ஜப்தி' செய்யப் போகும்போது அவ ருக் குண்டாகும் மகிழ்ச்சியைச் சொல்லி முடியாது. ஏழையின் வீடாக இருந்தால் "ஐயோ அந்த ஏழை யைக் கஷ்டப்படுத்தவேண்டி யிருக் கிறதே'' என்று தன்னையே நிந்தித் துக் கொள்வார். பணக்காரனை மிரட் டிக் கொள்ளை கொள்ளையாக லஞ்சம்

வாங்குவார். தன்னளவில் நின்று கொள்ளாமல் குமாஸ்தாக்களுக்கும் கொடுக்கச் சொல்லுவார். இதனால் நாஜிர்ஜீமீது வரும் குற்றச்சாட்டுகள் குமாஸ்தாக்களின் மேஜையோடு முடிந்துவிடும். அவை மறுபிறப் பெடுக்க மற்றொரு பிரமதேவன் முளைத்துவர வேண்டும். தப்பித் தவறி ஒன்றிரு வழக்குகள் விசாரணைக்கு வந்தன. அப்பாவின் செல்வாக்கு அவற்றை அடித்துத் தள்ளிவிட்டது. ஜில்லா ஆபீஸ் சூப்பிரிண்டெண்டண் டின் சிபாரிசைத் தள்ளி விடமுடியுமா?

'லஞ்சம் வாங்கக்கூடாது' என்று அப்பா பலதடவைகளில் நாஜிர்ஜீக்கு உபதேசம் செய்தார். அந்தச் சமயத்தில் 'சரி' என்று ஒப்புக்கொண்டு போகும் அவர், தன் வழக்கத்தைக் கைவிடவே யில்லை. டிஸ்ட்ரிக்ட் முன்சீபாக ஒரு வெள்ளைக்காரனிருந்தபோது நாஜிர்ஜீ ஒரு சேட்டிடமிருந்து லஞ்சம் வாங்கிக் கொண்டார். இது வெள்ளைக்கார னுக்குத் தெரிந்துவிட்டது. அவன் இவரைத் தொலைத்துவிட முயன்றான், ஆனால் சாட்சி கிடைக்கவில்லை. சேட் டின் காரியம் அவனுக்குச் சாதகமாக முடிவுபெறவில்லை. இதனால் அவன் கோபித்துக்கொண்டு லஞ்சம் கொடுத் ததை ஒப்புக்கொண்டு சாட்சியம் கொடுக்க முன்வந்தான். நாஜிர்ஜீ தாற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப் பட்டார். புலன் விசாரணை மும்முர மாக நடந்தது. வெள்ளைக்காரனிடம் நாஜிர்ஜீ கெஞ்சியதும் கடைசியாகக் கதறியழுததும் பயன்படவில்லை.

அன்றிரவு அப்பாவிடம் வந்து சங் கோஜத்துடன் விஷயம் முழுவதையும் சொல்லி வருத்தப்பட்டார் நாஜிர்ஜீ. "உன் வாழ்நாளில் இதைவிட எத் தனையோ ஆபத்துக்களைச் சமாளித் தாகிவிட்டது. இப்போது புதிதாக என்ன ஆபத்து வந்துவிடப்போகிறது? எதுவந்தாலும் சரி, நானிருக்கும்போது நீ கவலைப்பட வேண்டியதில்லை" என்று சமாதானம் கூறிவிட்டு, சேட் டைப் பார்க்க அப்பா அவன் வீட்டுக் குப் புறப்பட்டார்.

இரண்டு மணி நேரம் கழித்து அவர் திரும்பி வந்தபோது முகத்தில் கவலைக் குறிகள் காணப்பட்டன. "விஷயம் மேலதிகார வெள்ளைக்காரனிடம் போய்விட்டது. இனி தன்னால் மாற முடியாது. அப்படிச் செய்தால் தனக்கு ஆபத்து வந்துவிடும் என்று சேட் பயப் படுகிறான்" என்றார் அப்பா.

"அண்ணா! இனி நான் என்ன செய் வது?"

"தாஹிர்! நீ கவலையில்லாமல் தூங்கு, நான் காலையில் எல்லாவற்றையும் கவ னித்து சரிப்படுத்திவிடுகிறேன்."

"ஏதோ ஆபத்து வரும்போலத் தோன்றுகிறது."

"கவலைப்படாதே தாஹீர்! பகவான் எல்லாம் நன்மைக்காகவேதான் செய் வார். நாளைக்கு எங்கள் ஆபீஸரிடம் சிபாரிசுக் கடிதம் வாங்கிப் போய் அந்த வெள்ளைக்காரனைப் பார்த்துச் சரிப் படுத்திவிடுகிறேன். நீ நிம்மதியாகத் தூங்கு."

"அண்ணா! எனக்காக நீங்கள் கண்ட வர்களிடமெல்லாம் போய்க் கெஞ்ச வேண்டாம். உங்கள் மதிப்பைவிட எனக்கு வரும் ஆபத்து பெரிதல்ல."

என் தாயார் அங்குதானிருந்தாள். "நீங்கள் நாளைக்கு கட்டாயமாக உங்கள் ஆபீஸரிடம் சிபாரிசுக் கடிதம் வாங்கி நடக்கவேண்டியதைச்செய்துவிடுங்கள். இந்த விஷயத்தைக் கேட்டது முதல் தங்கை பாத்திமா ஓயாமல் அழுது கொண்டிருக்கிறாள். அவளை என்னால் பார்க்கவே முடியவில்லை" என்றா ரவர்.

"அண்ணீ! அவளுக்கு என்ன தெரி யும்? நீங்கள்தான் தேறுதல் சொல்ல வேண்டும். வேலை போனால் போகிறது, அல்லா கொடுத்ததை வைத்துக்கொண்டு ஏதாவது தொழில் செய்து பிழைக்கலாம் என்று சொன் னாலும் கேட்கமாட்டேனென்கிறாள்.

ஜான் எந்தக் காலத்தில் மானமும் மரியாதையுமுள்ளவனாக வாழ்ந்துவிட்டேன், இப்போது அதற்காகக் கவலைப்பட ?"

அடுத்தநாள் காலைபத்து மணி இருக்கும். முகத்திலே புன்சிரிப்புத் தவழக் குதூகலத்துடன் நாஜிர்ஜீ வந்து சேர்ந்தார். "அண்ணா! வெள்ளைக்காரனின் நடவடிக்கை என் சம்பளத்தில் மாதம் இரண்டு ரூபாயுடன் தொலைந்தது" என்று சொல்லிக்கொண்டே சிரித்தார்.

எங்களுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. நாஜிர்ஜீ நடந்த கதையைச் சொல்லத் தொடங்கினார்.

அதிகாலையில் அனாதை விடுதியின் அதிபர், மௌலானா சாஹிபின் கையில் மூன்று ரூபாய்களை வைத்து மூன்று பையன்களை அனுப்பும்படிக் கேட்டேன். தான் நரிமுகத்தில் விழித்ததாக அவர் நினைத்து ரூபாய்களைக் கண்களில் ஒத்திக்கொண்டு மூன்று பையன்களை என்னுடன் அனுப்பினார். "வெள்ளைக்காரனின் கால்களில் விழுந்து பிடித்துக்கொள்ள வேண்டும். உங்களுக்கு நான் விருந்தளிக்கிறேன்" என்று பையன்களிடம் சொன்னேன். அனாதை விடுதி பையன்களைப்பற்றிக் கேட்கவா வேண்டும், அழுக்குப் படிந்த கிழிந்த கந்தலைத்தானே அவர்கள் உடுத்தி யிருப்பார்கள்! நானும் ஒரு கிழிந்த சட்டையையும் கோட்டையும் மாட்டிக் கொண்டேன். பங்களாவில் வெள்ளைக்காரனைக் கண்டதும் பையன்கள் அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு விசித்து விசித்து அழத் தொடங்கிவிட்டார்கள்!

"ஐயா! இப்படிக் கந்தலை உடுத்திக் கொண்டு கால்வயிற்றுக் கஞ்சிக்குமில்லாமல் எப்படியோ இந்தக்குழந்தைகளைக் காப்பாற்றுகிறேன். எனக்கு எந்தத் தண்டனையைக் கொடுத்தாலும் சரி. இந்தக் குழந்தைகளின் வயிற்றில் மட்டும் அடித்துவிடாதீர்கள். வேண்டுமானால் இவர்களையும் இவர்களின் தாயையும் தங்கள் பாதுகாப்பில் விட்டு விட்டு நான் சிறைக்குப் போய்விடுகிறேன்" என்றேன். அப்போது அவன் மனைவியும் அங்கே வந்துவிட்டாள். பிள்ளைகளைப் பார்த்த அவள் மனம் இளகி விட்டது. விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டு எனக்காக சிபாரிசு செய்தாள். என் சம்பளத்தில் மாதம் இரண்டு ரூபாய்களைப் பிடித்துக் கொள்ள வெள்ளைக்காரன் சம்மதித்து உத்தரவுகூடப் போட்டுவிட்டான்.

நாஜிர்ஜீ ஐந்து ரூபாய் செலவு செய்து அந்தப் பையன்களுக்கு ஓட்டலில் தடபுடலாக விருந்தளித்தாராம்.

எங்களிடையே நட்பும் ஒற்றுமையும் நாளுக்குநாள் நெருங்கிப் பலப்பட்டு வந்தது. ஹிந்துக்களாகிய நாங்கள் ஒரு முஸ்லிமுடன் நட்புப்பூண்டு கலந்து உறவாடுவதைக் குறைகூறித் தெருவாசிகள் ஜாடையாகத் தூஷித்தனர். மதப்பற்று வெறியாகமாறி மிருகவுணர்ச்சியை அந்தக் காலத்தில் அடைந்து விடவில்லையென்றாலும் இருமதத்தினரும் ஒற்றுமையாக விருப்பதைச் சகியாத சிலருமிருந்தனர்.

இருபத்தைந்து வருஷங்கள் பக்கத்து வீட்டுக்காரர்களாக வசித்து மனமொன்று பட்டிருந்த எங்களிடையே உணவுப் பிரச்னை மட்டும் பிளவுபட்ட இருகூறாக இருந்தது. விசேஷ நாட்களில் எங்கள் வீட்டுப் பலகார வகைகள் நாஜிர்ஜீயின் வீட்டிற்குப் போகும். பாதிமா, எங்கள் பூஜைப் பிரசாதத்தைக்கூட விரும்பிவாங்கிச்சாப்பிடுவாள். ஆனால் இன்றுவரை அவர்கள் வீட்டி விருந்து ஒருவகைப் பலகாரம்கூட எங்கள் வீட்டிற்கு வந்ததில்லை. அவர்களது விசேஷ நாட்களில் சிறந்த பழவகைகளை ஏராளமாக வாங்கியனுப்புவார் நாஜிர்ஜீ. தசராவுக்கும்தீபாவளிக்கும் யார் தடுத்தாலும் சரி எனக்குப் புதுத் துணிகளை வாங்கிக் கொடுக்காமலிருக்கமாட்டார்.

"தம்பி தாஹிர்! மைத்துனியிடம் சொல்லி உங்கள் வீட்டுப் பலகாரங்களை

ஒருநாளைக்காவது அனுப்பக்கூடாதா?'' என்று அப்பா கேட்பார்.

"போங்களண்ணு உங்களுக்கு எதிலும் கேலிதான்—அந்த நாட்டுப்புறப் பெண்ணுக்குச் சமைக்கத் தெரியாதென்றால் அதற்காக நீங்களென்னை இப்படிக் கேலி செய்கிறீர்களே'' என்று சிரிப்பார்.

எங்கள் ஆசாரத்திற்கு இழுக்கு வரக்கூடாது என்பதை மனசில் வைத்துக் கொண்டு இப்படி யெல்லாம் அவர் மாற்றிப் பேசுவதை நாங்கள் நன்றாக அறிந்திருந்தோம். ஹிந்து மதக் கோட்பாடுகளை நாஜிர்ஜீ நன்கறிந்திருந்ததோடு நாங்கள் அதைச்சரியாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கவலையும் கொண்டிருந்தார். முஸ்லிம் மதக் கோட்பாடுகளை அணுவும் பிசகாமல் நடந்து வரும் அவரின் இந்தப் பரந்த நோக்கம் பாராட்டத்தக்கதென்று நாங்கள் போற்றினோம்.

எங்கள் தெருவில் வசிக்கும் பெரியவர் ஒரு நாள் அப்பாவிடம் வந்து "அந்த முஸ்லிமிடம் எச்சரிக்கையாக இருங்கள். முஸ்லிம்கள் எப்படியும் தங்கள் ஜாதிக்குணத்தைக் காட்டியே விடுவார்கள். இதில் நான் எவ்வளவோ அனுபவப்பட் டிருக்கிறேன்.'' என்று தன் அனுபவப் புழுகு மூட்டையை அவிழ்த்துவிட்டார்.

"தாஹிர் என் அடுத்த வீட்டுக்காரன். மனிதத்தன்மை யுள்ளவன். எனக்கு அவன் துரோகம் செய்ய நினைத்தால் தன் பரிசுத்தத்தன்மையை அவன் இழப்பான். அதனால் எனக்கொரு ஆபத்தும் வந்துவிடாது. இதைப்பற்றி நானேன் கவலைப்பட வேண்டும்?'' என்று சாந்தமாகக் கூறிவிட்டார் அப்பா.

சேட் ராம் நாராயண் லாலா எங்கள் தெருவில் வசிப்பவர். தீவிர மதப் பற்றுள்ளவர். ஒவ்வொரு ஹிந்துவுக்கும் தன் வாழ்நாளில் ஒரு முஸ்லிமுடைய வாழ்வையாவது பாழ்படுத்த வேண்டியது கடமை யென்ற கொள்கை யுடையவர். தனது கொள்கையை அவர் வெளிப்படையாகவே பிரசாரம் செய்து வந்தார். சில சமயங்களில் அப்பாவுக்கு உபதேசம் செய்ய முனைவார்! ஒருதடவை உபதேசம் நடந்துகொண்டிருந்தது. சாந்தம் தவழும் அப்பாவின் முகத்தில் கோபம் கொதித்தது. "அப்படியானால் தாஹிரைக் கொலை செய்துவிடுங்கள் அல்லது எனக்கு விஷத்தைக் கொடுத்துவிடுங்கள்; இல்லையென்றால் உங்கள் எண்ணம் நிறைவேறாது'' என்றார் கடுமையாக. நிலைமை மோசமாவதைப் பார்த்த லாலா மற்றொரு நாளைக்கு வருவதாகச் சொல்லிப் போய்விட்டார்.

இது நடந்து இரண்டு நாட்களுக்குப் பின் ஒரு இரவு, எங்கள் வீட்டின்மேல் கற்கள் விழுந்தன. தம்பியின் தலை உடைந்து இரத்தம் வடிந்தது. தெருக்காரரெல்லாம் கூடிவிட்டார்கள். இது நாஜிரின் வேலைதான் என்றனர் சிலர், முஸ்லிம் தன் குணத்தைக் காட்டிவிட்டான் என்றனர் மற்றும் சிலர். தாஹிர் எங்கே என்று தேடினர் பலர். கொல்லைப்புறக் கிணற்று மேட்டிலிருந்து நாஜிர்தான் கல்லைப் போடுகிறான் என்று லாலா ஆர்ப்பரித்தார். இதற்குத் தகுந்தாற்போல நாஜிர்ஜீ அப்போது வீட்டிலில்லை. கல் விழுவது ஓய்ந்தும் கூட்டம் கலையவில்லை. நாஜிர்ஜீ அப்போது வந்தார். கூட்டத்தினர் திட்டினர், லாலாவும் அவரைப் பின்பற்றும் சில வாலிபர்களும் பேசிய பேச்சை வாயால் சொல்லமுடியாது. ஹிந்து மதம் என்ற கப்பலைக் கவிழ்க்க நாஜிர்ஜீ கடல் கன்னியாக வந்துவிட்டதாக வர்ணித்தனர். உவமை வெகு அழகாகத்தானிருக்கிறது!

விஷயத்தை அறிந்துகொண்ட நாஜிர்ஜீக்குத் துக்கம் தாளவில்லை. "அண்ணு! நீங்கள்கூட என்னை......''

"இல்லை தம்பி தாஹிர். நீ அப்படி ஒருபோதும் செய்யமாட்டாய். இது

எனக்குத் தெரியும். நீ கவலைப் படாதே" என்று நாஜிர்ஜீ வாக்கியத்தை முடிப்பதற்கு முன்பே அப்பா சொன்னார். கூட்டம் அப்பாவின் அறியாமைக்காகத் திட்டிற்று! லாலா பேயாட்டமாடிப் பொழிந்து தள்ளினார். ஹிந்து மதத்தைத் தொலைக்க நாங்கள் ஐந்தாம் படையாக வேலை செய்கிறோமாம்!

மூன்று நாட்களுக்கப்புறம் மறுபடியும் கல் விழுந்தது. சில விநாடிகளுக்கு மேல் அது நீடிக்கவில்லை. தெருவில் கூட்டம் குறைவில்லாமல் கூடிவிட்டது. சிலர் நாஜிர்ஜீயை தேடினர். அவர் வீட்டிலில்லை! முன்பு சும்மா இருந்தவர்களும் இப்போது நாஜிர்ஜீ மீது குற்றம் சுமத்தினர். அப்போது நாஜிர்ஜீ ஒரு வாலிபனைப் பிடித்திழுத்து வந்தார். அவருடைய பிடியிலிருந்து அவன் தப்பமுயன்றான். முடியவில்லை. "லாலாஜீ! நீங்களே விசாரியுங்கள்" என்று நாஜிர்ஜீ கத்திக்கொண்டே வந்தார். அந்த வாலிபன் எங்கள் தெருவில் வசிக்கும் 'கீசு' என்பவன். லாலா அவனுக்கு தினம் ஒரு ரூபாய் கூலி பேசி எங்கள் வீட்டில் கல்லைப் போடச் சொன்னதாக ஒப்புக்கொண்டான். கல் விழுவதைக் கண்டுபிடிக்க நாஜிர்ஜீ மூன்றிரவுகள் கண்விழித்துக் கொல்லைப் புறத்திலே காத்திருந்தாராம். லாலாவையும் கீசுவையும் போலீஸில் ஒப்படைக்கக் கூட்டத்தினர் கட்டாயப் படுத்தினர். இருவரையும் மன்னித்து அன்புகாட்டும்படி அப்பா வேண்டிக் கொண்டார். ஆனாலும் லாலா சில திட்டுகளையும் கீசு சில அடிகளையும் வாங்காமலிருக்க முடியவில்லை.

கூட்டம் கலைந்த பின் நாங்கள் மகிழ்ச்சியோடு வீட்டினுள் சென்றோம். ஒரு பெரிய கவலை—அவமானம்—ஒழிந்தது. இந்த நிகழ்ச்சியால் எங்கள் ஒற்றுமை மேலும் வலுப்பட்டது.

நான் மேல் படிப்புக்காக நாகப்பூர் போனேன். அப்பாவின் ஒவ்வொரு கடிதத்திலும் நாஜிர்ஜீயைப் பற்றி ஏதாவது எழுதப்பட்டிருக்கும். சில மாதங்களுக்குப் பிறகு பாதிமா நோய்வாய்ப் பட்டிருப்பதாக அப்பாவிடமிருந்து கடிதம் வந்தது. பின்பு ஒரு கடிதத்தில் பாதிமா காலமாகிவிட்டதாக வருத்தத்துடன் எழுதியிருந்தார். எனக்கு தேறுதல் கூற அவர் தவறவில்லை. ஊருக்குப் போய் நாஜிர்ஜீயைக் கட்டிக்கொண்டு அழ வேண்டும் போல ஆகிவிட்டது எனக்கு. பரீட்சை என்ற பெரும் பூதம் நான் அப்படிச் செய்யாமல் தடை செய்துவிட்டது.

பரீட்சை முடிந்து நான் ஊருக்குப் புறப்பட்டேன். என் நண்பன் தனது நண்பனை அறிமுகப்படுத்தினான். அவர் ஒரு பயங்கரவாதியாம். நான் அவரையும் ஊருக்கு அழைத்துவந்து சென்னைக்கு அனுப்ப வேண்டுமாம். தாட்சண்யத்தால் மறுக்க முடியவில்லை. நானும் அவரும் ஊர் வந்து சேர்ந்தோம். வீட்டிலே நண்பர் பதுங்கியிருந்தார். போலீஸுக்கு எப்படியோ தகவல் கிடைத்து இன்ஸ்பெக்டர் ஜவான்களுடன் சோதனைபோட வந்துவிட்டார். இரவு 9 மணி இருக்கும். அப்பா சோதனை வாரண்டை ரத்து செய்வதற்காக ஜில்லா சூப்பிரெண்டெண்டண்டைப் பார்க்கப் போனார். அவர் தமது வாழ்நாளெல்லாம் சம்பாதித்துப் போற்றிப் பாதுகாத்த பெருமையை என் செய்கை பாழ்படுத்திவிடும் நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டது. என் தாட்சண்யம் தந்தைக்கு நாசத்தைத் தாக் காத்திருந்தது.

நாஜிர்ஜீ அப்போதுதான் வெளியேயிருந்து திரும்பி வந்தார். என்னைக் கேட்டபோது அவரிடம் உண்மையைச் சொல்லிவிட்டேன். பயங்கரவாதியைத் தன் வீட்டிற்கு அனுப்பிவிடும்படி அவர் கேட்டார். நான் மறுத்துவிட்டேன். "என் மானம் மரியாதையை விட அண்ணாவின் மானமும் மரியாதையும் உயர்ந்தவை, அவற்றுக்கு இழுக்கு வருவதை என்னால்

பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது'' என்று சொல்லிச் சென்றுவிட்டார்.

அப்பாவின் முயற்சியால் ஒரு பயனும் உண்டாகவில்லை. சோதனை நடந்தது. எங்கள் குடும்பத்தாரைத்தவிர வீட்டில் யாரும் இல்லை. நண்பர் எப்படி மாயமாக மறைந்தார் என்பதே எனக்கு ஆச்சரியமாகவிருந்தது. நாஜிர்ஜீயின் வீட்டில் அமுங்கிக்கிடக்கிறார் என்ற சந்தேகம் இன்ஸ்பெக்டருக்குண்டாகிவிட்டது. அந்த வீட்டையும் சோதிக்க வந்தாரவர். வாரண்டில்லாமல் சோதிக்க அனுமதிக்க மாட்டேன் என்று தடுத்தார் நாஜிர்ஜீ. இன்ஸ்பெக்டர் முரட்டுப் பிடிவாதம் செய்தபோது "ஐயா! என் மனைவியிருக்கும் ஒரு அறையைத் தவிர மற்ற இடங்களைச் சோதனை போட்டுக்கொள்வதில் ஆட்சேபணை யில்லை" என்று ஒப்புக்கொண்டார்.

இன்ஸ்பெக்டர் ஒரு முஸ்லிம். பாதிமா இறந்துவிட்டது அவருக்கு நன்றாகத் தெரியும். "உமது மனைவி இறந்துவிடவில்லையா யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்?" என்று கேட்டார்.

"இப்போது வீட்டிலிருப்பது என் வைப்பாட்டி. எனக்கு இழுக்கு வருவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அவள் பெயர் கெடுவதை என்னால் சகிக்க முடியாது. இது போலீஸ் ராஜ்யமல்ல, வாரண்டில்லாமல் உங்களிஷ்டப்படி சோதனை போட. நான் ஜங்கேஷ்கான் வமிசத்தில் வந்தவன். உயிரைவிட மானம் பெரிதென்று நினைப்பவன். நாங்கள் இன்றும் அதை நிரூபிக்கத் தயார்'' என்று பொழிந்து தள்ளிவிட்டார்.

அந்தச் சமயத்தில் அப்பாவும் வந்துவிட்டார். "ஐயா! நீங்கள் இன்ஸ்பெக்டராக இருப்பதால் எங்களை மட்டும் மரியாதை இல்லாத புழுக்களாகவோ கேவலம் பிச்சைக்காரர்களாகவோ நினைத்துவிடாதீர்கள். நீர் பிடிவாதமாகச் சோதனை செய்தால் நாளைக்கு நான் நடவடிக்கை எடுத்துக்கொள்வேன். என் வீட்டில் சந்தேகப் பேர்வழி கிடைக்கவில்லையென்பதற்காக ஊரையெல்லாம் உபத்திரவப் படுத்தவேண்டாம்'' என்று எச்சரித்தார்.

வெற்றிகரமாக வாபசானார் இன்ஸ்பெக்டர். வைப்பாட்டி விஷயமாக ஊரார் நாஜிர்ஜீயைக் கேலி செய்தனர். "அண்ணாவுக்காக நான் எந்த அவமானத்தையும் சகிப்பேன்'' என்று சொல்லிக்கொண்டார் நாஜிர்ஜீ.

தனியே இருந்த நாஜிர்ஜீக்கு எங்கள் வீட்டிலிருந்து சாப்பாடு போய்க் கொண்டிருந்தது. நான் உள்ளூரிலேயே வேலையை ஏற்றுக்கொண்டேன். நாட்டிலே வகுப்புவாதப் பேய் தொத்துநோய் போலப் படர்ந்துகொண்டிருந்தது. மனிதர் இதன் வசப்பட்டு பகுத்தறிவையும் மனிதத் தன்மையையும் இழந்து வந்தனர்! ஒரே நாட்டு சகோதரர் ஒருவரை ஒருவர் வெட்டிச் சாய்த்துக்கொண்டனர். கொலை வெறி மிருக பலங்கொண்டு அப்பாவிகளின் உயிரைச் சூறையாடிற்று.

ஆபீசிலிருந்து திரும்பிய அப்பா கடைத்தெருவுக்குப் போனார். மத வெறிக்கு இலக்கான ஒரு கயவன் அவர் முதுகில் கத்தியைப் பாய்ச்சிவிட்டான். இரு நாய்கள் சண்டையிட்டுக் கொண்டதைப்பற்றிய பேச்சில் தொடங்கிய கலவரம் எத்தனையோ பேர்களின் உயிரைப் பலிகொண்டும் அடங்காமல் ஆர்ப்பரித்தது! அதற்குப் பலியானவர்களில் அப்பாவும் ஒருவர்.

அடையாளம் தெரிந்து போலீஸார் அப்பாவை வீடுகொண்டுவந்து சேர்த்தனர். இரவு முழுவதும் டாக்டர்கள் எவ்வளவோ முயன்றனர். அடுத்த நாளின் முகத்தில் விழிக்காமல் அவர் போய்விட்டார். எனக்கு உலகமே இருண்டுவிட்டது. பிரேத ஊர்வலம் புறப்படும் நேரத்தில் பெருங்கூட்டம் கூடியிருந்தது. நாஜிர்ஜீ அங்கு காணப்

படவில்லை. வகுப்புவாதிகள் நாஜிர்ஜீயைக் குறைகூறினர். பாடையைத் தூக்கும்போது அவர் தன் வீட்டிலிருந்து வெளிவந்தார். அப்பாவின் பாதங்களில் மலர்மாலையை வைத்து ஒரு நிமிஷம் ஸ்தம்பித்து நின்றவர் பேசாமல் வீட்டினுள்ளே போய் கதவைச் சாத்திக்கொண்டார். அவருடைய கண்கள் வீங்கியிருந்தன.

"பாருங்கள் ஒன்றும் தெரியாத பைத்தியக்காரனைப்போல நடக்கிறான். பாபுஜீயின் கொலைக்குப் பிரதி செய்யாமலிருக்கப் போவதில்லை" என்று லாலா ஆத்திரமாகப் பேசினார்.

மூன்று நாட்களாகியும் நாஜிர்ஜீயின் கதவு திறக்கவில்லை. கூப்பிட்டால் "என்னை கஷ்டப்படுத்தாதீர்கள், நீங்கள் வருத்தப்படாமலிருக்கவேண்டும்" என்று சொல்லிவிடுவார். நான்காம் நாள் கதவு திறந்தது! பக்கீரின் வேஷத்தில் நாஜிர்ஜீ வெளியே வந்தார். அவர் கையில் ஒரு பெட்டியிருந்தது. அதை என்னிடம்கொடுத்து, "அப்பா! என் வாழ்நாளில் இந்த இரண்டாயிரம் ரூபாய்தான் சம்பாதிக்க முடிந்தது. இதை உன் கலியாணத்திற்காக செலவு செய். எனக்கிருந்த மனைவியும் போய்விட்டாள். ஒரே அருமை அண்ணன் அவரும் போய்விட்டார். பாவிகள் அவரை நம்மிடமிருந்து பறித்துக்கொண்டனர். இனி அண்ணியின் முகத்தில் என்னால் விழிக்க முடியாது. ஒரு பைத்தியக்கார முஸ்லிம் கையால் அண்ணா இறந்தார் என்று என் நெஞ்சைப் பிளக்கிறது. நான் மக்காவுக்குப் போகிறேன். இந்த நாட்டில் இருக்க இனி என்னால் முடியாது."

"சித்தப்பா! நீங்களும் எங்களை அனாதையாக விட்டுப்போகிறீர்களா?" என்று அழுது பிரலாபித்தேன்.

அவர் என் தலையைத் தடவிக் கொடுத்து, "மனிதத் தன்மையை இழந்துவிட்ட நாட்டில் என்னால் இருக்க முடியாது. வகுப்புவாத அந்தகாரம் மறையும்வரை அளவில்லாத அக்கிரமங்கள் நடக்கும். இதைப் போக்க சாத்விக மகானை அருளும்படி அல்லாவிடம் வேண்டுவதற்காக மக்கா போகிறேன். என்னைத் தடுக்கவேண்டாம்" என்று சொல்லிப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

ஒரு வருடத்திற்குப் பின் மக்காவிலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் "தாஹிர்கான் என்ற கிழவர் இங்கே வந்து சேர்ந்தார். ஆனால் இன்று அவர் இந்த உலகத்திலில்லை" என்று எழுதியிருந்தது. நாங்கள் தந்தையை நினைக்கும் போதெல்லாம் நாஜிர்ஜீயையும் நினைத்துக்கொள்ளுகிறோம்.

✻

மர்மம்

"நான் ஒரு மர்மமான நாவல் எழுதுகிறேன்!"
"யார் அதை வெளியிடுகிறார்கள்?"
"அதுதான் மர்மம்!"

—டிட்பிட்ஸ்

தத்துவார்த்தி

தத்துவார்த்தி என்பவன் தனக்கு ஏதேனும் நிகழும் வரை, அதற்காக என்ன செய்வது என்று அறிய முடியாதவன்.

—ஹென்றி ஹாவி

மங்களம்

"அந்த நாடகம் மங்களகாமாக முடிந்ததா?"
"ஆமாம். அது முடிந்தவுடன் எல்லோருமே சந்தோஷப்பட்டார்கள்"

டால்டாவில் தயாரித்தால் முதல் தரமாயிருக்கும்

சுத்தம் செய்த முழுக்கோழியின் வெளிப்புறத்தைக் கொத்தி புளிசேர்த்த இலவங்க மசாலாவை பூராவும் தேய்க்கவும். அரை வேகவைத்த அரிசி (முன்னமேயே வறுத்தது), பொரித்த ஈரல், இருதயம், மசாலா துவையல் இவைகளை கோழியினுட் திணிக்கவும். சமைக்கும் பாத்திரத்தின் அடிப்பாகத்தில் தாராளமாக டால்டாவை தடவி, வெங்காயத்தைப்பரப்பி கோழியை அதற்குமேல் வைக்கவும். சுற்றிவர இன்னும் வெங்காயம், இரண்டாக்கிய உருளைக்கிழங்கு இவைகளை அடுக்கி உப்பை தூவவும். மூடியை பிசைந்த கோதுமை மாவினால் பாத்திரத்துடன் ஒட்டவைத்துசிறுசூட்டில் சமைக்கவும்.

உங்கள் குடும்பத்தினரின் உடல் நலத்திற்கு ப்ரூட் ஸாலட் தேவை!

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353,
பம்பாய் 1

HVM. 99-50 TM

"சோப் பெர்பியூமரி & காஸ்மெடிக் ரெவியூ", லண்டன் கூறுகிறது

the Enchanting Perfume of the East

IN

Gawo

Sandal Soap.

rapturously alluring & 'MYSTIC'

It will delight you

GANGA WORKS ADYAR INDIA

காவோ சந்தன சோப்

"காவோ சந்தன சோப்" மிகச் சிறந்த முறையில் தயாரிக்கப் பட்டிருக்கிறது. இது எல்லாவகையிலும் இங்கிலாந்தில் தயாராகும் சிறந்த வாசனை சோப்புகளுக்கு ஈடாக விளங்குகிறது. நாங்கள் இதுவரை ரசித்திருக்கும் சந்தன வாசனைக்குள் சிறந்தவைகளில் காவோ சோப்பின் இனிய சந்தன வாசனையும் ஒன்று.

கங்கா ஒர்க்ஸ் :: அடையாறு, மதராஸ்-20.

சக்தி ★ மாதப் பத்திரிகை

தனிப் பிரதி 'தபால்'	0 8	ஒரு வருஷம்	6 0
ஆறு மாதம்	3 8	2 வருஷம்	11 0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப் பிரதி	0 9	ஆறு மாதம்	4 0
ஒரு வருஷம்	7 0	2 வருஷம்	13 0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப் பிரதி	0 10	ஒரு வருஷம்	8 0
ஆறு மாதம்	4 8	2 வருஷம்	15 0

சக்தி காரியாலயம்

சென்னை 14.

என்ற விலாசத்திற்குச் சந்தாத்தொகை அனுப்பவேண்டும்

கட்டுரை ஆசிரியர் காரைக்குடி அழகப்பா கல்லூரியின் பொருளாதார ஆசிரியர். உற்பத்தி உயர்ந்தால்தான் இன்று நமது நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். சில மாதங்களுக்குமுன் எழுதிய கட்டுரையேயாயினும் இன்றும் பிரசினை தீர்ந்தபாடில்லை யல்லவா ?

உற்பத்தி உயர...

○

வி. கே. சி. நடராஜன்

பெரும் பணக்காரன் ஒருவன் உல்லாசமான வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் உண்டாக்கிக் கொள்ளக் கூடிய அளவுக்கு மேலேயே அவனிடம் பொருள்கள் இருக்கின்றன. வேண்டியதெல்லாம் கொஞ்சம் முயற்சி தான். முயன்றால் குபேர சம்பத்தும் குறையா வாழ்வும் கிட்டும். இவ்வளவெல்லா மிருந்தும் கூட அவன் வசதியெதுவு மின்றி வாடிக் கிடக்கிருன் என்ருல் புதுமையாகத்தான் இருக்கும். பணக்காரனுவது, வசதியில்லாமல் வாடவாவது—இதென்ன பைத்தியக் காரத்தனம் என்று சிரிக்கத் தான் தோன்றும். ஆனால் உண்மையிலேயே, இப்படி ஒரு நிலை இருக்கத்தான் செய்கிறது.

இன்றைய இந்தியாவையே எடுத்துக் கொள்ளலாம்—அதன் நிலையைக் கவனித்தால் உண்மை புலப்படும். கனியும் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தந்த நாடு இது. பட்டை நூற்று பல நாடுகளுக்கு ஆடையளித்து மானங் காத்த பெருமை நம்முடையது. தொழில் வளம் பெருக வசதிகள் படைத்த நாடு இந்திய நாடு—மக்கட் செல்வம் மலிந்த நாடும் நமது நாடுதான்—இருந்தும், தேவைகள் விரிந்து வசதிகள் குறைந்து வாழ்க்கை நலமிழந்து நலிந்து கொண்டிருக்கும் நாடும் இதுவே.

இனிய பொழில்களும் நெடிய வயல்களும் நிறைந்த இந்த நாட்டிலே,1948-ம் ஆண்டு ஜூன்மாதம் முடிய இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் 17,00,000 டன்களாகும். ஆறு மாதத்துக்குள் இவ்வளவு! இன்றைக்கோ, 12 அவுன்ஸ் ரேஷன் வாங்கிய காலம் போய், 6, 8 அவுன்ஸ் ரேஷனில் வந்து நிற்கிறது. நமது நிலை இன்று எங்கும் உற்பத்தியை மிஞ்சிய தேவைதான். ஆண்டொன்றுக்கு தலைக்கு 10 கெஜம் வீதம் தான் துணி உற்பத்தி நடக்கிறது. தலைக்கு 8 பவுண்டு உருக்குதான் உற்பத்தியாகிறது. சர்க்கரை, சிமெண்ட், காகிதம், மண்ணெண்ணெய், தீப்பெட்டி, உப்பு முதலிய எல்லாமே பற்ருக் குறை உற்பத்தியின் பத்தியில்தான் அடங்கு

கிறது. தேவைக்கு உகந்த உற்பத்தி யில்லே. தேவைகளே வளர்க்கும் இரண்டு பொருள்களின் உற்பத் திக்கு மட்டும் நாட்டில் குறைவே யில்லே. அவை பண உற்பத்தியும், மக்கட் செல்வமுமே!

உற்பத்தியை மிஞ்சிய தேவை யால், தேவையான பொருள்கள் அரிதாகி விடுகின்றன. பொருள் அரிதாகி விட்டாலே அதிக விலே கொடுக்க வேண்டியிருக்கும். பண வீக்கம் வேறு இருப்பதால் பொருள்களின் விலே வாசிக்கு கேட்க வேண்டுமா? வாழ்க்கை யின் நிலே உயரா விட்டாலும், விலே உயர்ந்து விட்டது. இதனுல் பாட் டாளி பாடு திண்டாட்டம், பணக் காரன் பாடு கொண்டாட்டம். விலே வாசி விண்ணிட்டு உயர்வதால் போதாத ஊதியத்தைக் கொண்டு வாழும் வகையறியாது வாடி வதங்குகின்றனர் பாட்டாளிகள். ஊதியத்தை உயர்த்த வேண்டு மென்ற கோரிக்கை பலத்து, வேலே நிறுத்தங்களிலும் கதவடைப்புக் களிலும் முடிந்து கொண்டிருக்கின் றன. மக்கள் மனதிலே அமைதி யில்லே. அதற்குப் பதிலாக, கொந் தளிப்பும், குரோதமும், ஏக்கமும், திருப்தியின்மையுமே குடி கொண் டிருக்கின்றன.

உற்பத்தி உயராது போனுலும் ஒரே நிலேயிலாவது இருந்துகொண் டிருந்தால் நல்லது. முன்பிருந்த உற்பத்திக்கும் குறைந்து விட்டது இன்றைய நிலே. உற்பத்தி குறைந்து பொருளாதார நெருக்கடி வளர்ந் திருக்கிறது. மிதமிஞ்சிய தேவை யும் மிகக் குறைந்த உற்பத்தியும் இருக்கிற நிலே உள்ளவரை, அக விலே ஏற்றத்துக்கும் குறைவிருக் காது. கள்ள மார்க்கெட்டுக்கும் பஞ்சமிருக்காது. அத்யாவசியப் பொருள்கள் கிடைப்பது அரிதாகி விட்டன. கிடைக்கும் பொருள் களுக்கும் யானே விலே குதிரைவிலே கொடுக்க வேண்டியிருக்கிறது. நாளொன்றுக்கு நாலணு சராசரி வருமான முள்ள இந்த நாட்டு மக்களில் எத்தனே பேருக்கு அப் படிக் கொட்டிக் கொடுத்துப் பொருள் வாங்கும் சக்தியிருக் கிறது?

யுத்த காலத்திலிருந்த நெருக்கடி யிலும்கூட உற்பத்தி குன்றவில்லே. யுத்த காலத்தில் உற்பத்தி உச்ச நிலேயை அடைந்திருந்தது என்றே சொல்ல வேண்டும். ஆனுல் யுத்தம் முடிந்தவுடன் உற்பத்தி வெகு வாகச் சுருங்கி விட்டது. நமது நாட்டிலிருக்கின்ற உற்பத்திச் சாத னங்கள் முழுவதும் உபயோகப் படுத்தப் படுவதில்லே. புதிதாகத் தொழிலே ஆரம்பித்து உற்பத் தியை உயர்த்தாது போனுலும் கூட, இருக்கின்ற சாதனங்களின் சக்தியையாவது பூரணமாக உப யோகித்து உற்பத்தியை ஒருவாறு பெருக்கி யிருக்கலாம். 1947-ம் ஆண்டில் யந்திர சாதனங்களால் உற்பத்தி பண்ணக் கூடிய அள வோடு ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மை தெரிய வரும். சில முக் கிய பொருள்களே மட்டும் எடுத் துக் கொள்வோம்.*

இது போக, பொருள்களே ஓரி டத்திலிருந்து இன்னெரு இடத் திற்குக் கொண்டு போகும் ரயில் களுக்கும் கப்பல்களுக்கும், உற் பத்தி செய்யும் யந்திரங்களே ஓட்டு வதற்கும் மிக அத்தியாவசியமான நிலக் கரியை உற்பத்தி பண்ணக்

---

* அட்டவணே 23-ம் பக்கம் பார்க்க.

பொருள்	உற்பத்தியான அளவு	உற்பத்தி பண்ணகூடிய அளவு
நூல்... ...	1320,000,000 பவு	1600,000,000 பவு
துணி......	3838,000,000 கெஜம்	4700,000,000 கெஜம்
உருக்கு...	850,000 டன்	1264,000 டன்
சிமென்ட்...	1344,000 டன்	1935,000 டன்
காகிதம்...	86,000 டன்	11,00,00 டன்

கூடிய சக்தியின் அளவு 30 மில்லியன் டன்கள். நிலக்கரிச் சுரங்கங்களைச் சரியானபடி பயன் படுத்தி, உற்பத்தி பண்ண முயன்றால் வருஷம் ஒன்றுக்கு $1\frac{1}{2}$ மில்லியன் டன்கள் வீதம் உயர்த்திக்கொண்டே போய் வருஷத்துக்கு 41 மில்லியன் டன்கள் உற்பத்தி பண்ணக் கூடிய சக்தியை அடையலாம். ஆனால் உற்பத்தியின் அளவு 27 அல்லது 28மில்லியன் டன்களுக்கு உட்பட்டுத்தான் இருக்கிறது. நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரை போதாமல் க்யூபாசர்க்கரை இறக்குமதி செய்யப்படுகிறது. பர்மா பாரசீகங்களிலிருந்து மண்ணெண்ணெய் வரவேண்டி யிருக்கிறது—பாதி ரேஷன் கொடுக்கும் நாட்டில் உணவு உற்பத்தியைப் பற்றி பேசவே வேண்டியதில்லை!

இப்படிக் குறைந்து வரும் பொருள் உற்பத்தியைத் தடுத்து உயர்த்தாவிடில் நாட்டிற்கு உய்வில்லை என்பதை யுணர்ந்த தலைவர்கள் உற்பத்தியை உயர்த்தும் பணியில் இறங்குமாறு பாட்டாளிகளையும் பணக்காரர்களையும் உத்ஸாகப் படுத்தினார்கள். தொழில் மகாநாட்டைக் கூட்டினார்கள். அதன் பயனாக இருக்கின்ற உற்பத்தி சக்தியை யாவது பூரணமாகப் பயன் படுத்த வேண்டும். அதற்கு இருக்கின்ற மூலப் பொருள்களைச் சரியானபடி விநியோகிக்க வேண்டும். போக்குவரத்து சங்கடங்களைக் குறைத்து பாட்டாளி பணக்கார ரிடையே வலுத்துவரும் பிணக்கைப் போக்கிச் சமாதானம் செய்யவேண்டும். என்று முடிவு செய்தார்கள். "உண்டாக்கு அல்லது ஒழி" என்றார் ஜவாஹர். அதைப் பின்பற்றிப் பல பெரியார்கள் உற்பத்தியை உயர்த்த வேண்டுமென வேண்டுகோள் விடுத்தனர். தொழிலாளர் தகராறு ஏற்படாதவாறு செய்ய அரசாங்கம் தொழிலாளர்களோடும் முதலாளிகளோடும் தற்காலிகமாக மூன்று வருஷ ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது. ஒப்பந்தமாகி ஆண்டொன்றுக்கு மேலாயிற்று. உற்பத்தி மட்டும் உயர்ந்ததாகத் தெரியவில்லை. உற்பத்தி உயரவில்லையே என்றால் பணக்காரன் பாட்டாளியைக் காட்டி, "இவன் சும்மா இருப்பதே இல்லை, சம்பளம் போதாது, அலவன்ஸ் காணாது, நீண்ட நேரம் வேலை செய்ய முடியாது என்று சொல்லுகிறான். அடிக்கடி வேலை நிறுத்தங்கள் செய்து உற்பத்தியை ஸ்தம்பிக்கச் செய்கிறான். சமயங்களில் யந்திர சாதனங்களையும் அழித்து விடுகிறான். வேறு ஆட்களைக் கொண்டாவது வேலையைத் தொடங்கலா மென்றால் மறியல்

செய்கிறன். இந்த இக்கட்டான நிலையிலே நாங்கள் எப்படி உற்பத்தியைப் பெருக்க உதவ முடியும்" எனக் கூறி கையை விரிக்கிறன். பாட்டாளியோ, "ஐயா பசி, பாதி வயிற்றுக் கஞ்சி வார்க்கக் கூடப் பற்ருத ஊதியத்தைக் கொடுத்தால் என் பசி ஆறி விடுமா? பட்டினி கிடக்கும்போது பாரமார்த்திகம் பேசமுடியுமா? உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் கிடைக்கும்படியாகவாவது ஊதியம் கொடுக்க வேண்டாமா? எங்கள் பிள்ளைகள் மட்டும் வாயும் வயிறு மில்லாமலா பிறக்கின்றன? வாழத்தான் முடியவில்லை என்ருல் ஜீவிக்கவாவது வேண்டாமா? கள்ள மார்க்கட்டில் கொள்ளை லாபமடிக்கும் இந்தப் பதுக்கல் பேர்வழிகள் உற்பத்தியை உயர்த்த முடியவில்லையே என்று நீலிக்கண்ணீர் வடிப்பது நியாயமா? நாங்கள் வறுமையால் வாடினல் இவ்வையமும் வாடாதா? உற்பத்தி உயராவிடில் நாங்களா பொறுப்பாளிகள்? உழைப்பவர் பலர், பிழைப்பவர் சிலரா? இந்தச் சிலருக்காக உழைத்துடலம் ஓய வேண்டுமா? உழை என்ருல் உடலில்தான் உறுதி வேண்டாமா?" என நெஞ்சங் குமுறித் துடிக்கிறன் தொழிலாளி.

முதலாளியும் பாட்டாளியும் பரஸ்பரம் ஒருவரை யொருவர் குறைகூறிக் கொள்ளுகின்றனர். இருவர் கூற்றிலும் உண்மையுண்டு. வேலை நிறுத்தம் செய்ததால் உற்பத்தி குறைந்த தென்னவோ உண்மைதான்! வேலை நிறுத்தத்தின் காரணமறிந்து பாட்டாளியின் குறையை நிவிர்த்தி செய்து உற்பத்தியை உயர்த்தி யிருக்கலாம் பரிகாரம் தேடுவதற்குப் பதிலாகக் கதவடைப்புக் கொள்கையைக் கையாண்டதேனே தெரியவில்லை. மேலும் உற்பத்தி பண்ணப்பட்ட பொருள்களையும் பற்ருக் குறைப் பிரதேசங்களுக்கு அனுப்புவதற்குப் பதிலாக பாகிஸ்தான் எல்லைப் புறத்தில் யாருக்கும் தெரியாதபடி மறைத்துக் கொண்டு போய்க் குவிப்பதின் மர்மமென்னவோ தெரியவில்லை. கொள்ளை லாபமடிக்கும் நோக்கத்தால் கள்ளத்தனமாக எல்லைப் புறங்களில் பொருளைக் குவித்து அங்கிருந்து அண்டை நாடுகளுக்கு அனுப்பி அதிக விலைக்கு விற்கிறர்கள். இந்தப் பேராசைப் பேய்களுக்கு நாட்டின் நலத்திலும் மக்களின் சேமத்திலும் நாட்டமிருக்க முடியாது. இது நாடறிந்த விஷயம்.

நாட்டிலோ பணத்துக்குப் பஞ்சமில்லை. உடலுழைப்பைத் தரும் மக்களுக்கும் குறைவில்லை. மூலப் பொருள்களுக்கோ முடையேயில்லை. யந்திர சாதனங்கள் மட்டும் தான் போதிய அளவில்லை. இருக்கின்ற சாதனங்களையும் பூரணமாகப் பயன் படுத்தவில்லை. புதுத் தொழில்கள் பலவற்றை ஆரம்பிக்கலாம் என்ருல், பணக்காரர்கள் தங்கள் பணத்தைப் பொருளுற்பத்தியில் போடப் பயப்படுகிறர்கள். நாட்டில் அரசியல் பொருளாதார அடிப்படையே மாற்றியமைக்கப் படுமோ என எண்ணிப் பணத்தைப் பதுக்கிக்கொண்டிருக்கிறர்கள். தொழில்கள் நாளை தேசீயமயமாக்கப் பட்டு விட்டால் என்ன செய்வது?

இன்றைக்குப் போடும் முதல் முழுவதும் போனதுதானே என எண்ணுகிறார்கள். இவர்கள் எல்லாவற்றையும் 'நான், எனது' என்ற கண் கொண்டு பார்க்கும் இந்தச் சூழ்நிலையில் பணத்தை வெளிக்கிளப்பி உற்பத்திக்கு உதவுவார்களா என்ன? உதவ மாட்டார்கள்.

பண வீக்கத்தைக் குறைக்கத் தாங்கள் அனுஷ்டிக்கப் போகும் திட்டத்தைப் பற்றிய அறிக்கையில், புதுத் தொழில்களை ஆரம்பித்து உற்பத்தியைப் பெருக்குபவர்களுக்கு பல சலுகைகள்காட்டுவதாக, அரசாங்கம் வாக்களிக்கிறது. வருமான வரி சம்பந்தமான யந்திரத் தேய்வு அலவன்ஸைக் கட்டுப்படுத்தும் தற்போதைய விதிகளைத் தளர்த்தி புதிய தொழில்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரை வருமான வரியிலிருந்து விதிவிலக்கு அளித்து, கைத் தொழில்களுக்காக இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருள்கள் யந்திர சாதனங்கள் முதலியவற்றிற்கு உள் நாட்டு உற்பத்தியை பாதிக்காத அளவு சுங்கவரி விஷயத்தில் வசதிகள் அளித்து உற்பத்தியை உயர்த்துவோரை ஊக்குவிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இப்படிச் சலுகைகள் பல காட்டுவதால் பயனுண்டா? "உண்டாக்கு அல்லது ஒழி"—என்ற கோஷத்துக்குக் கிடைத்த பலன் இதற்கும் நிச்சயங் கிடைக்கும். இச் சலுகைகளால் அரசாங்கத்துக்கு ஏற்படும் வரி வருமானக் குறைவுதான் கைகண்ட பலனாக இருக்கும். கொள்ளையடித்துக் குவித்த பணத்துக்குப் பொய்க் கணக்கு காட்டி, வரி கூட கொடுக்காது இருக்கும் இந்தப் பொல்லாத பணக்காரர்களுக்கு வரிவஜாவா? துண்டு விழுவதைத் தடுத்து உபரி பட்ஜெட் தயாரிக்கத் திட்டமிடும் அரசாங்கம் வரிவஜாச் செய்வது சரியா? இதனால் பயனடைபவன் பணக்காரன். பாடுபடுபவன் பாட்டாளி—இந்தப் பணக்காரர்களை புதிய தொழில்களில் பணத்தைப் போடச் செய்ய வேண்டுமானால் முதலாளித்வத்தை முறையாக முட்டின்றி வளர்ப்போம் என வாக்குறுதி கொடுத்து அதற்குச் சூசகமாக அவர்கள் கைக்கு அதிகாரத்தை மாற்ற வேண்டும்—அப்பொழுது தானே அவர்களிச்சைப்படி சுரண்ட முடியும்? அவ்வளவுக்காவது சுதந்திரம் இல்லாத வரை அவர்களும் இணங்கிவரப் போவதில்லை.

பணக்காரர்கள் எப்பொழுதுமே, லாபம் தரக்கூடிய,தொழிலில்தான் பணத்தையும் மூலப் பொருள்களையும் கொட்டிக் குவிப்பார்கள். அந்தத் தொழிலால் மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மையுண்டா, என்பதைப்பற்றியெல்லாம் அவர்களுக்கு அக்கறையேயில்லை. உதாரணமாக உருக்கு உற்பத்திதான் ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு ஜீவநாடி. உலகத்திலேயே மிக முன்னணியில் நிற்பதாகச் சொல்லப்படும் அமெரிக்காவில் தலைக்கு 860 பவுண்டு வீதம் உருக்கு உற்பத்தியாகிறது. அத்யாவசியமான, உற்பத்திகளில் அதிகலாபம் இருக்காது போலிருந்தால் அதில் பணக்காரருடைய நாட்டம் செல்லாது. உருக்கு உற்பத்தியைக் காட்டிலும் சோப்பு, பவுடர் முதலிய பொருள்களை உற்பத்தி செய்வதால் லாபம்

அதிகம் கிடைக்கும் என அறிந்தால் சோப்பு, பவுடர் உற்பத்தியில்தான் பணம் போடப்படும். இப்படிச் செய்வதால் நாட்டின் உற்பத்தி சக்திகளை உபயோகமற்ற பாதையில் திருப்பி விடுகிறார்கள். வங்காளப் பஞ்சப் பிணக் குவியலிலும் பணங்குவித்த இந்தப் பணக்காரர்கள் நாட்டின் நன்மையில் எப்படி நாட்டம் கொள்வார்கள்? அதிக உற்பத்தியால் ஒரு பொருளின் விலைகுறைகிறது எனக் கண்டால் உற்பத்தி செய்யப்பட்ட அந்தப் பொருளில் ஒரு பகுதியை அழித்து அதன் மூலம் பொருள்களை அரிதாக்கி, ஏற்படுத்தப்பட்ட செயற்கைச் சூழ்நிலையால் அந்தப் பொருளின் விலைவாசியை உயர்த்துவார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னால், பிரேஸிலில் ஆயிரக்கணக்கான டன்கள் காப்பிக்கொட்டையையும், லிவர்பூலில் லக்ஷக்கணக்கான ஆரஞ்சுகளையும் கடலில் கொட்டி அவைகளின் விலையை உயர்த்தினார்கள். பணம்தான் அவர்களின் கண்கண்ட தெய்வம். பணம் தேடுவதையே பண்பாகக் கொண்டுள்ள பணக்காரர் கையில் நாட்டின் நலத்திற்கான உற்பத்தித்தொழிலை இன்னும் விட்டு வைப்பது நல்லதல்ல. உழைப்பவனுக்கு போதிய ஊதியம் கொடுப்பதால் செல்வம் குறைந்துவிடாது என்று அறிந்திருந்தும், கொடுக்க மனமில்லாதவர்கள் உற்பத்தியை மேற்கொள்ள உற்றவர்கள் அல்ல. சுதந்திரம் இந்நாட்டிலுள்ள 35 கோடி மக்களுக்கும்தான்; ஒரு சிலருக்காக மட்டும் அல்ல.

உடல் உழைப்பால் ஊதியம் பெறும் உழைப்பாளிகள் தங்கள் நிலையையும் அவசியத்தையும் உணர்ந்திருக்கிறார்கள். தங்கள் நிலையை உயர்த்த உறுதி கொண்டிருக்கிறார்கள். உண்மையை உணர்ந்து உற்றதை உரிய காலத்தில் செய்யாவிடில் உழைப்பாளிகளின் உறுதியான சக்தி இன்றைய சமுதாய அமைப்பை அடியோடு பொசுக்கி விடும். ஆனால் உழைப்பாளிகளுக்கு உற்பத்தியில் உற்ற பங்கைக்கொடுத்து உற்பத்தி செய்யப் படுகின்ற பொருள்கள் எல்லாம் தங்களுடையதே என்ற உணர்வை ஊட்டிவிட்டால் ரத்தக் களரியைத் தடுத்துவிடலாம். சட்டபூர்வமாக சமுதாய அமைப்பையும் மாற்றி விடலாம். ஆரம்பத்தில் ஒரு சிலரிடமிருந்து எதிர்ப்புக்கள் கிளம்பத்தான் செய்யும். உறுதி மட்டுமிருந்தால் உரியதைச் செய்து விடலாம்.

✲

எமப்பயல்!

இரண்டு வக்கீல்களின் வேலைக்காரப் பையன்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்:

"உனக்கு அவர் எவ்வளவு சம்பளம் தருகிறார்?"

"வருஷத்துக்கு 800 பவுன்!"

"அப்படியா?"

"அதுமட்டுமா? வாரத்துக்கு நாலு காசும் வேறு தருகிறார். அதற்குமேல் தருவதெல்லாம் சட்ட ஆலோசனைகளுக்காக!" என்று ஒரு போடு போட்டான் அந்தப் பையன்.

—கிளாஸ்கோ ஹெரால்ட்.

சீனதேசத்தின் பிரதானமான முற்போக்கு எழுத்தாளர்களில் டிங் லிங்கும் ஒருவர். ஜப்பானியப் படையெடுப்பினால் சீனாவில் ஏற்பட்ட விளைவுகளை இதே போன்ற பல சிறு கதைகளின் மூலம் அவர் சித்திரித்திருக்கிறார். இங்கே, யுத்தத்தின் பகைப்புலனில், வீண் அளப்புக்காரனாகிய ஒரு பத்திரிகையாளன், சாதாரணமாக யுத்த சேவை புரியும் ஒரு ராணுவ வீரன் — இவர்களுடைய புருஷத்துவத்தை அளந்து காட்டுகிறார். இருவரில் யார் உயர்ந்த பிறவி?

இரண்டு வீரர்கள்

டிங் லிங்

யாங்கிற்குக் கையில் பட்ட காயம் இன்னும் முழுக்க ஆறவில்லை. அதற்குள் பத்திரிகையாளர்களைக் கவனித்துக்கொள்ள பிரசார இலாகாவிற்கு அவனை மாற்றினார்கள். அது அவனுக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கியது. ஒரு வருஷத்திற்குமேல் எட்டாவது ராணுவத்தில் சேர்ந்து சண்டையில் ஈடுபட்டிருந்து விட்டு இப்போது ஒரு சாதாரண ஏவலாளாகப் போகவேண்டுமென்றால்—

மூன்று பத்திரிகையாளர்களைக் கவனித்துக்கொள்ள வேண்டியதுதான் அவன் வேலை. அந்த மூன்று பத்திரிகையாளர்களும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். குளிர் காற்று, குடி இவை காரணமாக அவர்கள் முகம் சிவந்துபோயிருந்தது. அவர்கள் சீன பாஷையில் தான் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களுடைய பேச்சு முறை ஒன்றும் அவனுக்கு விளங்கவில்லை.

"கற்பனை ஒரு மேதையிடம் எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது. அவன் என்ன விஷயங்கள் சேகரிக்கின்றானோ, அவற்றைக்கொண்டு அவனால் ஒரு பிரமாதமான நூல் இயற்ற முடியும். ஆனால் நான் ஒரு மேதை அல்ல" என்றார் மூவருள் ஒருவரான வியூ கோ-சிங்.

"சுற்றுப்புறத்தில் பிரத்தியட்சமாக நடந்துகொண்டிருப்பவற்றின் முழுப் பொருளையும் அவ்வப்போதே அளந்துவிடலாம் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது. அதை நீங்கள் பின்னால்தான் செய்ய முடியும். நீங்கள் உண்மையாக நடப்பவற்றை அப்படி அப்படியே நடந்தபடி எழுதுபவரல்ல. எழுதுபவரிடமிருந்து இன்னும் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது" என்று பதில் கூறினார் சாங் டி-சிங்.

"ஆனால் நாம் அதைவிட்டு எங்கே போகிறோம்? கோழிக் குஞ்சு அரிசியைக் கொத்தி எடுப்

பதுபோல நாம் உண்மையை, நடந்ததை, கொத்தி எடுத்துக் கொடுக்கிறோம். என்ன ஸூ சிங், இந்தப் பிச்சைக்கார ஆண்டிப் பிழைப்பை விட்டுத் தொலைப்பது நல்லதில்லையா!"

ஸூ சிங் எழுந்து, "பத்திரிகையாளர்கள் எல்லாம் ஒன்றுக்கும் பயன்படாத உதவாக் கரைகள். பத்திரிகைக்காரன் என்பதே ஒரு இகழ்ச்சியைக் குறிக்கும் சொல்லாக இருக்கிறது. ஆகையால் இதைவிட்டு நாம் திரும்பிச் செல்ல வேண்டும். நமக்கு வேண்டியது துப்பாக்கிகள். நாம் செய்ய வேண்டுவது கொரில்லாக்களுடன் சேர்ந்து சேவை புரிவதே. பத்திரிகைக்காரர்கள் என்பதால் நம்மை ஒருவரும் நம்புவதில்லை. நாம் இனி துப்பாக்கியைத்தான் கையில் பிடிக்கவேண்டும்" என்றான்.

போர்வீரன் யாங்கிற்கோ பத்திரிகையாளர்களைப் பார்க்க வியப்பாக இருந்தது. அவனுடைய உபதளபதிகூட பத்திரிகையாளர்களைக் கண்ணியமாக வரவேற்றார். போர் முறையைக் கற்றுக்கொடுப்பவரும்கூட பத்திரிகையாளர்கள் வைத்திருக்கும் ஐந்து அங்குல நீள ஆயுதமான பேனா, ஆயிரத்து எழரை பவுண்டு குண்டைவிடப் பலமிக்கது என்று கூறி யிருக்கிறார். அம் மூன்று பத்திரிகையாளர்களுடைய சம்பாஷணையிலிருந்து எதையும் அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே அவர்களிடம் ஏதோ அதிசயமான சூக்ஷ்ம சக்தி இருக்கிறதென்று நினைத்தான்.

மூன்று நாட்களுக்குப் பின், ராணுவத்தின் தலைமைக் காரியாலயத்துக்குச் செல்லும் ஸூ சிங்கிற்கு மெய்க் காவலனாகப் போகும்படி யாங்கிற்கு உத்தரவு வந்தது. ஏற்கெனவே ஸூ தான் ஏதோ தீரச்செயல் புரிந்துவிட்டதாக ஜம்பமடித்துக்கொண்டும், அதனால் தலைக் கனம் ஏறி உடல் பூரிப்பும் கொண்டிருந்தான். தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த ராணுவம் தவறாமல் மூன்று நாட்களுக்கு ஒரு முறை படையெடுப்பில் ஈடுபடும் என்று ஸூ கேள்விப்பட்டிருந்தான். எனவே கடைசியில் இப்போது ஒரு போர் வீரனாகவே போர் முனையில் போய் நிற்கப் போகிறான். தவிரவும் ஹோப்பி நகரில் தன்னுடன் கூடப் படித்த நண்பன் ஒருவன் ஆயிரக்கணக்கான வீரர்களுக்குத் தலைவனாக இன்று இருக்கிறான். அதற்குச் சமமான, அல்லது அதற்கு மேலான, பெருமையை அடையவேண்டிய சந்தர்ப்பத்தை முன்னர் இழந்துவிட்டதானது இப்போது அவனை வருத்தியது. இருந்தபோதிலும் கடைசியில் ராணுவத் தலைமைக் காரியாலயத்திற்குச் செல்லும் பாக்கியம் அவனுக்குக் கிட்டியது.

தூதன் ஒருவனையும் கூட அழைத்துக்கொண்டு யாங், ஸூ இருவரும் ஹௌகௌவிற்குப் புறப்பட்டுச் சென்றார்கள். ஆனால் அவர்கள் அவ்விடத்தை அடைந்தபோது இருட்டிப் போய்விட்டது. கிராமவாசிகள் தங்கள் மூட்டை முடிச்சுகளை அவசர அவசரமாகக் கடத்திக்கொண்டிருந்தார்கள். தலைமைக் காரியாலய ராணுவம் ஹௌகௌவைவிட்டு வேறிடத்திற்குச் சென்றுவிட்டது. ஆகவே குன்றுகளுக்கு வாபஸாகுமாறு விவசாயி

களுக்கு உத்தரவு பிறந்தது. ஒரு சில போர்வீரர்கள் மட்டும் இன்னும் தங்கியிருந்தார்கள். அவர்களிடமிருந்து யாங், ஸூ, தூதன் ஆகிய மூவரும் தலைமை ராணுவம் அதிக தூரம் போயிருக்காதென்றும் அந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட முடியுமென்றும் அறிந்தார்கள். தலைமை ராணுவம் இருக்குமிடத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்று யாங் விரும்பினான். ஸூவைக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு, தான் தன் இருப்பிடத்திற்குத் திரும்ப வேண்டுமென விரும்பினான் தூதன். இருட்டிப் போய்விட்டதாலும், கட்புறவோடு பழகிய சில போர்வீரர்கள் நம்பிக்கை அளித்ததாலும் ஸூவிற்கு ஹௌகௌவிலேயே தங்கிவிட இஷ்டமிருந்தது. இருந்தபோதிலும் அவனுக்கு, தாம் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம் என உண்மையிலேயே தெரியவில்லை. என்னவானாலும் தன்னுடைய இஷ்டத்தை எடுத்துச் சொல்ல அவனுக்குத் தைரியமில்லை. எனவே யாங் தன் விருப்பப்படி செய்யலானான்.

கட்புலனுக்கு ஏதும் புலப்படாதவாறு இரவு வலை விரித்தது. இருள்தான் தூண்டி விட்டதோ என்னும்படி காற்று அடித்தது. அந்தக் கொடிய இருளில் அலுத்துப் போன குதிரைகள் கனைப்பதும் கேட்டது.

கடைசியில் அவர்கள் எந்தக் கிராமத்தைத் தேடி வந்தார்களோ, அந்தக்கிராமத்தைஅடைந்தார்கள். ஆனால் தலைமை ராணுவம் அங்கிருந்து சற்று முன்பு வேறு கிராமத்திற்குச் சென்று விட்டது.

"சரி; நாம் இன்னும் மேலே போகலாம்" என்று ஸூவிடம் சொன்னான் தூதன்.

"என்ன இந்த இருட்டிலா? இருட்டில் வழி தவறினாலும் தவறிவிடுவோம், இன்றைக்கு முழுவதும் நடந்தாலும் ராணுவம் இருக்குமிடத்தை அடைய முடியுமா?" ஒரு முடிவுக்கு வர முடியாமல் 'தைரியசாலி' ஸூ திண்டாடினான்.

"எதற்காகப் பயப்படுகிறீர்கள்? கையில் ஒரு ரிவால்வர் இருக்கிறது. ஆட்கள் நாம் மூன்று பேர் இருக்கிறோம். வழியிலே எந்த எதிரி வந்தாலும் சமாளித்துவிடலாம்" என்றான் யாங், பொறுமை இழந்தவனாய்.

என்ன விளையப் போகிறதோ என்று ஸூ சிறிது பயங் கொண்டான். அவர்கள் ஸூ சொன்னதுபோல ஹௌகௌவிலேயே தங்கி இருந்திருக்கலாம். அன்றிரவுக்குள் ராணுவத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று வைத்துக் கொள்வோம். எந்த நிமிஷத்திலும் வரக்கூடிய ஜப்பானியர்கள் வருகிறார்கள் என்றும் வைத்துக் கொள்வோம். அவர்களால் என்ன செய்ய முடியும்? மேலே செல்லாமல் தங்கியிருப்பதற்கும் பயமாக இருந்தது; செல்வதற்கும் பயமாயிருந்தது.

ஸூவை உத்தேசித்து அந்த இடத்திலே தங்கியிருக்க எண்ணினார்கள். எப்படியோ ஒரு படுக்கை தயாரித்து, ஒருவரை ஒருவர் நெருக்கிக் கொண்டு படுத்துத் தூங்கினார்கள்.

"எழுந்திருங்கள் ஐயா, எழுந்திருங்கள். துப்பாக்கி வெடிச் சத்

தம் கேட்கிறது. எழுந்திருந்து என்னோடு வாருங்கள்" —இந்தக் குரல் ஸூவின் காதில் ஒரு கத்தி வீச்சுப்போல விழுந்தது.

"நல்ல தூங்கு மூஞ்சி! கிட்டத் தட்ட துப்பாக்கி நம் தலைக்கு மேலே வந்துவிட்டது. நீங்கள் இன்னும் குறட்டை விட்டுக் கொண்டிருக்கிறீர்களே! உடனே எழுந்திருங்கள்" என்று அவசர மாக எழுப்பினான் யாங்.

ஸூவின் கோட்டை எடுத்துக் கையில் கொடுத்தான் யாங். மேலே கூரையைப் பிய்த்துக்கொண்டு ஒரு குண்டு பாய்ந்து சென்றது. அதைக் கண்ட ஸூவின் கைகள் பீதியால் விறைத்துப் போயின. துப்பாக்கி வேட்டுகள் முன்னை விடத் தெளிவாகக் கேட்டன. அவர்கள் பக்கம் ஜப்பானியர்கள் நெருங்கி வந்து கொண்டிருப்பது போலத் தோன்றியது.

"புறப்படுங்கள். எனக்குப் பாதை தெரியும். நாம் இங்கு வரும்போதே ஒரு பாதையையும் கவனித்து வைத்திருக்கிறேன். ...சை, இவன்களை யார் இவ்வளவு சீக்கிரம் வருவான்கள் என்று கண்டார்கள்?" என்றான் யாங்.

இருட்டில் நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தன. ஆட்கள் இங்கு மங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். கிழக்கில் குதிரைகள் பாய்ந் தோடிக் கொண்டிருந்தன.

"சை, எங்கே அந்தத் தூதன்? குதிரைகளை இங்கே கொண்டு வரும்படி சொன்னேன். எங்கே தொலைந்துவிட்டான்? சரி, அவன் வருகிறவரை நாம் காத்து நிற்க முடியாது. உடனே புறப்பட வேண்டும். அதோ அந்தக் காட்டிற் குள் போய் மறைந்து கொள்ள லாம். என் கையைப் பிடித்துக் கொண்டு ஓடி வாருங்கள்" என்று கூறி ஸூவை இழுத்துக்கொண்டு யாங் வேகமாகப் புறப்பட்டுச் சென் றான்.

சிறிது தூரம் சென்றதும் வழி யிலே ஒரு பள்ளம் குறுக்கிட்டது. நல்ல வேளையாக பள்ளம் இருப் பதை யாங் கண்டுகொண்டான். "அதோ ஒரு பள்ளம் இருக் கிறது. உங்களுக்குத் தெரிகிறதா? முதலில் நான் தாண்டுகிறேன். பிறகு நீங்கள் தாண்டி வாருங்கள்" என்று சொல்லி, யாங் சிறிது தூரம் ஓடி ஒரே மூச்சில் தாண்டிக் குதித்தான். சுமார் ஐந்தடி அகல மும், ஐந்தடி ஆழமும் உள்ள சிறு குழி அது. அதைத் தாண்ட முடி யாமல் அரண்டு போய் ஸூ ஒன் றும் ஓடாதவனாய் ஓரத்தில் உட் கார்ந்துவிட்டான்.

"தைரியமாகத் தாண்டுங்கள். உங்களை நான் விடப்போவதில்லை. உம். சீக்கிரம் வாருங்கள். ஜப் பானியப் பிசாசுகள் வந்து கொண் டிருக்கின்றன" என்று குழிக்கு அந்தப் பக்கம் இருந்த யாங் துரிதப்படுத்தினான்.

ஸூ தாண்டமுடியாமல், மெது வாகக் குழிக்குள் சறுக்கி இறங்கி, எதிர்ப் பக்கத்தில் தொத்தித் தொத்தி மேலே ஏறிவந்தான். யாங் கை கொடுத்து ஸூவை பள்ளத்திலிருந்து மேலே கொண்டு வந்தான். ஸூ மேலே வந்ததும் காட்டை நோக்கி இருவரும் மிக விரைவாய் ஓடினார்கள்.

வெகுதூரம் ஓடிச் சென்ற பின் யாங், "இனி பயப்படத் தேவை யில்லை. இங்கே அந்தப் பிசாசு

ஒன்றுகூடக் கிடையாது. இருந்தாலும் நாம் இன்னும் இரண்டு மைல் தூரம் போயாகவேண்டும்'' என்றான்.

ஸூவின் கால்கள் நோவெடுத்தன. குதிரை இருந்தால் நல்லது என்று எண்ணினான். மேற்கொண்டு அவனால் ஓட முடியாது. ஆனால் போயாக வேண்டுமே?

இருவரும் ஒரு சிற்றோடையைத் தாண்டிச் சென்றார்கள். பனிக்கட்டிகள் கிடந்த பிரதேசத்தின் குறுக்கே ஓடிச் சென்றார்கள். ஓடும்போது பனிமூடிய கற்களின் மேல் வழுக்கி விழுந்தான் ஸூ.

"இந்த மாதிரி ஆபத்தில் இதற்கு முன் நீங்கள் மாட்டிக் கொண்டதில்லை போலிருக்கிறது! முதல் தடவையாக இப்போது மாட்டிக் கொண்டதனால் மிகவும் பயப்படுகிறீர்கள்'' என்றான் யாங். பின் சமயத்திற்கு குதிரை கொண்டு வராமல் போன தூதனை வாயில் வந்தபடி திட்டினான்.

ஊசிபோல் குத்துகிற குளிர் காற்றிலே ஓடி கடைசியில் ஒரு குன்றின் அடிவாரத்தை அடைந்தார்கள். ஸூ மிகவும் களைத்துப் போய் ஒன்றும் முடியாமல் நின்று போனான். "நிற்க வேண்டாம். நேரே உச்சிக்குப் போய்விடுவோம். அங்கே போய் இளைப்பாறிக் கொள்வோம்'' என்றான் யாங். ஆனால் ஸூ புறப்படாமல் திகைத்து நின்றான். "இந்த இடம் அவ்வளவு பந்தோபஸ்தான தல்ல. திரும்பவும் அவன்கள் சுட ஆரம்பித்தால் இங்கிருந்து கொண்டு நீங்கள் என்ன செய்வீர்கள்?'' என்று யாங் சொல்லவும், ஸூவும் புறப்பட்டான்.

இருபுறமும் ஆள் உயரமிருந்த பாறைகளின் நடுவே ஏறிச் செல்ல வேண்டியிருந்தது. பிரயாசையுடன் ஏறி மேலே சென்றார்கள். மேலே போய்ச் சேர்ந்ததும் சேராததுமாக, "நான் வரும்வரை இங்கேயே இருங்கள். ஒரு நொடியில் ஓடி வந்து விடுகிறேன்'' என்று யாங் சொல்லிவிட்டு மறைந்தான்.

காற்றிலே பறக்கும் உலர்ந்த சருகு துடிப்பதுபோல ஸூ திண்டாடினான். யாங்கைத் தேடியும், தன் மனத்தைத் தேடியும், இருளில் வெறித்து நோக்கினான் ஸூ. காற்றின் சுவாச இரைச்சல்கள் காதில் விழுந்தன. எழுந்து ஓடிப் போய்விடலாம் என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் யாங் திரும்பி வந்துவிடுவான் என்ற குருட்டு நம்பிக்கையில் ஓடத் துணிவு பிறக்கவில்லை.

சிறிது நேரங் கழித்து, "ஐயா பத்திரிகையாளரே, நாம் திறந்த வெளியில் படுக்கத் தேவையில்லை. படுப்பதற்கு ஒரு நல்ல இடம் கண்டுபிடித்திருக்கிறேன். எழுந்திருங்கள், போவோம்'' என்று யாங் மெதுவாகக் கூப்பிட்டுச் சொல்வது கேட்டது. யாங் வந்ததும் சிறிது நிம்மதி ஏற்பட்டது. எழுந்து யாங்குடன் சென்றான்.

ஒரு சிறு குகைக்குள் அழைத்துச் சென்றான் யாங். அங்கே கண கணவென்று இருந்தது. அங்கு கிடந்த ஏராளமான வைக்கோலில் இருவரும் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டார்கள். பிறகு கொஞ்சம் வைக்கோலை எடுத்து மத்தியில் போட்டுக் கொளுத்தி நெருப்பு உண்டாக்கினார்கள்.

குளிரே தெரியவில்லை. ஆனால் குகை முழுவதும் புகை மண்டியது. நெருப்பின் ஒளி குகையின் உட்புறத்தில் பட்டுப் பிரகாசித்தது.

இருவரும் வைக்கோல் படுக்கையில் படுத்துக் கொண்டார்கள். நெருப்பின் ஒளி அவர்கள் இருவர் மீதும் விழுந்து மின்னியது. பழைய நாட்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தான் யாங். முன்னர் சண்டையின்போது பாயினால் ஆன கூடாரங்களில் தங்கியிருந்த நாட்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வந்தான். அப்போது கோடை காலத்து இரவுகளில் கூடாரத்தினுள்ளே விளக்கு எரிந்து கொண்டிருக்கும்போது, தானும் மற்றவர்களும் கூடாரத்துக்கு வெளியே பரந்து கிடந்த சர்க்கரைக் கொம்மட்டி நிலங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டு பொழுதைக் கழித்தது எப்படி என்பதைச் சொன்னான். படுத்துக்கொண்டே ஆகாயத்தில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களைப் பார்த்து, குழந்தைப் பருவத்துப் பாடல்களை எப்படி எல்லோரும் பாடினார்கள் என்பதையும் சொன்னான். பிறகு, தான் மாட்டிடையனாக வேலை பார்த்து வந்த காலத்தைப் பற்றியும், அந்தக் காலத்தில் மாடு மேய்த்துக்கொண்டு திரியும் போது வழியெல்லாம் கிடக்கும் பூண்டுகள் காலில் உரசுவதால் ஏற்படும் இலேசான எரிச்சலைப் பற்றியும், 'மொய்' என்று வந்து கடிக்கும் கொசுக்களைப் பற்றியும் சொன்னான்.

சிறிது நேரம் யாங்கின் சுகமான பேச்சில் ஈடுபட்டு ஸூவின் மனம் நிம்மதி யடைந்தது. பேசிக்கொண்டிருந்த யாங் எழுந்து சுற்ற ஆரம்பித்ததும், ஸூவிற்குச் சங்கடமாயிருந்தது. ஜப்பானியர்கள் இப்போது எவ்வளவு தூரத்திலிருப்பார்கள் என்ற விஷயத்தில் கருத்தாக இருந்தான்.

"ஒன்றும் அறியாத அப்பாவி" என்று அங்கு சுற்றிக்கொண்டிருந்த யாங்கைப் பற்றி அபிப்பிராயப் பட்டான் ஸூ. ஆனால், அதை வாய்விட்டுக் கூறத் துணிவு வரவில்லை. இருந்த போதிலும் யாங்கின் தலைமைக்கு ஏற்கெனவே தன்னை அநேக விதங்களில் சமர்ப்பித்து விட்டதாக உள் மனசில் எண்ணினான்.

படுத்துக் கிடந்த ஸூவின் மனசில் ஆத்திரம் பொங்கியது. தலைமைக் காரியாலயத்திற்குப் போகும்படி அனுப்பியதற்காக பிரசார இலாகா தலைவரின் பேரிலும், ஹௌகௌவில் காத்திராமல் அதை விட்டு வேறிடம் சென்று தான் அலையுமாறு செய்ததற்காக தலைமை ராணுவ தளகர்த்தர் பேரிலும், உண்மையான நண்பர்களாக இல்லை என்பதற்காக சகபத்திரிகையாளர்களான லியூ, சாங் இருவர் பேரிலும், குதிரையைக் கொண்டு சென்றுவிட்டு தன்னை ஓடி நடந்து கஷ்டப்படுமாறு செய்ததற்காகத் தூதன் பேரிலும் ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. 'குதிரையோடு தொலைந்துபோன தூதனை ஜப்பானியர்கள் பிடித்துக் கொண்டால் நன்றாக இருக்கும்; அவனுக்கு அதுதான் தகுந்த தண்டனை' என்று பட்டது.

மிகவும் களைத்துப்போன மனிதர்கள், களைப்பு மிகுதியில் பயத்

தையும் மறந்து விடுகிறார்கள். ஸூவும் கடைசியில் உறங்கிப் போனான். ஆனால் யாங் தூங்காமல் உட்கார்ந்துகொண்டு, ஒரு ஜப்பானியப் பிசாசைத் தாக்கி, அவனைப் பிடித்து,அவனுடைய கோட், தர்மாஸ் பிளாஸ்க் இவற்றைப் பறிப்பது போலப் பகற் கனவு கண்டுகொண் டிருந்தான். பாதையெல்லாம் பனி மூடிப்போ யிருக்கும்போது காலையில் அவன் எப்படி வழி கண்டுபிடிக்கப் போகிறான்! பக்கத்தில் நிம்மதியாய் ஏதும் அறியாமல் தூங்கிக்கொண்டிருந்த ஸூவை நோக்கினான் யாங். குழந்தை வேண்டுமென்று பெருமூச்சு விடும் கிழவனைப்போல ஸூவைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டான்.

காலையில் ஸூ குகைக்குள் இருந்தபடியே வெளியே எட்டிப் பார்த்தான். கைகாலெல்லாம் நடுங்கின. குகைக்கு வெளியே முன் பின் அறியாத ஏதோ ஒரு உலகம் பரந்து கிடந்தது. உள்ளேயாவது கணகணப்பும், பத்திரமா யிருக்கிறோமென்ற உணர்ச்சியும் இருந்தது. ஸூவிற்கு துணிந்து வெளியே செல்லவும் பயம்; குகைக்குள்ளே தனியாக இருக்கவும் பயம். என்ன செய்வான்? செய்திகளை அறிந்து வருவதற்காகப் பக்கத்திலுள்ள கிராமம் வரை போய்வர யாங் முடிவு செய்ததும், ஸூவும் பின்னால் போக வேண்டி யிருந்தது. பாவம், ஸூ பலஹீனனாயிருந்தான்; திக்கற்றவனாகவும் இருந்தான்.

கிராமத்தை நோக்கி இருவரும் சென்றார்கள். சிறிது தூரம் சென்றதும், ராணுவத்தினர் வருவது தெரிந்தது. முதலில் அவர்கள் சீனர்கள்தான் என்று நினைத்தான் யாங். ஆனால் பிறகு பெரிய பெரிய குதிரைகள் கண்ணில் பட்டதும், அவர்கள் ஜப்பானியர்கள் தான் என்று தெரிய வந்தது. மேற்கொண்டு போகக் கூடாது; குகைக்குத் திரும்பிவிட வேண்டுமெனத் தோன்றியது. உடனே ஸூவை ஒரு பிணத்தை இழுப்பதுபோல இழுத்துக் கொண்டு குகைக்குச் சென்றான் யாங்.

குகையை அடைந்ததும் ஸூ படுத்துக் கொண்டான். படுத்த வண்ணம் குகை வாசல்வழியே தெரிந்த, பனி மூட்டம் நிரம்பி மந்தமாய்க் காணப்பட்ட, ஆகாயத்தை வெறித்துக்கொண் டிருந்தான். பக்கத்தில் நின்ற யாங் தனக்குத்தானே திட்டிய வண்ணம் இருந்தான். 'சை, திரும்பி யிருக்கப்படாது. அவன்கள் வந்தால் எனக்கென்ன? அதைப்பற்றி எனக்கு ஒன்றும் அக்கறையில்லை. பசியோ பிடுங்குகிறது. அவர்கூட வராவிட்டால் நான் இந்நேரம் கிராமத்திற்கு போய் சேர்ந்திருப்பேன். நான் எதைக் கண்டு பயப்படப் போகிறேன்?'' என்று எண்ணினான்.

மத்தியானம் ஆனதும் ஸூவிற்குப் பசி அதிகரித்து விட்டது. பசி தாங்காமல் புலம்ப ஆரம்பித்தான். மீண்டும் ஒரு முறை போய்ப் பார்ப்பது என்று முடிவு கட்டினான் யாங். ஸூவிற்கு யாங்கைப் போகவிட வேண்டியதாயிற்று. யாங் புறப்படும்போது, 'சீக்கிரம் திரும்பி விடு' என்று ஸூ கேட்டுக்கொண்டான்.

"ஜாக்கிரதையாக இருங்கள்" என்றான் யாங், ஒரு குழந்தைக்

குச் சொல்வதுபோல. பிறகு, "வாசலில் வைக்கோலைக் குவித்து நெருப்புப் போட்டு வையுங்கள். இந்தப் பக்கங்களில் ஓநாய்கள் இருக்கலாம்" என்று சொல்லி விட்டு யாங் கிளம்பினான்.

பனி மூடிய குன்றில் ஒரு அரவம்கூடக் கேட்கவில்லை. உயிரே அஸ்தமித்து விட்டது போலத் தோன்றியது. உலகத்திற் கொவ்வாத அந்த அமைதியிலிருந்து விடுபட ஏதாவது சத்தம் கேட்காதா என்று ஸூ ஆவலாயிருந்தான். தப்பித் தவறி ஏதாவது சத்தம் கேட்டால், அவனுடைய இருதயம் மிரளும்; தசைகள் விறைத்துப் போகும்.

வெகு நேரமாயிற்று. யாங் திரும்பக் காணோம். அவன் வருவான் என்ற நம்பிக்கையோடு அங்கு உட்கார்ந்திருக்கலாகாது; யாங் திரும்ப மாட்டான் என்று தன்னைத் திருப்தி செய்து கொண்டான் ஸூ. இனி உயிர் வாழ வேண்டு மென்றால், குன்றின் அடிவாரத்திலுள்ள ஏதாவது ஒரு விவசாயியின் வீட்டிற்கு எப்படியாவது போய்ச் சேர்ந்தால்தான் முடியும். எனவே குன்றை விட்டு இறங்க வேண்டு மென்று ஸூ முடிவு செய்தான். எப்படியோ தைரியத்தை வரவழைத்துக் கொண்டு வெளியேறினான்.

வெளியே ஒரே பனிமயம். பனிப் பாதையில் தட்டுத் தடுமாறி ஓடினான். பனி கண்ணை மறைத்தது. இன்ன திசையில் போகிறோ மென்று தெரியவில்லை. அறிவாளிகளுக்கு என்று ஜப்பானியர்கள் தனியாக ஏற்படுத்தியுள்ள கொடும் தண்டனை நினைவிற்கு வந்தது. பனியில் விழுந்து கிடந்தால் ஏதாவது கொடிய மிருகம் வந்து கொன்று விடுமே என்று பயமாயிருந்தது. கூச்சலிட வேண்டுமென்று விரும்பினான். ஆனால், நெஞ்சு அடைத்தது. ஒரே பயமா யிருந்தது. குகைக்காவது திரும்பிச் சென்று விடலாம் என்று யோசித்தான். ஆனால் வந்த வழியும்கூடத் தெரியவில்லை. ஓய்ந்துபோய், பரிதாபகரமாகத் தரையில் உட்கார்ந்து போனான். உருகும் பனி, வியர்வை, கண்ணீர் இவை கன்னத்தில் உருண்டன.

இரவு நெருங்கிக்கொண் டிருந்தது. குகைக்குப் போய்விட வேண்டியதுதான் என்று எண்ணினான். பாதை தேட வேண்டுமே? நிராசையாய்த் தேடி, கடைசியில் ஒரு வழியாகத் திக்குமுக்காடிச் சென்று குகையை அடைந்தான். குகை சென்ற பின்தான் சிறிது நிம்மதி ஏற்பட்டது.

நெருப்பை மூட்டினான். அவனுடைய உடையும் பூட்சும் நீராவி விட ஆரம்பித்தன. ஒரே குளிரா யிருந்தது. பசியும், களைப்பும் வாட்டி எடுத்தன. அந்தக் குகையில் அவன் யாரு மறியாமல், தங்கையோ மருமகளோ—எவருமே அறியாமல், செத்துப் போனான் என்றால்—இதை நினைத்தும் கண்களில் கண்ணீர் பெருகியது.

திடீரென்று ஏதோ சத்தம் கேட்டது போல இருந்தது. ஆவலாய் உற்றுக் கவனித்துக் கேட்டான். அது நிஜ சத்தம்தான். பயந்து போய் வைக்கோலுக்குள் ஒளிந்து கொள்ள முன்றான். ஆனால் அவன் பெயரைச் சொல்லி யாரோ அழைத்தார்கள். பரபரப்

புடன் வெளியே நகர்ந்து வந்தான். யாங்தான் வந்து நின்றான்.

யாங்கைக் கண்டதும் "இங்கே இருக்கேன் நான்! நான் இங்கே இருக்கேன்!" என்று குழந்தையின் குதூகலத்தில் கத்தினான் ஸூ. ஓடிப்போய் ஒரு சகோதரனைப் போல யாங்கைக் கட்டிக் கொண்டான்.

"உங்களைப் பிடித்துக்கொண்டு போயிருப்பார்கள் என்று நினைத்தேன். அடுத்த தடவை வெளியே போகும்போது உங்களைக் கூட்டியே செல்லுகிறேன்" என்றான் யாங்.

ஸூ வைக்கோலைக் கொளுத்தி நெருப்பு மூட்டினான். யாங் தான் கொண்டு வந்திருந்த பத்து ரொட்டிச் சுருள்களை ஸூவிடம் கொடுத்தான். ஸூ சாப்பிடும் போது, தான் போய் வந்த சமாச்சாரத்தை விபரமாகச் சொன்னான் யாங். ஸூ ரொட்டியை ஆவலோடு சாப்பிடுவதை யாங் கவனித்தான். ஸூவின் முகத்தில் காணப்பட்ட கலவரத்தையும் கவனித்தான். மறு நாள் தலைமை ராணுவம் இருக்குமிடத்திற்குப் புறப்பட முடியும் என்று சொன்னான். பனியினால் ஜப்பானியப் பிசாசுகள் வெளியேறாமல் அடங்கிக் கிடக்கும் என்றும் சொன்னான். இதைக் கேட்ட ஸூவிற்கு மனப்பாரம் இறங்கியது. கவலையும் பயமும் இன்றி திருப்திகரமாய் ரொட்டியைச் சாப்பிட்டான்.

அன்றிரவு ஸூ மிகவும் சுகமாகத் தூங்கினான். யாங் கூட அப்படித் தூங்கவில்லை. கணகணவென்று இருப்பதற்காகப் பெரிய கோட்டையும் போட்டுக்கொண்டு ஸூ படுத்திருந்தான். யாங்கும் படுத்திருந்த போதிலும், தன்னுடைய காவல் வேலையையும் செய்துகொண்டிருந்தான்.

மறுநாள் அவர்களிருவரும் புறப்பட்டார்கள். தலைமை ராணுவம் அப்போது பழைய ஹௌகௌவிற்குத் திரும்பி யிருந்தது. ஐந்து நாட்கள் கழித்து ஸூவும், யாங்கும் ஹௌகௌவை அடைந்தார்கள். வழியில் ஒரு ஜப்பானியன்கூட கண்ணில் படவில்லை.

இப்போது ஸூ ஒரு வீரனாகிவிட்டான். ஹௌகௌவில் அநேகர் அவனுடைய தீரச்செயல்களைக் கேட்டறிய அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். சாமர்த்தியமாக நடந்துகொண்டான் ஸூ. பெரும் பேச்சிற்குள்ள மதிப்பை விட அடக்கத்தின் மதிப்பு அதிகமென்று அவனுக்குத் தெரியும். ஸூவின் அபூர்வ தீரச் செயல்களைக் கேட்ட அங்கு வந்திருந்த இதர பத்திரிகையாளர்களான வியூவுக்கும், சாங்கிற்கும் பொறாமை உண்டாயிற்று. இப்போது மூன்று பத்திரிகையாளர்களுமே தலைமை ராணுவக் காரியாலயத்திற்கு வந்துவிட்டார்கள். ஆனால் ஸூ ஒருவன் மட்டுமே 'சண்டையில் ஈடுபட்டு, வீரச் செயல்கள் பல புரிந்தவ'னா யிருந்தான். பத்திரிகையாளர்கள் பெருமை அடையும்படி பேர் வாங்கிய ஸூவின் கழுத்தைப் பெருமிதத்துடன் கட்டிக் கொண்டார் வியூ.

"நீங்கள் திரும்பி வந்ததே அதிசயம். சமாதியிலிருந்து நீங்கள் பிழைத்து வந்ததைக் கொண்டாட வேண்டும்" என்றார்கள்.

மாலையில் ஸூவைப் பாராட்டும் வகையில் ஒரு விருந்து நடந்தது. விருந்து சாப்பிட்டு முடிந்த பிறகு, பத்திரிகையாளர் மூவரும் ஓரிடத்தில் தனியாக அமர்ந்து சம்பாஷிக்கலானார்கள். பழைய பிரச்னை மீண்டும் விவாதிக்கப் பட்டது. தலைமை ராணுவத்தோடு தங்கியிருந்து மேற்கொண்டு இரண்டு மூன்று வருஷங்கள் போர் முனையில் சேவை புரிய வேண்டுமென்ற கட்சியிலிருந்தார் லியூ. ஆனால் ஸூவோ, சண்டையிலிருந்து விலகி, வீட்டிற்குத் திரும்பிச் செல்லவேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்தான். உண்மையில் மிக அபூர்வமான அனுபவத்தைக் கண்டவன் ஸூ. இப்போது அவன் விரும்புவதெல்லாம் அமைதியாக ஒதுங்கியிருந்து தன் அனுபவத்தைத் தொந்தரவு ஏதுமின்றி உட்கார்ந்து எழுத வேண்டுமென்பதுதான்.

பேசிக் கொண்டிருக்கும் போது யாங் விருந்தில் கலந்து கொள்ளாமலிருப்பதைக் கண்டான் ஸூ. மேலதிகாரிகள் கொடுத்த விருந்து உணவையும் வெகுமதிகளையும் அப்படியே மேஜை மீது வைத்துவிட்டு யாங் வேலையில் ஈடுபட்டிருந்தது ஸூவிற்கு ஆச்சரியத்தை அளித்தது. நீ ஏன் சாப்பிடாமலிருக்கிறாய்? என்று யாங்கைப் பார்த்துக் கேட்டான் ஸூ.

ஒன்றும் அறியாத அப்பாவியான யாங் தேநீருக்காக தண்ணீர் காய்ச்சிக் கொண்டிருந்தான். ஸூ கேட்டதும் வெறுப்போடு உதட்டைக் கடித்தான். பிறகு "மேலதிகாரிகள் என்ன கௌரவமளித்தாலும் நான் சண்டையை விட்டுப் போய்விடப் போவதில்லை. நான் மீண்டும் சண்டையிடச் செல்ல வேண்டும். இப்போது ஒருவரும் சண்டையிடப் போக வேண்டாம் என்று என்னை நிறுத்தப் போவதும் இல்லை" என்று பதிலளித்தான்.

அந்தச் சமயத்தில் தூதன் மிக அமைதியாக உள்ளே நுழைந்தான். எப்படி யாங்கிற்குக் கடமை உணர்ச்சியானது தன் அனுபவங்களை யெல்லாம் எழுதி வைக்க வேண்டுமென்று வற்புறுத்தவில்லையோ, அப்படியே தூதனையும் கடமையுணர்ச்சி வற்புறுத்தவில்லை.

✲

அதுதான் சட்டம்!

கலி போர்னியாவில் ஒரு பெண் தனது வீட்டில் சோபா ஒன்று தீப் பிடித்து விட்டதை அறிந்து உடனே அணைத்தும் விட்டாள். மறுநாள் அவளுக்கு சர்க்கார் ஆறரை டாலர் அபராதம் விதித்தது! ஏன் என்று கேட்கிறீர்களா? அவள் சட்டத்தை மீறினாளாம். தீப்பிடித்த விஷயத்தை முதலில் பக்கத்திலுள்ள தீயணைக்கும் படையினருக்குத் தெரியப்படுத்தாமல் அணைக்க முற்படுவது குற்றம், என்கிறதாம் சட்டம்!

—ஸண்டே கிரானிகிள்.

படம்: டி. அண்ணாஜி ராவ், சென்னை

அரிசிப் பல் வாய் திறந்து
அண்ணாந்து பார்க்கு மெந்தன்
குரிலே! நின் குறையைக்
கூறுவையோ? கூறாயோ?



படம்: ஆர். லக்ஷ்மி, டில்லி.

அகில இந்திய ரேடியோவுக்கு சென்ற 21-5-'49 அன்று
வெள்ளி விழா கொண்டாடப் பெற்றது.
படத்தில் காண்பது டில்லி அ. இ. ரே. நிலையம்.



29-5-'49 அன்று பண்டித நேரு ஸ்ரீநகர் சென்றபோது,
அங்குள்ள குடியானப் பெண்களுடன் அளவளாவினர்.



ஸ்ரீ. ராஜகோபாலாச
சாரியார் பாதாள லிங்கக்
குகையைத் திறந்து
வைத்துப் பேசுகிறார்.
பக்கத்தில் இருப்பவர்கள்
கவர்னர் தம்பதிகள்.



பாதாள லிங்கக் குகையின் கோபுரத்தின் முன்
ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியார்

மராத்தி இலக்கிய கர்த்தாக்களான காண்டேகர், மாட்கோல்கர் முதலிய ஆசிரியர்களைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தி வைத்த வர் இக்கட்டுரை ஆசிரியர். மராத்தி நாட்டிலேயே சில காலம் இருந்து மராத்தியை நன்கு பயின்ற இக்கட்டுரை யாசிரியர் மராத்தி இலக்கியத்தின் இன்றைய வளர்ச்சியைப் பற்றி சில குறிப்புக்கள் தருகிறார். இது சென்னை அகில இந்திய ரேடியோவில் ஒலி பரப்பப் பெற்றது. நிலையத் தாரின் அனுமதியுடன் வெளியிடப் பெறுகிறது.

மராத்தி இலக்கியம்

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

மகாராஷ்டிரம் என்று சொன்ன வுடனே அதை மகத்தான ராஷ்டிரமாக்கிய ஒரு வீரனும் ஓர் ஆண்டியும் நம் நினைவுக்கு வருகிறார்கள். வீர சிவாஜியும் சமர்த்த ராமதாசரும் இல்லையென்றால் மகாராஷ்டிரம் ஏது? ராஜ வைபவத்திற்கு அடையாளமான புண்ணிய நகரம். அதைச் சூழ்ந்த கோட்டை கொத்தளங்கள், ஸஹ்யாத்திரியின் வன எழில், வீரர்களை வளர்த்த கிருஷ்ணா நதி, ஸமர்த்த ராமதாஸர் ஹனுமானைப் பிரதிஷ்டை செய்து வழிபட்ட புனிதப் பஞ்சவடியிலே பாயும் கோதாவரி, கற்களினால் மேடும் பள்ளமுமான விந்திய மலையின் அடிவாரத்திலே சிதறியோடும் நர்மதை, ஸாத்புடா மலைக்கு அடியில் யானைபோல் உயரமான குன்று முதல் சாளிக்கிராமம் போல் சிறிய கூழாங்கல் வரையில் பலவிதமான பல நிறக் கற்கள் நிரம்பிய பாறைப் பிரதேசத்தில் பாயும் தபதி, கண்களில் பனி நீர் மல்க இறைவனை இறைஞ்சி மகிழும் பக்திப் பட்டணமாகிய பண்டரபுரம், பசுமையான வளவயல்கள், காவியமயமான இயற்கைக் காட்சிகள் ஆகிய இத்தனையும் நிலவுகிற நாடு மகாராஷ்டிரம்.

கீதா ரகசியத்தையும் விடுதலை மந்திரத்தையும் நாட்டுக்குத் தந்த திலகரும், 'மகாராஷ்டிரத்து ரண களத்திலே ரத்தம் சிந்தும் வரைக்கும் சிரோட்டே சத்தியாக்கிரகத்தை நடத்துவோம்' என்று வீர கர்ஜனை செய்த சங்காராவ் தேவும், பம்பாயில் முன்ஜி ஜேடா மார்க்கெட் வழியாக அயல் நாட்டுத் துணியை ஏற்றிச் சென்ற லாரிக்கு முன்னால் குறுக்கே படுத்து உயிர் துறந்த வீர இளைஞன் பாபூ கேனுவும், 1942 இயக்கத்தில் ஸாதாரா ஜில்லாவில் போட்டி சர்க்காரை வெற்றிகரமாக நடத்திய நானா பாடீலும், தர்க்க சுத்தமான முறையில் காந்தீயத்தை விளக்கும் முதல்

சத்தியாக்கிரகி விநோபா பாவே யும், இந்தியா முழுவதும் வாழ்க்கை இலக்கியத்தைப் பரப்பிய காகா காலேல்கரும் பாரத நாட்டின் உன்னதமான அரசியல் சரித்திரத்திலே அரும்பங்கு கொண்டவர்களில் முக்கியமானவர் கள்.

காதாஸப்தசதி, ஸேதுபந்த காவியம் ஆகிய பிராகிருத நூல் களும், 'காகண்டு சரிஉ' 'நாய குமார சரிஉ' முதலிய அபப் பிரம்ச நூல்களும் மகாராஷ்டிரத் தில் தோன்றியவை. திருஷ்டாந் தக் கதைகளை வாழ்க்கையிலே புகுத்திய 'மகாநுபாவ இலக்கியம்' உண்மையில் மகத்தானது.

பொதுவாக, ஞானேசுவரர் காலத்திலிருந்துதான் மராட்டி இலக்கியம் ஆரம்பிக்கிறது. ஞானே சுவரர் மகாராஷ்டிரத்து ஆதி கவி. அவருடைய தகப்பனர் துறவறம் பூண்ட பின்பு மறுபடி கிருகஸ்தா சிரமத்துக்கு வந்தார். அதனல் ஞானேசுவரரையும், அவருடைய உறவினர்களையும், அவருடைய ஜாதிக்காரர்கள் பகிஷ்காரம் செய்து விட்டார்கள். ஹரிஜனங்களுடைய எருமை மாட்டின் வாயிலிருந்து அவர் ஒரு சமயம் வேத மந்திரங் களை ஓதுவித்தாராம். பகவத் கீதைக்கு அவர் இயற்றிய உரை தான் 'ஞானேசுவரி.' அவர் அத் வைத வாதியான பக்தர்; ஆனல் அவருடைய பாம்பரை வைஷ்ண வர்களின் நாத சம்பிரதாயத்தைச் சேர்ந்தது. முப்பத்திரண்டாவது வயதிலேயே அவர் உயிருடன் சமாதியில் இறங்கி விட்டார். அவ ருக்குப் பிறகு நாமதேவர், ஏக நாதர், துகாராம் முதலியவர்கள் பாகவத தர்மத்தை வாய்மொழி யாகப் பரப்பினர்கள். இந்தியாவிலே ராமாயணமும் மகாபாரதமும் இல் லாத பாஷை ஏது? மோரோ பந்த் ஆரியாவிருத்தத்தில் இந்த இதிகாசங்களை இயற்றினர். வாமன பண்டிதர் யமகங்களாகவே விருத் தங்களை எழுதிக் குவித்தார். அதற் குப் பிறகு கீர்த்தனங்களும் லாவணிகளும் நொண்டிச் சிந்து முறையில் பல பாடல்களும் வெளி வந்தன. இப்படியாகச் சுமார் அறு நூறு வருஷகாலம் மராட்டி இலக் கியம் பாட்டு மயமாக இருந்தது.

ஆங்கிலேயர் வந்த பிறகுதான் வசன இலக்கியம் வளர ஆரம்பித் தது. சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, சிப்ளூண்கர் எழுதிய 'கட்டுரை மாலை'யிலிருந்து புது யுகம் தொடங்குகிறது. இதே சமயத்தில் ஆகர்கரின் புரட்சிக் கட்டுரைகள் வெளிவந்தன. இந்த எழுபத்தைந்து வருஷ காலத்தில் மராட்டி இலக்கியம் வெகு தூரம் முன்னேறி விட்டது. சரித்திரம், சமூக இயல், மொழி வளர்ச்சி, நாடகம், காவியம், கட்டுரை, சிறு கதை, நாவல், ஹாஸ்யம், பத்திரி கைத் தொழில் முதலிய பல துறை களில், இந்தியாவில் வேறு எந்தப் பாஷையோடும் போட்டி போடக் கூடிய அளவுக்கு இந்த இலக்கியம் வளர்ந்திருக்கிறது. அதிலும், இரண்டு உலக யுத்தங்களின் இடைக்காலத்திலே இது பெற்ற வளம்தான் சரித்திரத்திலே வெகு முக்கியம்.

1921-ல் பரோடாவில் கூடிய இலக்கிய மகாநாட்டில் கேள்கரின் தலைமையுரையி லிருந்து பல இலக் கிய சர்ச்சைகள் கிளம்பின. காவி

யம், வசனம் என்று இலக்கியத்தை இரண்டு விதமாக வகுத்தார் கேள்கர். அதிலிருந்து, 'விஞ்ஞான இலக்கியம்,' 'தூய இலக்கியம்', 'தத்துவ இலக்கியம்,' 'நுண்கலை இலக்கியம்,' 'நுண்கலை யல்லாத இலக்கியம்' இப்படிப் பல பிரிவுகளைப் பற்றி விறுவிறுப்பான விவாதங்கள் நடந்தன. 'கலைக்காகவே கலை' என்பதுதான் இவற்றிலே பிரபலமான விவாதம். புரொபஸர் நா. ஸீ. பட்கே இந்த விவாதத்துக்குத் தலைவர். 'பிரதிபா சாதனம்' என்ற அவருடைய புஸ்தகம் இந்த விவாதத்துக்கு மூல நூல். பட்கேயின் இலக்கிய நோக்கம் இன்று மாறிவிட்ட பிறகும்கூட 'கலைக்காகவே கலை' கோஷ்டிக்கு அவர் தலைவர் என்றுதான் இப்போதும் பொது மக்கள் எண்ணுகிறார்கள்.

'வாழ்க்கைக்காகவே கலை' என்ற விவாதமும் அநேகமாக இதே காலத்தில்தான் ஆரம்பித்தது. ருஷ்யப் புரட்சியின் வெற்றி, இந்திய இளைஞர்களின் உள்ளத்திலே கம்யூனிஸம் சோஷலிஸம் பற்றிய சிந்தனைப் போக்கை விளைவித்தது. வாழ்க்கைக் காகத்தான் இலக்கியம் என்ற கட்சியை ஸ்தாபித்து இன்றளவும் அதிலிருந்து மாறுபடாத எழுத்தாளர்களில் வி. ஸ. காண்டேகர், மாட்கோல்கர், வாமன் மல்ஹார் ஜோசி, தேச் பாண்டே முதலியவர்கள் முக்கியமானவர்கள். சமூகம், காலம், சூழ்நிலை ஆகியவற்றுக்கும் இலக்கியத்துக்கும் உள்ள தொடர்பைப் பற்றி இப்படிப் பல விவாதங்கள் நடந்துவந்த சமயத்திலே, மார்க்ஸீயக் கொள்கையை விவரிக்கும் புஸ்தகம் என்று திடீரென்று தூமகேதுவைப் போல் 'கிண்டியாய நம:' என்று வந்து முளைத்தது. 'இலக்கியமும் சமூக வாழ்க்கையும்' என்ற இந்த நூல் பத்திரிகைகளிலெல்லாம் தடபுடல் பட்டது. இதை எழுதியவர் லால்ஜீ பேண்ட்ஸே. சமூகத்தின் பொருளாதார நிலைக்கு ஏற்றபடிதான் இலக்கியம் இருக்கும் என்று எல்லாரும் உணரும்படி செய்து விட்டது இந்த நூல். இலக்கியத்தின் உருவம் எப்போதுமே சூழ் நிலையையும் மன நிலையையும் பொறுத்தது தான் என்று நினைக்கு மளவுக்கு இந்தச் சிந்தனை வேரூன்றி விட்டது. அப்போது, வாமன் மல்ஹார் ஜோசி முதலிய சிந்தனையாளர்கள் இதை எதிர்க்க முன் வந்தார்கள். இலக்கியம் என்பது காலத்தையும் இடத்தையும் பொறுத்தது மட்டுமல்ல; அதைப் படைக்கும் எழுத்தாளனுடைய பிரபாவமும் அதில் சேர்ந்திருக்கிறது என்று இவர்கள் வாதாடினார்கள். இந்த இரண்டு விவாதங்களும் இன்றளவும் ஓய்ந்தபாடில்லை.

மார்க்ஸீய தத்துவத்தைப் போலவே இன்னொரு புதிய தத்துவம் திடீரென்று அணுக்குண்டு போல வெடித்தது. இலக்கியப் போக்கிலே இதுவும் பெரிய மாறுதலை உண்டாக்கி விட்டது. ஸிக்மண்டு பிராயிட் முதலான மனத் தத்துவ ஆசிரியர்களின் ஆராய்ச்சியினால் வந்த இந்தத் தத்துவம், வாழ்க்கை நோக்கத்திலே ஒரு புதுமையைத் தோற்றுவித்தது. இலக்கியத்திலே எது ஆபாசம், எது ஆபாசமில்லை என்ற கேள்விகளும், அவற்றுக்குப் பதிலும்,

மறு கேள்விகளும் மறு பதில்களு மாக இந்த விவாதம் பிரம்மாண்ட மாயிற்று. புரொபஸர் கர்வே, 'சமூக ஆரோக்கியம்' என்ற தமது நூலில் இந்தப் பிரச்னையை விரிவாக ஆராய்ந்து தமது கொள் கையை விளக்கினர். இந்தப் புதிய விவாதத்திலே சம்பந்தப்படாத எழுத்தாளர் யாருமே மகாராஷ்டி ரத்தில் இல்லை; ஏனென்ருல், இந் தப் பிரச்னைக்கும் இலக்கியத்துக் கும் அவ்வளவு நெருங்கிய தொடர்பு உண்டாகி விட்டது. 'கலைக்காகவே கலை'க்காரர்களும், 'வாழ்க்கைக்காகவே கலை'க்காரர் களும் இந்தப் புது விவாதத்தில் தாராளமாகப் பழகினர்கள். இலக்கி யத்திலே வாஸ்தவமான பொருள் எது, லட்சியப் பொருள் எது? என்ற கேள்வியைப் பற்றித்தான் எங்கும் பேச்சு. இந்தப் புதுமை வாதத்தி லிருந்துதான், இன்று பிரமாதமாக அடிபடுகிற முற் போக்கு இலக்கியவாதம் பிறந்தது. முற்போக்கு இலக்கியம் என்றும், பிற்போக்கு இலக்கியம் என்றும் இலக்கியத்திலே இரண்டு பிரிவுகள் ஏற்பட்டன. இரண்டு கட்சிக்காரர் களும் தனித்தனியே மகாநாடுகள் நடத்தினர்கள். தென்றல் முற் றிப் பெருங்காற்ருன கதையாக, வாதம் வலுத்துப் பெரும் புயல் வீசியது. ஆபாசம், சுத்தம், விப சாரம், ஒழுக்கம், விகாரம், அழகு என்ற சொற்கள் எங்கே பார்த்தா லும் அடிபட்டன.

இது இப்படி இருக்கையில், காகா காலேல்கர், ஸானே குருஜி, தாதா தர்மாதிகாரி முதலிய எழுத் தாளர்கள், சத்தியம், சிவம், சுதந்த ரம் என்ற பண்டைச் சூத்திரத்தை அநுசரித்து, வாழ்க்கையிலே தூய்மையையும் மேன்மையையும் ஆதாரமாகக் கொண்ட இலக்கி யத்தைச் சிருஷ்டித்தார்கள்.

இலக்கியத்தின் நோக்கம் என்ன என்ற கேள்வி, அடிக்கடி எழுகி றது. இலக்கியத்துக்காகவே இலக் கியம், வாழ்விலிருந்து தப்புவதற் காக இலக்கியம், சுவையில்லாத அன்ருட விவகாரத்திலிருந்து விடு பட்டு, வாழ்க்கையின்பத்தை நாடு வதற்காக இலக்கியம், தொண்டுக் காக இலக்கியம், ஆத்மாநுபவத் துக்காக இலக்கியம், ஒப்பற்ற இன் பத்துக்காக இலக்கியம், பொழுது போக்குக்காக இலக்கியம், அடக்க முடியாத தூண்டுதலின் விளைவாகச் சிருஷ்டி சக்தியைத் தோற்றுவிற் பதற்கு இலக்கியம். இப்படி இலக் கியத்தின் பயனைப் பற்றிப் பல விவாதங்கள் நடந்திருக்கின்றன. பிறமொழி இலக்கியங்களின் வளர்ச் சியையும் மராட்டி எழுத்தாளர்கள் ஆவலோடு கவனித்து வந்திருக் கிருர்கள். குஜராத்தியும் கன்னட மும் அவர்களுக்குப் பக்கத்தில் இருக்கும் பாஷைகள். ஹிந்தி, வங்காளி முதலிய பாஷைகளை அவர்கள் போதிய அளவுக்குப் பயின்றிருக்கிருர்கள். தென் னிந்திய பாஷைகளின் முன்னேற் றத்திலும் அவர்கள் அக்கறை கொண்டிருக்கிருர்கள். தமிழ் இலக் கியத்தின் பெருமையையும் வளர்ச் சியையும் பற்றிய நீண்ட கட்டுரை, ஒரு மாமாங்கத்துக்கு முன்பே, 'விஹங்கம்' என்ற மராட்டிப் பத்திரிகையில் மூன்று இதழ்களில் வெளியாகியிருக்கிறது. கடந்த மகாயுத்தத்தினல் ஏற்பட்டிருக்கும் புதிய பிரச்சினைகளும் இன்று

எழுத்தாளர்களின் சிந்தனையைக் கவர்ந்திருக்கின்றன. வாழ்க்கையிலுள்ள நிலையான உண்மைகளையும் •இலக்கியத்தையும் அழகாக இணைப்பதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. விதம் விதமான 'டெக்னிக்கு' களைப்பற்றியும் ஏற்கனவே விவாதங்கள் நடந்திருக்கின்றன. கனவுகள் கண்டுவந்த காலம் கடந்துபோய், செயலிலே முனையவேண்டிய காலம் வந்துவிட்டது. இதுவரைக்கும் வெளிவந்துள்ள இலக்கியம், எழுத்தாளர்களுக்கு மிகுந்த தன்னம்பிக்கையை அளித்திருக்கிறது. இனி அவர்கள் வாழ்க்கையின் புதுப் புதுத் துறைகளைத் துணிவுடன் ஆராய்ந்து, புதிய வாழ்க்கை மதிப்புக்களைத் தோற்றுவிப்பார்கள்.

கடந்த எழுபத்தைந்து வருஷ காலத்துக்குள் கேசவஸுதர், தாம்பே, ஜூலியன் போன்ற கவிகளும், கிர்லோஸ்கர், கோல்ஹட்கர் போன்ற நாடகாசிரியர்களும், திலகர், பராஞ்சபே போன்ற புரட்சிகரமான பத்திராசிரியர்களும், தீக்ஷித், மோடக் போன்ற விஞ்ஞான அறிவாளிகளும், சிந்தாமணி வைத்தியர், கேத்கர் போன்ற ஆராய்ச்சியாளர்களும் தோன்றியிருக்கிறார்கள். மராட்டி இலக்கியத்திலே பீஷ்மராக விளங்கிய கேள்கர், முப்பது வருஷகாலம் இடைவிடாமல் இலக்கியத் தவம் புரிந்தார். நாடகத் துறையிலே காடில்கர் தமது ஒப்புயர்வற்ற ஒளியை வீசிச் சென்றார். நாடகம் வளர்ந்த கதையிலே மாமா வரேர்கர் கதாநாயகராக விளங்குகிறார். நாடக வளர்ச்சியைப்பற்றிச் சமீபத்திலே வரேர்கரும், காண்டேகரும் விரிவான நூல்கள் எழுதியிருக்கிறார்கள்.

இன்று காவியச் சோலையிலே கிரீச், யசவந்த், சூரியகாந்த் முதலிய இளங்கவிகள் நடமாடுகிறார்கள். சிறுகதை, நாவல் துறையிலே காண்டேகரும், மாட்கோல்கரும், பட்கேயும், பொகிலும், விபாவரி சிரூர்கரும், கிருஷ்ணுபாயும், அரவிந்த கோகலேயும், டாக்டர் வர்டீயும் புகழ் பெற்றிருக்கிறார்கள். சமூக நிலையை அவ்வப்போது ஆராய்ந்து சிந்தனையைத் தூண்டும் எழுத்தாளர்களில் புரொபஸர், அள்தேகர், குள்கர்ணி, மாடே, கர்வே, காணேகர், க்ஷீரஸாகர், பிரபாகர் பாத்யே முதலியவர்கள் முக்கியமானவர்கள். டாக்டர் கேத்கருக்குப் பிறகு, தாதேயும் கர்வேயும் மராட்டி மொழியின் சொல் வளத்தைத் திரட்டி யிருக்கிறார்கள்.

இந்த எழெட்டு ஆண்டுகளில் மராட்டி வாசகர்களில் எண்ணிக்கை பல்லாயிரக்கணக்காக வளர்ந்திருக்கிறது. வாசகர்களை மேன்மேலும் ரசிகர்களாகவும், இலக்கிய மதிப்பை அறிகிறவர்களாவும் செய்வதற்கு, கிர்லோஸ்கர், வஸந்த், ஸஹயாத்திரி, மௌஜ், ஸ்திரீ, மனோஹர் முதலிய பத்திரிகைகள் ஓயாமல் பாடுபட்டு வந்திருக்கின்றன. வாழ்க்கைப் போராட்டங்களின் உண்மை நிலையோடு இலக்கியம் கலக்கும்போது, பொதுமக்களுக்கும் அதில் அதிகப் பற்று உண்டாகிறது. எந்த விஷயத்தைப்பற்றியும் எல்லாருக்கும் விளங்கும் நடையிலே கவர்ச்சிகரமாக எழுத வேண்டும் என்று கருதினாலும், இலக்கியத்தின் நோக்கம் வெறும்

பொழுது போக்கு அல்ல. பொது நல உணர்ச்சியையும் சிந்தனையையும் தூண்டி, நிரந்தரமான இன்பத்தை அளிப்பதுதான் இலக்கியம் என்ற கொள்கையோடுதான் இலக்கிய கர்த்தாக்கள் எழுதி வந்திருக்கிறார்கள்.

காண்டேகரின் காவியப் பண்பும், மாட்கோல்கரின் நடையழகும், பட்கேயின் வர்ணனைத் திறமையும், வரேர்கரின் பாவ காம்பீரியமும், அத்ரேயின் நகைச் சுவையும், காண்டேகரின் விமரிசனவல்லமையும், விநோபா பாவேயின் சிந்தனையும், காலேல்கரின் பிரயாண அநுபவமும் கலந்த இந்த மராட்டி இலக்கியம், இன்று மகாராஷ்டிரத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே தனிச் சிறப்பு வாய்ந்த இலக்கியமாக விளங்குகிறது. எதிர்காலத்தில் இந்த இலக்கியம் இன்னும் எவ்வளவோ மடங்கு ஜாஜ்வல்யமாக விளங்கும்.

கற்பனையின் பிறப்பிடம்!

எச். இ. பேட்ஸ் என்ற எழுத்தாளருக்கு, நல்ல சாய்மானமுள்ள கைப்பிடி நாற்காலியில் இருந்துதான் கதை எழுதமுடியுமாம். ஜே.பி.பிரிஸ்ட்லி சத்தமே நுழைய முடியாத கதவுகளுக்கு உள்ளிருந்துதான் எழுதுவார். எம்ரிடல் என்பவர் தமது வீட்டைச் சுற்றி ஒரு பெரிய வேலி கட்டிவிட்டார். அப்படி இருந்தால்தான் அவருடைய தனிமை உணர்ச்சி எழுதத் தூண்டுமாம். ஏ. ஜே. குரோனின் தமது 'ராஜ்யத்தின் திறவுகோல்கள்' என்ற நூலை ஒரு எழடுக்கு மாடியில் உச்சித் தட்டில் இருந்து எழுதினாராம். மார்க்ட்வெய்ன் தமது கற்பனைகளை படுக்கையில் படுத்துக்கொண்டுதான் சொன்னார். ஸ்டீவன்சனும், ஸ்காட்டும் நோயின் காரணத்தால் படுக்கையில் படுத்துக் கொண்டுதான் எழுதினார்கள். ஹென்றிக் இப்ஸன் என்ற பிரபல நாடகாசிரியர் தமது பூனை, முயல் முதலிய பொம்மை உருவங்களை வைத்துக்கொண்டுதான் எழுதினாராம். அவை இல்லாவிட்டால் அவரால் எழுதவே முடியாதாம். ஜான்சனின் மேஜையிலும் எழுதும்போது ஒரு பூனை முனகிக்கொண்டிருக்க வேண்டும். டென்னிசனுக்கு எழுதும்போது கையில் ஒரு கோப்பை போர்ட் ஒயின் இருக்கவேண்டும். பால்ஜாக்குக்கு காப்பிதான் எழுதுவதற்கு பக்கத்துணை. பீயரி லோட்டி என்ற பிரஞ்சு ஆசிரியனுக்கு ஒரு மரக் கிளையில் ஏறி யிருந்தால்தான் கற்பனை உதயமாகுமாம். ஆகவே, அவர் தமது வீட்டு மாடியை ஒரு மரக் கிளையைபோலவே அமைத்துக்கொண்டாராம். எப்படிப்பட்ட விநோதப் பிறவிகள்!

—மான்செஸ்டர் கார்டியன்

நண்பர்கள் :

ஒரே நபர்மீது கோபங்கொண்ட இரு பெண்கள்!

சந்தோஷம்?

புத்தர் தனது மனைவி, மகனோடு சாதாரண வாழ்க்கைதான் நடத்தி வந்தார். ஆனால் முப்பது வயதுக்குமேல், சந்தோஷத்தைத் தேடி வீட்டுக்கு வெளியே நடந்துவிட்டார்!

—கிவ்வி பீரீட்

இங்குள்ள ஏழு குட்டிக் கதைகள் தமிழகத்தின் நாட்டுப்புறங்களில் வழங்கும் கதைகளாகும். அவற்றிற்கு தக்க உருவம் கொடுத்து இங்கே எழுதப்பட்டிருக்கின்றன. கிராமத்து மக்களின் சமத்காரம், கற்பனை, ஹாஸ்ய உணர்ச்சி முதலியவற்றிற்கு இந்தக் கதைகள் சரியான எடுத்துக் காட்டுக்கள்.

குட்டிக் கதைகள்

○

கு. அழகிரிசாமி

இனி பயமில்லை!

ஒரு செட்டியாரிடம் ஒருவன் ஐம்பது ரூபாய் கடன் வாங்கியிருந்தான். வாங்கி வருஷங்கள் பல ஆகியும் அவன் கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை. யாதொரு ஆதாரமும் இல்லாமல் கைமாற்ருக வாங்கிய கடனுதலால், வேறு வழியில் பணத்தை வசூல் செய்ய இயலவில்லை. செட்டியார் பணம் கேட்டு வரும்போதெல்லாம் தவணை போட்டுக் கொண்டே வந்தான், கடன் வாங்கியவன். 'அடுத்த வருஷம்' என்று சில வருஷங்களைத் தள்ளினுன்; அடுத்த மாதம் என்று சில வருஷங்களைத் தள்ளினுன்; இப்படியே அடுத்த வாரம், அடுத்த நாள் என்றெல்லாம் தவணைபோட்டு சில வருஷங்களை ஓட்டிவிட்டான். கடைசியில் "காலையில் வாருங்கள் தருகிறேன்; சாயங்காலம் வாருங்கள் தருகிறேன்" என்று குறுந்தவணைகள் போடும் அவசர நிலைக்கு வந்துவிட்டது. செட்டியாரும் அலுப்புசலிப்பின்றி, காலையும் மாலையும் அவன் வீட்டுக்கு நடந்த வண்ணமாக இருந்தார்.

ஒரு நாள், அன்று சால்ஜாப்பு எதுவும் பலிக்காது என்று கடன் வாங்கியவனே தீர்மானித்துவிட்டான். ஒரு நிமிஷம் யோசித்தான். 'சட்' டென்று தன் மகனை அழைத்து, "டேய்! ஒன்பது புளியங் கொட்டைகளைப் பொறுக்கிக்கொண்டு வாடா" என்று உத்தரவிட்டான். புத்திர பாக்கியமும், தக்ஷணமே ஒன்பது புளியங்கொட்டைகளைக்கொண்டு வந்துவிட்டான். தகப்பன் வீட்டின் கொல்லைப்புறத்தில் ஒரு கம்பியைக்கொண்டு ஒவ்வொரு குழியாக ஒன்பது குழிகள் தோண்டினுன். முதல் குழியில் ஒரு புளியங்கொட்டையைப் போட்டு மூடினுன்; இரண்டாம் குழியிலும் ஒரு புளியங்கொட்டையைப் போடடு மூடினுன். மூன்ரும் குழியில் புளியங் கொட்டையை ஊன்றிக் கொண்டிருக்கும்போதே, கடன் கொடுத்த செட்டியார் அங்கு வந்துவிட்டார். வரும்போதே அவர் சும்மா வராமல் சிரித்துக்கொண்டு வந்தார். 'வரும்போதெல்லாம் சாமர்த்தியமாக சால்ஜாப்பு சொல்லி நம்மை அனுப்பி வந்தானே, இன்று என்ன புது சால்ஜாப்பு செய்யப்போகிருனே?' என்று நினைக்கத் தொடங்கிய செட்டியாருக்கு, அதன் மூலம் சிரிப்பு வந்துவிட்டது.

சிரித்ததைப் பார்த்துக் கொண்டான் கடன் வாங்கிய ஆசாமி. உடனே அவன் செட்டியாரைப் பார்த்துப் பின் வருமாறு சொன்னுன் :

"உமக்கு ஏன் சிரிப்பு வராது? 'இதோ புளியங்கொட்டைகளை நட்டுவிட்டான். சீக்கிரத்தில் மரங்களாகிக் காய்க்கத் தொடங்கினால், முதன் முதலாக உதிர்க்கும் புளியம் பழங்களை எடுத்துக் கொண்டு போய் விடலாம். வட்டிக்கும் முதலுக்கும் அந்தப் புளியம்பழங்கள் சரியாய்ப் போகும் என்ற தைரியம் தானே உமக்கு? நீர் நினைக்கிறபடியே முதல் முதலில் உதிர்க்கும் பழங்கள் உம் கடனைக் கட்டுவதற்குத்தான் கொடுக்கப் போகிறேன். உமக்கு இனி சந்தேகமோ, பயமோ வேண்டாம்."

அத்தையும் மருமகனும்

ஒவ்வொரு அத்தைக்கும் ஒவ்வொரு மருமகன் இருப்பதுபோல அந்த அத்தைக்கும் ஒரு மருமகன் உண்டு. பட்டிக்காட்டுக் குடும்பங்களில் இந்த கல்யாண சம்பந்தம் ஏற்பட்டது. பெண் கொடுத்த அத்தை வீட்டில் மாப்பிள்ளை விருந்து சாப்பிட வந்திருந்தான் மருமகன். மருமகனிடத்தில் உள்ள ஒரு தனிப் பண்பு என்னவென்றால், அவன் பல் தேய்ப்பதில்லை. அதனால் அவன் பற்கள், தேய்க்காத பற்கள் எப்படி இருக்கவேண்டுமோ அப்படி இருந்தன. இதைப் பற்றி மருமகனிடம் சொல்லி, அவனைப் பல் தேய்க்கச் செய்வதற்கு அத்தைக்கு வெட்கம்; அவனுடன் அத்தை சாதாரணமாகப் பேசுவது கூடக் கிடையாது. மகளிடம் சொல்லிக் காரியத்தைச் சாதிக்கவும் இயலவில்லை. கணவனைக் கண்டால் அவளுக்கு அத்தனை பயம்!

ஒரு நாள் ஒரு தந்திரம் செய்தாள் அத்தை. தன் மகளிடம் ஓர் அணாவைக் கொடுத்து, "அடியே! இந்த அணாவை உன் புருஷனிடம் கொடுத்து கரும்பு வாங்கித் தின்னச் சொல். ஊரெல்லாம் கரும்பு மலிவாக விற்கிறது" என்று சொன்னாள்.

இரண்டொரு கரும்பை மென்று தின்றால் பல் பிரகாசமாகிவிடும் என்று நினைத்து இந்த உபாயத்தைக் கடைப் பிடித்தாள் அத்தை. மகளும் தாய் சொல் தவறாமல், அப்படியே செய்தாள்.

மருமகன் பேரானந்தத்துடன் சந்தையை நோக்கிப் புறப்பட்டான். போகும் வழியில் நல்லெண்ணெய் ஆட்டும் செக்கு ஒன்றைப் பார்த்து விட்டான். அவனுக்கு எள்ளுப் பிண்ணாக்கு சாப்பிடவேண்டும் என்றுதான் அனேக நாட்களாக ஆசையே ஒழிய, கரும்பு தின்னவேண்டும் என்ற ஆசை அறவே இல்லை. செக்கருகில் போனான். ஓர் அணாவைக் கொடுத்து, பிண்ணாக்கை மடி நிறைய வாங்கிக் கட்டிக்கொண்டான். தெருவெல்லாம் பிண்ணாக்கை மென்று தின்றுகொண்டே வந்தான். வீடு வந்து சேருவதற்குள் பிண்ணாக்கு காலியானாலும், பிண்ணாக்கு தின்ற அடையாளம் பற்களில் ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. அத்தை இப்பொழுது மருமகனுடைய பற்களைப் பார்த்து மெச்சுவாளா? புத்திசாலித்தனத்தைப் பார்த்து மெச்சுவாளா?

செட்டியாரின் கோபம்

செட்டியார் ஒருவர் பலசரக்குக் கடை ஒன்று நடத்திவந்தார். அதில் லாபம் சம்பாதித்து, லக்ஷக்கணக்கான பணமும் சேர்த்துவிட்டார். அவருடைய ஐவேஜியில், நூற்றில் ஒருபங்குதான் வியாபாரத்தில் லாபம் மூலம் சம்பாதித்தது; தொண்ணூற்றொன்பது பங்கு சிக்கனத்தின் மூலம் சேர்த்தது.

செட்டியார் மத்தியானச் சாப்பாட்டுக்காகப் பலசரக்குக் கடையிலிருந்து வீட்டுக்கு வந்தார்; அவருடைய மகன் அவருக்கு முன்னாடியே வந்துவிட்டான். இருவரும் சாப்பிட்டுவிட்டு எழுந்தனர். மகன் தன் சுயபுராணத்தை விரிக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். செட்டியார் திண்ணையில் வந்து உட்கார்ந்ததும் மகன் ஆரம்பித்தான்:

"அப்பா! இன்று காலையில் நான் நம் கடையில் மிளகு மூட்டையை அவிழ்க்க வேண்டியிருந்தது. அப்போது மூட்டைக்குள் கையை விட்டுத் துழாவி மிளகை எடுத்து வந்தவர்களுக்கு விற்றேன். பிறகு மிளகு மூட்டைக்குள் விட்ட கையைத் தரையில் கழுவிக் கொட்டினால் நஷ்டம் என்று, ஒரு பாத்திரத்தில் ஐந்து விரல்களையும் உள்ளங்கையையும் நன்றாகக் கழுவினேன். அப்படிக் கழுவின தண்ணீரைக் கொண்டுவந்து ரசம் வைப்பதற்காக வீட்டில் கொடுத்தேன். நாம் இப்போது சாதத்துக்கு விட்டுச் சாப்பிட்ட மிளகு ரசம், அந்தத் தண்ணீரைக் கொண்டு தயார் செய்தது தான். இப்படிச் சிக்கனமாக இல்லாவிட்டால், பிழைக்க முடியுமா, அப்பா?"

மகன் சரியாகப் பேசி முடிக்கு முன்பே, செட்டியார் துள்ளி எழுந்தார். மகன் எதிர்பார்த்ததுபோல் அவர் மகனுடைய முதுகைத் தட்டிக் கொடுக்கவில்லை. அதற்குப் பதிலாக அவருக்கு மகன் மீது மட்டுக்கு மிஞ்சிய கோபம் பிறந்துவிட்டது. மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க, "அடே சண்டாளா! என் சொத்தை இப்படி நாசமாக்குவதற்கா உன்னைப் பெற்றெடுத்தேன்? ஒரு முழுக் கையையும் கழுவிய தண்ணீரை இன்று ரசம் வைத்துச் சாப்பிட்டுவிட்டோமே! இப்படிச் செலவு செய்தால் கட்டுமா? இன்றைக்கு ஒரு விரலை மட்டும் கழுவி அதைக் கொண்டு ரசம் வைக்கச் சொல்லியிருக்கக் கூடாதா? ஐந்து விரல் தண்ணீரும் ஐந்து நாளைக்கு வருமே? இப்போது எல்லாம் வீணாகிவிட்டதே! போ, என் முகத்தில் விழிக்காதே" என்று சீறி விழுந்தார் செட்டியார்.

கொடை வள்ளல்

ஒரு ஊரில் ஒரு பெரிய பிரபு இருந்தார். கர்ணனுடைய பெயரை அழித்துவிடத் தக்க கொடை அவருடைய கொடை. வருகிறவர்களுக்கெல்லாம் வாரி வாரி வழங்கினார். இப்படி வழங்கி வந்ததனால் கோடிக் கணக்கான அவருடைய சொத்து, பாதி பத்து வருஷத்திலும், பரிபூரணமாக இருபது வருஷத்திலும் கரைந்து விட்டது. பிரபு ஓட்டாண்டியாகிவிட்டார் என்று சொல்லிவிடலாம். ஆனால், அப்படிச் சொல்லுவதில் ஒரு குறை இருக்கிறது. அவர் சொத்து சுகங்களை எல்லாம் இழந்துவிட்ட நிலையிலும், ஒருவரிடமும் போய் யாசகம் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக வேறொரு முறையில் ஜீவனம் செய்து வந்தார். எந்த முறையில் என்றால்...

அந்த ஊர் மந்தையில் ஒரு செக்கு. அதில் வாணியச் செட்டியார் காலையிருந்து மாலை வரை எண்ணெய் ஆட்டுவார். அப்போது பக்கத்திலுள்ள மரத்தின் நிழலில் அந்தக் 'கோடீஸ்வர பிரபு' உட்கார்ந்துகொண்டிருப்பார். உண்மையில் காத்துக்கொண்டிருப்பார். மாலையில் வாணியச் செட்டியார் எண்ணெயையும், பிண்ணாக்கையும் எடுத்துக்கொண்டு போய்விடுவார். அவர் எடுத்துக்கொண்டது போக, ஏதோ கொஞ்சம் பிண்ணாக்கு செக்கில் ஒட்டிக் கொண்டிருக்கும். சுற்று முற்றும் பார்த்துவிட்டு, அதை நகத்தால் சுரண்டுவார் பிரபு. யாரும் பார்த்தால் அவமானமே என்று பயம். ஏதோ எலுமிச்சங்காய் அவ்வளவு பிண்ணாக்கு சேர்த்துவிட்டால் அன்று அவருக்கு நளபாக விருந்துதான். அதைத் தின்று தண்ணீர் குடித்துவிட்டு எங்காவது படுப்பார். இப்படிப் பட்ட பிரவர்த்தி தொடங்கி இரண்டொரு நாள்தான் ஆகி இருக்கும். பிரபுவிடம் வெகு காலத்துக்கு முன்னால் ஆயிரக் கணக்கான ரூபாய் சன்மானம் வாங்கிச் சென்ற புலவர் ஒருவர் அந்த ஊருக்கு வந்தார். புலவருக்கு வறுமை! எத்தனை பணம் சம்பாதித்தாலும் பணம் வேறு, புலவர் வேறுதானே! பிரபு எங்கே என்று விசாரித்தார் புலவர். செக்கடியில் இருப்பார் என்று எல்லோரும்

ஏகமனதாகச் சொன்னார்கள். அது அந்தி மயங்கும் நேரம். செக்கடியைப் பார்த்து நடந்து வந்தார் புலவர்.

பிரபு செக்கைச் சுரண்ட ஆரம்பித்தார். புலவரும் வந்துவிட்டார். வந்து வணங்கினார்; பிரபு திருப்பி வணங்கவும் கூட இல்லை. அப்படி வெட்கம் அவருக்கு!

புலவர் இந்த நிலையிலும் பிரபுவை விடவில்லை. ஏனென்றால் அவருடைய வறுமை அப்படிப்பட்டது! உடனே கவியழகு ததும்பப் புலவர் கேட்டார்:

"செக்கை சுரண்டும் சீமான் மகனே! எனக்கு என்னப்பா சொல்லுகிறாய்?"

பிரபு அந்த இடத்திலும் தம் உதார குணத்தையும், தாராளப் பண்பையும் கைவிடவில்லை. புலவருக்கு அவர் கூறிய பதிலாவது:

"நான் இல்லை என்று சொன்னது உண்டா? நீர் தெற்கே சுரண்டும்; நான் வடக்கே சுரண்டுகிறேன். ஆளுக்குப் பாதி, பகிர்ந்து சாப்பிட்டால் பசியாறும்."

யாருக்கு மனைவி?

ஒரு தச்சாசாரி, ஒரு தட்டாசாரி, ஒரு ஜவுளி வியாபாரி, ஒரு மந்திரவாதி இத்தனை பேரும் கால்நடையாக வெளியூருக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். கடுமையான வெய்யில். அதனால் வழி மேல் இருந்த ஒரு கருவேல மரத்தின் நிழலில் சிறிது உட்கார்ந்து களைப்பாறினார்கள். அவர்கள் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்தின் பக்கத்தில், யாரோ ஒருவன் தன் நிலத்தில் இருந்த மரம் ஒன்றை வெட்டி மரத்தின் முண்டத்தை அங்கேயே போட்டு வைத்திருந்தான்.

அந்தப் பெரிய மரக்கட்டையைப் பார்த்ததும் தச்சாசாரிக்கு ஒரு யோசனை தோன்றியது. தம் கையோடு கொண்டு வந்திருந்த உளி முதலிய ஆயுதங்களை எடுத்தார். அந்த மரக்கட்டையைச் செதுக்கி அழகான ஒரு பெண் பதுமையைச் செய்துவிட்டார்! பதினாறு வயது நிரம்பிய அழகிய பெண் ஒருத்தி, எவ்வளவு உயரமாகவும், எவ்வளவு கவர்ச்சியாகவும் இருப்பாளோ, அவ்வளவு உயரமாகவும், கவர்ச்சியாகவும் இருந்தது பதுமை. பதுமையின் அழகைப் பார்த்த ஜவுளி வியாபாரி அதற்கு அழகான பட்டுப்புடவையைக் கட்டினார். தட்டாசாரி நல்ல நகைகள் செய்து பதுமையை அலங்கரித்தார்; பதுமையின் கழுத்தில் தாலியும் செய்து கட்டினார். கடைசியாக மந்திரவாதி, தம் மந்திர சக்தியினால் பதுமைக்கு உயிர் கொடுத்துவிட்டார். பதுமை எழுந்து நின்றது; நாணத்துடன் தலையைக் குனிந்துகொண்டு சிறிது தூரம் நகர்ந்து, ஒரு ஓரமாய் ஒதுங்கி நின்றது.

"அந்தப் பெண்ணை நான்தான் கலியாணம் பண்ணிக்கொள்வேன்; நான் இல்லாவிட்டால் வெறும் மரக்கட்டையாகத்தானே கிடந்திருக்கும்? நான் தானே பெண்ணைப் போல உருவம் கொடுத்தவன்?" என்று வாதாடினார் தச்சாசாரி.

ஜவுளி வியாபாரியோ, "நீர் சொல்லுவது உண்மைதான். ஆனால் பெண்ணை நீர் என்ன மரியாதையில் வைத்திருந்தீர்? மானத்தை மறைக்க முழத் துணிகூட இல்லாமல் தத்தளித்த பெண்ணுக்கு புடவையைக் கட்டி மானத்தைக் காப்பாற்றியது நான் அல்லவா? ஆகவே அவள் எனக்குத் தான் சொந்தம்" என்றார்.

தட்டாசாரி, "நீங்கள் என்ன செய்தும் என்ன? பெற்ற தகப்பனைப் போல் நீங்கள் நடந்து கொண்டீர்கள். நீங்கள் செய்தது சரிதான். பெண்ணுக்கு தாலி கட்டியவன் நான் அல்லவா? அதனால் அவள் என் மனைவியேதான்" என்று சொன்னார்.

மந்திரவாதி சொன்னார்:

"நான் மந்திர சக்தியால் உயிர் கொடுக்கப்போகத்தானே மரக்கட்டை பெண் ஆனது? வெறும் மரக்கட்டை

யாக இருந்திருந்தால் நீங்கள் வாதாட உரிமை உண்டு. இப்போதோ உயிருள்ள பெண். அவள் உயிர் பெறக் காரணஸ்தனான நானே அவளுக்கு நாயகன்.''

தகாறு முற்றிவிட்டது. நான்கு பேரும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும்போது அந்த நிலத்துக்கு சொந்தக்காரன் எப்படியோ அங்கு வந்து சேர்ந்தான். நால்வரும் அவனிடம் வழக்கை எடுத்துச் சொன்னார்கள். எல்லோருடைய வாதங்களையும் கேட்டுவிட்டு அவன் சொன்னதாவது:

"எனக்குச் சொந்தமான மரக்கட்டையைக் கொண்டுதானே இந்தப் பெண்ணை சிருஷ்டிக்க முடிந்தது? என் மரக்கட்டை இல்லாவிட்டால் இந்தப் பெண் எது? ஆகவே, இந்தப் பெண் எனக்குத்தான் சொந்தம். நீங்கள் என்னிடமும் தாவா செய்ய வந்தால், என் மரக்கட்டையை என் அனுமதியில்லாமல் பாழாக்கியதற்காக உங்கள் மேல் வழக்குத் தொடுப்பேன்.''

மேற்கண்டவாறு கூறிவிட்டு அவன் பெண்ணைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனான்.*

அவளுடைய பெருமை

ஒருத்தி தன் தங்கை வீட்டுக்கு விருந்தாளியாகப் போனாள். தங்கையின் குடும்பம் ஏழைக் குடும்பம்; குடியிருக்கும் வீடு கூட நல்ல வீடாக இல்லை. அக்காள் விருந்தாளியாக வந்த தினத்தன்று பெரிய மழை வந்துவிட்டது. கூரை எல்லாம்ஒரேஒழுக்கல். அதனால் வீட்டுக்குள்ளே தெப்பமாகத் தண்ணீர் கட்டிவிட்டது. பாதங்கள் தண்ணீரில் மூழ்கிவிட்டன. அந்த நிலையில் தங்கை, தங்கையின் கணவன், விருந்தாளியாக வந்த அக்காள்—மூவரும் சிரமப்பட்டு உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். கூரையிலிருந்து ஒழுகும் தண்ணீரும் அவர்கள் மேல் விழுந்துகொண்டிருந்தது. அக்காள், தங்கையைப் பார்த்து, "உங்கள் வீட்டில் முறங்களோ, செங்கல்களோ கிடையாதா?'' என்று கேட்டாள்.

"இல்லையே!'' என்று வருத்தத்துடன் சொன்னாள் தங்கை.

அக்காளுக்கு பவிசு வந்துவிட்டது.

"அட பாபமே! இப்படியும் ஒரு வீடா? எங்கள் வீட்டில் நானும் என் கணவரும் இருக்கிறோம். ஆளுக்கு ஒரு முறமும், ஆளுக்கு இரண்டு செங்கல்களும் இருக்கின்றன. மழை வந்து கூரை ஒழுகத் தொடங்கியதும், நான் ஒரு முறத்தை எடுத்து குடைமாதிரி வைத்துக் கொண்டு தலையை மறைத்துக் கொள்வேன். ஒழுகும் தண்ணீர் மேலே விழாது. காலுக்கு ஒரு செங்கலைக் கீழே போட்டு அவற்றின்மேல் காலை வைத்துக் கொண்டு உட்கார்ந்து கொள்ளுவேன் அதனால் தரையில் தண்ணீர் கட்டினாலும் கஷ்டமில்லாமல் இருந்து கொள்வேன். என் கணவரும்என்னைப்போலவே ஒருமுறத்தை எடுத்து வைத்துக்கொண்டு செங்கலின் மேல் கால் வைத்து உட்கார்ந்து கொள்ளுவார்...மழை காலத்துக்கு உதவியாக இருப்பதற்காக, எங்கள் வீட்டில் இரண்டு முறங்களும், நான்கு செங்கல்களும் பத்திரமாக இருக்கின்றன. உன் வீட்டிலோ ஒன்றுகூட இல்லை என்கிறாய்! ஹூம், இரண்டு முறங்களும், நான்கு செங்கல்களும் இல்லாத வீடு ஒரு வீடா? அந்த வீட்டிலும் ஒரு குடித்தனமா?''

---

* இந்தக் கதை சொத்துரிமையின் சக்தியை விளக்கிக் கூறுகிறது. எத்தனை சிருஷ்டி சக்திகளும் உழைப்பு சக்திகளும் சேர்ந்தாலும் அவற்றை, சொத்துரிமை என்ற சக்திக்கு முன்னால் தலைவணங்க வைக்கிறது மனிதன் சிருஷ்டித்த சட்டம் என்பதை அறிகிறோம்.

—கு. அ.

அக்காள் சொல்லி முடித்தாள்.

அக்காளின் நிலையைக் கண்டு தங்கைக்கும், அவளுடைய கணவனுக்கும் பொறாமையாக இருந்தது.

இரண்டு தம்பிகள்

ஒரு ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு மிகவும் வயதாகிவிட்டபடியால், எந்த ஒரு காரியத்தை முன்னிட்டும் அவர் வெளியூர்களுக்குப் போவதில்லை. அவருக்குப் பதிலாக அவருடைய இரண்டு குமாரர்களும் போய்வருவார்கள்.

மூத்தவன் கடந்த பத்து வருஷகாலமாக கல்யாணங்களுக்கு மட்டும் போய் வந்து கொண்டிருந்தான்; அதனால் அவனுகக்குக் கல்யாண வீட்டுத் தம்பி என்று பெயர்.

இளையவன் கடந்த பத்து வருஷ காலமாக இழவுகளுக்கு மட்டும் போய் வந்து கொண்டிருந்தான்; அதனால் அவனுக்கு இழவு வீட்டுத் தம்பி என்று பெயர்.

மூத்தவன் இழவுவீட்டைப்பார்த்தது கூட இல்லை; இளையவன் கல்யாண வீட்டைக் கனவில் கூட பார்த்ததில்லை.

ஒரு நாள் இரண்டு பேரும் வழக்கத்தை மாற்ற முற்பட்டார்கள். மூத்தவன் இழவு வீடு எப்படி இருக்கிறது என்று பார்க்க ஆசைப்பட்டான்; அப்படியே, தம்பிக்கும் கல்யாண வீட்டைப் பார்க்க ஒரே ஆவல்.

ஏக காலத்தில் இரண்டு கடிதங்கள் வெவ்வேறு ஊர்களிலிருந்து வந்தன. ஒன்று கல்யாணப் பத்திரிகை; மற்றொன்று இழவோலை. புது ஏற்பாட்டின்படி அண்ணன் இழவு வீட்டுக்குப் போனான்; தம்பி கல்யாண வீட்டுக்குப் போனான்.

இழவு வீட்டில் நுழைந்த அண்ணன், "என்ன இப்படி அழுகையும் புலம்பலுமாய்க் கிடக்கிறீர்கள்! சீ, நல்ல நாளில் இது என்ன வழக்கம்? சந்தோஷமாக வந்து உட்காருங்கள். இன்று யாருடைய சதிர் நடக்கப் போகிறது? எந்த ஊர் மேளம்? பட்டணப் பிரவேசம்............" என்று சொல்லி முடிக்கு முன்பே, அங்கிருந்தவர்கள் அடித்து உதைத்து அண்ணனை வெளியே தள்ளிவிட்டார்கள். ஒன்றும் புரியாமல் அண்ணன் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று ஊர் வந்து சேர்ந்தான்.

கல்யாண வீட்டுக்குப் போன தம்பி, போகும் போதே முக்காடு போட்டுக் கொண்டு போனான். அப்போது அங்கே நாட்டியக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது. மாப்பிள்ளையும் பெண்ணும் பூமாலைகளைச் சுமந்துகொண்டு, நாட்டியம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். உள்ளேபோன தம்பி, "ஐயோ! இப்படி அநியாயச் சாவு வருமா உனக்கு? என்ன ஐயா, எல்லோரும் சிரித்துக் கும்மாளம் போடுகிறீர்கள்? நேரமோ இரவு. காலாகாலத்தில் மயானத்துக்குப் போகவேண்டாமா? அவனை (மாப்பிள்ளையை) உட்கார்த்தி வைத்து வேடிக்கை பார்க்கிறீர்களா?" என்று அலறினான்.

அண்ணனுக்குக் கிடைத்த மரியாதைக்கு இரட்டிப்பு மரியாதை தம்பிக்குக் கிடைத்தது. அவனும் ஊருக்கு வந்து சேர்ந்தான்.

தகப்பனார் விபரம் அறிந்து, "தெரியாத காரியத்தில் தலையிட்டால் இந்த அபாயம்தானப்பா. இனிமேல் அவரவர்களுக்கு எதில் பழக்கமும், திறமையும் உண்டோ அதைமட்டும் செய்யுங்கள்" என்று தம் குமாரர்களுக்குப் புத்திமதி சொன்னார்.

அதுமுதல் அண்ணன் கல்யாண வீட்டுக்கே போனான்; தம்பி கல்யாண வீட்டுக்குப் போகிறவர்களைப்போல அத்தனை குஷியோடு இழவு வீடுகளுக்குப் போய்வந்தான்.

✲

இங்கிலாந்தில் மகாத்மாவைப் பற்றி அறிவாளிகள் அவ்வப்போது பேசிக்கொண்டதையும், மகாத்மா அங்கு தங்கியிருந்தபோது நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளையும் கட்டுரையாளர் கூறுகிறார். சுருக்கமாக எழுதியிருந்தாலும் கட்டுரையாளர் காந்திஜியால் அடைந்த பரவசத்தை எழுதி, நம்மையும் பரவசப்பட வைக்கிறார்.

லண்டனில் மகாத்மா

எஸ். வின்ஸ்டன்

நானும் என் மனைவியும் கிராமத்தின் வழியாகச் சென்று கொண்டிருக்கும்போது, யாரோ ஒரு அம்மாள் ஓடிவந்து, "உலகத்திலேயே மிகப் பெரிய மனிதர் சற்று முன் கொலை செய்யப்பட்டார்" என்று அப்போதுதான், தான் கேட்ட ரேடியோச் செய்தியைச் சொன்னாள். ஏன் உடனே எங்கள் மனசில் தோன்றிய பெயர் காந்தியின் பெயராக இருந்தது? சில நாட்களுக்கு முன்தான் பிரசித்தி பெற்ற பத்திரிகை ஆசிரியரான அவருடைய புதல்வர் தேவதாஸ் காந்தி எங்களுடன் ஒரு நாள் முழுவதும் தங்கியிருந்தார். பெர்னார்ட் ஷாவும் எங்களுடன் விருந்துண்டார்; அப்போது ஒரே சிரிப்பும், தமாஷுமாக இருந்தது.

தேவதாஸைப் பார்த்து ஷா சொன்னார்: "உங்கள் தகப்பனார் ஒரு பச்சைக் குழந்தையேதான். அவருக்கு இன்னும் எண்பது வயதாகவில்லை என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அவர் அடிக்கடி உண்ணு விரதம் இருந்து கொண்டே வருவாரென்றால் அவரும் என்னைப்போல நூற்றைம்பது வயது வரை உயிரோடிருக்கப் போகிறார். ஆரோக்கிய சம்பந்தமான விஷயங்களை முட்டாள் ஜனங்கள் விரதம் என்று கருதுகிறார்கள்."

நாங்க ளெல்லோரும் சைவச் சாப்பாட்டுக்காரர்கள். அன்றையச் சாப்பாட்டை மிக நன்றாக அனுபவித்துச் சாப்பிட்டோம். சாப்பிட வேண்டிய பதார்த்தம் எதையும் சாப்பிட விட்டதாகத் தோன்றவே யில்லை. ஷாவின் தமாஷ்களும், கூட இருந்ததால், விரதம் என்ற பேச்சுக்கே அங்கு இடமில்லை. நம்முடைய நண்பரைப் பற்றி ஷா எல்லா வற்றையும் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

"காந்தி தம் குழந்தைகளைக் கவனிக்காமல் விட்டுவிடுவாரோ?" என்று ஷா கேட்டார்.

ஆரோக்கியம், பலம், இவற்றின் உருவமாய் இருந்த தேவதாஸ் அப்படிக் கவனிக்காமல் விடப்

பட்டவராக நிச்சயமாய்த் தோன்ற வில்லை.

"என் தந்தை ஒவ்வொன்றைப் பற்றியும் சிந்திப்பார். அவர் எதிலும் பிரத்தியட்சவாதி. உணவு, கட்டுப்பாடு, சாக்கடை இவற்றையெல்லாம் பற்றியும் சிந்திக்கும் லட்சியவாதியு மாவார்".

"உண்மையில் அவர் ஷா வழியைச் சேர்ந்தவரே தான்" என்றார் ஷா அடக்கமாக.

"அவரிடம் உங்களுடைய ஹாஸ்ய உணர்ச்சி உண்டு. ஆனால் அவர் சிந்திப்ப தெல்லாம் தமக்கென்று உள்ள தம் சொந்த வழியில்தான். அவரிடம் சிந்தையும் செயலும் ஒன்றே," என்று பதிலளித்தார் தேவதாஸ் அறிவுறுத்திக் காட்டுவது போல.

"சரி, அவர் ஒரு பச்சைக் குழந்தையேதான்."

இப்போது சகோதர இந்தியனொருவனே அவரைச் சுட்டு விட்டான்......

அன்று சாயங்காலம் பெர்னர்ட் ஷாவுடன் ரேடியோ கேட்டுக் கொண் டிருந்தேன். மன்னர், தலைவர், பிரதம மந்திரி முதலாயினோர் காந்தியைப் பற்றிக் கூறிய புகழுரைகளைக் கேட்டோம்.

டெலிபோன் மணி ஒலித்தது; ஷா என்ன சொல்லப்போகிறார் என்று அறிய உலகம் விரும்பியது. எதைப்பற்றியும் கடைசி வார்த்தை கூறி எப்பொழுதும் முத்தாய்ப்பு வைக்கும் அம் மனிதர் அன்று முதல் தடவையாக வார்த்தை கிடையாமல் திண்டாடினார். திக்கற்றவராய் என்னைப் பார்த்தார். பிறகு சொன்னார்:

"நான் எப்போதும் சொல்லி வந்திருப்பதை இது நிரூபிக்கிறது; நல்லவரா யிருப்பது ஆபத்தானது. 'செயின்ட் ஜோன்' நாடகத்தில் உள்ள கடைசி வார்த்தைகளை எண்ணிப் பார்த்தேன்: "கடவுளே! இந்த அழகிய உலகைச் சிருஷ்டித்தவரே! எப்பொழுது உம்முடைய ஞானிகளை ஏற்றுக்கொள்ள இவ்வுலகம் தயாரா யிருக்கும்? எவ்வளவு காலமாகும் பிரபுவே, எவ்வளவு காலமாகும்?"

வட்டமேஜை மகா நாட்டிற்காகக் காந்தி இங்கிலாந்திற்கு வந்திருந்த போது, பலதிறப்பட்ட மனிதர்களோடு அவர் பழகுவதைப் பார்க்க நல்ல சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. அவருடைய குரல் இந்தியாவின் குரல்; நான் இதுவரை கேட்டுள்ளதில் அதுவே மிக அமைதியான குரல். இருந்த போதிலும் தம்மைப் பற்றிக் கூறி அவ்வளவு மனம்விட்டுச் சிரிக்க ஒருவராலும் இயலாது. அவர் பெர்னர்ட் ஷா தம்மைச் சந்திக்க வந்த வரலாற்றை விவரித்தார். அதிர்ஷ்டவசமாக அன்றையதினம் அவரது மௌன விரத நாளாக இல்லை; ஆகவே இருவருக்கும் நல்லதாகப் போயிற்று. ஏனென்றால் ஒவ்வொரு திங்கட்கிழமையையும் காந்தி மௌனமா யிருப்பதற்கும், தியானம் செய்வதற்கும் ஒதுக்கி வைத்து விடுவார். இருவரும் தரையில் உட்கார்ந்தார்கள். 'மைனஸ் நாலு' என்று காந்தியே சொல்லும் தம் இடுப்பு முண்டுடனும், ஷா தம்முடைய லண்டன் உடுப்புடனும் தரையில் உட்கார்ந்தார்கள். அன்று நவம்பர் மாதத்திய பக்கா நாள். பனி மூட்டமும்

குளிரும் இருந்தது. "ஷா படு குஷியாக இருந்தார்" என்பதே அந்தச் சந்திப்பைப் பற்றி காந்தி கூறியது.

அதன் பிறகு ஷா அச் சந்திப்பைப் பற்றிப் பின்வருமாறு விவரித்தார்: "நான் காந்தியைக் காணச் சென்றபோது அவர் ஒரு பெரிய நாற்காலியில் சௌகரியக் குறைச்சலோடு உட்கார்ந்திருந்தார். நான் உடனே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டேன். நான் சொன்னேன்: 'உங்கள் நாட்டில் உட்காருவதுபோலத் தரையில் உட்காருங்களேன்!' என்று. அவரைப் போல நானும் தரையில் உட்கார்ந்தேன். அவ்வளவுதான்; உடனே நாங்கள் நண்பர்களாகி விட்டோம்."

எல்லோருமே வெகு விரைவில் அவருடைய நண்பர்களாகி விட்டார்கள். அவருடைய பொறுமை அதிசயிக்கத் தக்கதாயிருந்தது. அவரிடம் முரட்டு வெறியின் சாயை ஏதுமில்லை. ஏனென்றால், அவர் தம்முடைய சிந்தனைகளையும், செயல்களையும் தாமே விமர்சனம் செய்து கொள்பவர். தம்முடைய வாழ்க்கையை அவர் ஒரு சத்திய சோதனை என்று கருதினார். தாம் செய்த ஒரு தவறான காரியம், சரிப்படுத்தப் படும்வரை அவருக்குக் கவலையாகவே இருக்கும். மற்றவர்கள் செய்த தவறான காரியங்களைத் தாம் செய்ததுபோலக் கருதிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வார். அவர் மற்றவர் தவறை மன்னிக்கத் தவறியதில்லை; தாம் தவறிழைத்தபோது தவறை மறக்கத் தவறியதுமில்லை. நூல் நூற்றுக்கொண்டே பிறர் சொல்வதையெல்லாம் அவர் கூர்மையாகக் கவனித்துக் கேட்டார். ராஜ தந்திரிகள் வந்து வாதம் செய்தபோதும், சக உழைப்பாளிகள் கலந்தாலோசித்தபோதும் மற்றவர்களுடைய கருத்தைக் கண்டு மகிழ்வார். காந்திக்கு எதிர்க் கட்சியில் உள்ளவர் போல் தோன்றும் ஒருவர் தமது கருத்தை நன்றாக எடுத்துக் கூறுவதற்கு உதவுவார் காந்தி.

தரம் சொல்லுவதே வெற்றி பெற வேண்டுமென்று அவர் ஒரு நாளும் முரட்டுப் பிடிவாதம் பிடிப்பதில்லை. தெரியாத் தனமாக எடுத்தெறிந்து பேச வருபவர்கள் எல்லாம் அவரோடு அமர்ந்து பிரார்த்தனை செய்வார்கள். மாலைப் பிரார்த்தனையில் கிறிஸ்தவர், யூதர், முகம்மதியர் யாரும் வித்தியாசமின்றிக் கலந்து கொள்ளலாம். அவரைப் பொறுத்தமட்டில், சகல மதங்களும் ஒரே கடவுள் தத்துவத்தை நோக்கிச் செல்வனவாகும். காந்திக்கு முன்னால் எல்லோரும் சமமே. ஒரு தடவை அவசரமாக ஒரு விஷயத்தைக் கலந்தாலோசிக்க ராம்ஸே மாக்டொனால்டு காந்தியிடம் வந்தார். ஆனால் அப்போது காந்திக்கு வணக்கம் தெரிவிப்பதற்காக ஒரு தபால் சேவகன் வெகுதூரம் நடந்துவந்திருந்தான். "தபால்காரரை முதலில் பார்க்கிறேன்" என்றார் காந்தி தீர்மானமாய். பிறகு காந்தி எனக்கு விளக்கினார், "ஒரு ராஜ தந்திரி பொறுத்திருக்கலாம். ஏனென்றால் அவருடைய வேலையே அப்படிப்பட்டது. சந்தர்ப்பங்கள் தம்மைக் காரியத்தில் இறங்கும்படி செய்யும்வரை அவர் காத்துக்கொண்டே இருக்கிறார்" என்று.

அநேக வருஷ போராட்டங்களுக்குப் பிறகும் அவருடைய தேக சக்தி அபாரமாய் இருந்தது. பாதி ராத்திரிவரை கடினமாக உழைப்பார். பிறகு நைட்ஸ் பிரிட்ஜிலிருந்து கிழக்கு லண்டனிலிருந்த தம்முடைய சிறிய ஜாகைக்குக் காரில் வெகுதூரம் செல்லுவார். மீண்டும் அதிகாலையில் நான்கு மணிக்குப் பிரார்த்தனை செய்ய எழுந்து விடுவார். காட்டுப் பக்கம் நீண்டதூரம் உலாவிவிட்டு வருவார். பின், மகாநாட்டிற்குச் சென்று விடுவார். கொடுமையான அந்த நவம்பர் மாதம் முழுவதும் அவர் தேக ஆரோக்கியத்துடனேயே இருந்தார். குளிர் காரணமாக இருமிக்கொண்டு வரும் ஆங்கிலேயர்களுக்குப் பேட்டி யளித்துக் கொண்டும், ஆகார சம்பந்தமான பத்தியங்கள் கூறிக்கொண்டும் இருந்தார். அப்போது என் மனைவி எழுதி முடித்துக்கொண் டிருந்த அவருடைய உருவப் படத்தைப் பார்த்ததும், அவர் அனுபவமுள்ள வரைப்போல ஒரு பிரஷ்ஷை எடுத்து, வர்ணத்தில் தோய்த்து அப்படத்தில் கையெழுத்திட்டார். "நானும் ஒரு சிந்தனைச் சைத்ரீகன்தான். என்னுடைய திரைச் சீலை இந்தியா" என்றார் காந்தி.

✲

நாகரிகம்

உண்மையான நாகரிகம் என்பதுதான் என்ன? அது நாடோ, நகரமோ பொருள் வளமோ, ஆடம்பரமோ, செல்வமோ அல்ல. கல்வியறிவின் பரப்பும், அருமையான இலக்கியங்களும் கூட அல்ல. அவை நல்லவைகளாயிருக்கலாம். அவை நாகரிகத்துக்கு எடுத்துக் காட்டல்ல. உண்மையான நாகரிகத்தின் சின்னங்கள் ஏழைகளுக்கும் துயரப்படுபவருக்கும் வருந்தும் எண்ணத்திலும், பெண்களைப் பற்றி துணிவான மதிப்பும் கௌரவமும் தரும் தன்மையிலும், மனித சமுதாயத்தின் சகோதரத்துவத்தை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் பக்குவத்திலும், ஜாதிமத நிற இனபேதங்களைக் கடந்து, பலம் ஒன்றுதான் உலகை ஆளும் சக்தி எனக் கருதாமல் இருக்கும் தன்மையிலும், சுதந்திரக் காதலிலும் நன்மை தீமை உணரும் தன்மையிலும், நியாயத்துக்காகப் போராடும் நிர்த்தாட்சண்ணியமான பக்தியிலும்தான் காணப்படுகின்றன. அந்தமாதிரியான நாகரிகம் தான் சமாதானத்தை நிலை நிறுத்த முடியும்.

—லார்ட் ரஸ்ஸல்.

அனுபவம்!

அவரவருடைய தவறுகளுக்கு அவரவர்கள் சூட்டிக் கொள்ளும் அருமையான பெயரே அனுபவம்!

—ஆஸ்கார் ஒயில்டு.

சர்வ கலாசாலைகள்

சர்வகலாசாலைகளில் ஏன் கல்வியறிவு நிறைந்திருக்கிறது தெரியுமா? அதன் உள்ளே வருபவர்கள் கொஞ்சம் அறிவுடன் வருகிறார்கள்; அதை விட்டுச் செல்பவர்கள் அறிவு சூன்ய மாய்ப் போகிறார்கள். அதனால் தான் அங்கு அறிவு குவிந்து போகிறது!

—பிரசிடெண்ட் லோவல்.

அமெரிக்கன் மாடல் ரிவால்வர்

உங்கள் வாழ்க்கை, ஆஸ்திகள், மரியாதைமுதலியவற்றை திடீரென எதிர்க்கும் முரடர்களிடமிருந்தும், கொடிய விலங்குகளிடமிருந்தும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்

வீட்டிலும், வனபோஜனம் அல்லது பிரயாணத்திலும், உறுதியும் இலேசானதுமான இந்த ரிவால்வர் எப்பொழுதும் உங்கள் உற்ற துணைவன் என்பதை நிரூபிக்கும். தானுகவே சுற்றிவரும் 6 ரவைகள் வைக்கக்கூடிய அறையுடன் கூடியது. அமெரிக்காவில் செய்யப்படும் உண்மைப் பிஸ்டலைப் போலவே தோற்றமளிக்கிறது. இதன் எடை 15 அவுன்ஸ்கள். நீளம் 9 அங்குலம். அதிபயங்கரமான சப்தத்துடன் நீளமாகக் கோடுபோல் ஒளி கக்கிக்கொண்டு வெடிக்கிறது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் அனுப்புங்கள். செலவில்லாத இம் மெய்க்காப்பாளன் இல்லாதிருக்காதீர்கள்.

விலை ரவைகளுடன்

நெ-111 ரூ. 5/- நெ-333 ரூ. 7/8-

நெ-222 ரூ. 6/8 நெ-444 ரூ. 8/8

B-555 ஸ்பெஷல் வெள்ளி முலாம்
விலை ரூ. 10—0—0

அலாதியாக 4 டஜன் ரவைகள்
விலை ரூ. 4—8—0

பிஸ்டல் பெட்டி பில்டுடன்
விலை ரூ. 5—0—0

உபயோகிக்கும் எண்ணெ புட்டி 1-க்கு
விலை ரூ. 1—0—0

HINDUSTAN TRADERS
P. Box No. 286—KANPUR (U. P)

ஆஸ்த்மாவை குணப்படுத்துவது

ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரை ஈரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளவும்.

ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹாரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

இந்தப் புத்தகம்தான்

★

வந்தவர்: ஐயா, காந்தியைப் பற்றிய ஏதாவது நல்ல புத்தகம் இருக்கிறதா? ஏதோ பாட்டு வடிவத்திலே ஒரு புத்தகம் வெளியா யிருக்கிறது, ரொம்ப நல்ல புத்தகம் என்று பக்கத்து வீட்டுக்காரர் சொன்னாரே, அப்படி ஏதாவது வந்திருக்கிறதோ? காந்திஜி மறைந்த சமயத்தில்கூட ரேடியோவில் பாடினார்களே அந்தப் புத்தகம்தான் என்று நினைக்கிறேன்.

கடைக்காரர்: ஓ! காந்தி மகான் கதையைத்தானே கேட்கிறீர்கள்? கோத்தமங்கலம் சுப்பு பாடியது. ரொம்ப நல்ல புத்தகம். எல்லோரும் வாங்கிப் படிக்கிறார்கள். கிராமவாசிகள் பழைய காலப் பாட்டுகளைப் போலப் படிப்பதற்காக, காந்தி மகான் கதையைத்தான் வாங்கிப் போகிறார்கள். இந்த அழகான பெரிய புத்தகத்திற்கு ஐந்தே ஐந்து ரூபாய்தான் விலை. சென்னை சக்தி காரியாலயத்தார்தான் வெளியிட்டது. ரொம்ப நல்ல புத்தகம். படித்துப் பாருங்கள். சிரிப்பீர்கள். உடனே கோபம் வரும். உடனே அழுகையும் வரும். இந்தியா சுதந்திரம் அடைந்த கதைதான் இது.

வந்தவர்: இந்தப் புத்தகம் தான். காந்தி மகான் கதை என்று பக்கத்து வீட்டுக்காரர் சொன்னார். ரொம்ப நல்ல புத்தகம்தான் போலிருக்கிறது. சரி, ஒரு மூன்று புத்தகம் பில் போடுங்கள். அட்டையிலுள்ள காந்தி படத்திற்கே ஐந்து ரூபாய் கொடுக்கலாம்போ லிருக்கிறது.

★

'காயமே! இது பொய்யடா!' என்று பாட்டுப் பாடலாம். ஆனால், நமது உடம்பில் எத்தனை விதமான அதிசயங்கள் நிரம்பியிருக்கின்றன! கொஞ்சம் படித்துத்தான் பாருங்களேன்! லீடர் மாகஸீனிலிருந்து திரட்டிய குறிப்புக்கள்.

உன்னைத் தெரியுமா?

○

'ஈபா'

மனிதனே! நாம் பிறக்கும்போது உடம்பில் 270 எலும்புகளுடன் பிறக்கிறோம்; சாகும் போதோ 206 எலும்புடன்தான் சாகிறோம். அந்த அறுபத்திநாலு எலும்புகளும் எங்கே போய் விட்டன? எங்கும் போகவில்லை. நமது பால்ய வளர்ச்சிக் காலத்தில் மற்ற எலும்புகளோடு ஒட்டிக்கொண்டு விட்டன.

நமது உடம்பில் 527 விதமான தசைகள் இருக்கின்றன. அவற்றில் 83 தசைகள் தலையில் மட்டும் இருக்கின்றன. நமது உடம்பிலுள்ள மின்சாரத்தைக் கொண்டு, ஒரு 25 வாட் மின்சார பல்பை, மூன்று நிமிஷங்களுக்கு மேலாக எரியவைக்க முடியும். நீராவிக் குளிப்பின் மூலம் உடலில் வியர்வையைப் பெருக்கி வடிய விட்டு, எடையைக் குறைக்க விரும்புபவர்கள், குளிர்ந்த தண்ணீரில் குளிப்பதுதான் சிலாக்கியம். ஏனெனில் குளிரால் உடம்பின் சக்தி குறைகிறது; அதனால் அபரிமிதமான கொழுப்புச் சத்து உடல் சக்தியைச் சமனப்படுத்த உதவுகிறது.

நமது உடம்பிலிருந்து ஒரு மணி நேரத்தில் வெளிச் செல்லும் உஷ்ணத்தைக் கொண்டு, நாலு பெரிய காப்பிச் சட்டித் தண்ணீரைக் கொதிக்க வைக்க முடியும்; அல்லது ஒரு மாதிரி ரயில் எஞ்சினை யாவது மூன்று மணி நேரம் ஓட்ட முடியும்.

நமது உடம்பின் எடையில் மூன்றிலொரு பங்கு வெறும் தண்ணீர்தான். நமது உடம்பிலுள்ள நீரில் ஐந்தில் ஒரு பங்கை நாம் இழந்து விட்டாலும், சாவு நிச்சயம் தான். பத்தில் ஒரு பங்கை இழந்தால், கடுமையான நோய் வரக் கூடும். ஆனால் உபவாசம் இருப்பதன் மூலம் நாம் உடம்பிலுள்ள கொழுப்புச் சத்து முழுவதையும் கரைத்துவிட முடியும்; புரதச் சத்தில் பாதியைக் கரைக்கமுடியும்; பசைச் சத்தைக்கூட முழுதும் போக்கிவிட முடியும். இத்தனையையும் உடம்புக்கு யாதொரு கெடுதலும் நேராமல் செய்துவிட முடியும்.

ஒரு நாளில் நமது இருதயம் 103,389 தடவை அடித்துக் கொள்கிறது. நமது ரத்தம் 1680

லட்சம் மைல்கள் பிரயாணம் செய்கிறது. நாளொன்றுக்கு 23040 தடவை உள்மூச்சு வாங்குகிறோம்; வாங்கும் காற்றின் கன பரிமாணமோ 438 சதுர அடி. பான ஆகாராதிகள் மூலம் தினம் 5 பவுண்டு எடைப் பொருள்களை விழுங்குகிறோம். வியர்வை, கழிவு நீர் முதலியன மூலம் 1·43 பைண்ட் அளவு வெளி விடுகிறோம். நமது நகமோ ஒரு நாளில் 0·000046 அங்குலம் வளர்கிறது; தலைமயிர் 0·01714 அங்குல நீளம் வளர்கிறது.

ஒரு திடகாத்திரமான மனித உடம்பின் ரத்தம் மட்டும் உடம்பின் மொத்த எடையில் பன்னிரண்டில் ஒரு பாகம் இருக்கிறது. சராசரி மனிதனின் உடம்பிலுள்ள ரத்தம் சுமார் ஒன்பதிலிருந்து பன்னிரண்டு பைண்ட் அளவு இருக்கிறது. நமது ரத்தத்தில் முக்கால் பாகம் வெறும் தண்ணீர் தான். மூன்று அல்லது நான்கு பைண்ட் அளவுவரை ரத்தத்தை இழந்தால்கூட, நமது உயிருக்கு ஆபத்தில்லை. நமது உடம்பில் பதினேரு வகை புலனுணர்ச்சிகள் இருக்கின்றன. நாமறிந்த ஐம்புலனுக்கு (பார்வை, ஊறு, சுவை, ஓசை, வாசனை) அப்பாலும், ஆறு விதப் புலன்கள் இருப்பதாக உடற்கூறு ஆசிரியர்கள் கூறுகின்றனர். உஷ்ணப்புலன், குருத்துவ கேந்திரப்புலன், பசி, தசை உணர்வு, வேதனை, தாகம் முதலியவற்றையும் புலனுணர்ச்சிகளாகக் கருதுகிறார்கள். எப்படி நமது உடம்பு?

ஞாபகார்த்தம்!

பாரிஸ் நகரத்தின் ஒரு கட்டடத்தில் ஒரு பிரபல எழுத்தாளர் அங்கு வாழ்ந்து இறந்ததின் ஞாபகார்த்தமாக ஒரு போர்டு தொங்கப் போட்டிருந்தது.

அங்கு வேறு இரண்டு எழுத்தாளர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அதைப் பார்த்துவிட்டுப் பேசிக்கொண்டார்கள்:

"என்னப்பா, நான் இறந்துபோனால், இந்த மாதிரி ஏதாவது போடுவார்களா?"

"நிச்சயமாய்."

"என்ன போடுவார்கள்?"

"வீடு வாடகைக்கு விடப்படும்! என்று போர்டு போடுவார்கள்"

—பாரீஸ் பத்திரிகை

படப் பிடிப்பு

ஒரு பட முதலாளி ஒரு சண்டைப் படம் எடுக்கத் திட்டமிட்டார். அந்த யோசனையை தமது பட டைரக்டரிடம் சொன்னார்:

"இது ஒரு பிரமாதமான, லக்ஷோப லக்ஷச் செலவில் எடுக்கவேண்டும். சண்டைக்கு படையே தயாரிக்கவேண்டும்; இந்தப் பக்கம் நாலாயிரம் பேர்; அந்தப் பக்கம் ஐயாயிரம் பேர்!"

"மொத்தம் ஒன்பதாயிரமா? அவ்வளவு பேருக்கும் செலவுக்கு எங்கே போவது?"

"ரொம்ப லேசு. அதற்கு நாம் நிசத் தோட்டாக்களையே உபயோகித்தால் போகிறது?" என்றார் முதலாளி.

—சிகாகோ, ஸன்டைம்ஸ்

கட்டுரை ஆசிரியர் தற்போது அமெரிக்காவில் ஓஹியோ சர்வகலாசாலையில் உணவு விஷயமான கல்வி பயின்று வருகிறார். இவர் தமிழர். சென்னைக் கல்லூரிகளில் படித்தும், பதவி பெற்றும் வந்தவர். தாம் நேரில் கண்ட சுவாரஸ்யமான விஷயங்களை இக் கட்டுரையில் எழுதி யிருக்கிறார்.

அமெரிக்கப் பெண்கள்

ஸ்ரீமதி ராஜம்மாள் தேவதாஸ்

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையந்தழைக்குமாம்" என்று மகாகவி பாரதியார் கூறியதை நடை முறையில் நன்கு கடைபிடிப்பவர் அமெரிக்க மக்கள். வீட்டிலோ, வெளியிலோ, சிறு பணியிலோ அல்லது பெருந்தொழிலோ, யாவற்றிலும், எங்கும், ஆணும் பெண்ணும், சரி நிகர் சமானந்தான். சம உரிமைக்கோர் உருவமுண்டெனில் அந்த அமெரிக்காவில் நன்கு காணலாம். ஆண்கள் செய்யக் கூடாத பெண்கள் வேலைகளோ அல்லது பெண்கள் செய்யக் கூடாத ஆண்கள் வேலைகளோ இல்லை என்றே கூறலாம். சில வேளைகளில் பெண்களை ஆண்களென்று ஐயுறும் நிலைமையும் ஏற்பட்டுவிடுகிறது. ஏனெனில் தற்காலத்தில், அதிலும் இரண்டாவது மகா யுத்தத்திற்குப் பிறகு, ஆண்கள் அணியும் ஆடைகளைப் பெருவாரியான பெண்கள் சவுகரியத்தைக் கருதி, அணிகின்றனர். நீண்ட அழகிய கூந்தலைப் பேணப் பொழுதின்றி கத்தரித்து விடுகின்றனர். உயரத்திலும், பருமனிலும், ஆண்களுடன் போட்டியிடுகின்றனர். 'மெல்லியலாள்' என்ற தொடரில் இழிவையன்றி அழகைக் காணும் பெண்கள் அமெரிக்காவில் கிடையாது. பெண்களுக்கு எல்லாவகைகளிலும் சம உரிமை தரவேண்டும். 'அவர்களால் முடியாது; சக்தியற்றவர்கள்' என்று எண்ணக்கூடாது என்ற கொள்கையையுடைய மகாத்மா, "பெண்களுக்குச் சரியான கல்வி வேண்டும்—ஆனால், அக் கல்வி முறை ஆண்களைப் பின்பற்றுவதாகவோ, அல்லது அவர்களுடன் போட்டியிடுவதாகவோ இருக்கக்கூடாது; ஏனெனில் பெண்மையின் சக்தி ஆண்மைக்குக் கிடையாது. பெண்மையும் ஆண்மையும் போட்டியின்றிக் கலக்கும்போது பூரண முன்னேற்றம் உண்டாகும்" என்று கூறியதை இன்று 'சம உரிமை'க்கு அடிமையாகும் பெண்டிர் சற்று சிந்தித்துப் பார்ப்பது நன்மை பயக்கும்.

'அமெரிக்கப் பெண்களை, அவர்கள் தம் இல்லங்களில் தவிர

வேறெங்கும் காணலாம்' என்று ஒரு பெரியவர் சொன்னார். அது மிகவும் உண்மையே. நமது வீடுகளில் பெண்களுக்குள்ள அநேக பொறுப்புகளை அகற்றிவிட்ட அமெரிக்கப் பெண்களுக்கு வீட்டில் இருந்தால் பொழுது போக்கு எங்ஙனம் கிடைக்கும்? மாமியார் மாமனார், கணவனுடைய உறவினர் முதலியோர் ஆதிக்கத்தினின்றும் அமெரிக்கப் பெண்கள் விடுதலை பெற்று அநேக ஆண்டுகளாகி விட்டன; உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கு இன்றியமையாத அடிப்படையான அம்சம் சிறிய குடும்பம் என்ற உண்மையை நன்குணர்ந்த அமெரிக்கப் பெண்கள், குடும்பத்தைச் சிறியதாக வைக்குமாறு, கருப்பத் தடைக்காகச் சிறந்த விஞ்ஞானச் சுகாதாரச் சாதனங்களைக் கையாண்டு குழந்தைகள் வேதனைகளைத் தவிர்த்துக் கொள்ளுகின்றனர். ஆகவே குடும்பத் தொல்லை யென்பது மிகவும் கொஞ்சந்தான்.

"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு" என்ற பழமொழி அமெரிக்காவில் சிறிதும் அடுக்காது. ஏனெனில் அடுப்பூதும் தொழிலே அற்றுப் போய்விட்டது. சமையல் அறைகளெல்லாம் மின்சாரக் கருவிகளால் நிறைந்து, அழகு பெற அமைக்கப் பெற்று, ஒரு பொம்மை வீட்டைப் போல எப்போதும் சுத்தமாகவும், ஒழுங்காகவும் இருக்கின்றன. பலவித 'வேலை சுருக்கும் கருவி'களின் உதவியால் பல பதார்த்தங்களுடன் அறுசுவை யுண்டியை அரை மணி நேரத்திற்குள் தயாரித்து விடலாம். சமைக்கும் பொருள்களையெல்லாம் ஏற்கெனவே சுத்தப்படுத்தி, விஞ்ஞான விதிகள்படி பொதிந்து விற்கின்றனர். ஆகவே, சமையல் வேலை சற்றும் சிரமமின்றி இன்பமளிக்கும் பொழுது போக்காகவே தோன்றுகின்றது. சமையலுக்காகச் செலவாகும் நேரமும் மிகவும் சொற்பம். உணவுப் பொருட்களை விநியோகிக்கும் கடைகளும், சர்க்கார் உணவிலாகா, சுகாதார இலாகா, கல்லூரி இல்வாழ்க்கைக் கலை இலாகா ஆகிய சாதனங்கள் அடிக்கடி சிறந்த உணவு நூல்களை வெளியிடுகின்றனர். அதில் காணும் புதிய பண்டங்களைச் சமைத்துப் பார்ப்பதிலும், நண்பருடைய புதிய முறைகளைக் கையாளுவதிலும், அமெரிக்கப் பெண்கள் அதிக அக்கறை காட்டுகின்றனர்.

வீட்டுவேலை மிகவும்சுருங்கிவிட்டபடியால், அமெரிக்கப் பெண்கள் அறிவு விருத்திக்கான முறைகளில் தமது நேரத்தைப் பயன்படச் செலவழிக்கும் வழிகளைச் சதா தேடிக்கொண்டுள்ளனர். அதனால் "கூட்டமோகம்" அபரிமிதமாக ஏற்பட்டு விடுகிறது. ஏதாவதொரு கூட்டத்தில் அங்கத்தினராக யில்லாத பெண்ணே கிடையாது. அங்கத்தினராக யிருப்பதோடு திருப்தி உண்டாவதில்லை. அச்சங்கத்தில் ஏதாவதொரு பொறுப்பு வாய்ந்த நிர்வாகத் தொழில் வகிக்கவும் ஆசை. ஆகவே ஒவ்வொரு சங்கத்திலும், அதன் அங்கத்தினரை யெல்லாம் உத்தியோகஸ்தராக்குமாறு அநேக கமிட்டிகளும், சப் கமிட்டிகளும் இருப்பதுடன் அன்னார் பெயர்கள் எல்லாம் அச்சுப் பிரதிகளில் பளிச்

சென்று விளங்குவதையும் காண லாம். எந்தச் சிறிய காரியத்திற்கும் ஒரு நிர்வாகக் கூட்டம் இருப்பது அமெரிக்கருடைய குணாதிசய மாகும்.

ஒரு பெண் பல சங்கங்களில் அங்கத்தினராகவும், நிர்வாகஸ்த ராகவும் அமைந்து, அவற்றிற்காக முழு மனத்துடன் உண்மையாக உழைக்கும்போது 'நேரமில்லா'க் கொடுமை ஏற்பட்டு விடுகிறது. சுறு சுறுப்பான நபராகிவிடுகிறாள். ஓய்வோ, நீட்டி நிமிர்ந்து உட் கார்ந்து களைப்புத் தீர இளைப்பாற அவகாசமோ எள்ளளவும் கிடைப்பதில்லை. சிற்சில சமயங் களில்பெண்மையென்னும் பெருங் குணத்தையே யிழந்து விட்டுத் தான் இயக்கும் பல இயந்திரங் களில் ஒன்றைப் போலவே இயங்க ஆரம்பித்து விடுகிறாள். இத்தகைய நிலையில், கணவனும், மக்களும், மற்ற உறவினர், நண்பர்களும், இல்லக் கிழத்தியையே காணும் பாக்கியத்தை யிழந்து தவிக்கின் றவராகின்றனர். கணவன் பிள்ளை களைத் தாலாட்டிச் சீராட்டி உண் பிக்கவும் அவர்களுக்கு உடை உடுத்தி விடவும், பாத்திரங்களைக் கழுவவும், உணவு தயாரித்து உரிய வேளையில் மனைவிக்குப் பரிமாற வும் நேரிடுகின்றது. இந் நிலையில் தான் மற்றும் பல காரணங்களும் சேர்ந்து, வீட்டில் மனக்குழப்ப மும், சண்டைகளும், சச்சரவு களும் தோன்றிக் கடைசியில் பிரிவு ஏற்படுகிறது. "ஏன் இந் தப் பரபரப்பு" என்று தம் மைத்தாமே பன்முறை கேட்டு மயங்கும் அம் மங்கையர், நம் நாட் டுப் பெண்களின் சீரிய கடமைக ளாகிய கணவன் வழிபாடு, இறை வனைத் தொழுதல், வீட்டைக் கோயிலாக்குவது ஆகியவற்றைக் கூறும்போதெல்லாம், கன்னத்தில் கை வைத்து, அவ்வுத்தம உயரிய நிலை எம் நாட்டிலும் தோன்றாதா என்று ஏங்குகின்றனர்.

'அன்புடையாள்' என்று தனது மனைவியை வருணித்ததில் பொய்யிற் புலவர், பெண்ணை அன் பின் திருவுருவமாகவே காட்டு கின்றார். இவ்வன்பு எத்தன்மை யது எனில்,கைம்மாறு கருதாதது; இம்மைக்கும் மறுமைக்கும் உயி ரளிப்பது; எழுமையுங் கடந்தது. அன்பிற் பிறந்த காதல் வாழ்க்கை யில் கணவன்பால் குற்றத்தையே காண இயலாதபடியாகி விடுகின் றாள். அப்படிப்பட்ட அன்பே கற் பிற்கும் அடிப்படையாகிறது.

இத்தகைய காதல் இன்று அமெரிக்காவில் இல்லையெனக் கூற முடியாது. ஆயினும், கட்டுப் பாட் டில் காதலும் அகப்பட்டுக்கொண்டு, தனது உண்மைப் போக்கைச் சிதைத்து விடுகிறது. கணவனுக் கும் மனைவிக்கும் இடையே பல சட்ட திட்டங்களும், கணக்கு வழக்குகளும் சகஜமாக வுள்ளன. மனைவி எதையும் விட்டுக் கொடுக் கக்கூடிய மனப்பான்மை யுடையவ ளல்ல. சட்டங்களைக் கணவன் மீறி னால் அவனுடன் வாழ்வதும் அரிது.உசிதமுமல்ல. ஆகவே அவ னிடமிருந்து பிரிவுச் சீட்டைப் பெற்றுக் கொண்டு, தனது வாழ் வைப் புதிதாக ஆரம்பித்துப் பூரணப் படுத்த மீண்டும் மணந்து கொள்கிறாள். கற்பென நாம் போற்றும் புனிதப் பண்பு, அமெரிக்காவில் நடை முறையில்

கிடையாது. ஒரு வேளை கற்பனுவுலகில் காணலாம். கற்பிற்கு ஒரு தனிப் பொருளும் தருகின்றனர். கணவனும் மனைவியும் ஒத்து வாழும் சமயத்தில் ஒருவருக்கொருவர் உண்மையாய் இருப்பது தான் கற்பு. மனைவி, கணவனுடன் வாழ முடியாத நிலையில் பிரிந்து விடுவதும் கற்பு. மீண்டும் மணப்பதும் கற்பு. ஆகவே பத்தினிப் பெண்டிர் பிறர் மனம் புகார் என்ற சீரிய கொள்கை அமெரிக்காவில் சிறிதும் பொருந்தாது.

அமெரிக்காவின் செல்வத்தில் பெரும் பகுதி பெண்கள் கையில் தான் உள்ளது. அதிலும், விதவைகளிடத்தில்தான். விதவைகள் மீண்டும் மணக்கும் உரிமையுள்ளவர்களாதலால்,'அவள் ஒரு விதவை' ஆகவே அதிர்ஷ்டசாலி என்று விதவைகளைப் பார்த்துக் கூறுவது நம்மை வியக்க வைக்கிறது. விதவைகள் குழந்தைகளில்லாவிட்டால் அதைப் பெருங் குறைவாக நினைப்பதில்லை. ஏனெனில் மீண்டும் மணக்கலாம் அல்லது ஒரு நாயையோ பூனையையோ பிள்ளையிலும் மேலாகப் பிரியமுடன் வளர்க்கலாம். அதே மாதிரி, வயது முதிர்ந்தும் மணம் புரியாத மாது சிரோன்மணிகள் பலர் மிருகங்கள் பால் தமது அன்பையெல்லாம் செலுத்துவது சர்வ சாதாரணம். ஆகவே மாதர் உணவைப்போலவே இம் மிருகங்கள் உணவிலும் பல வகை ஆராய்ச்சிகள் நிகழ்கின்றன.

ஜன நாயக அமெரிக்காவில், இல் வாழ்க்கையில், ஆண் பெண் என்ற பேதம் ஏற்படுத்தும் தொழிற் பிரிவு சற்றுங் கிடையாது. இருவரும் சகல வேலைகளையும் சேர்ந்து செய்துவிட்டு ஒரே நேரத்தில் படுக்கச் செல்கின்றனர். 'பின் தூங்கும்' நிர்ப்பந்தம் பெண்ணுக்கில்லை. சில வேளைகளில் காரியாலயங்களுக்கு அதிகாலையில் செல்லும் ஆண்கள், (அமெரிக்காவில் ஆபீஸ்கள் 8 மணிக்குத் திறக்கின்றன) அவர் தம் மனைவியர் ஆழ்ந்த துயிலினின்றும் எழும்பாதபடி மெல்ல நடந்து, தமது உண்டியைத் தாமாகவே தயாரித்து அருந்திவிட்டு, மனைவிக்கும் உணவு சமைத்து வைத்துவிட்டுச் செல்கின்றனர்.

ஆண்கள் செய்யும் எல்லா வேலைகளையும் பெண்களும் செய்கின்றனர் என்று ஏற்கனவே குறிப்பிட்டதற்குச் சான்றாக, கடைகளிலும், கச்சேரிகளிலும், சகல வேலைகளையும் பெண்கள் செய்வதைக் காணலாம். வக்கீல், மருத்துவம், வைத்தியம், வியாபாரம், சிற்றுண்டிச்சாலைகள், படம் பிடித்தல், ரேடியோ, கல்வி, வரி, சுகாதாரம், அச்சுச்சாலை, பாங்குகள், செய்தி நிருபர், ஆராய்ச்சிச்சாலை ஆகிய பலதுறைகளிலும் பெண்கள் ஆண்களைவிட மேலாக வேலை செய்கின்றனர்.

இத்தகைய ஜனநாயகக் கொள்கை குழந்தை வளர்ப்பையும் ஓரளவுக்குப் பாதிக்கின்றது. குழந்தைகள் சுயாதீனமாக வளர வேண்டும். கட்டுப்பாடுகள் அவர்கள் வளர்ச்சியைக் கசக்கிவிடுகின்றன என்ற கற்பனைகள், குழந்தைகளைச் சுதந்திரமாக வளரவிடுகின்றன. ஆயினும் அவர்கள் வாழ்க்கை நிலையின் பல கட்டுப்பாடுகள் மேற்கண்ட கொள்கைகளுக்குக் குறுக்காக நிற்கின்றன. அவர்களைச் சிறு வயதிலிருந்தே இயந்திரங்களுக்கும், செயற்கை முறைகளுக்கும்

அடிமைகளாக்கி விடுகின்றன. பத்து வயதானதும் சிறு குழந்தைகள் தமது கைச்செலவுக்கு வேண்டிய பணத்தைத் தாமாகவே சில குற்றேவல்களைச் செய்து சம்பாதித்துக் கொள்ளவேண்டும். செய்தித் தாட்கள் விற்பது, வீட்டுச் சுத்தம் செய்வது, தோட்ட வேலையாகியவை. இத்தகைய சிறு பணிகளைப் பொறுப்புடன் செய்து பொருளீட்டுகின்றனர். நீண்ட கோடை விடுமுறைகளில் அடுத்த வருஷப் படிப்பிற்காகப் பெரும் பகுதியான தொகையைப் பல வேலைகளைத் திறம்படச் செய்து சேகரித்து விடுகின்றனர். திருமணங்களில் தாய் தந்தையர் ஆதிக்கமே கிடையாது. வயது வந்த பெண்ணும் ஆணும், மணம்புரியத் தீர்மானித்து, ஒழுங்குகள் செய்து விட்டு, மனமுவந்து பெற்றோருக்குத் தெரிவித்தால், அவர்கள் விருப்பமிருந்தால், மணச் சடங்குகளுக்கு அன்பளிப்புகளுடன் சென்று மணத் தம்பதிகளை வாழ்த்துவதுடன் அவர்கள் கடமை முடிந்து விடுகிறது. நமது நாட்டில் புதல்வர் பெற்றோர்மேல் கடைசிவரையிலும் விடாமல் பணத்திற்காகவும், மற்ற உதவிகளுக்காகவும் சார்ந்து கொண்டிருக்கிறனர். கல்லூரிகளில் தமது தாய் தந்தையரின் கஷ்டத்தைச் சிறிதும் மனத்திற்கொள்ளாமல் பண விரயம் செய்யும் மாணவ மாணவியர் அமெரிக்க யுவர்களிடத்திலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பெரிய படிப்பினை யிதுவேயாகும்.

அமெரிக்காவில் குற்றேவல் செய்யும் குழுவினர் இல்லாதபடியால் ஆண்களும், பெண்களும் அவரவர் வேலைகளைத் தாமாகவே செய்து கொள்ள வேண்டும். 'வேலையின் மாண்பு' சிறந்த நிலையிலுள்ளது. சமையல், துணி துவைத்தல், வீடு பெருக்குதல், குழந்தை வளர்த்தல் முதலிய "பெண்களுடைய" வேலைகளை ஆண்களும் சுசடறக் கற்றுக்கொண்டு நடைமுறையில் நன்கு பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். ஒரு முறை எனது பேராசிரியர் ஒருவர் இல்லத்திற்கு விருந்துண்ணச் சென்றிருந்தேன். அங்கு வேறு சில பேராசிரியர்களுடன், அவர் தம் பத்தினிமாரும் வந்திருந்தனர். மேசையைச் சாப்பாட்டிற்காக ஒழுங்குபடுத்தி உணவு பரிமாறியது எனது குருதான். உண்ட பின்னர் கலங்களை யெல்லாம் அகற்றிய வரும் அவர்தான். உண்டபின் பொழுதை போக்கப் பெண்களெல்லாரும் பேசி மகிழ்ந்து அமர்ந்திருக்க, அவர்களுடைய கணவன்மார்களாகிய எனது பேராசிரியர்கள் (பட்டத்துடன் நோபல் பரிசு முதலியன பெற்றவர்களும் இருந்தனர்) அடுப்பங் கரையில் பாத்திரங்களைக் கழுவி, அடுக்கிச் சுத்தஞ் செய்த காட்சியைக் கண்டு பிரமித்து விட்டேன். அமெரிக்க ஆடவர் பெண்களுக்குக் காட்டும் மரியாதைக்கு அறிகுறியாக எப்பொழுதும் பெண்ணை முன்விட்டுத் தாம் பின்னே செல்லுகின்றனர். அங்ஙனமே பெண்கள் ஆசனங்களில் அமர்ந்த பின்னரே அவர் அமர்கின்றனர். பெண்களுடைய கோட்டு தொப்பி, முதலியவற்றை அணிய உதவுகின்றனர். இம்மாதிரி சடங்குகளில் அதிக கவனமாய் இருக்கின்றனர்.

பாத்திரங்கழுவுவது இங்கு ஒரு பெரிய வேதனை. ஒவ்வொருவரும் சாப்பிட உபயோகிக்கும் கலங்கள், கருவிகள் எண்ணற்றவை. ஆகவே அவற்றை உடனுக்குடன் கழுவிப் பத்திரப்படுத்துவது முக்கியம். அதைப் பெண்கள் மிகவும் சிரமமாக நினைக்கின்றனர். ஆகவே நமது நாட்டில் வாழை யிலையில் கையாலுண்ணும், சுத்தமான பழக்கத்தைக் கேட்கும்போது, எளிமையில் பிறந்த நமது புத்தி வன்மையை மெச்சுகின்றனர்.

உலகத்திலுள்ள பெண்களுக்கெல்லாம் பொதுவான ஒரு பண்புள்ளது. அதாவது கூட்டங்கூடி நாட்டுக் கதையைப் பேசுவது தான். அத்தகைய பேச்சின் சுவாரஸ்யமான பாகங்கள், ஆடையணியலங்காரங்களைப் பற்றியன தான். அமெரிக்கப் பெண்கள் இக்குணத்திற்கு விதி விலக்கல்ல. அடிக்கடி கூட்டங்கள்கூடிப் பேச முடியாதபோது, இத்தகைய செய்திகளை ரேடியோக்களும், செய்தித் தாட்களும், வேண்டியமட்டும் அள்ளித் தெளிக்கின்றன. ரேடியோக்கள் சர்க்கார் நியதிக்குட்படாதபடியாய் விளம்பர மேடைகளாகவே திகழ்கின்றன. அமெரிக்கப் பெண்கள் விளம்பரங்களை ஊன்றுகோல்களாகக் கருதுகின்றனர். அதற்காகவே பல பத்திரிகைகள் வெளியாகின்றன. புத்தகங்கள் பிரசுரமாகின்றன. அவற்றையெல்லாம் ஒவ்வொரு வீட்டிலும் கணக்கின்றிக் காணலாம். அவற்றைப் படிக்க மாத்திரம் அவர்களுக்கு அவகாசமே கிடையாது.

அமெரிக்கப் பெண்களின் ஆடைகள் அடிக்கடி மாறும் தன்மையன. மாதத்திற்கொரு முறையாகிலும் பலவித நூதனத் தினுசுகள் கடைகளில் தோன்றி விடுகின்றன. ஆடையில் (புதிய தோற்றம்) என்பது இங்கு ஓர் புகழ்த் தொடர். புது ஆடைகள் வந்ததும், பழையன ஓடிவிட வேண்டியதுதான். ஆகவே ஒரு பெண் ஒரு சமயத்தில் இரண்டு அல்லது மூன்று ஆடைகளுக்குமேல் வைத்துக்கொள்ளுவதில்லை. பழையதும் புதியதும் பழுதறக் கலப்பது முடியாத காரியம். நமது நாட்டில் பழமையின் மேன்மையில் புதுமையின் மோகம் பேதமறக் கலந்துவிடுகிறது. அதனுல்தான் வருஷா வருஷம் வாங்கும் புடவைகளை இந்தப் புதுமை மோகத்தினுல்தான் அமெரிக்கப் பொருளாதாரமும் பெண்களால் செல்வாக்கு அடைகிறது. எப்போதும் புத்தம் புதிய பொருட்களை வாங்கப் பெண்கள் கடைகளில் வட்டமிட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம். அதற்கேற்பப் பலவித பொருட்களையும் விற்கும் பெரிய அமெரிக்காவில் எங்குமுள்ளன. அமெரிக்கர் புதுமைப் பித்தராக யிருப்பதற்கு ஒருவேளை ஆதியில் அவர்கள் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்தினின்றும், சம்பிரதாயக் கட்டுப்பாட்டுகளினின்றும் விடுதலை யடையச் செய்த கிளர்ச்சியின் குணம்போலும். என்னிடம்இருபது புடவைகள் உண்டு. இதைக் காண அமெரிக்கப் பெண்கள் ஆச்சரியப்படுகின்றனர். மேலும் புடவையின் பல உபயோகங்கள், சவுகரியங்கள், வர்ணங்கள், தினுசுகள் உடுத்தும் விதங்கள் ஆகியவற்றைக் கேட்கும்போது, அவர்களுக்கு நம்மீது பொருமை

"லக்ஸ் டாய்லட் சோப்பின் புதிய பரிமளத்தை நான் மிகவும் விரும்புகிறேன்"
...என்று கூறுகிருர்
செளந்தரியவதி
லலிதா
LUX
LUX TOILET SOAP
சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப்

LTS. 197-50 TM.

உங்களுடைய நாவல்

•

பெண் மனம்

•

ஸ்ரீமதி 'லக்ஷ்மி'' எழுதிய இந்த அருமையான நாவலைப் பற்றி நாங்களா சொல்ல வேண்டும்? ஆனந்த விகடனில் இந்த நாவல் தொடர்பாக வெளிவந்தபோது தமிழறிந்த வீடுகளிலே இதைப்பற்றித்தான் பேசினார்கள். நீங்களும் படித்துத்தான் பாருங்களேன். சுமார் 300 பக்கங்கள் உள்ள இந்தப் புத்தகத்திற்கு நீங்கள் கொடுக்க வேண்டியது மிகவும் குறைவான விலைதான்.

★

விலை ரூ. இரண்டேகால்

தபால் செலவு தனி

★

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை - 14.

கூட உண்டாகிவிடுகின்றது. நமது புடவைகளைச் சுலபமாகத் துவைக்கிறோம், மடிக்கிறோம், பொட்டணம் கட்டுகிறோம். ஆனால் ரேயான், நைலான் என்னும் நாகரிக உலகின் செயற்கைப் பொருட்களால் செய்யப்பட்ட அவர்கள் ஆடைகளைப் போற்றுவது மிகவும் கடினம். அவ்ற்றைத் துவைக்கவே கூடாது. ஆகவே நமது புடவைக்குள்ள கண்ணியமும் எளிமையும், கண்ணிறைந்த அழகும், அந்தஸ்தும் மேனாட்டு ஆடைகளுக்கு எள்ளளவும் கிடையாது.

அமெரிக்கப் பெண்கள் தம் செலவுகளைச் சுயாதீனமாகச் செய்கின்றனர். கணவனுக்கும், மனைவிக்கும் தனித் தனியான பணக் கணக்குகள் உள்ளன. அமெரிக்கப் பெண்கள் சாதாரணமாகக் கையில் தூக்கிச் செல்லும் பணப் பைகளின் அளவு மிகவும் பெரிது. அதில் பணம் அவ்வளவாக இல்லா விட்டாலும், அண்ட உலகத்தையும் கண்டுவிடலாம்! சில சமயங்களில், அப்பையில் உள்ள பண்டங்களைத் தேடிப்பிடிக்க அதற்கென ஒரு சிறிய பென்சில் அளவிலுள்ள மின்சார விளக்கையும் சாவிக் கொத்தில் மாட்டிக் கொள்ளுகின்றனர்.

மேனி மினுக்கி, முகத்தோற்றத்தை வசீகரமாக வைத்துக்கொள்வதில் எல்லையற்ற சிரத்தை எடுக்கின்றனர். அதற்கு வேண்டிய சாதனங்கள், அனுகரணங்கள், கருவிகள் முதலியவற்றைத் தமது கைப் பைகளில் எப்போதும் எடுத்துச் செல்லுகின்றனர். எங்கும், எவ்விடத்திலும், எந் நிலையிலும், எவர் முன்னிலையிலும், முகத்தில் பவுடர் அடித்து, உதட்டிற்குச் சிவப்புப் பூசி, கைக் கண்ணாடியில் தமது பிம்பத்தைக் காண்பதில், அச்சமோ, நாணமோ கிடையாது. பெருங் கூட்டங்களில் கூட, பேசப் போகும் தலைவி, எழுந்து பேசுவதற்கு ஒரு விநாடிக்கு முன் இப்படி முகவழகு செய்துகொள்வது முறையாகும். நமது நாட்டில் இத்தகைய சிங்காரம் செய்துகொள்வது இழிவான மனப்பான்மையைக் காட்டுவதாகும்.

அமெரிக்க அலங்கார அரங்கத்தில், நரை முடியைப் பற்றிக் கவலை கிடையாது. ஏனெனில் முடியின் நிறத்திற்கும், முகத் தோற்றத்திற்குமேற்றவாறு, உடுத்திக் கொள்ளவும் தொப்பி பூண்டு கொள்ளவும் அவர்கள் அழகு முறைகள் இடந் தருகின்றன. ஆனால் அவர்கள் அஞ்சி நாணுவது உடற்பருமன் தான். உலகத்திலேயே, சிறந்த போஷாக்கு உணவுகள் அவர்கள் நாட்டிலிருப்பினும், சதை பெருப்பதைத் தடுப்பதற்காக, எப்போதும் குறைந்த அளவு உண்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். சாதாரணமாக அவர்கள் சமைக்கும் உணவுகளில் எல்லாம், உடல் புஷ்டிக்கு ஆதாரமான அபரிமிதமான சர்க்கரை, வெண்ணெய், முட்டை, உயர்ந்த பருப்புகள் முதலியவை அதிகமாக சேர்க்கப்படுகின்றன. பருமனைக் குறைப்பதற்காக, மேற்கண்ட புஷ்டி தரும் உணவுகளைச் சிறிய அளவில் உண்டு, எப்போதும் பசியுடன் இருப்பதைவிட, எளிய உணவை வேண்டியமட்டும் உண்டு சுகமாய் இருப்பது எவ்வளவோ உத்தமம்.

பிற நாட்டுப் பெண்களைப் போல, அமெரிக்க நாட்டுப் பெண்களுக்கும் நகைப்பற்று அதிகம். ஆனல் 'பலவித மாதிரி' மோகம் அதிகமுள்ளபடியால் ஒரே நகையில் அதிகப் பணத்தைச் செலவு செய்யாமல், அநேக சரசமான நகைகளில் சிறிய தொகையைச் செலவழிக்கிருர்கள்.

அமெரிக்கா செல்வம் நிறைந்த நாடு. உண்பதற்கும், உடுப்பதற்கும், பொழுது போக்குவதற்கும், பல்கலைகளை வளர்த்துப்பெருக்குவதற்கும் ஏராளமான வசதிகளும் வாய்ப்புகளும் உள்ளன. அவற்றையே அவர்கள் ஜனநாயக அரசாங்கமும் ஆதரிக்கிறது. ஆகவே ஒவ்வொரு வீட்டிலும் அறிவு வளர்ச்சிக்காக, ரேடியோ கணக்கின்றிக் காணப்படுகின்றது. டெலிபோன், ரிபிரிஜிரேடர், எலக்ட்ரிக் அடுப்பு முதலியன. எளியவருக்கும் இன்றியமையாத அம்சங்கள். அமெரிக்கா ஐஸ்வரிய நாடாக விருப்பினும், பணமே வாழ்க்கை நிலையில் பிரதானமாக விருப்பினும், ஜனங்களுக்குப் பொதுவாகப் பணப்பற்று கிடையாது. எவ்வளவுக்கு எவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்பாதிக் கின்றனரோ, அவ்வளவுக்கவ்வளவு சுலபமாகத் தயக்கமின்றிச் செலவும் செய்கின்றனர். சதா இன்பமயமாக இருக்க முயல்கின்றனர். யௌவன உணர்ச்சியும் தளராத முயற்சியும் உள்ளவர்கள். வயது வந்த பெண்களைச் சிறுவர் சிறுமிகள்கூடப் பெயரிட்டழைக்கின்றனர். பெரியோரும் சிறியோரும் வயது வேற்றுமையின்றி எத்தகைய கொண்டாட்டங்களிலும் ஒன்ருகக் கலந்து கொள்கின்றனர்.

அமெரிக்கப் பெண்கள் இளகிய மனமுடையவர்கள். ஒவ்வொரு சங்கமும் பிறருக்காகச் செய்யும் பணிகள் பல. அதிலும் யுத்தத்திற்குப்பின், வறுமையாலும் பிணியாலும் தாழ்வுற்று வருந்தும் அயல் நாட்டவர்களின் துன்பத்தைப் போக்குமாறு அவர்கள் செய்யும் தொண்டுகள் பாராட்டத் தக்கன. தனக்கென வாழாமல் பிறருக்கென வாழ்ந்த கிறிஸ்து பெருமானின் அறவுரைகளை இங்ஙனம் கடைப்பிடிக்கின்றனர்.

அமெரிக்கப் பெண்கள் குதூகலமாயிருப்பதில் மிகவும் பிரியங் காட்டுகின்றனர். அவர்களிடம் சொற்பொழி வாற்றும்போது நிமிஷத்திற் கொருமுறை சிரிக்க வைக்கிறவர்கள்தான் சிறந்த சொற்பொழிவாளர்களாகிருர்கள்.

அயல்நாட்டு மக்களிடம் அமெரிக்கப் பெண்கள் அதிக அன்பு காட்டுகின்றனர். அவர்கள் நாட்டைப் பற்றித் தெரிந்து கொண்டு, அவர்களிடம் நட்புரிமை பூண்டு, சாஸ்வதமான சிநேகத்தை நிலை நாட்டுவதில் மிகவும் சிரத்தை காட்டுகின்றனர். அவர்களை உபசரிப்பதில் இணையற்று விளங்குகின்றனர். அவர்கள் செய்யும் சிறிய உபசாரங்களைக்கூடப் பெரிதாகப் போற்றுகின்றனர்.

இன்றைய உலக நாடக மேடையில், செல்வத்தாலும், விஞ்ஞானத் தொழில் முன்னேற்றத்தாலும் முன்னணியில் நிற்கும் அமெரிக்க நாட்டுப் பெண்டிர் யாம் என்று அவர்கள் அடையும் பெருமை அளவிடற்பாலது. இப் பெண்கள் நினைத்தால் செய்ய முடியாத காரி

யம் எதுவுமில்லை யெனவே கூறலாம்.

அழகைப் பெரிய பண்பாகப் பாராட்டும் இப் பெண்கள் வீட்டலங்காரத்திலும் அழகிய பொருள்கள் சேகரிப்பதிலும் அதிக நேரத்தையும் பொருளையும் செலவு செய்கின்றனர். ஒருவருக்கு அளிக்கும் அன்பளிப்பைக் கட்டி, பெரிய அழகிய கூடுகளில் பொதிந்து, உள்ளிருக்கும் பொருள் சிறிதாய் இருப்பினும், வெளிக்கூடு அழகாகவும் பெரிதாகவும் இருக்குமாறு செய்து விடுகின்றனர்.

கடவுள் வழிபாட்டிலும் அமெரிக்கப் பெண்கள் பெரிதும் சிரத்தை காட்டுகின்றனர். அநேகமாக யாவரும் கிறிஸ்தவ மதத்தினர். வீதிக்கொரு கோயிலும், மூலைக்கொரு ஆலயமும் எங்கு பார்த்தாலும் இருக்கின்றன.

ஆகவே வாரா வாரம், ஞாயிற்றுக் கிழமைகளில் கோயிலுக்குப் போவதுடன், கோயிற் பணிகளைச் செய்து, காணிக்கைகளைச் செலுத்திக் கோயிற் கூட்டங்களில் கலந்து கொள்வதில் பின்வாங்குவ தில்லை. ஆனால் ஆத்மிக உண்மைத் தத்துவங்களை, நடைமுறையில், தினசரி வாழ்க்கையில் கடைப்பிடிக்கும்படியாக அவர்களுக்குத் தோன்றக் காணோம். கடவுள்பால் மாறா அன்புகொண்டு, அவ்வன்பில் மனங் கலந்தபின், வாழ்க்கையே அன்பு மயமாகிவிடுகிறது. அவ்வன்பில் உயர்வு தாழ்வு, ஏழை தனவந்தர், ஆண் பெண், மேனாடு கீழ்நாடு என்ற வேற்றுமைகள் மறைந்து விடுகின்றன. அங்ஙனம் மனித சமூகம் ஒன்றாகும்போது, நிரந்தர நிம்மதி எங்கும் நிலவும். வாழ்க்கையில் நிகழும், அற்ப நுட்ப நிகழ்ச்சிகள் நம்மைப் பாதிக்க முடியாது.

✲

நல்ல யோசனை

ஒரு மனிதனுக்கு அதிருஷ்ட வசமாக நிறையப் பணம் கிடைத்தது. உடனே அவன் நிறைய நிலபுலம் வாங்கினான்; அதில் மூன்று ஸ்நான கட்டங்கள் கட்டினான்.

"எதற்காக மூன்று கட்டங்கள்?" என்று ஒரு நண்பன் அவனிடம் கேட்டான்.

"ஒன்றில் தண்ணீர்! இன்னொன்றில் வென்னீர். மற்றொன்று காலியாக இருக்கும்."

"காலியாக ஏன் ஒன்று இருக்கவேண்டும்?"

"அதுவா? எனது விருந்தாளிகளில் பலருக்கு நீந்தத் தெரியாதே!"

—க்யூரே, ஜெனீவா

என்ன பிறவி?

"ஏனடா அழுகிறாய்?" என்று ஒரு பையனை ஒருவர் கேட்டார்.

"அப்பா அம்மாவைக் குள்ள வாத்தே என்று திட்டினார். அம்மாவும் அப்பாவை விருதாக் கழுதை என்று பதிலுக்குத் திட்டினாள்!"

"அதற்கு நீ ஏனடா அழுகிறாய்?"

"அப்படியானால் நான் யார்?"

—நியூ காஸில் ஜர்னல்

சமீபத்தில் தமிழில் இரண்டு அருமையான ஆராய்ச்சி நூல்கள் வெளி வந்துள்ளன. அவற்றை எழுதியவர் திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை. அவைகளைப் பற்றிய விமர்சனமே இக் குறிப்புக்கள்.

*தமிழ்ச்சுடர் மணிகள்

ரகுநாதன்

தமிழில் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அடிமையாகாமல், உள்ளதை உள்ளவாறு ஓர்ந்து எழுதப் பெறும் விமர்சனங்களும், ஆராய்ச்சிகளும் மிகவும் குறைவு. தமிழுக்குப் பெருமை தேடுவதற்காக இலக்கிய ஆராய்ச்சியை பாஷை வடிவம் அறியாத பண்டைக் குரங்கு மனிதன் காலத்துக்கு ஓட்டிச் செல்வதும், கடல் கொண்ட செல்வத்தோடு தமிழின் குபேர சம்பத்தெல்லாம் கொள்ளைபோய் விட்டதென்று கூச்சலிடுவதும் தான் இன்று கூட தமிழ்ப் பண்டிதர்கள் செய்து வரும் "தமிழ்த் தொண்டு" ஆகும். பண்டைக் கதை பேசுவதில் குற்றமில்லை; எனினும் ஆதாரம் இருக்கவேண்டும். மேலும், எதிர்கால மேம்பாட்டுக்கு ஏற்றம் காணுவதாய் இருக்கவேண்டும். இந்தப் பண்பை உணர்ந்து ஆராய்ச்சி செய்பவர்களை, நாம் ஒரு கைவிரல் கொண்டு கணக்கெடுத்து விடலாம். அந்த ஒரு சிலரில் இன்று முன்னணியில் முதன்மையாக நிற்பவர் திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள்.

உடுக்குறியிட்ட முதல் நூலாகிய 'தமிழ்ச்சுடர் மணிகள்' சுமார் 330 பக்கங்கள் கொண்டது. இந் நூலில் ஆசிரியர் தொல்காப்பியர் தொட்டு, தேசிகவிநாயகம் பிள்ளை வரை தமிழ் இலக்கிய கர்த்தாக்களில், பதினறு பேர்களைப் பற்றிய குறிப்புகளைக் தந்திருக்கிறார். ஆசாரியரது காலம், சமயம், இலக்கிய சேவை முதலியவற்றை விரிவாக ஆராய்ந்திருக்கிறார். ஆசிரியருடைய ஆராய்ச்சி முடிபுகள் ஏற்கெனவே பல பத்திரிகைகளில் வெளி வந்தவையாயினும், அதற்குத் தக்க மறுப்போ திருத்தமோ இன்று வரை வரவில்லை. உதாரணமாக, தொல்காப்பியர் திருவள்ளுவர், கம்பர் முதலியவரைப் பற்றி ஆசிரியர் காணும் கால ஆராய்ச்சி இதுவரை வெளிவந்துள்ள முடிபுகளுக்கு முற்றும் மாறானவை. திருவள்ளுவர் மனு நீதி, அர்த்த சாஸ்திரம், காம சூத்திரம் முதலிய நூல்களிலிருந்தும் தமது திருக்குறளுக்கு கருத்துக்களை எடுத்துக்கொண்டார் என்ற விவரத்தை தக்க ஆதாரபூர்வமாய்

*தமிழ்ச்சுடர் மணிகள். கிடைக்குமிடம்: குமரி மலர் காரியாலயம், தேனும்பேட்டை, சென்னை-18. விலை ரூபாய் 5.

தமிழர் பண்பாடு. கிடைக்குமிடம்: தமிழ்ப் புத்தகாலயம், மயிலாப்பூர், சென்னை-4. விலை ரூபாய் 3.

விளக்கி யிருக்கிறார். இதுபோன்ற குறிப்புக்கள் தமிழின் வைதிக அபிமானிகளுக்கு எரிச்சல் தருவ தாகும். என்றாலும் மெய்ப் பொருள் காணும் அறிவாராய்ச் சியை அவ்வளவு லகுவில் ஒதுக்கி விட முடியாது. அது போலவே கம்பரது காலம் 12-ம் நூற்றாண்டு என்று கணக்கிடும் நூலாசிரியர் பல பக்கங்களில் தமது கூற்றுக்குச் சமர்த்திகட்டி, தக்க அணை சேர்த்து ஆதாரம் திரட்டித் தரு வது, கம்பனை 9-ம் நூற்றாண்டு ஆசாமி என்று சொல்பவர்களுக் குச் சரியான பதிலாகவே இது விளங்குகிறது.

இரண்டாவது புத்தகமான தமிழர் பண்பாட்டில் 19 கட்டுரைகள் உள்ளன. சுமார் இருநூறு பக்கம் கொண்ட இந்நூலில் நூலாசிரியர் அக நானூறு, புற நானூறு, கம்ப ராமாயணம் முதலியன மூலமும், தமிழ் இலக்கிய சரிதத்தின் மூலமும் தமிழர் பண்பாட்டை வார்ப்படமாகச் சித்திரித்துக் காட்டுகிறார். முதலில் தமிழின் இலக்கிய சரிதத்தைப் பற்றிய சிறு குறிப்புக்கள் தந்துவிட்டு, பண்டைத் தமிழர் வாழ்க்கையை சங்க நூல்களிலிருந்து நிர்ணயம் செய்கிறார். அதன் பின்னர் கம்ப ராமாயண பாத்திரங்களின் மூலம் கம்பன் எப்படி தமிழர் பண்பாட் டின் குண சித்திரங்களைச் சிருஷ் டித்துவிட்டான் என்பதையும் விளக்குகிறார். இது நமது பண் பாட்டை விளக்குவதோடு மட்டு மல்லாமல், கம்பனது பாத்திர சிருஷ்டியையும் ஓரளவு ஆராயும் தன்மை பெற்றதா யிருப்பது மிக வும் போற்றற் குரியது. ஆசிரியர் ஓரிடத்தில் 'சமுதாயத்திற்கும் அதில் தோன்றிய ஆசிரியனுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது' என்று தொடங்கி ஆசிரியனைத் தனிமைப் படுத்திப் பார்க்காமல், சமுதாய வளர்ச்சியின் வாழ்வு தாழ்வுகள் ஆசிரியனையும் எப்படிப் பாதிக்கும் என்ற கண்ணோட்டத் தோடு ஆராய்ச்சி பண்ணியிருப்ப தானது இருபதாம் நூற்றாண்டின் புதிய கதியையும் ஆசிரியர் உணர்வ தோடு ஒப்புக்கொள்ளவும் செய்யும் திராணியும் பெற்றவராக தெரி கிறது. எனினும், இலக்கியத்தின் நெளிவு சுழிவுகளை, நோக்கங்களை விமர்சனரீதியில்வியாக்யானம்செய் யும் கட்டங்களில்ஆசிரியர்முடிவற்ற நிலையை உண்டாக்குகிறார் என்றே சொல்லவேண்டும்; இலக்கிய நோக் கம் என்பது சூத்திரத்துக்குள் அடங்காத விஷயம் என்றாலும், நெஞ்சமுத்தத்தோடு தனது சுவானுபூதியான கருத்துக்களைச் சொல்வதற்கு முன்வர வேண்டும். ஆசிரியரிடம் விமர்சன சக்தி பரி பூரணமாகக் காணப்படாமையால் தான், கம்பனுக்கு எந்தவித அடை மொழிகள் அலங்காரம் பண்ணு கின்றனவோ, அதற்குச் சமதை யான வார்த்தைகள் மனோன்மணீ யம் சுந்தரம் பிள்ளைக்கும் வக் காலத்து வாங்குகின்றன. இதனால், இலக்கிய கர்த்தாக்களை எடை போடுவதில் தராதரம் அற்றுப் போய்விடுகிறது.

ஆகவே, ஆசிரியரை நாம் விமர் சகராகக் கொள்ளாமல், ஒரு சிறந்த ஆராய்ச்சியாளராகவே கொள்ள வேண்டியிருக்கிறது. தமிழர்கள் அனைவருமே இந்நூல்களை அவசி யம் படிக்கவேண்டும்; படித்துப் பயனடைய வேண்டும்.

டி. டி. டி. என்ற புதுவகையான மருந்தின் பூர்வோத்தரம், பிறப்பு வளர்ப்பு முதலியவை பற்றிக் கட்டுரை விவரிக்கிறது. இந்த மருந்தை உலகிற்கு அளித்தவருக்கு, நோபல் பரிசு கிடைத்தது. என்றால் மருந்தின் முக்கியத்துவம் எப்படிப் பட்டது என்று விளக்கத் தேவை இல்லை. நோய் மலிந்த நாடாகிய இன்றைய இந்தியாவுக்கு, இப்படிப்பட்ட கட்டுரைகள் மிகவும் தேவை.

டி. டி. டி.

கு. ராஜாராம்

பெனிசிலின், ராடர் இவைகளைப் போன்று சென்ற இரண்டாவது மகா யுத்தத்தில் பிரபலமடைந்த வற்றுள் டி. டி. டி (D. D. T.) என்னும் ரஸாயனப் பொருளும் ஒன்று. இந்த ரஸாயனப் பொருள் மனிதனுக்குப் பரம விரோதிகளாக உள்ள சில சிறு பூச்சிகளை அழிப்பதற்கு மிகவும் பயன்படுகின்றது.

கொசுக்களால் மனிதனுக்கு ஏற்படும் கஷ்டங்கள் அதிகம். சாதாரண கொசுக்கள் இரவில் அவனைத் தூங்கவிடாமல் பண்ணி, படுக்கையில் கிடந்து இப்படியும் அப்படியுமாகப் புரண்டு சிரமப்படுமாறு செய்கின்றன. இன்னும் சில கொசுக்கள் மஞ்சள் ஜுரம் என்று சொல்லப்படும் ஒரு வகையான பித்த சுரத்தை உண்டாக்குகின்றன. ஒரு விதக் கொசுக் கடியினால் ஏற்படும், மலேரியாக் காய்ச்சல் மனித உயிருக்கு நிரம்ப ஆபத்தானது. மலேரியா ஜுரத்தினால் வருஷந்தோறும் லட்சக் கணக்கான பேர் மரிக்கிறார்கள்.

மலேரியா கொசுக்களைப் போல மனித உயிருக்கு ஆபத்து விளைவிப்பன தெள்ளுப் பூச்சிகள். அவை முதலில் எலிகளின்மேல் தொத்தி, பிளேக் நோயை எலிகளுக்கு உண்டாக்குகின்றன. அதன் பிறகு மக்களிடம் அக் கொடிய நோயைப் பரப்புகின்றன.

நம் வீடுகளிலும், தெருக்களிலும் பறந்து திரியும் ஈக்கள் டைப்பாய்டு, காலரா போன்ற கொடிய நோய்கள் பரவக் காரணமாயிருக்கின்றன.

உண்ணி, பேன் போன்ற சிறு பூச்சிகள் கால் நடைகளுக்கு மிகுந்த கெடுதலை உண்டு பண்ணுகின்றன.

இவைகளைத் தவிர அநேக வகையான சிறு பூச்சிகள் அரும் பாடுபட்டு மனிதன் வளர்க்கும் பயிர்களை நாச மாக்குகின்றன. நாசகாரிகளான சிறு பூச்சிகளினால் விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டம் அளவிட முடியாதது.

இவ்வாறு மனிதனுக்கும், அவனுடைய உடைமைகளுக்கும் தீங்கு விளைவிக்கும் சிறு பூச்சிகளை ஒழித்துக் கட்டுவதற்கு நம் கைக்கு சமீபத்தில் கிடைத்த அஸ்திரம் டி. டி. டி. இது பூச்சிகளுக்கு எமனை போதிலும் இதனை மனிதனுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று சொல்லவேண்டும்.

இந்தப் பூவுலகத்து யமனை சிருஷ்டி செய்தவர் டாக்டர் முல்லர் என்னும் சிறந்த விஞ்ஞான அறிஞர். அவரும் லாங்கர், மார்ட்டின் என்னும் இதர இரண்டு விஞ்ஞானிகளும் சேர்ந்து, ஸ்விட்ஜர்லாந்தைச் சேர்ந்த கெய்கி கம்பெனியாரின் பரிசோதனைச் சாலையில் பல ஆண்டுகளாக பொறுமையுடன் இடைவிடாது நீண்ட ஆராய்ச்சிகள் நடத்தியதன் பலனாகக் கிடைத்தது.

டாக்டர் முல்லர் கண்டுபிடித்துக் கூறுவதற்கு அநேக வருஷங்களுக்கு முன்னாலேயே, அதாவது 1874-ம் ஆண்டிலேயே இந்த ரஸாயனப் பொருள் தெரியவந்தது. ஆனால் அந்தக் காலத்திலே இந்த ரஸாயனப் பொருளின் முக்கியத்துவம் உணரப்படவில்லை. அதனால் டாக்டர் முல்லரும் அவரது சகாக்களும் நெடுநாள் ஆராய்ந்து கண்டுபிடித்துக் கூற வேண்டிய நிலை ஏற்பட்டது.

அவர்கள் ராமபாணப் பூச்சிகளால் பொருள்கள் பாழாகாதவாறு தடுக்க ஒரு ரஸாயனப் பொருள் கண்டுபிடிக்க வேண்டுமென்ற முயற்சியில் இறங்கினர் முதலில் மிட்டின் என்று நாமகரணமிட்டு ஒரு ரஸாயனப் பொருள் கண்டுபிடித்து வெளியிட்டனர். அந்தக் காலத்தில் மிட்டினுக்கு நல்ல பெயர் ஏற்பட்டது. அந்த ரஸாயனப் பொருள் ராமபாணப் பூச்சிகளின் வயிற்றுக்குள் போய், அவற்றின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியது. கம்பளியைத் தின்னக்கூடிய சிறு பூச்சிகளைத் தொலைப்பதற்கும் மிட்டின் உதவியது. கம்பளியில் மிட்டினைத் தெளித்தால் வெகு நாளைக்குக் கம்பளி கெடாமல் இருக்கும். மிட்டினிலுள்ள விஷப் பொருள் கம்பளியில் அதிக நாள் தங்கியிருப்பதால் வெகு நாட்களுக்கு கம்பளி சிறு பூச்சிகளினின்று பாதுகாக்கப்படுகிறது.

மிட்டின் கண்டுபிடித்த பிறகு, சிறு பூச்சிகள் உட்கொண்டால் அவைகளின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய அனேக ரஸாயனப் பொருள்களைப் பற்றி ஆராய்ந்தார்கள். அந்த ரஸாயனப் பொருள்களை திரவம், திடம் போன்ற பல ரூபங்களில் உபயோகித்துப் பார்த்தார்கள். கம்பளியைத் தின்னும் பூச்சி, ராமபாணப் பூச்சி இவைகளைத் தவிர வேறு சிறு பூச்சிகளும் அழிந்துபோகின்றனவா என்று அனேக பரிசோதனைகள் நிகழ்த்தினர்.

இவ்வாறு கணக்கற்ற பரிசோதனைகள் நிகழ்த்தி பூச்சிகளைக் கொல்லும் விஷத் தன்மை வாய்ந்த ரஸாயனப் பொருள்களைப் பற்றிய விபரமும், அந்த ரஸாயனப் பொருள்களை உபயோகிக்கவேண்டிய முறைகள் பற்றிய அனுபவமும் கைவரப் பெற்று கடைசியில் டி. டி. டியைக் கண்டுபிடித்தார்கள்.

1649-ம் வருஷத்தில் ஸ்விட்ஜர்லாந்திலுள்ள உருளைக் கிழங்குச்

செடிகளுக்கு ஒருவித சிறு வண்டுகளால் நாசம் ஏற்படும் போலத் தெரியவந்தது. செடிகளில் ஏராளமாகப் புழுக்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. அந்தப் புழுக்கள் தான் வளர்ந்து பின்னர் வண்டுகளாயின. டாக்டர் முல்லர் உருளைக்கிழங்குச் செடிகளின் மீது டி. டி. டி.யைத் தெளித்தார். அவ்வளவுதான். உடனே அந்தப் புழுக்கள் செத்து விழுந்தன. இறந்து விழுந்த புழுக்களைப் பரிசோதனை செய்ததில், அவைகளுக்கு உடம்பில் டி. டி. டி பட்ட பிறகு இலைகளைத் தின்னக் கூட முடிவதில்லை என்று தெரிய வந்தது. கொடிய சாபம் பலிப்பது போல, டி. டி. டி உடலில் பட்ட மாத்திரத்தில் அவை இறந்து போயின. உருளைக் கிழங்குச் செடியின் வளர்ச்சிடி. டி. டி.யால் எந்த வகையிலும் பாதிக்கப் படவில்லை. அவ் வருஷம் நல்ல விளைச்சல் ஏற்பட்டது.

மற்ற பூச்சிக் கொல்லிகளைப் போல டி. டி. டி. காற்று, வெளிச்சம், உஷ்ணம் இவற்றால் பாதிக்கப் படாமல் அனேக நாள் கெட்டுப் போகாமல் இருக்கிறது. ஒரு இடத்தில் டி. டி. டி. தெளித்து அனேக நாள் ஆனபிறகும் சத்துக் குறைந்து போகாமல் பூச்சிகளை அழிக்கக்கூடிய சக்தியுடன் விளங்குகிறது. டி. டி. டிக்கு உள்ள இந்தச் சக்தி அது மிகவும் விரும்பப் படுவதற்குக் காரணமா யிருக்கிறது.

பெரிய அளவில் டி. டி. டியை உபயோகப்படுத்து முன்னர் எலி, முயல், பூனை, நாய் போன்ற பிராணிகளுக்கு ஏதாவது கெடுதல் உண்டாகுமா என்று பரிசோதனை செய்தார்கள். அவைகளுக்குடி. டி. டியை உணவில் கலந்து கொடுத்துப் பார்த்தார்கள். ஓரளவு வரை தாராளமாகக்கெடுதல் ஏதுமின்றி அவை உட்கொள்ளலாம் என்று தெரிய வந்தது. உடம்பின் மேலே டி. டி. டி படுவதாலும், தங்குவதாலும் அப் பிராணிகளின் மேல் தோலுக்கு ஏதாவது கெடுதல் நேருமா என்றும் சோதனை செய்தார்கள். ஒருவித கெடுதலும் ஏற்படுவதில்லை என்று அறிந்தார்கள்.

சில வகையான சிறு பூச்சிகளை உடனுக்குடன் அழிக்கும் வல்லமை பெற்ற இந்த எமனின் முழுப் பெயர் டைகுளோரோ டைபினைல் ட்ரை குளோர் ஈத்தேன் (Dichloro—diphenyl—trichlorethane) என்பது. இதன் நிறம் வெள்ளை. பொடி ரூபத்தில் இருக்கும் தண்ணீரில் கரையாது. மண்ணெண்ணை போன்ற சிற்சில திரவங்களில் மட்டும் கரையக்கூடியது.

டி. டி. டியை அப்படியே பொடியாக உபயோகிக்கலாம். வீட்டில் நமக்குத் தொந்தரவு கொடுக்கும் ஈ, கொசு, மூட்டைப் பூச்சி, கரப்பு முதலியவற்றை ஒழிக்க பொடியாக உபயோகிப்பது நல்லது. வீட்டில் அங்கங்கே பொடியைத் தூவி வைக்கலாம். கால் நடைகளின் மேல் ஒட்டிக் கொண்டிருக்கும் உண்ணி, பேன் போன்ற சிறு பூச்சிகளை அழிக்க பொடியாக உபயோகிப்பது மிகுந்த பயனுள்ளது.

மரச் சாமான்களுக்கு வர்ணம் பூசும்போது அத்துடன் டி. டி. டி. கலந்து கொள்வதால் மரத்துக்கு கரையான் முதலியவற்றி லிருந்து பாதுகாப்பு கிடைக்கிறது.

ஒரு பெரிய இடம் முழுவதும் டி. டி. டி. தெளிக்க வேண்டுமானுல் பொடியாக உபயோகிக்காமல் மண்ணெண்ணெயில் கரைத்து ஒரு பம்பால் (Pump) தெளிப்பது நலம். மண்ணெண்ணெ டி.டி.டி.க்கு ஏற்ற வாகனம். பயிர்களைப் பாதுகாக்க ஸ்பிரே (Spray) பண்ணுவது மிகுந்த பயனளிப்பது; சிக்கன முறையும்கூட.

மைல் கணக்காக உள்ள பிரதேசங்களில் ஏராளமாக வாழும் கொசுக்களை அழிப்பதற்கும், ஏக்கர் கணக்காக உள்ள பயிர்களை நாசகரமான பூச்சிகளினின்று பாதுகாப்பதற்கும் டி. டி. டி.-யை ஆகாய விமானத்தின் உதவியால் பெருவாரியாகத் தெளித்து டி. டி. டி. மூட்டம் போடுவது மிகச் சிறந்த முறையென்று சமீபத்தில் அமெரிக்காவில் கண்டுபிடித் திருக்கிறுர்கள். இது மிக்க சிக்கனமான முறை யென்றும் தெரியவருகிறது. ஐந்து ஏக்கர் நிலத்தில் வசிக்கும் கொசுக்கள் அனைத்தையும் ஒரு பவுண்டு டி.டி.டி.யால் பூண்டோடு ஒழித்து விட முடியும் என்று கண்டிருக்கிறுர்கள். அமெரிக்காவில் சாதாரணமாகக் காணப்படும் கரும் ஈக்கள் என்ற ஒருவகை ஈ இனத்தையும் இந்த முறையால் அழிக்க இயலுகிறது. கரும் ஈக்கள் நாலைந்து மாதத்திற்கு அந்தப் பிரதேசத்தில் காணப்படுவ தில்லை என்று சொல்லுகிறுர்கள். பறவைகள், மீன்கள், தேனீக்கள் இன்னும் இதர பிராணி வகைகள் இம்முறையால் எவ்வகையிலும் பாதிக்கப்படுவதில்லை. மரங்கள், பயிர்கள் இவைகளுக்கும் எவ்வித கெடுதலும் ஏற்படுவதில்லை.

ஆகாய விமானத்தின் மூலம் தெளிப்பதால் பிரதேச மெங்கும் ஒரே டி. டி. டி. மூட்டம் ஆகி விடுகிறது. தரையில் ஒட்டிக் கொள்ளும் திவலைகள் பிரதேசம் முழுவதிலும் காணப்படும் சிறு பூச்சிகளை ஒன்று விடாமல் அழிக்கின்றன. ஒவ்வொரு மிகச் சிறிய திவலையும் ஒரு பூச்சியை கொல்லக் கூடிய சக்தி வாய்ந்ததா யிருக்கிறது. வான வெளியில் பறந்து திரியும் பூச்சிகளின் கழுத்தில் காற்ருேடு உருண்டு செல்லும் நுண்ணிய திவலைகள் பாசக் கயிற்றை வீசி விடுகின்றன.

இவ்வளவு சக்தி வாய்ந்த டி.டி.டி.யை சிறிது காலமாக மலேரியா ஒழிப்பிற்குப் பயன்படுத்தி வருகிறுர்கள். மலேரியாவிற்குக் காரணமான கொசுக்கள் வாழும் பிரதேசம் முழுவதிலும், டி. டி. டி. தெளித்து அவற்றை அடியோடு ஒழித்துவிட முற்பட் டிருக்கிறுர்கள்.

கிரேக்க தேசத்தில் சில வருஷங்களுக்கு முன்னுல் மலேரியா நோயால் மரிப்பவர் எண்ணிக்கை மிக அதிகமா யிருந்தது. உலகத்தில் தயாரிக்கப்பட்ட கொயினு மருந்தில் ஒரு பெரும் பகுதி கிரேக்க தேசத்தில் செலவழிந்து வந்தது. சில கிராமங்களில் மலேரியாவினுல் பீடிக்கப் பட்ட குழந்தைகள் ஏராளமாக மரித்தன. தொழிலாளிகள் ஒவ்வொரு வருஷத்திலும் மூன்று நான்கு மாதங்கள் நோய் காரணமாக வேலைக்குச் செல்ல இயலாது படுத்த படுக்கையாய்க் கிடப்பார்கள்.

1945-ம் வருஷத்தில் ஐக்கிய நாடுகளின் சபைமூலம் கிரீஸுக்கு

அனுப்பப்பட்ட ஒரு சுகாதார என்ஜினியர் டி. டி. டி. யை நாடு முழுவதும் கொசுக்கள் இருக்குமிடங்களி லெல்லாம் தெளித்தார். தரையிலும், ஆகாய விமானம் மூலமும் பெருவாரியாகத் தெளித்தார்.

அதற்கு அடுத்த வருஷம் கிரீஸில் நூற்றுக்குத் தொண்ணூறு மலேரியா நோயாளிகள்கொடுமையிலிருந்து தப்பித்தார்கள். பயிர்களும் சிறு பூச்சிகளால் நாசமாகாதவாறு காப்பாற்றப்பட்டன. இப்போது கிரீஸில் சென்று பார்த்தால் விவசாயிகளின் வீட்டுச் சுவர்களிலும், கதவுகளிலும், வைஷ்ணவர்களின் வீட்டுக் கதவுளில் நாமம் காணப்படுவது போல, டி. டி. டி. என்ற எழுத்துக்கள் பெரிதாக எழுதப்பட் டிருப்பதைக் காணலாம்.

கிரீஸைப் போல ஸைப்ரஸ் தீவிலும் டி. டி. டி. யால் மலேரியா பிசாசை ஒழித் திருக்கிறார்கள். அங்கே ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு மரத்திலும், ஒவ்வொரு மலைப் பிளவுகளிலும்கூட தெளித்தார்கள். அவ்வளவும் கையால் தான் தெளிக்கப் பட்டது.

நம்முடைய தாய் நாட்டில் யுத்தத் திற்கு முன்பு மலேரியாவினால் வருஷத்திற்கு இருபது லக்ஷம் பேருக்குமேல் மரித்து வந்தனர். இன்றைய தினத்திலும் இந்த சாவு விகிதம் குறையவில்லை. சிறு பூச்சிகளால் உண்டாகும் பலவித தொத்து நோய்கள் காரணமாக ஆண்டுதோறும் எட்டு கோடிக்கு மேல் இறக்கிறார்கள். தொத்து நோய்களால் இவ்வாறு பெருவாரியான மக்கள் உயிர் இழக்க நேரிடுவதால் நாட்டில் பொருளாதார நஷ்டம் வேறு ஏற்படுகிறது.

கிரீஸ், ஸைப்ரஸ் தேசங்களைப் போல நாமும் நம் மக்களை மலேரியா முதலிய கொடிய நோய்களிலிருந்து காப்பாற்றலாம். பயிர்களை நாசம் பண்ணி, நாட்டில் உணவுப் பஞ்சத்தை அதிகரிக்கச் செய்யும் சிறு பூச்சிகளை இலகுவாக ஒழித்து விடலாம். இதற்கு டி. டி. டி.யைப் பெருவாரியான அளவில் உபயோகிப்பதுதான் சிக்கனமான முறை. நோய் வந்த பின் சிகிச்சை செய்வதைவிட நோய்க்குக் காரணமானவற்றை ஒழித்துவிடுவது நல்லதல்லவா?

சென்ற வருஷக் கடைசியில் ஒரு புதிய பூச்சி கொல்லி கண்டு பிடித்திருக்கிறார்கள். மெத்தாக்ஸி குளோர் (Methokcychlor) என்ற பெயருடைய இந்த ரஸாயனப் பொருள் டி. டி. டி. யைவிட பூச்சிகளைக் கொல்லுவதில் இன்னும் வல்லதாயிருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால் டி. டி. டி. யைப் போன்று குறைவான செலவில் இதைத் தயார் செய்ய இயலவில்லை.

சிக்கனத்திலும், உபயோகத்திலும் டி. டி. டி. ஒரு அருமையான ரஸாயனப் பொருள். மக்களுக்கு இந்த அரிய பொருளை அளித்த டாக்டர் முல்லருக்கு நோபல் பரிசு கிடைத்ததில் வியப்பில்லை.

*

புகழ்

இறந்த மனிதனின் இதயத்தின்மீது சொரியப்படும் மலர்தான் புகழ்.

—மதர்வெல்.

புத்தக உலகம்

தொழிற் சங்கங்களைப் பற்றி கார்ல் மார்க்ஸ்: [தொகுத்தவர்: ஏ. லாஸோவஸ்கி, மொழிபெயர்த்தவர்: எஸ். ராமகிருஷ்ணன். கிடைக்குமிடம்: ஜனசக்தி பிரசுராலயம், ஜி. டி. சென்னை. விலை ரூ. 2-8-0]

இந் நூலில் புரொபஸர் லாஸோவஸ்கி, காரல் மார்க்ஸும், அவர் வழி வந்த எங்கல்ஸும் தொழிலாளர் இயக்கங்களைப் பற்றிச் சொன்ன அபிப்பிராயங்களையும், நடைமுறைப் போராட்ட முறைகளையும் அருமையாகத் தொகுத்துத் தந்திருக்கிறார். தொழிலாளி வர்க்கத்தின் இயக்கமே ஒரு அரசியல் இயக்கம்தான். முதலாளித்துவ வளர்ச்சி ஏகாதிபத்தியமாகி, ஏகாதிபத்தியப் பாதை தானாகவே கம்யூனிஸ சமுதாயத்தைத் தன் கருவில் கொண்டு வளர்த்து வரத்தான் செய்யும்; கம்யூனிஸம் பூரண வளர்ச்சி பெறும்போது, விலா வெடித்துப் பிறக்கும் நண்டைப் போல, முதலாளித்துவத்தின் வயிற்றைக் கீறிக் கொன்று விட்டு, புதிய சமுதாயமாய் பிறப்பெடுக்கிறது. இந்தப் புதிய சமுதாயத்தைச் சமைப்பவர்கள் தொழிலாளி வர்க்கம்தான். ஏனெனில் அவர்கள்தான் உலகத்தின் அச்சாணியாகிய பொருளாதார உலகத்தோடு பின்னிக் கிடப்பவர்கள்; உற்பத்திச் சாதன வளர்ச்சியோடு தாமும் வளர்ச்சி பெறுகிறார்கள். அப்படி வளர்ந்து வரும் ஒரு சமுதாயம்தான் முதலாளித்துவத்தை வேரறுக்க முடியும். ஆகவேதான் தொழிலாளிகள் நடத்தும் ஒவ்வொரு விமோசனப் போராட்டமும் கம்யூனிஸப்பாதையை நோக்கிச் செல்லும் அரசியல்போராட்டமென்று மார்க்ஸ் கருதினார். ஆகவே, அரசியல் போராட்டத்தின் மூலம் வளர்ச்சி பெறும் தொழிலாளர் இயக்கம் புரட்சிப் பாதையிலிருந்து வழுகி, சீர்திருத்தப் பாதைக்குத் திரும்பி விடாதபடிப் பார்த்துக்கொள்ள சரியான சரித்திரக் கண்ணோட்டமும் நடைமுறைக் கொள்கையும் இருக்க வேண்டும் என்று கருதுகிறார். இந்தச் சாக்கில் ஆடாம் ஸ்மித், பிரௌதன் முதலிய பிற்போக்கு வாதிகளின் தெளிவற்ற அரசியல் சித்தாந்தத்தையும் உடைத்தெறிந்து சரியான பாதை காட்டினார். கம்யூனிஸம் என்பது ஒரு இயக்கமே அன்றி, வெறும் தத்துவம் மட்டுமல்ல. ஆகவே மார்க்ஸின் போராட்ட சூத்திரத்தைப் புரிந்து கொள்வதற்கு, மார்க்ஸை நடைமுறையில் பிரக்ஞை தவறாமல், கிரியாம்சையில் பின்பற்றி வெற்றி கண்ட லெனினிஸத்தையும் புரிந்தே ஆகவேண்டும். இந் நூலில் லெனினிஸத்தின் அம்சங்கள் சிலவும் ஆராயப்பட்டிருக்கின்றன. தொழிலாளி வர்க்கத்தவரும், தொழிலாளி வர்க்கப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களும், அனுதாபிகளும் இந் நூலை அவசியம் படிக்க வேண்டும். கார்ல் மார்க்ஸின் சித்தாந்தத்தைத் தெளிவோடு எடுத்துச் சொல்லும் நூலாசிரியரின் திறமை போற்றத் தக்கது. மொழிபெயர்ப்பும் தங்குதடையின்றி விறுவிறுப்போடு செல்கிறது. ஆங்காங்கே அடிக்குறிப்பு கொடுத்து சில விஷயங்களை விளக்கி யிருப்பது மிக நன்று.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

மாஸ்கோ பாதை: [எழுதியவர்: டி. என். ராமச்சந்திரன், கிடைக்குமிடம்: இமயப் பதிப்பகம், நாகப்பட்டினம். விலை ரூ. 1-8-0]

இந்நூலின் போக்கிலிருந்து, ஆசிரியர் ருஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலினின் மீது துவேஷ உணர்ச்சியைக் கிளப்புவதும், அதே வேளையில் காலம் சென்ற ட்ராட்ஸ்கியை வானளாவப் புகழ்வதுமே நோக்கமாகக் கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. மேலும், ருஷ்யாவின் நிலைமையை இவர் வன்மையாகக் கண்டிப்பதெல்லாம் நாலாம் இண்டர் நேஷனல் வாதிகளின் துஷ்பிரசாரத்தைக் கடன் வாங்கிக் கொண்டு, எழுதும் தன்மையாகவே படுகிறது. பொதுவாக இந்நூல் ருஷ்யாவின் மீதும், ருஷ்யத் தலைவர் ஸ்டாலினின் மீதும் இல்லாத குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் துவேஷப் பிரசாரக் கருவியாகவே தென்படுகிறது. இதுமட்டுமல்லாமல், ருஷ்ய எல்லை இந்திய எல்லையை ஒட்டி இருப்பதால், இந்தியாவுக்கு ருஷ்யாவினால் எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படக்கூடும் என்று சூசகமாகத் தெரிவிக்க முயல்கிறார். இன்று உலகில் முன்னணியில் நிற்கும் தொழிலாளிவர்க்க நாடு ருஷ்யா. அதைப் பற்றி முதலாளித்துவ நாடுகள் செய்யும் துஷ்பிரசாரம் போதும்; 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று பாரதி பாடிய திருநாடும் அந்தத் திருப்பணியில் பங்கெடுக்க வேண்டாம் என்று கூறுகிறோம்.

—தொ. மு. சி.

தான்யக் கொள்முதல்: [எழுதியவர்: ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன், கிடைக்குமிடம்: ஊர் நலம் காரியாலயம். 91. மௌண்ட் ரோடு, சென்னை-18. விலை அணா 2.]

உற்பத்தியைப் பெருக்கு என்று உரத்த குரலில் கூவுவதைக் காட்டிலும் உற்பத்தியான பொருளைச் சரியாக வினியோகிக்க முயல்வதுதான் அறிவுடைமையாகும்.

வினியோகத்திற்கு அஃடிப்படை அவசியமான தான்யக் கொள்முதல் விஷயத்தில் அரசாங்கம் பொறுப்போடு நடக்கவில்லை என்று குறை கூறுகிறார் ஆசிரியர். தற்போதைய கொள்முதல் முறையினால் குட்டி நிலச்சுவான்தார்களுக்கு ஏற்படும் கஷ்டத்தைப் பற்றித்தான் சொல்லுகிறாரே தவிர, தான்ய உற்பத்திக்கு மூலகாரணமாக உள்ள உழவர்களின் கதியைப் பற்றிப் பாராமுகமாக இருக்கிறார், நூலாசிரியர்.

—க. ப.

வரப்பெற்றோம்

மகாத்மா காந்தியடிகள் அருளிய அஹிம்ஸா மலர் மாலை: வெளியீடு: தென்னிந்திய ஜீவரக்ஷக பிரசார சபை சென்னை. விலை: அன்பளிப்பு.

ஹிதோபதேசம்: ஆசிரியர்: மு. முகம்மது ஹசன், வெளியீடு: நன்மார்க்கப் பதிப்பகம், காயல்பட்டணம். விலை அணா ஐந்து.

மகாத்மா மறைவுபற்றி இரங்கற் பாடல்கள்: ஆசிரியர்: கா. தூரன், வெளியீடு: தேவசையாலிச் சைவ வித்தியாலயம். பிரதி விலை தெரியவில்லை.

தேசத் தந்தையின் திருவருட் புலம்பல்: ஆசிரியர்: க. த. சித்திரமுத்து சுவாமிகள், வெளியீடு: ப. சி. வடிவேல், கடுக்காய் கிராமம். விலை அணா இரண்டரை.

ஸ்ரீ முருகன் கிளிக்கண்ணி: ஆசிரியர்: மு. வீரவேற் பிள்ளை, வெளியீடு: மின்னல் பதிப்பகம், தேவகோட்டை. விலை அணா நாலு.

மகாத்மா காந்தி படம் 14'' × 10'' அளவு. போட்டோ வர்ணம். வெளியீடு: யுனைட்டெட் ஆர்ட்ஸ், லஸ் கார்னர், மயிலாப்பூர் சென்னை-4.

✱

Edited, Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.
Associate Editor: G. Alagiriswami.

ஜம்மியின்

லிவர்க்யூர்

குழந்தை களின் ஈரல் குலேக்கட்டி களிஞல் ஏற்படும் பயத்தைப் போக்கடிக்கிறது.

மிகவும் முத்திப்போன சந்தர்ப்பங்கள் தவிர எல்லா ஈரல் குலேக்கட்டிகளுக் கும் ஜம்மியின் லிவர்க்யூர் கண்டிப்பான குணம் அளிக் கிறது என்பதை கடந்த பல ஆண்டுகளாக குணமாகி வரும் ஆயிரக்கணக்கான குழந்தைகளிஞல் நிரூபிக்கப் படுகிறது.

ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்

மைலாபூர், மதராஸ். (போன் நெ. 8139)

தெப்பகுளம் திருச்சிஞப்பள்ளி. பெரிய தெரு கும்பகோணம், பெங்களூர், பம்பாய் 4, (போன் நெ. 41593) மற்றும்: லக்னே, கல்கத்தா.

J-235. Tamil

சக்தி வெளியீடுகள்

இனி நாம் செய்ய வேண்டுவது யாது? — டால்ஸ்டாய்

உழைப்பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்னும் அரிய சித்தாந்தம். ரூ. 3 0 0

அபேதவாதம் — ராஜாஜி

பொது உடைமைத் தத்துவத்தை இந்திய முறையில் ராஜாஜி விளக்கி இருக்கிறார். ரூ. 1 0 0

அறிஞர் மார்க்ஸ் — ஆர். ராமனுதன்

உலகத்தை உய்விக்கத்தோன்றிய மகான் மார்க்ஸின் கொள்கையும் வரலாறும் ரூ. 1 8 0

ஏசுநாதர் போதனை — ஜே. ஸி. குமரப்பா

ஏசுபெருமான் இந்த உலகத்தில் அவதரித்ததின் தத்துவம் யாது? அவருடைய போதனையால் மக்கள் அடையக்கூடிய பயன்களையும் விளக்குகிறது இந்நூல். மகாத்மாவின் அருமையான முன்னுரையும் இருக்கிறது. ரூ. 1 8 0

ரத்தக் களரி — நேதாஜி

இந்திய தேசிய ராணுவத்தினருக்கு அவ்வப்பொழுது பேசிய பிரசங்கங்களின் தொகுப்பு, உக்ரமிக்க பேச்சுக்கள் சக்தி மோஹன் மொழி பெயர்த்தது. ரூ. 1 8 0

சூரிய நமஸ்காரம் — டி. வி. திருவேதி

சூரிய நமஸ்கார முறைகள், மந்திரங்கள், நியமங்கள் இவைகளால் ஏற்படும் நன்மைகள் அடங்கியிருக்கின்றன. ரூ. 1 0 0

பாரதியார் சரித்திரம் — செல்லம்மா பாரதி

மகாகவி பாரதியாரைப் பற்றி அவருடைய மனைவி சொல்லும் வரலாறு. ரூ. 2 0 0

சக்தி காரியாலயம் - சென்னை 14

சக்தி வெளியீடுகள்

செல்வம் — க. சந்தானம்

பொருளாதாரத்தைப் பற்றிய நூல். பாமரரும் புரிந்து கொள்ளக்கூடியவாறு எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கிறது. தமிழ்வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்ற புத்தகம். 1 8 0

லெனின் பிறந்தார் — ஆர். ராமநாதன்

ருஷ்யாவின் தந்தை லெனின் வரலாறுதான் இந்த நூல். இந்த நூலைப் படிப்பதால் ருஷ்யப் புரட்சி சரித்திரத்தையும் கூடவே படிப்பது போல இருக்கும். 3 8 0

உலோகங்களும் நாமும் — மு. அருணசலம்

உலோகமும் நாமும், உலோக உலகம், உலோகத்தாது, உலோகங்கள் கிடைக்கும் விதம், இரும்பு, மற்ற முக்கிய உலோகங்கள், உலோகத் தொழில் பற்றிய அரிய விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. ரூ. 5 0 0

M211,N36:2 N49.16.2

உணவுப் பஞ்சம் — மு. அருணசலம்

உணவுப் பஞ்சம் ஏன் ஏற்பட்டது? உணவுப் பஞ்சத்தைத் தடுப்பது எப்படி? உணவுப் பஞ்சமே இனி வாதபடி எப்படிச் செய்வது என்பது பற்றிய புத்தகம். ரூ. 1 8 0

ஐந்தாவது சுதந்திரம் — ஸ்ரீமதி லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி

இதில் பதினான்கு கட்டுரைகள் இருக்கின்றன. சமூகத்தில் ஊறிக்கிடக்கும் ஊழல்களைப் பாரபட்சமின்றிக் கண்டிக்கும் கட்டுரைகள், நம்மவரோடு உலகத்தவரை ஒப்பிட்டு நோக்கும் கட்டுரைகள், நாட்டின் முற்போக்கு பற்றிய கட்டுரைகள், தெரியாத விஷயத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும் கட்டுரைகள் இதில் அடக்கம். நமது அருமை தேசபக்தர் காலஞ் சென்ற சத்தியமூர்த்தியின் மகள்தான் இதன் ஆசிரியர் ஸ்ரீமதி லக்ஷ்மி. ரூ. 1 8 0

சக்தி காரியாலயம் - சென்னை 14

88894

BOOKS IN ENGLISH

●

CAPITALISM, SOCIALISM OR VILLAGISM? By Dr. Bharatan Kumarappa, preface by Gandhiji Rs. 5, ECONOMY OF PERMENENCE By Dr. J. C. Kumarappa preface by Gandhiji Rs. 2, Studies in the Psychology of Sex by Havelock ELLIS Rs. 45, Rubaiyat of Omar Khayyam Rs. 1/8, Father Brown by G. K. Chesterton Rs. 1/8, Jeeves by P. G. Woodehouse, Rs. 1/8, Pride and Prejudice by Jane Austen Rs. 1/8, Freud His Dream and Sex Theoris by Joseph Jastrow Rs. 1/8, Treasure Island by R. L. Stevenson Rs. 1/8, Oliver Twist by Charles Dickens Rs. 1/8, Freedom Road by Howard Fast Rs. 1/8, Laugh with Leacock by Stephen Leacock Rs. 1/8, Four Great Comedis by Shakespeare Rs. 1/8, The Covered Wagon by Emerson Haugh Rs. 1/8, The Autobiography of Benjamin Franklin Rs. 1/8, The Great Short Stories of de Manpassant Rs. 1/8, The Good Earth by Pearl Buck Rs. 1/8, The Pocket Treasury Rs. 1/8, Decameron by Boccaccio Rs. 1/8, Merriem-webster Pocket Dictionary Rs. 1/8, India and the International Crisis By Prof. K. J. M. Tharakan, M.A., As. 12, Cold Rice by K. Nagarajan Rs. 3, Five Plays by H. Chattobadyaya Rs. 1/8, Fancy Tales by Manjeri S. Isvaran Rs. 2, Angry Dust by Manjeri S. Isvaran Rs. 2, Naked Shingles by Manjeri S. Isvaran Rs. 2/8, Gandhism in the Atomic Age Rs. 2, Dedicated Life by Dr. Mrs. Muthulakshmi Reddi As. 8, The Fourth Avatar by Manjeri S. Isvaran Re. 1, Essentials of Gandhism by V. Swaminatha Sarma As. 12.

Postage Extra.

SHAKTI KARYALAYAM

P. B. No. 660. : : MADRAS - 14.

BOOKS IN ENGLISH

CAPITALISM, SOCIALISM OR VILLAGISM ? By Dr. Bharatan Kumarappa, preface by Gandhiji Rs. 5, ECONOMY OF PERMENENCE By Dr. J. C. Kumarappa preface by Gandhiji Rs. 2, Studies in the Psychology of Sex by Havelock ELLIS Rs. 45, Rubaiyat of Omar Khayyam Rs. 1/8, Father Brown by G. K. Chesterton Rs. 1/8, Jeeves by P. G. Woodehouse, Rs. 1/8, Pride and Prejudice by Jane Austen Rs. 1/8, Freud His Dream and Sex Theoris by Joseph Jastrow Rs. 1/8, Treasure Island by R. L. Stevenson Rs. 1/8, Oliver Twist by Charles Dickens Rs. 1/8, Freedom Road by Howard Fast Rs. 1/8, Laugh with Leacock by Stephen Leacock Rs. 1/8, Four Great Comedis by Shakespeare Rs. 1/8, The Covered Wagon by Emerson Haugh Rs. 1/8, The Autobiography of Benjamin Franklin Rs. 1/8, The Great Short Stories of de Manpassant Rs. 1/8, The Good Earth by Pearl Buck Rs. 1/8, The Pocket Treasury Rs. 1/8, Decameron by Boccaccio Rs. 1/8, Merriem-webster Pocket Dictionary Rs. 1/8, India and the International Crisis By Prof. K. J. M. Tharakan, M.A., As. 12, Cold Rice by K. Nagarajan Rs. 3, Five Plays by H. Chattobadyaya Rs. 1/8, Fancy Tales by Manjeri S. Isvaran Rs. 2, Angry Dust by Manjeri S. Isvaran Rs. 2, Naked Shingles by Manjeri S. Isvaran Rs. 2/8, Gandhism in the Atomic Age Rs. 2, Dedicated Life by Dr. Mrs. Muthulakshmi Reddi As. 8, The Fourth Avatar by Manjeri S. Isvaran Re. 1, Essentials of Gandhism by V. Swaminatha Sarma As. 12.

Postage Extra.

SHAKTI KARYALAYAM

P. B. No. 660. : : **MADRAS - 14.**

உங்கள் வியாபாரம்

★

உங்கள் வியாபாரம் செழிக்க வேண்டுமானால் காகிதம், கவர், ரசீதுப் புத்தகம் விசிடிங் கார்டு எல்லாம் அழகாக இருக்க வேண்டும். அவைகளை அழகுடன் செய்து தருவதற்கு சென்னையில் பெயர் பெற்ற அச்சுக்கூடம் நடைபெறுகிறது. அதன் பெயர்:



சக்தி பிரஸ் லிமிடெட்

115-E, மோபரீஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை 14.

டெலிபோன்: 8135



அழகும் மணமும் பொருந்திய
புஷ்பம் "ரோஜா"
சுவையும் மணமும் பொருந்திய
பாக்குத்தூள் "அசோகா"

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

தயாரிப்பவர் :
எம். கே. கிருஷ்ண செ
'அசோகா பாக்டரி' : : சே